
விடியல்
யத்தன்னபூடி
CHN
CHN450929
6214013
CHN450929
தமிழில்: கௌரி கிருபானந்தன்

# விடியல்

யத்தனபூடி சுலோசனாராணி

தமிழாக்கம்
கௌரி கிருபானந்தன்

**வாசன் பதிப்பகம்**
ஆனந்த் சரோவர் அப்பார்ட்மெண்ட்ஸ்,
Plot No. 16, II Floor, 117, கச்சேரி ரோடு,
மயிலாப்பூர், சென்னை-600 004.

# முன்னுரை

பிரபல தெலுங்கு எழுத்தாளர் திருமதி யத்தனபூடி சுலோசனாராணி அவர்கள் எழுதிய 'பந்தீ' என்ற நாவல் தமிழில் 'விடியல்' என்ற தலைப்பில் வாசகர்கள் முன்னிலையில் வைக்கப்பட்டுள்ளது.

கதாநாயகன் ஹரி பார்வையற்றவன். அண்ணன், அண்ணி, தங்கை ஜெயா காட்டும் அன்பில் அந்தக் குறை உணராத வகையில் வளர்ந்து வருகிறான். அண்ணியிடமிருந்து வயலினை கற்றுக் கொண்டு வயலின் கலைஞனாக உருவாகிறான். சுந்தரி வாழ்க்கையில் தென்றலாக வருகிறாள். சுந்தரி தன்னிடம் பழகுவதை காதல் என்று எண்ணிவிடுகிறான்.

சுந்தரியின் உண்மையான எண்ணம் புரிந்தபோது மனமுடைந்து போகிறான். விதி அவன் வாழ்க்கையில் கொடூரமாக விளையாடுகிறது. சூழ்நிலையுடன் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டிருந்த ஹரிக்கு கவிதா துணையாக நிற்கிறாள். அவனுடைய வாழ்க்கையிலும் பங்கு பெற வேண்டும் என்று தவிக்கிறாள்.

சிநேகிதி மாத இதழில் தொடர் கதையாக வெளிவந்த நாவல் இது. மொழிமாற்றத்திற்கு அனுமதி தந்த யத்தனபூடி சுலோசனா ராணிக்கும், புத்தகமாக வெளியிட்ட அல்லயன்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றி.

**கௌரி கிருபானந்தன்**

சென்னை
2.10.2007

எண்டமூரி வீரேந்திரநாத்
எழுதி

1. அந்தர் முகம்
2. தளபதி
3. 13-14-15
4. நிகிதா
5. பந்தம் பவித்ரம்
6. பதியன் ரோஜா
7. காதலெனும் தீவினிலே...
8. காஸநோவா 99
9. துளசி தளம்
10. மீண்டும் துளசி
11. வெற்றியை நோக்கிப் பயணம்
12. பெண்கள் தனித்தன்மையை வளர்த்துக் கொள்வது எப்ப.
13. உங்களை நீங்களே வெற்றி கொள்ளுங்கள்
14. உங்கள் குழந்தைகள் உங்களை நேசிக்க வேண்டுமென்றால்?
15. தி பெஸ்ட் ஆஃப் எண்டமூரி வீரேந்திரநாத்
16. பட்டிக்காட்டு கிருஷ்ணன்
17. சாகர சங்கமம்
18. காதல் 'செக்'
19. லேடீஸ் ஹாஸ்டல்
20. பணம் மைனஸ் பணம்
21. தூக்கு தண்டனை
22. பிரியமானவள்...
23. பணம்
24. பிரளயம்
25. ரிஷி

கௌரி கிருபானந்தன்
மொழிபெயர்த்த

# விடியல்

## 1

அறைக்குள் காலடிச் சத்தம் கேட்டது.

கட்டில் மீது அமைதியற்று இப்படியும், அப்படியுமாக புரண்டு கொண்டிருந்த ஹரி எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

"ஹரி!" ராமகிருஷ்ணனின் குரல் மென்மையாக ஒலித்தது.

"என்ன அண்ணா?"

"சாப்பாடு வேண்டாம் என்று சொன்னாயாமே? என்ன நடந்தது?"

"எனக்குப் பசி இல்லை அண்ணா."

"அந்த வார்த்தையை உங்க அண்ணி ஒப்புக் கொள்ள மறுக்கிறாளே. நீ தன் மீது கோபித்துக் கொண்டு சாப்பிடாமல் இருக்கிறாய் என்று புகார் செய்கிறாள்."

"ஆமாம் டாடீ. அம்மா சொன்னது உண்மைதான். மதியத்திலிருந்தே சித்தப்பா அம்மாவுடன் பேசவே இல்லை. காபி கூட குடிக்கவில்லை. சித்தப்பாவுக்கு அம்மா மீது ஏனோ ரொம்ப கோபம் வந்திருக்கு." தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு அங்கே வந்த பப்லூ சாட்சியம் சொன்னான்.

"ஹரீ! இது உண்மைதானா?"

"பப்லூரவுக்கு என்ன தெரியும் அண்ணா? ஏதோ பேச்சு வாக்கில் கொஞ்சம் சத்தமாக பேசிக் கொண்டோம். அவ்வளவுதான். அண்ணியுடன் நான் எதற்காக சண்டை போடப்போகிறேன்?"

ஹரி சொல்லிக்கொண்டிருந்த போதே வேறொரு ஜோடி கால்கள் அங்கே வந்த சத்தம் கேட்டது. வந்த நபர் அண்ணி தான் என்பதை உறுதி செய்வது போல் வளையல் சத்தம் கேட்டது.

"ஆமாம் ஆமாம். நீ என்னுடன் சண்டை போடவில்லை. நான்தான் உன்னுடன் சண்டை போட்டேன். நீ சொல்ல வந்தது அதுதானே? என்னங்க. . . நீங்களே நியாயம் சொல்லுங்க. பெங்களூரிலிருந்து சுந்தரி வரப் போவதாக கடிதம் எழுதியிருக்கிறாள் இல்லையா? வீட்டில் யாருமே இல்லை என்றால் எப்படி?"

"நீ சொல்வதும் சரிதான். என்ன செய்யலாம்?" ராமகிருஷ்ணன் மனைவியிடம் கேட்டான்.

"நீங்க இருந்தாலும் ஒன்றுதான். இல்லாவிட்டாலும் ஒன்றுதான். காலையில் போனால் இரவில்தான் வீட்டுக்கு வருவீங்க. அவளோ தனியாக வரவில்லை. சினேகிதிகளுடன் வரப்போவதாக கடிதம் எழுதியிருக்கிறாள். அவளுக்கு இடைஞ்சலாக இருக்காதா?"

"இருக்காதா பின்னே?" ராமகிருஷ்ணன் ஒத்து ஊதினான்.

ஏனோ தெரியவில்லை, சுந்தரியின் பெயரைக் கேட்டதும் ஹரி தலையைக் குனிந்து கொண்டான். தடுமாற்றத்தை கட்டுப் படுத்திக் கொண்டே "குழந்தைகள் எல்லோரும் ஜாலியாக ஊருக்குக் கிளம்புவதை பார்க்கும்போது எனக்கும் போக ணும்னு தோன்றியது. அதான் நானும் வர்றேன்னு சொன்னேன்.



வாக அத்தான் தன் கல்யாணத்திற்கு என்னை வரச்சொல்லி ரொம்பவும் வற்புறுத்திச் சொல்லியிருந்தான்" என்றான்.

"இதுவும் பாயிண்டுதான். அவ்வளவு வற்புறுத்திச் சொன்ன பிறகு போகவில்லை என்றால் எப்படி? அந்த சுந்தரி என்ன இளவரசியா வாசலிலேயே எதிர்கொண்டு ஆரத்தி எடுத்து வரவேற்பதற்கு? உங்க அண்ணியோட சித்தப்பாவின் மகள்தானே. ரைட்? ஹரீ! நீயும் கல்யாணத்திற்குப் போய்த்தான் ஆகவேண்டும் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். துணிமணி எடுத்து வைத்துக் கொள். நாளைக்கு உங்க அண்ணி யுடன் நீயும் கிளம்பிப் போகலாம். சுகுணா அம்மையாரின் புகாரை இந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது."

தம்பியிடம் நயமாக பேசி எப்படியாவது அவன் இங்கே இருக்கும்படி செய்வதை விட்டுவிட்டு, கணவன் ஹரியின் பக்கம் தீர்ப்பு சொன்னதைக் கேட்டு சுகுணாவுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது.

"எனக்கென்ன வந்தது? குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஹரியை கல்யாணத்திற்குப் போகச் சொல்லுங்கள். உங்கள் தங்கை ஜெயாவுக்காக அந்த வரனையும் அவனையே பார்க்கச் சொல்லுங்க. நான் வீட்டிலேயே நிம்மதியாக இருந்து கொள்கிறேன்."

"செத்தேன் போ. நீ போகவில்லை என்றால் எப்படி நடக்கும்? நானோ எப்படியும் போகப் போவதில்லை. நீயும் போகவில்லை என்றால் கஞ்சனூர் மாமா சும்மா இருப்பாரா? என்னைத் தேடிக் கொண்டு இங்கேயே வந்து உண்டு இல்லைன்னு உலுக்கி விடமாட்டாரா?"

"அதைப் பற்றி நான் ஏன் கவலைப்படணும்? சுந்தரி போன கோடை விடுமுறையில் கூட வரவில்லை. இப்போ சினேகிதிகளுடன் வருவதாக கடிதம் எழுதியிருக்கும்போது

வீட்டில் யாரும் இல்லை என்றால் எப்படி? இந்தச் செய்தியைக் கேட்டால் சித்தி, சித்தப்பா என்ன நினைத்துக் கொள்வார்கள்? உங்க வாசு அத்தான் மட்டும் இளவரசனா என்ன? அழைத்ததுமே விழுந்தடித்துக் கொண்டு நாம் ஓடுவதற்கு? உங்கள் ஒன்றுவிட்ட அத்தையின் மகன்தானே?'' சுகுணா நீட்டி முழக்கினாள்.

ராமகிருஷ்ணன் இயலாமையுடன் பார்த்தான்.

அதற்குள் ரவி அங்கே ஓடி வந்தான். "அம்மா! பாருங்களேன். அக்கா இரண்டு பேரும் சூட்கேஸில் இடமில்லைன்னு என் சட்டையை தூக்கிப் போட்டுட்டாங்க." என்று புகார் செய்தான்.

ரவியின் பின்னாலேயே தலைப்பிரசவத்தில் பிறந்த இரட்டை பெண் குழந்தைகள் சசி, சுதா ஓடி வந்தார்கள். "இந்த ரவியைப் பாரும்மா. அவனுடைய ஒரு சட்டை வைக்க இடமில்லைன்னு எங்க டிரெஸ்ஸெல்லாம் தூக்கி வெளியில் போட்டுவிட்டான். இஸ்திரி மடிப்பெல்லாம் கலைஞ்சு போச்சு." சசி ரவியின் முதுகில் ஓங்கி ஒன்று வைத்தாள்.

ரவி ஹோவென்று அழத் தொடங்கினான்.

"சசி! தம்பியை அப்படி அடிக்கலாமா? தப்பு இல்லையா?'' ராமகிருஷ்ணன் மகளைக் கடிந்து கொண்டான்.

"எங்கள் டிரெஸ்ஸை எதுக்காக வெளியில் தூக்கிப் போடணும்?'' சசி கோபமாக கேட்டாள்.

"என் சட்டை வைக்க இடமில்லைன்னு கீழே போட்டு விட்டாள். அது மட்டும் நியாயமா?'' ரவி அழுதுகொண்டே சொன்னான்.

"அப்பப்பா ... இவங்களை கட்டி மேய்ப்பதற்குள் உயிரே போகிறது. நாம் கிளம்புவது நாளை மதியம்தான் என்று



சொன்னேனா இல்லையா? நேற்றிலிருந்தே பெட்டியில் துணி மணி எடுத்து வைக்கத் தொடங்கியாச்சு. இதோடு வைப்பதும், எடுப்பதுமாக பத்து தடவைக்கு மேல் சூட்கேஸை தலை கீழாக்கி விட்டீங்க. குழந்தைகளை அழைத்துப் போகவேண்டிய தில்லை. வீட்டிலேயே இருக்கட்டும் என்று நான் சொல்லச் சொல்லக் கேட்காமல் உங்க அப்பா உங்களையும் கிளப்பி விட்டார். ஒரு தடவையாவது உங்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு எங்கேயாவது வெளியூருக்குப் போயிருந் தால்தானே அதில் இருக்கும் கஷ்டநஷ்டங்கள் அவருக்குத் தெரியும்? சசி! இனிமேல் தம்பியை அடித்தாயோ முதுகு தோலை உரித்துவிடுவேன் ஜாக்கிரதை. வாங்க எல்லோரும், நான் அடுக்கி தருகிறேன்.''

சுகுணா ரவியைத் தூக்கிக் கொண்டு சமாதானப்படுத்திக் கொண்டே அடுத்த அறைக்குச் சென்றாள். இரண்டு பெண் களும் தாயைப் பின் தொடர்ந்து ஓட்டமெடுத்தார்கள். அடுத்த அறையிலிருந்து சுகுணா உரத்தக் குரலில் கடிந்து கொள்வதும், குழந்தைகளின் சிணுங்கல்களும் அரைகுறையாக கேட்டுக் கொண்டிருந்தன.

ராமகிருஷ்ணன் இன்னும் அங்கேயே நின்று கொண் டிருப்பது ஹரியால் உணரமுடிந்தது. ராமகிருஷ்ணன் தம்பியின் அருகில் வந்து தோள்மீது கையைப் பதித்து அன்பு கலந்த குரலில் சொன்னான். "ஹரீ! உண்மையிலேயே உனக்கு இந்தக் கல்யாணத்திற்குப் போகணும்னு இருந்தால் போய்விட்டு வா. சுந்தரி என்றால் உங்க அண்ணிக்கு எவ்வளவு அன்போ உனக்குத்தான் தெரியுமே. அதிலும் சிநேகிதிகளுடன் வரப் போவதாக எழுதியிருக்கிறாள். அவர்களுக்கு எந்தவிதமான இடைஞ்சலும் இருக்கக் கூடாதே என்ற தவிப்பு அவளுக்கு. இங்கே நான் இருந்தாலும் காலையில் போனால்

இரவில் தாமதமாக வீடு திரும்பும் ஆள் என்பதால் அவளுக்கு என் மீது நம்பிக்கை இல்லை. எனக்கும் அர்ஜெண்ட் கேஸுகள் சிலது இருக்கு. இருந்தாலும் எப்படியோ அட்ஜஸ்ட் செய்து கொண்டு இந்த நான்கு நாட்களும் நான் வீட்டிலேயே இருந்து கொள்கிறேன்."

"வேண்டாம் அண்ணா. நான் போகப் போவதில்லை." ஹரி சட்டென்று சொன்னான். அண்ணாவுக்கு கடுகளவு கஷ்டம் என்றாலோ, இடைஞ்சல் ஏற்படும் என்றாலோ அவனால் தாங்கிக் கொள்ள முடியாது.

"போகட்டும். உங்க அண்ணியை அனுப்பாமல் இருக்க லாம் என்றாலும், உனக்குத்தான் தெரியுமே கஞ்சனூர் மாமா ஜெயாவுக்கு நல்ல வரன் இருப்பதாக எழுதியிருக்கிறார். இந்த வருடமாவது ஜெயாவின் திருமணத்தை முடித்துவிட வேண்டும். ஏற்கனவே தாமதமாகிவிட்டது."

"ஆமாம் அண்ணா." ஹரியும் ஒப்புக் கொண்டான். தங்கையின் கல்யாணத்தை முடித்து விட வேண்டும் என்று அண்ணா கடந்த ஒரு வருடமாக எவ்வளவு தவிக்கிறானோ, எவ்வளவு ஜாதகங்களை அலசியிருக்கிறானோ ஹரிக்குத் தெரியாதது இல்லை. பதினைந்து நாட்களுக்கு முன்பு கஞ்சனூர் மாமா வாசு அத்தானின் கல்யாணத்திற்கு அழைக்க வந்தபோது அவர்களுடைய ஊரிலேயே ஜெயாவுக்குத் தகுந்த வரன் இருப்பதாக சொன்னபோது அவருடனே ஜெயாவை அனுப்பி வைத்தார்கள். அந்தப் பையனின் பெற்றோரும் கஞ்சனூர் மாமாவுக்கு உறவினர்கள்தாம். பெண்ணை முன்னாடியே பார்த்துவிட்டு, பெண்ணைப் பிடித்து இருந்தால் மற்ற விஷயங்களை வாசுவின் கல்யாணத்திற்கு வரும்போது பேசிக் கொள்வதாக ஏற்பாடு. நேற்றுதான் கஞ்சனூர் மாமா விடமிருந்து கடிதம் வந்தது. ஜெயாவை மாப்பிள்ளை வீட்டாருக்குப் பிடித்திருப்பதாக எழுதியிருந்தார்.



கல்யாணத்திற்குக் கிளம்பும் போது ராமகிருஷ்ணனுக்கு அவசரமான வேலை வந்துவிட்டது. தான் பிறகு வந்து மாப்பிள்ளை வீட்டாரைச் சந்திப்பதாகவும், முதலில் சுகுணா பையனைப் பார்த்துவிட்டு, சீர்வரிசைகளைப் பற்றி ஒரு வார்த்தை பேசி விடுவது நல்லது என்று ராமகிருஷ்ணன் மனைவியிடம் சொன்னான்.

முதலில் ஹரியிடம் குழந்தைகளை விட்டு விட்டு அவர்கள் இருவரும் கல்யாணத்திற்குப் போய் வரவேண்டும் என்று நினைத்திருந்தார்கள். ஆனால் ராமகிருஷ்ணனால் வரமுடியாமல் போனதும் குழந்தைகளையும் சுகுணாவுடன் அனுப்புவதாக முடிவு செய்தான்.

வீட்டை விட்டு வெளியில் அதிகமாக போனதில்லை என்பதால் கல்யாணத்திற்கு வெளியூருக்குப் போகிறோம் என்றதும் குழந்தைகள் துள்ளிக் குதித்துக் கும்மாளம் போடத் தொடங்கினார்கள்.

ஹரி மட்டும் தனியாக வீட்டில் இருப்பதாக முடிவு செய்யப்பட்டது. ஆனால் நேற்று மதியம் தபாலில் சுந்தரி தன்னுடைய சிநேகிதிகளுடன் வரப்போவதாக பெங்களூரி லிருந்து கடிதம் வந்தது. அதைக் கேட்டதும் ஹரி தானும் கல்யாணத்திற்கு வரப்போவதாக அண்ணியிடம் சொன்னான்.

ஏற்கனவே தங்கை வரும்போது தான் வீட்டில் இல்லாமல் ஊருக்குப் போக வேண்டியிருக்கிறதே என்று நொந்து கொண்ட சுகுணாவுக்கு ஹரி தானும் வருவதாகச் சொன்னதும் கோபம் வந்துவிட்டது. ஹரியை நன்றாகத் திட்டினாள். ஹரிக்குக் கோபம்தான் வந்ததோ இல்லை வருத்தம்தான் ஏற்பட்டதோ தெரியாது. மதியம் சாப்பிட வரவில்லை. மாலையில் கணவன் வீட்டுக்கு வந்ததும் சுகுணா நடந்ததை யெல்லாம் ஒப்பித்துவிட்டாள்.

ஹரி சாதாரணமாக வாயை விட்டு தனக்கு இது வேண்டும் என்று கேட்டதில்லை. இன்று அவன் திருமணத்திற்குப் போக வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கும்போது மறுப்பு சொல்லி தம்பிக்கு ஏமாற்றம் தருவதில் ராமகிருஷ்ணனுக்கு விருப்பம் இல்லை. அதான் ஹரியைக் கிளம்பச் சொன்னான்.

"பரவாயில்லை அண்ணா! நான் கல்யாணத்திற்குப் போகப் போவதில்லை. வீட்டிலேயே இருக்கிறேன்."

"மனப்பூர்வமாகத்தான் சொல்கிறாயா?"

"ஆமாம்."

"அப்போது கோபம் போய்விட்டாற்போல்தானே?"

"அண்ணி சும்மா சொல்கிறாள். எனக்கு எண்ணிக்காவது கோபம் வந்து பார்த்திருக்கிறாயா அண்ணா?"

"என்னவோப்பா. நீ கோபமாக இருந்து ஒரு நாளும் நான் பார்த்ததில்லை. ஆனால் உன் அண்ணி என்ன சொல்கிறாள் தெரியுமா? உனக்கு இருக்கும் கோபம் வேறு யாருக்கும் இல்லையாம். சரி வா, சாப்பிடப் போவோம். சுகுணா! சுகுணா! எங்கே இருக்கிறாய்? சாப்பாடு பரிமாறு." மனைவியை அழைத்துக் கொண்டே ராமகிருஷ்ணன் அடுத்த அறைக்குச் சென்றான்.

தந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு வாசற்படியைத் தாண்டப் போன பப்லூ ஒருமுறை பின்னால் திரும்பிப் பார்த்தான். அறையின் நடுவில் தலைகுனிந்தபடி நின்றிருந்த சித்தப்பாவைப் பார்த்ததும் என்ன நினைத்துக் கொண்டானோ என்னவோ, தந்தையின் கையை விடுவித்துக் கொண்டு பின்னால் திரும்பி ஓடி வந்தான்.

பப்லூவின் கை தன் கையைத் தொட்டதும் ஹரி இரு கரங்களையும் நீட்டி அவனைத் தூக்கிக் கொண்டான்.

"சித்தப்பா! நீ கல்யாணத்திற்கு வரப் போவதில்லையா?"



"ஊஹூம்."

"அப்படி என்றால் நானும் போகமாட்டேன். வரப் போவதில்லைன்னு அம்மாவிடம் சொல்லிவிடுகிறேன்."

"நீ போகாமல் இருப்பானேன்?"

"நாமிருவரும் ஒரு கட்சி என்று நீ தானே சொன்னாய்?"

ஹரியின் இதழ்களில் முறுவல் மலர்ந்தது. அந்த முறுவலில் வேதனையும் கலந்திருந்தது.

"இல்லை கண்ணா! நீ கல்யாணத்திற்கு போய்விட்டு வந்து அங்கே நடந்த விஷயங்களை எல்லாம் என்கிட்டே சொல்லு."

"ஊஹூம். நீ வரவில்லை என்றால் நானும் போக மாட்டேன். நாம் ரெண்டு பேரும் வீட்டிலேயே இருப்போம். நீ எனக்கு நிறைய கதைகளை சொல்லணும். இன்னும்...." குரலை தாழ்த்திக் கொண்டு ஹரியின் காதில் "அம்மா இருக்க மாட்டாள் இல்லையா. டப்பாவில் இருக்கும் சாக்லேட் எல்லாம் நாமே சாப்பிட்டுவிடலாம்" என்றான்.

ஹரி சிரித்துக் கொண்டே பப்லூவை மார்போடு அணைத்துக் கொண்டு இரு கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்டான்.

குழந்தைகள் எல்லோருக்குமே ஹரியிடம் நெருக்கம் இருந்தாலும் பப்லூ காட்டும் நெருக்கத்தில் ஒரு விசேஷம் இருந்தது. அவன் பிறந்தபோது சுகுணாவுக்கு உடல் நலம் சரியாக இல்லாமல் போய்விட்டது. பெட் ரெஸ்ட் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று டாக்டர்கள் எச்சரித்து இருந்தார்கள். அந்த நேரத்தில் வீட்டு வேலைகளை முழுவதும் ஜெயா பார்த்துக் கொண்டாள். கைக்குழந்தையின் பொறுப்பை ஹரி ஏற்றுக் கொண்டான். சாதாரணமாக குழந்தை பிறந்த பதினோராவது நாளன்று உறவினர்களை,

நண்பர்களை அழைத்துப் பெயர் சூட்டுவது வழக்கம்.

ஆனால் பப்லூ பிறந்தபோது சுகுணாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்ததால் அந்தச் சடங்கு நடத்தப்பட வில்லை. அதற்குப் பிறகு ஆர்வம் குறைந்துவிட்டதால் அப் படியே விட்டு விட்டார்கள். வீட்டில் எல்லோரும் அவனை பாபு என்று அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஹரி அவனை பப்லூ என்று அன்போடு அழைத்து வந்தான். போகப் போக அந்தப் பெயரே நிலைத்துவிட்டது. யாராவது பாபு என்று அழைத்தாலும் "என் பெயர் பாபு இல்லை, பப்லூ என்று திருத்துவான். ஹரியை ஒரு வினாடி பார்க்கவில்லை என்றால் "சித்தப்பா எங்கே?" என்று தவித்துப் போய்விடுவான்.

பத்து நிமிடங்கள் கழித்து...

சுகுணா உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். ராம கிருஷ்ணனும், ஹரியும் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். பப்லூ ஹரியின் முதுகைக் கட்டிக் கொண்டு முன்னும் பின்னு மாக ஆடிக் கொண்டே "மம்மீ! நான் உன்னோடு கல்யாணத் திற்கு வரப் போவதில்லை. சித்தப்பாவோடு இங்கேயே இருப்பேன்" என்றான்.

"இருப்பாய் இருப்பாய். நான் கிளம்பியதும் ஒப்பாரி வைத்தாய் என்றால் என் மீது இருக்கும் கோபத்தை எல்லாம் உன் மீது காட்டுவான். முதுகில் இரண்டு அடி கொடுப்பான்." சுகுணா சொன்னாள்.

"சித்தப்பா யாரையுமே அடிக்கமாட்டார். இல்லையா பப்லூ?" ஹரி சொன்னான்.

"ஆமாம். சித்தப்பா ரொம்ப நல்ல நல்லவர். நீதான் அடிப்பாய்."

"சரி. தாராளமாக இருந்து கொள். எனக்கும் பாதி சிரமம்



குறையும். அசல் எனக்குக் குழந்தைகள் எல்லோரையுமே அழைத்துப் போவதில் விருப்பமே இல்லை." சுகுணா போலி யாக அலுத்துக் கொண்டாள். "இனி பிரயோஜனம் இல்லைங்க குழந்தைகளையும் மேய்த்துக் கொண்டு வீட்டு வேலைகளை முழுவதும் என்னால் செய்ய முடியவில்லை. ஹரிக்குச் சீக்கிர மாக ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்துவிட வேண்டும்."

வாயில் உணவை வைக்கப் போன ஹரி தலையை உயர்த் தினான். "அண்ணி! இப்போ நிஜமாகவே கோபம் வருகிறது. சாப்பிடாமலேயே எழுந்து போய்விடுவேன்" என்று மிரட்டினான்.

"அவ்வளவு கோபம் வருவானேன்? கல்யாணமே பண்ணிக் கொள்ளாமல் எப்போதுமே எங்களுடனேயே இருந்துவிடப் போகிறாயா என்ன?"

"நீங்க போகச் சொன்னால் வீட்டைவிட்டுப் போய் விடுகிறேன்."

"ஹரி! அசல் விஷயம் என்ன தெரியுமா? கல்யாணம் செய்து கொண்டு நான் ஏதோ சுவர்க்க சுகங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன் இல்லையா? அந்த சுகம் ஏதோ நீ அனுபவிக்காமல் இருக்கிறாயே என்ற கரிசனம் உங்க அண்ணிக்கு..." ராமகிருஷ்ணன் கிண்டலாக சொன்னான்.

"இப்போ உங்களுக்கு என்ன குறை வந்துவிட்டது? முத்து முத்தாய் நான்கு குழந்தைகள், அனுசரித்துப் போகும் மனைவி. பிராக்டிஸ"ம் முன்னேறி விட்டது. லீடிங் லாயர் என்று பெயரும் வாங்கியிருக்கீங்க. கார் வேறு வாங்கப் போறீங்க. உங்களைப் போன்று அதிர்ஷ்டம் கிடைக்கும் என்றால் எந்த ஆண் மகனும் உடனே கல்யாணம் செய்து கொள்வான்."

"மம்மீ! நானும் சித்தப்பாவும் ஒரே கட்சி இல்லையா? இரண்டு பேரும் ஒன்றாக கல்யாணம் செய்து கொள்கிறோம். சித்தப்பா! நான் சொல்வது சரிதானே?" பப்லூ சொன்னான்.

"மை காட்!" உரத்தக் குரலில் சிரித்தான் ராமகிருஷ்ணன்.

ஹரி இடது கையை பின்னால் நீட்டி பப்லூவின் முதுகில் தட்டினான். "ஆமாம் பப்லூ. நீ சொன்னது போலவே நடக்கும்" என்றான்.

சாப்பிட்டு முடித்ததும் ஹரி பப்லூவுடன் குழந்தைகளின் அறைக்கு வந்தான். சமையல் அறையில் அண்ணாவும் அண்ணியும் ஜெயாவின் திருமணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

குழந்தைகள் எல்லோரும் தரையில் படுத்துக் கொள்வார்கள். அந்த அறையில் ஒரே ஒரு கட்டில் இருந்தது. உறவினர் யாரும் வராதபோது ஹரி அந்தக் கட்டிலில் படுத்துக் கொள்வான். யாராவது வந்துவிட்டால் அவனுடைய படுக்கையும் கீழேதான். சாதாரணமாக பப்லூ ஹரி பக்கத்தில்தான் படுத்துக் கொள்வான்.

ஹரி கட்டில் மீது இருக்கும் போர்வையை, தலையணையை எடுத்துத் தரையில் விரித்துக் கொண்டிருந்தான்.

"சித்தப்பா! படுக்கையை ஏன் தரையில் விரிக்கிறாய்?"

"இன்னிக்கு நாம் ரெண்டு பேரும் கீழே படுத்துக் கொள்வோம். சரிதானே?"

"ஓ.கே. எனக்கு குரங்கு பூனை கதையைச் சொல்கிறாயா?"

"சரி. போர்வையை சரியாக விரித்திருக்கிறேனா பாரு. ஓரம் சரியாக வந்திருக்கா?"

"அந்த ஓரம் மடிப்பு விழுந்திருக்கு." பப்லூ அந்தப் பக்கம் போய் சரி செய்தான்.



ஹரி படுத்துக் கொண்டதும் பப்லூவும் பக்கத்தில் படுத்துக் கொண்டு சித்தப்பாவின் மீது காலைப் போட்டுக் கொண்டான்.

"சித்தப்பா!" பப்லூ சீரியஸாக அழைத்தான்.

"என்ன பப்லூ?"

"எங்க எல்லோருக்கும் கண் பார்வை இருக்கே? உனக்கு மட்டும் ஏன் இல்லை?"

இதயத்தை யாரோ ஈட்டியால் குத்தியது போன்ற வேதனை. ஒரு நிமிடம் அந்த வேதனையைத் தாங்கிக் கொள்வது போல் ஹரி மௌனமாக இருந்தான். பிறகு தாழ்ந்த குரலில் சொன்னான். "அது என்னுடைய துரதிர்ஷ்டம் பப்லூ."

"துரதிர்ஷ்டம் என்றால் . . . ."

"போன ஜென்மத்தில் நிறைய பாவம் செய்திருக்கிறேன்."

"பாவம் பண்ணக் கூடாதா?"

"ஊஹூம் . . . ."

பப்லூ இரண்டு கையாலேயும் ஹரியின் கழுத்தைக் கட்டிக் கொண்டான். "நான் ஒரு நாளும் பாவம் பண்ண மாட்டேன். நீயும் பண்ணாதே."

"சரி. கதை சொல்லச் சொன்னாயே, சொல்லட்டுமா?"

ஹரி வழக்கமாக சொல்லும் குரங்கு பூனை கதையைச் சொல்லத் தொடங்கினான். அவன் கவனம் வேறு எங்கேயோ இருந்ததால் கதையை கோர்வையாக சொல்ல முடியவில்லை. நடுநடுவில் பாதை மாறிப் போனபோது பப்லூ சரி செய்து கொண்டிருந்தான்.

சுகுணா சமையலறையில் வேலையை முடித்துக் கொண்டு

படுக்கை அறைக்குள் வந்தாள். ராமகிருஷ்ணன் மேஜை அருகில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான்.

"இன்னும் உங்கள் வேலை முடியவில்லையா?" சுகுணா அலுத்துக் கொண்டாள்.

"நீ வரும் வரையில் இந்த கேஸை படித்து முடித்து விடலாமே என்றுதான். நேரத்தை வீணாக்கக் கூடாதுன்னு உங்க அப்பா எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பார். மறந்து விட்டாயா?" ராமகிருஷ்ணன் பைலை மூடி பக்கத்தில் வைத்து விட்டான்.

"குழந்தைகள் எல்லோரும் தூங்கிவிட்டார்களா?" என்று கேட்டான்.

"தூங்கியாச்சு. அதான் வீடு நிசப்தமாக இருக்கு. கடவுளே! இவர்களை சமாளிப்பதற்குள் போதும் போதும் என்று இருக்கு. எப்போ பார்த்தாலும் சண்டை சச்சரவுதான். இந்த நான்கு நாட்களும் வீட்டை ஒழுங்காக பார்த்துக் கொள்வீங்க இல்லையா?"

"இந்தப் பொறுப்புகளை எல்லாம் உன் மச்சினனிடமே சொல்லேன். லட்சுமணனுக்கு அடுத்தபடியாய் உன் ஆணை களை மேற்கொள்வான்."

"அவ்வளவுதானே தவிர உங்களால் முடியாது என்று சொல்றீங்க. உங்களை எனக்குத் தெரியாதா? நான் வீட்டில் இருக்கும் போதே இந்த லட்சணம். நானும் இல்லை என்றால் கேட்கணுமா என்ன?"

"நீ சொல்வதை ஒப்புக் கொள்கிறேன். நீ வீட்டில் இல்லை என்றால் எனக்கு வீட்டுப் பக்கம் வருவதற்குக் கூட பிடிக்காது, தெரியுமா?"

"பேச்சைப் பாரு. தேன் கலந்தாற்போல் இனிக்க இனிக்கப் பேசுவதில் ஒன்றும் குறைச்சல் இல்லை. சீட்டாடுவதற்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது. அதுதான், சந்தோஷம். அதை வெளிப்படையாக சொல்லுங்களேன்." பொய்யாக கோபித்துக் கொண்டாள்.



"என் சந்தோஷம் எல்லாம் உன்னிடம்தான் இருக்கு." ராமகிருஷ்ணன் மனைவியை அணைத்துக்கொண்டான். "உண்மையாகச் சொல்கிறேன் சுகுணா! சில சமயம் உன்னைப் பார்க்கும்போது நமக்குக் கல்யாணம் ஆகி இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை போல் தோன்றுகிறது. நான் இன்னும் உங்க அப்பாவிடம் ஜூனியராக இருப்பது போலவும் நீ என்னை ஜாடை மாடையாய் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டிருப்பது போலவே இருக்கிறது."

"போதுமே. ஜெயாவுக்கு இருபது வயது ஆகப் போகிறது. நான் குடித்தனத்திற்கு வந்தபோது ஜெயாவுக்கு இரண்டு வயசு, ஹரிக்கு எட்டு வயசு."

"என்ன? ஹரிக்கு இருபத்தி ஐந்து வயது முடிந்து விட்டதா?"

"பின்னே இல்லையா? இன்னும் உங்க தம்பி பச்சிளம் குழந்தை என்று நினைக்கறீங்களா? உங்களுக்கு எப்போதும் ஜெயாவைப் பற்றிய கவலைதானே ஒழிய ஹரியைப் பற்றிய யோசனையே இல்லை. நானும் எத்தனை நாளாக சொல்லிக் கிட்டு இருக்கிறேன், ஹரிக்கு நல்ல பெண்ணாக பாருங்கன்னு?"

"நீ சொல்வது நியாயம்தான் என்றாலும் போயும் போயும் பிறவிக் குருடனுக்குப் பெண்ணைக் கொடுக்க யார்தான் முன் வருவாங்க?"

"என்ன பேச்சு இது? பார்வை ஒன்றுதான் இல்லையே தவிர ஹரிக்கு என்ன குறைச்சல்? லட்சணமாக ராஜா போல்

இருக்கான்." சுகுணா பெருமூச்சு விட்டாள். "கடவுள் மட்டும் அந்தச் சின்ன குறையை வைக்காமல் இருந்தால் இந்நேரத்திற்கு சுந்தரி எனக்கு ஓர்படியாக வந்திருக்கமாட்டாளா? சித்தி, சித்தப்பா எத்தனையோ முறை இந்த வார்த்தையை என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். கஞ்சனூர் மாமாவிடம் ஹரியைப் பற்றி சொல்லியிருக்கிறேன்."

"எந்தப் பெண்ணின் தந்தைக்கு இது போன்ற பையனை தனக்கு மாப்பிள்ளையாக தேர்ந்தெடுக்க மனசு வரும்? நீயே சொல்லு."

"நீங்க அப்படித்தான் சொல்வீங்க. நாம் முயற்சி செய்யணுமே ஒழிய ஒரு பெண் என்ன, ஆயிரம் பெண்கள் கிடைப்பார்கள். இந்தக் காலத்தில் பணவசதி இல்லாமல் எத்தனையோ பெற்றோர்கள் மகள்களுக்கு கல்யாணம் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். வயது வித்தியாசமோ, நல்லவனோ கெட்டவனோ எதையும் பொருட்படுத்துவதில்லை. மகள் கழுத்தில் தாலி ஏறினால் போதும் என்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தரகரிடம் விசாரித்தால் ஏதாவது ஒரு பெண் கிடைக்காமல் போகமாட்டாள். அதற்கான நேரமோ பொறுமையோ உங்களிடம் இருந்தால்தானே?"

"பேஷ் . . . பேஷ். இதுவரையில் உன் தங்கைக்காக என் தம்பியிடம் சண்டை போட்டாய். இப்போ அவனுக்காக என்னிடம் சண்டை போடுகிறாயா? ரொம்ப நியாயம்தான். சில சமயம் யோசித்தால் உன்னுடன் பதினெட்டு வருஷம் எப்படி குடித்தனம் செய்தேனோ என்று தோன்றும். என் பொறுமையை நினைக்கும்போது எனக்கே ஆச்சரியமாக இருக்கும். பதினெட்டு வருடங்கள்! பாதி வாழ்க்கை கழிந்துவிட்டாற் போல் இருக்கு."



"பாதி வாழ்க்கையா? எனக்கு முழுவதுமாகவே முடிந்துவிட்டாற் போல் இருக்கு." சுகுணா சொன்னாள்.

"சுகுணா! இப்படி அருகில் வாயேன். தேவியாரின் தரிசனம் இல்லாமல் நான்கு நாட்கள் நான் தனியாக இருக்கணும் போலும்." முகத்தை சோகமாக வைத்துக் கொண்டான்.

கணவனின் முகத்தைப் பார்த்து சுகுணா கலகலவென்று நகைத்தாள். கணவன் சொன்னது உண்மைதான். சிலசமயம் இருவருக்கும் நடுவில் நிகழும் உரையாடலைப் பார்க்கும் போது கல்யாணம் முடிந்து பத்து நாட்கள் கூட முடியவில்லையோ என்று தோன்றும்.

பக்கத்து அறையில் குழந்தைகளுடன் படுத்துக் கொண்டிருந்த ஹரியின் காதுகளில் அண்ணன் அண்ணியின் உரையாடல் அரைகுறையாக விழுந்தாலும் தெளிவாகப் புரியவில்லை. பப்லூ கதை கேட்டுக் கொண்டே தூங்கிப் போய் விட்டான். அவன் கால் ஹரியின் வயிற்றின் மீது இருந்தது. கைகள் கழுத்தைச் சுற்றி பிரித்தெடுக்க முடியாத பாசக் கயிறாக பிணைந்து கிடந்தது. ஹரியின் இதயத்தைக் கிழித்துக் கொண்டு வெளியேறுவது போல் பெருமூச்சு ஒன்று வெளியேறியது.

சுந்தரியும் தானும் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்வதை தவிர்க்க முடியாது போலும். சுந்தரி! போன கோடை வரையில் அந்தப் பெயரைக் கேட்டாலே அவன் மனம் துள்ளிக் குதிக்கும். மந்திரம் போட்டாற்போல் உடல் முழுவதும் சிலிர்ப்பு பரவும். ஆனால் சுந்தரி இவ்வளவு கடின மனம் படைத்தவள் என்று அவன் கனவில் கூட நினைக்கவில்லை. எத்தனை பேசினாள்? என்னவெல்லாம் கற்றுக் கொடுத்தாள்? மனதைத் தூண்டி விடுவது போல் அவள் பேசியதும், பழகியதும் . . . "பார்வை இல்லா விட்டால் என்ன? உன்னைப் போன்ற அழகனை நான்

பார்த்ததே இல்லை. உன்னைப் போன்ற பர்சனாலிட்டீ ரொம்ப சிலருக்குத்தான் இருக்கும். கிராப்பை இப்படி கொஞ்சம் தாழ்த்தி வாரிக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா?"

சீப்பை எடுத்து வந்து அவன் தலையை வாரிவிட்டாள். அவன் பழையபடி சரி செய்து கொள்ளப் போனால் இரண்டு கைகளையும் அழுத்தமாகப் பிடித்துக் கொண்டு அசைய முடியாமல் செய்துவிட்டாள்.

"இரு... இரு. கலைத்து விடாதே. உண்மையிலேயே உனக்கு ரொம்ப அழகாக இருக்கு. வேணும்னால் எங்க அக்காவைக் கேளேன்" என்றாள்.

சமையலறையில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் சுகுணாவை இழுத்துக் கொண்டு வந்து "அக்கா! நீயே சொல்லு" என்று கேட்டாள்.

"ரொம்ப நன்றாக இருக்கு ஹரி! இனிமேல் இப்படியே வாரிக்கொள்" என்று அண்ணி சொன்னபோதும் அவன் மனதில் நம்பிக்கை வரவில்லை. அண்ணியிடம் மதிப்பு இருந்தாலும் அண்ணன் சொன்னால் தவிர எதையுமே நம்ப மாட்டான்.

ராமகிருஷ்ணனும் பார்த்துவிட்டு "உண்மைதான் ஹரி. இப்பொழுது உன் முகத்தில் தனி களை வந்துவிட்டது. உன் கிராப் இவ்வளவு அழகாக இருக்குன்னு இப்பொழுது தான் தெரிகிறது" என்று பாராட்டினான். அதற்குப் பிறகுதான் ஹரிக்கு நம்பிக்கை வந்தது. கண் பார்வை இல்லாத ஹரி விவரம் தெரிந்த நாள் முதல் எந்த பிரச்னை வந்தாலும் "அண்ணா!" என்று ஓடுவதுதான் வழக்கம்.

அண்ணாவும் நன்றாக இருப்பதாக சொன்ன பிறகு ஹரி



அதே போல் வாரிக் கொள்ளத் தொடங்கினான்.

அவன் முகம் களையாக இருந்தாலும் பார்வை இல்லாத குறை பளிச்சென்று தெரியும். ஒரு தடவை சுந்தரி கடைத் தெருவிலிருந்து கூலிங்கிளாஸ் வாங்கி வந்து மாட்டிவிட்டாள்.

"இதெல்லாம் எனக்கு எதுக்கு சுந்தரீ? நானோ ஒரு குருடன். இந்த உண்மையை மறைப்பதால் ஏற்படும் லாபம் என்னவோ எனக்குப் புரியவில்லை" என்றான்.

"சுந்தரி சொன்னது போல் கேட்டால் என்னவாம்?" சுகுணா தங்கையை சப்போர்ட் செய்தாள்.

சுந்தரி அவனை வலுக்கட்டாயமாக தோட்டத்தில் மல்லிகைக் கொடி பக்கத்தில் நிற்க வைத்தும், காபி குடிப்பது போலவும், சுவற்றில் சாய்ந்து கொண்டு நிற்பது போலவும் பல கோணங்களில் போட்டோ எடுத்தாள். போட்டோக்கள் ரொம்ப நன்றாக வந்திருப்பதாக எல்லோரும் சொன்னபோது அவற்றை பார்க்க முடியாத இயலாமையை நினைத்து அவன் மனம் வேதனையில் தவித்தது.

"அக்கா! சுவற்றில் சாய்ந்திருப்பது போல்நிற்கும் இந்த போட்டோவை பாரேன். உன் மச்சினன் சினிமா ஹீரோ போல் இருக்கிறான் இல்லையா?"

சுந்தரி சொன்னதை கேட்டபோது அவனுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. கறுப்புக் கண்ணாடி அவன் முகத்திற்கு ரொம்ப பொருத்தமாக இருப்பதாக எல்லோரும் பாராட்டினார்கள்.

பக்கத்து வீட்டு திருநாகம் மாமி மட்டும் "என்னடீயம்மா சுகுணா! உன் மச்சினனுக்கு நாளுக்கு நாள் ஷோக்கும், சிங்காரமும் அதிகமாகிக்கிட்டே போகுதே. என்ன விசேஷம்?"

நீட்டி முழக்கிக் கொண்டே குத்தலாக கேட்டாள்.

அதைக் கேட்டதும் ஹரியின் முகம் சிவந்துவிட்டது. மாமியின் கன்னத்தில் ஒரு அறை விட வேண்டும் என்ற அளவுக்கு ஆவேசம் வந்தது. 'தனக்குக் கண் பார்வை இல்லை' என்ற கசப்பு உண்மையை மறந்து போக வேண்டும் என்று அவன் எவ்வளவு தவித்தானோ, திருநாகம் மாமி போன்றவர்கள் மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்தி வேதனையைத் தந்து கொண்டிருந்தார்கள்.

சுந்தரி ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் சுகுணா வீட்டுக்குத் தவறாமல் வருவாள். இங்கே இருக்கும்போது தன்னுடைய குறும்புப் பேச்சால், செயல்களால் அவனைத் தூண்டிவிடுவாள். ரொம்ப உரிமையாக பழகுவாள். நாட்கள் செல்லச் செல்ல ஹரியின் மனதில் ஆசை விதைக்கப்பட்டு துளிர்விட்டது. சுந்தரி தன்னை நன்றாக புரிந்து கொண்டிருப்பதால் அவள் தன்னுடைய குறையைப் பொருட்படுத்த மாட்டாள் என்று நினைத்தான். வெளி அழகை விட மன அழகிற்குத்தான் முக்கியத்துவம் தருவாள் என்ற நம்பிக்கை அவன் மனதில் பலமாக வேரூன்றத் தொடங்கியது.

போன கோடை விடுமுறையில் சுந்தரி வரவில்லை. அவள் வந்தால் தன் மனதில் இருப்பதை அவளிடம் சொல்லி விட வேண்டும் என்று பலமுறை மனதிலேயே ஒத்திகை பார்த்துக் கொண்டான். சுந்தரி வரவில்லை. பிறகு சுந்தரியின் தந்தையிடமிருந்து சுகுணாவுக்குக் கடிதம் வந்தது. பெற்றோர் பார்த்திருக்கும் வரனைப் பண்ணிக் கொள்ள சுந்தரி மறுத்து விட்டாளாம். வேறு யாரையோ பண்ணிக் கொள்வதாக அடம் பிடிக்கிறாளாம். தன்னுடைய விருப்பத்திற்குச் சம்மதிக்க வில்லை என்றால் வீட்டை விட்டே போய்விடுவதாக மிரட்டுகிறாளாம். என்ன செய்வது என்று தெரியவில்லை



என்று வருத்தப்பட்டுக் கொண்டு எழுதியிருந்தாள்.

கடிதத்தைப் படித்து முடித்த சுகுணா "இவளுக்கு புத்தி இப்படி போவானேன்? அம்மா அப்பா சொன்ன பேச்சை கேட்காமல்?" கோபமாக சொன்னாள்.

அண்ணி கடிதத்தைப் படித்துக் காட்டும்போதே ஹரியின் மனம் வானத்தில் பறக்கத் தொடங்கியது. சுந்தரி தனக்காகத்தான் பெற்றோரை எதிர்ப்பதாக நினைத்துக் கொண்டான். அந்த நபர் தானே தான் என்று அண்ணியிடம் உடனே சொல்லிவிட வேண்டும் என்று துடித்த மனதை எப்படியோ கட்டுப்படுத்திக் கொண்டான்.

ஓரிருமுறை அண்ணாவிடம் இந்த விஷயத்தைச் சொல்லி விட வேண்டும் என்று முயற்சி செய்தான். ஆனால் இனம் புரியாத தயக்கம், வெட்கம் அவன் இதழ்களுக்குப் பூட்டுப் போட்டு விட்டது. வார்த்தைகள் வெளியில் வர மறுத்தன.

ஆனால் சில நாட்கள் கழித்து சுந்தரி கல்யாண விஷயத்தில் பெற்றோர்களை எதிர்க்கும் நபர் தான் இல்லை என்றும் - ஜெகன்மோகன் என்று வேறு ஒரு இளைஞன் என்றும் - தெரிந்தபோது அப்படியே குன்றிப் போய்விட்டான். சுந்தரி தனக்கும் தன் பெற்றோருக்கும் நடுவில் ஏற்பட்ட பிரச்சினையை விளக்கி ராமகிருஷ்ணனுக்குக் கடிதம் எழுதியிருந்தாள். இந்தப் பிரச்சினையை சுமுகமாக தீர்க்கும் வழியைச் சொல்லச் சொல்லி கடிதத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தாள்.

சாப்பாட்டு வேளையின்போது அண்ணன், அண்ணி இந்த விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது விஷயம் தெரிந்தது. எப்படியோ சாப்பிட்டேன் என்று பெயர் பண்ணிவிட்டு கையை அலம்பிக் கொண்டு வெளியே வந்து விட்டான். எதிலேயாவது விழுந்து தற்கொலை பண்ணிக் கொண்டு விடலாமா என்று கூடத் தோன்றியது.

சுந்தரிக்கு எவ்வளவு தைரியம்? அளவுக்கு மீறிய உரிமையைக் கொண்டாடி, நெருக்கமாக பழகிவிட்டு, அவன் மனதில் வேண்டாத ஆசைகளைத் தூண்டிவிட்டதோடு நிற்காமல் அப்படி ஒருத்தன் அந்த வீட்டில் இருப்பதே நினைவு இல்லாதவள் போல் அண்ணாவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாள். எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும்? ஹரிக்கு ஏமாற்றமாக இருந்ததோடு, அளவு கடந்த கோபமும் வந்தது. அப்படி என்றால் சுந்தரி தன்னிடம் பேசியது, பழகியது எல்லாமே பொய்தானா? எதுவுமே உண்மை இல்லையா? அவளுக்கு இது ஒரு விளையாட்டு போலும். நல்ல வேளை, அண்ணியிடம் தன் மனதில் இருப்பதை வெளியில் சொல்லவில்லை, அண்ணனிடமும் வாயைத் திறக்கவில்லை.

இருந்தாலும் இதென்ன சுபாவம்? கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லாதபோது வேற்று ஆணுடன் அவ்வளவு நெருக்கமாக யாராவது பழகுவார்களா? மனமும், உடலும் களங்கப்பட்டு விட்டது போல் அருவருப்பாக இருந்தது. நான்கு நாட்கள் வருத்தத்தை, வேதனையை அனுபவித்து வந்தவன் கடைசியில் தன் உடலில் இருக்கும் சக்தி எல்லாம் திரட்டிக் கொண்டு மனதை தேற்றிக் கொண்டான்.

'தவறு முழுவதும் என்னுடையதுதான். கண்பார்வை இல்லாதவன், எதற்கும் லாயக்கு இல்லாதவன் என்ற உண்மையை மறந்து போய் ஆசைகளை வளர்த்துக் கொண்டேன். எந்தப் பெண்தான் என்னை விரும்புவாள்? என்ன சுகம் கிடைத்துவிடும் என்று வாழ்க்கையை என்னுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுவாள்? சுந்தரி மட்டுமே இல்லை. இனி ஜென்மத்தில் எந்தப் பெண்ணைப் பற்றியும் நினைக்கக் கூடாது' என்று கூட முடிவு செய்திருந்தான். ஆனால் சுந்தரி



இங்கே வருகிறாள்; தான் இங்கே இருந்தாக வேண்டிய கட்டாயமான சூழ்நிலை. அவன் மனம் அவமானத்தால், ரோஷத்தால், கோபத்தால் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

* * *

## 2

மறுநாள் காலையில் எழுந்தது முதல் சுகுணா ஹரியிடம் வீட்டைப் பற்றிய பொறுப்புகளை ஒப்படைக்கத் தொடங்கினாள்.

"ஹரி! வண்ணான் உடுப்புகளை கொண்டு வருவான். எண்ணி வாங்கிக் கொள்" என்று நினைவுப் படுத்தினாள்.

"சரி அண்ணீ."

"வியாழக்கிழமை அன்னிக்கு ரேஷன் கடைக்குப் போய் சர்க்கரை வாங்கிக் கொண்டு வரணும், மறந்து விடமாட்டாயே?"

"மறக்க மாட்டேன் அண்ணீ."

"இன்னும் ஏதோ சொல்லணும்னு நினைச்சுக்கிட்டே இருந்தேன். மறந்துவிட்டேன். ஹரி! ஆவக்காய் ஊறுகாயை எடுத்து தனியாக கிண்ணத்தில் வைத்திருக்கிறேன். தீர்ந்து போய்விட்டால் ஜாடியிலிருந்து நீயே எடுத்து வை. உங்க அண்ணாவிடம் சொன்னாய் என்றால் கீழே சிந்தாமல் அவருக்கு எடுக்கத் தெரியாது. ஜாடியை போட்டு உடைத்தாலும் உடைத்துவிடுவார். தினமும் காலையில் சுவாமி இடத்தைத் துடைத்து, கோலம் போட்டு விளக்கு ஏற்றணும். மறந்து போகமாட்டாயே?"

அண்ணீ! உங்க ஊறுகாய் ஜாடியையும், முக்கோடி தேவதைகளையும் என் உயிருக்கும் மேலாக பாதுகாப்பேன். சரிதானே?" ஹரி முறுவலுடன் உறுதிமொழி தந்தான்.

"இப்போ உனக்கு சிரிப்பாகத்தான் இருக்கும். நீ ஒரு பெண்ணாக பிறந்து, மறதி அதிகமாய் இருக்கும் நபர் கணவனாக வாய்த்திருந்தால் என் கஷ்டம் புரிந்திருக்கும்."

"எதுக்கு அண்ணி அண்ணாவை சும்மா குறை சொல் நீங்க? வீட்டு விஷயங்களை எல்லாம் நாம் பார்த்துக் கொள்கிறோமே என்று அண்ணா கொஞ்சம் கவனக்குறைவாக இருக்கிறார். அவ்வளவுதானே தவிர அவர் ஒன்றும் பொறுப்பு இல்லாதவர் இல்லை. ஏதோ சொல்ல நினைத்து மறந்து விட்டதாக சொன்னீர்களே அதை நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள் முதலில்."

"என் கவனம் ஒரு இடத்தில் இருந்தால்தானே எல்லா விஷயங்களும் நினைவில் இருப்பதற்கு? குழந்தைகளுக்காக பௌடர் டப்பாவும், சீப்பும் எடுத்து வைத்தேனோ இல்லையோ?"

ஹரி படுக்கை அறைக்குள் சென்றான். எந்தப் பக்கம் எவ்வளவு அடிகள் எடுத்து வைத்தால் எந்த அறைக்குப் போக முடியுமோ அவனுக்கு நன்றாகவே தெரியும். வாசலைத் தாண்டி இடது பக்கம் திரும்பி எத்தனை கஜம் நடந்தால் மளிகைக் கடை வருமோ, வலது பக்கம் இருக்கும் திருநாகம் மாமி வீட்டுக்குப் போகணும் என்றால் எத்தனை அடிகள் நடக்கணுமோ அவனுக்குத் தெரியும். எந்த இடத்திற்கு போகணும் என்றாலும் நடக்க வேண்டிய தூரம் அவன் மனதில் அடிக்கணக்கில், கஜம் கணக்கில் பதிவாகியிருந்தது. நவராத்திரி வந்தால் பொம்மைகளை நேர்த்தியாக அடுக்கி பொம்மை கொலுவை சிறப்பாக அமைக்கும் திறமை அவனிடம் இருந்தது.



வீட்டு வேலைகளில் சுகுணாவுக்கு ஒரு பெண் பிள்ளையை விட அதிகமாக உதவி செய்ய அவனால் முடியும். சிறு வயது முதல் ராமகிருஷ்ணன் அவனுக்கு அளித்த பயிற்சியின் மூலம் அவனுக்கு இந்தத் திறமை கிடைத்தது. கண்பார்வை இல்லாவிட்டாலும் தொடுகை உணர்ச்சி, கேட்கும் திறமை, நுகரும் தன்மை எல்லாமே அதிக அளவில் இருந்தன. வெறும் காலடிச் சத்தத்தை, அசைவுகளை வைத்து வீட்டு மனிதர்களையும் வேற்று மனிதர்களையும் அவனால் வித்தியாசப்படுத்திச் சொல்ல முடியும். அவனிடம் இருக்கும் சுறுசுறுப்பை, அழகான தோற்றத்தைப் பார்த்தவர்கள் யாராக இருந்தாலும், குருடன் என்று தெரிந்ததும் ஒரு நிமிடம் வாயடைத்துப் போய் விடுவார்கள்.

ஹரி அலமாரியிலிருந்து பவுடர் டப்பாவையும், சீப்பையும் எடுத்துக் கூடையில் வைக்கும்போது "ஊருக்குக் கிளம்புகிறாயா சுகுணா?" என்று கேட்டுக் கொண்டே திருநாகம் மாமி வந்தாள்.

"ஆமாம் மாமி" என்றாள் சுகுணா.

"ஒரு கைப்பிடி சர்க்கரை இருந்தால் கொடு. நம்பினால் நம்பு. எங்க வேணூ ஊர் முழுவதும் அலைந்து திரிந்தும் எங்கேயும் சர்க்கரையே கிடைக்கவில்லை. பாழாய்ப் போன சர்க்கரைக்கு என்ன பஞ்சம் வந்துவிட்டதோ தெரியவில்லை" என்று சொல்லிக்கொண்டே புடவைத் தலைப்பில் மறைத்து வைத்திருந்த பெரிய டம்ளரை வெளியே எடுத்தாள். குறைந்த பட்சம் கால்படியாவது பிடிக்கும்.

"அண்ணி! திருநாகம் மாமி கைப்பிடி என்று சொன்னால் கால் கிலோவுக்குக் குறையாது என்று அர்த்தம். மாமீ! அந்த டம்ளரை இப்படி கொடுங்கள். தொட்டுப் பார்க்கிறேன்" என்றான் ஹரி.

"கண்ணால் பார்த்தாற் போலவே சொல்லிவிட்டாயே. பலே ஆள்தான்" என்றாள் திருநாகம் மாமி.

"எங்கள் வீட்டிலும் கொஞ்சம்தான் இருக்கு." மறுப்பு சொல்ல முடியாமல் சுகுணா அரை டம்ளர் சர்க்கரையைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

"ஜெயாவுக்கு அங்கே ஏதோ வரன் பார்க்கப் போகிறாயாமே." மாமீ நீட்டி முழக்கிக் கொண்டே விசாரித்தாள்.

"இன்னும் எதுவும் முடிவாகவில்லை மாமி. அங்கே போன பிறகுதான் பார்க்கணும்."

"நீ என்னிடம் மறைத்தாலும் உன் புருஷன் எதையுமே மறைக்கமாட்டான். நேற்று மாலையே என்னிடம் சொல்லி விட்டான், அந்த வரன் முடிவாகிவிடும் போல் இருக்குன்னு. எங்க வேணு ஒரு பைத்தியம். அவனுக்குத்தான் படிப்பு, வேலை எதுவுமே இல்லையே. நீ போய் அக்காவிடம் பேசு என்று என்னைப் பிடுங்கி எடுக்கிறான். அவனுக்கு சீர்வரிசை, வரதட்சணை எதுவுமே வேண்டாமாம். அவங்க அந்தஸ்துக்கும் நமக்கும் எப்படி பொருந்தும்? மனதை மாற்றிக் கொள்ளுடாப்பா என்று சொன்னால் காதில் போட்டுக் கொண்டால் தானே?"

இந்தப் பிரஸ்தாபனை சுகுணாவுக்குப் புதிது ஒன்றுமில்லை. தன் மகன் வேணுவுக்கு ஜெயாவைப் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுவதாக திருநாகம் மாமி இதற்கு முன் ஓரிருமுறை பேச்சு வாக்கில் சொல்லியிருக்கிறாள். வேணு நல்ல பையன்தான். ஆனால் மாமியின் வாய் ரொம்ப பொல்லாதது. யாராலும் சமாளிக்க முடியாது. அதோடு தங்கைக்குப் பெரிய இடத்தில் பையனைப் பார்த்து மணம் முடிக்க வேண்டும் என்று ராமகிருஷ்ணன் விரும்பினான்.



அதனால்தான் மாமி கல்யாணப் பேச்சை எடுத்த போதெல்லாம் சுகுணா "யார்க்கு யாரை முடிச்சு போட்டிருக்கோ நமக்கு எப்படி தெரியும்? எல்லாம் கடவுளின் செயல்" என்று பட்டும் படாமலும் பதில் சொல்லி நிலைமையைச் சமாளிப்பது வழக்கம். இப்போதும் அதைத்தான் சொன்னாள்.

"மாமீ! நீங்க வாய் துடுக்குத்தனத்தைக் குறைத்துக் கொண்டால் தவிர உங்க மகனுக்குப் பெண் கொடுக்க யாரும் முன் வரமாட்டார்கள்" என்றான் ஹரி.

திருநாகம் மாமி ஹரியின் வார்த்தைகள் காதில் விழாதது போல் பேச்சை மாற்றினாள். "நீ திரும்பி வருவதற்கு ஒரு வாரமோ பத்து நாட்களோ ஆகும் என்று ராமகிருஷ்ணன் சொன்னான். நீயும் இல்லாமல் இந்தக் குருட்டுத் தம்பியை வைத்துக் கொண்டு உன் புருஷன் எதுக்காக கஷ்டப்படணும்? என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் வீட்டோடு இருந்து கொண்டு வேளா வேளைக்குச் சமைத்துப் போட்டிருக்கமாட்டேனா?"

திருநாகம் மாமி வேண்டுமென்றே தன்னை குருட்டுப் பயல் என்று சொல்லிக் காட்டியது ஹரியின் மனதை ஈட்டியை போல் தாக்கியது. கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அவன் கன்னங்கள் சூடேறியது. அதே வேகத்தில் பதில் சொல்ல வேண்டும் என்று நுனி நாக்கு வரையில் வந்து விட்ட வார்த்தைகளை எப்படியோ அடக்கினான்.

இதழ்களில் முறுவலைத் தவழவிட்டான். "அண்ணீ! யாருடைய உதவியும் தேவையில்லைன்னு மாமியிடம் சொல்லுங்கள். காலையில் அண்ணா கோர்ட்டுக்குக் கிளம்புவதற்குள் சமையலை முடிக்க என்னால் முடியும். திருநாகம் மாமியின் கையில் சமையலறையை ஒப்படைத்தால் ஒரு மாதத்திற்கு

வரவேண்டிய மளிகைச் சாமான் பத்து நாட்கள் கூட வராது. எங்க அண்ணா பிள்ளை, குட்டி இருப்பவன். மாமியின் தாராள குணத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இல்லாதவன்.'' வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல் நக்கலாக சொன்னான்.

அதைக் கேட்டதும் திருநாகம் மாமிக்குப் கோபம் வந்து விட்டது. கண்ணாலேயே எரித்து விடுவது போல் ஹரியைக் கோபமாக பார்த்தாள். "உன் மச்சினன் சொன்னதை கேட்டாயா சுகுணா? அவனுடைய உத்தேசம்தான் என்ன? எல்லாவற்றையும் விழுங்குவதற்கு நான் என்ன ராட்சசியா? இல்லை கொல்லைவழியாய் மளிகைச் சாமானை கடத்திக் கொண்டு போகும் திருடியா?"

"வாயைப் பார்த்தால் முதலாவது. கையைப் பார்த்தால் இரண்டாவது." ஹரி சட்டென்று சொன்னான்.

"ஹரி! என்ன பேச்சு இது? வயதில் பெரியவர்களிடம் இப்படித்தான் பேசுவார்களா?" சுகுணா கடிந்து கொண்டாள்.

"மரியாதை கொடுக்கனும் என்றால் வயதில் பெரியவர் களாக இருந்தால் மட்டும் போறாது. புத்தியிலும் பெரியவர் களாக இருக்கணும் அண்ணி."

"சுகுணா! ஒரு விஷயம் சொல்லட்டுமா. கடவுள் சரியாக கண் திறந்து பார்க்கவில்லை உன் மச்சினனை. அவனுக்கு மட்டும் கண் பார்வை இருந்திருந்தால் இந்நேரத்திற்கு இந்த நாட்டையே ஆண்டு இருப்பான்." வேண்டுமென்றே குத்தலாக சொன்னாள்.

"மாமீ! என்னைப் போன்றவர்கள் நாட்டை ஆண்டால் முதல் காரியமாய் உங்களைப் போன்றவர்களை. . ." ஹரி சட்டென்று நிறுத்தி விட்டான். கூர்மையான அவன் காதுகள் அண்ணாவின் செருப்பு சத்தத்தை வாசலில் வரும் போதே உணர்ந்துவிட்டன.



"என்ன விஷயம்?" கேட்டுக் கொண்டே ராமகிருஷ்ணன் உள்ளே வந்தான்.

"ஒன்றுமில்லை தம்பி." திருநாகம் மாமி சட்டென்று சாது வான குரலுக்கு மாறிவிட்டாள். ராமகிருஷ்ணனின் சுபாவம் மாமிக்கு நன்றாகத் தெரியும். எதை வேண்டுமானாலும் சகித்துக் கொள்வானே ஒழிய தம்பியின் மீது தூசு கூட படுவதற்கு சம்மதிக்கமாட்டான். தன் புகார்கள் எதுவும் அவனிடம் எடுபடாது என்று மாமிக்குத் தெரியும்.

சற்று நேரம் ஊர்வம்பு பேசிவிட்டு மாமி கிளம்பிப் போனாள்.

எல்லோரும் சாப்பிட உட்கார்ந்து கொள்ளும் போது புருஷோத்தமன் வந்தார். அவர் சுகுணாவின் தந்தை வழி உறவு. வயது அறுபதுக்கு அந்தப் பக்கம் இந்தப் பக்கமாக இருக்க லாம். மனைவி இறந்து போய் பத்து வருடங்கள் ஆகிவிட்டன. புருஷோத்தமன் ரொம்ப கஞ்சன் என்றும், மனைவி உயிரோடு இருக்கும் வரையில் அவளுக்கு வயிறு நிரம்ப சாப்பாடு போடாமல், உடுத்துவதற்கு புடவைக் கூட வாங்கித் தராமல் பாடாய்ப் படுத்தி வைத்தார் என்றும் எல்லோரும் கதை கதையாக பேசிக் கொள்வார்கள். மனைவி இறந்து போன பிறகு செலவை மிச்சம்பிடிக்க, குழந்தைகளை கிராமத்தில் இருக்கும் விதவை மச்சினியிடம் அனுப்பிவிட்டார். எப்போதாவது நடுவில் தானே போய் பார்த்துவிட்டு வருவார். இருக்கிற சொத்தை விற்றுவிட்டு வட்டி வியாபாரம் செய்து நன்றாகவே சம்பாதித்து விட்டார். சொந்தமாக பெரிய வீடு இருந்தாலும் வாடகைக்கு விட்டுவிட்டு ஒண்டியாளுக்கு எத்தனை இடம் வேணும் என்று சொல்லிக்கொண்டு அவுட்ஹவுஸில் குடியிருந்தார். வாரத்தில் இரண்டு மூன்று நாட்கள் சமைத்துக் கொண்டால் அதிகம். சரியாக சாப்பாட்டு வேளையின் போது

ராமகிருஷ்ணன் போன்ற உறவினர் வீட்டுக்குப் போய் நிற்பார். சாப்பாடு நேரத்தில் வந்த பெரியவரை சாப்பிடுங்கள் என்று சொல்லாமல் இருக்கக்கூடிய கடின மனம் எந்த கிருகஸ்தனுக்குத்தான் இருக்கும்?

புருஷோத்தமனின் தோற்றத்தைப் பார்க்கும்போது அவருக்கு அவ்வளவு சொத்து இருக்கும் என்றோ, லட்சக் கணக்காய் பணம் இருக்கும் என்றோ யாரும் நினைத்துக் கூடப் பார்க்கமாட்டார்கள். ஒற்றை நாடியாய், தரித்திரத்தில் உழலும் மனிதன் போல் கச்சலாக இருப்பார்.

ராமகிருஷ்ணனிடம் நல்லவிதமாக பேசி தன் பக்கம் இழுத்துக் கொண்டு அவன் மூலமாக சொத்து சம்பந்தப்பட்ட கோர்ட் விவகாரங்களை கால் காசு செலவழிக்காமல் முடித்துக் கொள்வார்.

"அடுத்த தடவை கைக்குப் பணம் வந்ததும் உன் பீஸை தந்து விடுகிறேன். உறவு அது இது என்று தாட்சிண்யம் பார்க்க வேண்டாம். உறவு வேறு தொழில் வேறு" என்று தேன் ஒழுகப் பேசிவிட்டு பிறகு சில நாட்களுக்கு கண்ணிலேயே பட மாட்டார்.

சுகுணா அவரை சின்ன தாத்தா என்று அழைப்பாள். வீட்டில் குழந்தைகள் உள்பட எல்லோரும் அப்படியே அழைப்பது வழக்கமாகிவிட்டது. எந்த வேலையும் இல்லாவிட்டால் ஜெயாவுக்கு ஏதோ வரன் இருப்பதாக சொல்லிக் கொண்டு வந்து நிற்பார். இன்றும் அதே போல் வந்தார்.

"சுகுணா ஊரிலிருந்து திரும்பி வரட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்." ராமகிருஷ்ணன் சொன்னான்.

புருஷோத்தமன் வயிறுமுட்ட சாப்பிட்டுவிட்டு பெரிதாக ஏப்பம் விட்டுக்கொண்டே "அப்புறமாக வருகிறேன் சுகுணா"



என்று விடை பெற்றுக் கொண்டு எழுந்து கொண்டார்.

"இப்போதைக்கு வராதீங்க. அண்ணி ஊரில் இருக்க மாட்டாள்" என்றான் ஹரி.

"சுகுணா இல்லாவிட்டால் என்ன? நீயும், உன் அண்ணாவும் வீட்டில் இருப்பீங்க இல்லையா? இந்த வீட்டுக்கு இஷ்டப் பட்டபோது வந்து போகும் அதிகாரமும், உரிமையும் எனக்கு இருக்கு. நீ கல்யாணம் பண்ணிக்கொண்டு தனிக் குடித்தனம் போனாய் என்றால் 'எங்க வீட்டுக்கு வாங்கோ தாத்தா' என்று வருந்தி வருந்தி அழைத்தாலும் உன் வீட்டுக்கு வருவேன் என்று நினைத்தாயா" என்று சொன்னார். ஏதோ தனக்கு ராம கிருஷ்ணனிடம் மட்டும்தான் அபிமானம் இருப்பது போல வும், அவனுக்காகத்தான் இந்த வீட்டுக்கு வருவது போலவும் சவடால் விட்டார்.

மதியம் ஆகிவிட்டது. சுகுணா, குழந்தைகள் ரயிலுக்குப் புறப்பட வேண்டிய வேளை வந்துவிட்டது. ராமகிருஷ்ணன் டாக்ஸியை கொண்டு வந்து வாசலில் நிறுத்தினான்.

உள்ளே அறையில் பீரோவை பூட்டி சாவிக் கொத்தை ஹரியின் கையில் வைத்தாள் சுகுணா. "வீடு பத்திரம் ஹரி! உங்க அண்ணாவுக்குப் பணம் வேண்டும் என்றால் நீயே எடுத்துக் கொடுத்துவிட்டு மறுபடியும் பூட்டி விடு. சாவிக் கொத்தை மட்டும் அவரிடம் கொடுக்காதே. மறதி ஆசாமி இல்லையா? பணத்திற்கு பதிலாக சாவிக் கொத்தை சட்டைப் பையில் போட்டுக் கொண்டு போனாலும் ஆச்சரியப்பட வேண்டிய தில்லை" என்று முறுவலித்தாள்.

"நீ தான் என் மனதை புடவைத் தலைப்பில் மூட்டை கட்டிக் கொண்டு போகிறாயே. பின்னே என்னால் சுயநினைவோடு எப்படி இருக்க முடியும்?" ராமகிருஷ்ணன் புகார் செய்வது போல் சொன்னான்.

"உங்களை எனக்குத் தெரியாதா? வீட்டில் நான் இல்லை என்றால் உங்களுக்கு உலகமே மறந்துவிடும்." சீட்டாட்டத்தை நினைவுப்படுத்தும் வகையில் மறைமுகமாக சொன்னாள்.

வாசலில் டாக்ஸிகாரன் ஹாரன் அடிக்கும் ஒலி கேட்டது.

"சொல்லவேண்டியதெல்லாம் சொல்லி முடித்து விட்டாயா? இன்னும் ஏதாவது பாக்கியிருக்கா? சீக்கிரம் கிளம்பு. ரயிலுக்கு நேரமாகிவிட்டது" என்று ராமகிருஷ்ணன் அவசரப்படுத்தினான்.

குழந்தைகள் மூவரும் ஏற்கனவே டாக்ஸியில் ஏறி உட்கார்ந்து விட்டார்கள். முன்சீட்டில் உட்கார்ந்து கொள்வதற்காக அவர்களுக்குள் சண்டை நடந்து கொண்டு இருந்தது.

"ஹரீ! போய் வருகிறேன்." சுகுணா வெளியில் வந்தாள்.

ஹரி பப்லூவை தூக்கிக் கொண்டு வெளியே வந்தான். ராமகிருஷ்ணன் அவர்களை ரயிலில் ஏற்றிவிட ஸ்டேஷனுக்குப் போய்க் கொண்டிருந்தான்.

வேகமாக படி இறங்கப் போன சுகுணா ஒரு நிமிடம் நின்று பின்னால் திரும்பி ஹரியிடம் வந்தாள். மகனின் கன்னத்தில் செல்லமாக தட்டிவிட்டு "நான் போன பிறகு சித்தப்பாவை படுத்தமாட்டாய் இல்லையா?" என்றாள்.

மாட்டேன் என்பது போல் தலையை குறுக்காக அசைத்தான். சுகுணா மகனின் கன்னத்தில் முத்தம் பதித்து விட்டு ஹரியின் தலையை அன்புடன் வருடிவிட்டாள். "ஹரீ! இவர்களோடு நீ என்ன அவஸ்தை படப்போகிறாயோ என்னவோ? போய் வருகிறேன். நீ இருக்கிற தைரியத்தில்தான் நிம்மதியாக கிளம்புகிறேன். வீடு பத்திரம். உங்க அண்ணாவையும் நீ தான் பார்த்துக் கொள்ளணும்" என்றாள் முறுவலுடன்.



"சுகுணா! நேரம் ஆகிவிட்டது." டாக்ஸியில் உட்கார்ந்திருந்த ராமகிருஷ்ணன் அவசரப்படுத்தினான்.

ஹரி பப்லூவின் கையை உயர்த்திப் பிடித்துக் கொண்டான். சுகுணா காரில் ஏறி உட்கார்ந்து கொண்டு கதவைச் சாத்தினாள். கார் ஸ்டார்ட் ஆன சத்தம் கேட்டது.

ஹரி பப்லூவின் கையை அசைக்கச் செய்து டாடா காட்டினான். கார் கிளம்பிவிட்டது. போகப் போக காரின் சத்தம் காற்றில் கலந்து தேய்ந்துவிட்டது.

எப்போதும் வீட்டை விட்டு வெளியே போய் பழக்கம் இல்லாத சுகுணா அண்ணி, நாட்டையே விட்டு வெளியேறுவது போல் தன்னிடம் ஆயிரம் முறை வீட்டை பார்த்துக் கொள்ளச் சொல்லி எச்சரித்துவிட்டுப் போனதை நினைக்கும் போது ஹரிக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவன் கைகள் பப்லூவை மார்போடு அணைத்துக் கொண்டன.

பப்லூவும் அண்ணியுடன் ஊருக்குப் போயிருந்தால் சந்தடியே இல்லாமல் நிசப்தமாக இருக்கும் இந்த வீட்டில் தனக்குப் பைத்தியம் பிடித்து விட்டிருக்குமோ என்னவோ?

* * *

## 3

மறுநாள் இரவு....

அன்று காலை முதல் சுந்தரியின் வரவுக்காக ஆயிரம் கண்களுடன் காத்திருப்பது போல் தன்னையும் அறியாமல் ஹரியில் உடலும், உள்ளமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. நரம்புகள் எல்லாம் விண் என்று தெறிக்கும் அளவுக்கு கால்கட்டை விரல்களில் மட்டுமே உடலை தாங்கி நிற்பது

போன்ற தவிப்பு அது. ஆனால் நேரம் போனதுதான் மிச்சம். பகல் முடிந்து மாலையும் ஆகிவிட்டது. சுந்தரியும் அவள் சிநேகிதிகளும் வரவில்லை.

மாலை வரையில் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன ராமகிருஷ்ணன் தம்பியிடம் "இனி அவர்கள் வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன். கிளப் வரையில் போய்விட்டு வருகிறேன். நான் திரும்பி வருவதற்கு நாழியாகுமோ என்னவோ? நீயும் பப்லூவும் சாப்பிட்டு விட்டு தூங்குங்கள். கதவைத் தாழ்ப்பாள்போட்டுக் கொள். வரட்டுமா" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

ஹரி பப்லூவுக்குச் சாதம் ஊட்டி விட்டான். படுக்கையை போட்டுவிட்டு அவனையும் படுக்க வைத்து அருகில் அமர்ந்து கொண்டான். வழக்கம் போல் பப்லூவுக்கு குரங்கு கதையைச் சொல்லிக் கொண்டிருந்த போது திடீரென்று கரெண்ட் போய்விட்டது.

"சித்தப்பா! கரெண்ட் போச்சு. ஒரே இருட்டு!" பப்லூ எழுந்து உட்கார்ந்து கொண்டு பயத்துடன் சித்தப்பாவின் கழுத்தைப் கட்டிக் கொண்டான்.

"இருட்டாய் இருந்தால் பயப்படுவானேன்? இரு. நான் போய் மெழுகுவர்த்தியைக் கொண்டு வருகிறேன்."

ஹரி பப்லூவைத் தூக்கிக் கொண்டு சமையலறைக்குள் சென்று தீப்பெட்டியும், மெழுகுவர்த்தியும் கொண்டு வந்தான். தீக்குச்சியைப் பற்ற வைத்து தன்னுடைய கையிலேயே வைத்துக் கொண்டு மெழுகுவர்த்தியை ஏற்றச் சொல்லி பப்லூவிடம் சொன்னான்.

"மெழுகுவர்த்தியைக் கொளுத்தியாச்சா?"

"ஆச்சு சித்தப்பா."



"அதை மூலையில் இருக்கும் ஸ்டூல் மீது வைத்துவிட்டு வா பப்லூ."

பப்லூ சித்தப்பா சொன்னது போல் செய்துவிட்டு வந்தான். ஹரி மறுபடியும் கதையைச் சொல்ல ஆரம்பித்தான். பப்லூ கதையைக் கேட்டுக் கொண்டே தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான்.

திடீரென்று ஃபேன் சுற்றத் தொடங்கியதும் கரெண்ட் வந்து விட்டதை உணர்ந்த ஹரி மெதுவாக சுவற்று ஓரமாக நடந்து ஸ்டூல் அருகில் சென்று குனிந்து பலமாக ஊதினான். கையால் தடவி மெழுகுவர்த்தியை கையில் எடுத்து அதன் மேலாக சற்று உயரத்தில் உள்ளங்கையை வைத்தான். மெழுகுவர்த்தி இன்னும் எரிந்து கொண்டிருப்பது போல் உஷ்ணமாக உணர்ந்தான். குனிந்து மற்றொரு முறை பலமாக ஊதினான். இந்த முறை மெழுகுவர்த்தி அணைந்து விட்டது.

ஹரி கதவுக்கு பக்கத்திலிருந்த ஸ்விட்சை அழுத்தி விளக்கை அணைத்துவிட்டான். 'இப்போ அறை முழுவதும் இருள் பரவியிருக்கும். வெளிச்சத்திற்கும், இருட்டுக்கும் வித்தியாசம் தெரியாத வாழ்க்கை தன்னுடையது' என்று நினைத்துக் கொண்டே கட்டில் அருகில் சென்று பப்லூவுக்குப் போர்வையைச் சரியாக போர்த்திவிட்டான். அவன் கைகள் தன்னையும் அறியாமல் பப்லூவின் தலையை, கன்னத்தை அன்போடு வருடிவிட்டன.

எழுந்துபோய் கட்டிலுக்கு பக்கத்தில் இருந்த ஜன்னல் அருகில் நின்று கொண்டான். ஜன்னல் வழியாக குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. பகல் முழுவதும் அக்கம் பக்கத்தில் இருக்கும் நடுத்தரக் குடும்பங்களில் நடக்கும் சண்டை சச்சரவுகளுடன் சந்தடியாக இருக்கும் அந்தத் தெரு இப்பொழுது நிசப்தமாக இருந்தது. யார் வீட்டிலோ கைக்குழந்தை அழும்

சத்தமும், அவ்வப்போது நாய் குலைக்கும் சத்தமும் தொலைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தன. இரவு பதினோரு மணி ஆகிவிட்டதற்கு அடையாளமாக சுடியாரத்தில் மணி அடித்தது.

ஏனோ தெரியவில்லை. எத்தனை முயற்சி செய்தாலும் ஹரிக்குத் தூக்கமே வரவில்லை. வேண்டாம் என்று நினைத்தாலும் சுந்தரி ஏன் வரவில்லை என்ற கேள்வி அவன் மனதை துளைத்துக் கொண்டிருந்தது. சுந்தரி பற்றி நினைக்க நினைக்க அவன் இதயத்தில் தீ போன்ற எரிச்சல் கிளம்பியது.

நிசப்தமாக இருந்த அந்தச் சூழ்நிலையில் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல் தோன்றியது. நேற்று அண்ணியும், குழந்தைகளும் கிளம்பியது முதல் வீட்டில் சந்தடி எல்லாம் மூட்டையாய் கட்டி எடுத்துக் கொண்டு போய் விட்டாற் போல் வெறிச்சென்று இருந்தது. அண்ணியும், குழந்தைகளும் சீக்கிரமாக வந்துவிட்டால் தேவலை. ஹரியின் மனதில் இனம் புரியாத கலக்கம் பரவியது. தூக்கமும் வரவில்லை. அண்ணனும் இப்போதைக்கு வருவதாகத் தெரியவில்லை. இந்த நிசப்தம், இந்த சூனியம், இந்தத் தனிமை தன்னை விழுங்கிவிடும் போல் தோன்றியது.

மறுபடியும் வந்து கட்டில் மீது அமர்ந்து கொண்டான். அப்படியும் மனதிற்கு சமாதானம் ஏற்படவில்லை. ஏதாவது சத்தம் வேண்டும் போல் இருந்தது. காட்சிகளைக் கண்ணால் பார்க்க முடியாத அவன் மனதிற்கு காதுகளே கண்கள் போல் செயல்படும் அளவுக்கு சத்தம் வேண்டும். அந்தச் சத்தத்தில் மனக்கண்ணால் காட்சிகளைப் பார்ப்பது போன்ற விசித்திரமான உணர்வு தோன்றும். சில சமயம் கையை நீட்டி அந்த ஒலியை, ஒலியின் அலைகளை கைப்பிடியில் சிறைப் பிடித்து விட வேண்டும் என்று பலமாக தோன்றும்.



ஹரி மெதுவாக எழுந்து அடுத்த அறைக்குச் சென்றான். அங்கே தன் பெட்டியில் பத்திரமாக வைத்திருந்த வயலினை வெளியில் எடுத்தான். ஒரு நிமிஷம் அவன் கைகள் மிக அபூர்வமான பொருளைத் தொடுவது போல் அதன் தந்திகளை விரல்களால் தடவிப் பார்த்தன.

சுகுணாவின் தாய் நல்ல பாடகி. கர்னாடக இசையில் நல்ல தேர்ச்சி பெற்று இருந்தாள். தன் மகள் சுகுணாவுக்குப் பாட்டுடன் வயலினையும் கற்றுக் கொடுக்கச் செய்தாள். ஆனால் கல்யாணம் ஆகி, குழந்தைகள் பிறந்த பிறகு குடும்பப் பொறுப்புகள் அதிகமாகி விட்டதில் கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கலை சுகுணாவிடமிருந்து விலகிப் போய்க் கொண்டிருந்தது.

கல்யாணம் ஆகி குடித்தனத்திற்கு வந்த புதிதில் சுகுணா வயலின் வாசிக்க உட்கார்ந்தால் ஹரி கை வேலையைப் போட்டுவிட்டு அப்படியே நின்று கொண்டு அதில் லயித்துப் போய்விடுவான். உலகமே சூனியமாக இருந்த அவனுக்குத் திடீரென்று புது உலகம் கிடைத்துவிட்டாற் போல் இருந்தது.

ராமகிருஷ்ணன் மனைவியிடம் ஜெயாவுக்குப் பாட்டு கற்றுத் தரச் சொல்லி வற்புறுத்தினான். சுகுணாவும் தனக்குத் தெரிந்த வித்தையை எப்படியாவது ஜெயாவுக்குக் கற்றுக் கொடுத்து அவளை சிறந்த பாடகியாக தயார் செய்ய வேண்டும் என்று எத்தனையோ முயற்சி செய்தாள். ஆனால் ஜெயாவுக்கு இசையில் கொஞ்சம் கூட ஆர்வம் இருக்கவில்லை. அண்ணி வயலினை எடுத்து வெளியில் வைக்கச் சொன்னால் உயிரே போய்விட்டாற் போல் பார்ப்பாள். அவளுடைய கவனம் எப்போதும் விளையாட்டில் தான் இருந்தது. நயமாக எடுத்துச் சொல்லியும், மிரட்டிப் பார்த்தும்

ஜெயாவுக்கு இசையைக் கற்றுக் கொடுக்கும் முயற்சியில் சுகுணாவுக்குத் தோல்விதான் கிடைத்தது.

சுகுணா ஜெயாவுக்குக் கற்றுக் கொடுக்கும் ஸ்வரங்கள் ஹரியின் மனதில் ஆழமாக பதிந்துவிட்டன. துணிகளை மடித்து வைக்கும்போதோ, கொல்லையில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும்போதோ அவனையும் அறியாமல் கீர்த்தனைகளைப் பாடுவான். ஒருமுறை அவன் பாடும்போது சுகுணா யதேச்சையாக கேட்டாள். அவனுடைய இசை ஞானம் அவளைக் கவர்ந்தது. "ஹரி! பாடிக் காட்டு" என்று அண்ணி கேட்டபோது முதலில் வெட்கப்பட்டாலும் போகப் போக வாய்விட்டுப் பாட ஆரம்பித்தான். சுகுணா ஆர்வத்துடன் வயலினையும் கற்றுக் கொடுக்க முன் வந்தாள்.

போகப் போக ஹரிக்கு அந்த வயலினும், இசை சாதகமும்தான் உலகம் என்பது போல் ஆகிவிட்டது. ஜெயா சங்கீதத்தின் பக்கம் தலை வைத்துப் படுக்க மறுத்துவிட்டாலும் ஹரி அந்தக் கலையில் ஓரளவுக்குத் தேர்ச்சி பெற்றுவிட்டான்.

குழந்தைகள் பிறந்த பிறகு வீட்டு வேலைகள் அதிகமாகி விட்டதால் சுகுணா இசையிலிருந்து விலகிப் போனாலும் எப்போதாவது நேரம் கிடைக்கும் போது ஹரியை வாசிக்கச் சொல்லிக் கேட்பாள். இசையில் ஹரிக்கு இருந்த ஈடுபாடும், ஞானமும் சுகுணாவின் உள்ளத்தை கவர்ந்துவிட்டன. தனக்கு ரொம்பவும் விருப்பமான அந்த வயலினை ஹரியின் பதினெட்டாவது பிறந்தநாளன்று பரிசாக தந்துவிட்டாள். அன்று ஹரி அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

இசையில் ஹரிக்கு இருந்த ஈடுபாட்டை உணர்ந்த ராமகிருஷ்ணன் ஊரில் எங்கே பாட்டு கச்சேரி நடந்தாலும், டிக்கெட்டின் விலை எவ்வளவு அதிகமாக இருந்தாலும் வாங்கிக் கொடுத்து தம்பியை அனுப்பி வைப்பான்.



ஹரி இரண்டு வருடங்களுக்கு முன் அண்ணி தந்த ஊக்கத்தில், அண்ணன் கொடுத்த ஆதரவில் ஊரில் இருந்த "ஹரே ராமா-ஹரே கிருஷ்ணா" நிறுவனத்தில் மெம்பராக சேர்ந்தான். ராமநவமி, கிருஷ்ணஜெயந்தி போன்ற பண்டிகை நாட்களிலும், சின்ன சின்ன விழாக்களிலும் அந்த நிறுவனம் இசை நிகழ்ச்சிகளை நடத்தி வந்தது. ஹரி அந்தக் குழுவுக்காக வயலின் வாசித்து வந்தான். இந்த விதமாக அவனுக்கென்று ஒரு உலகம் ஏற்படத் தொடங்கும் போதே அந்த நிறுவனத்தில் பண விவகாரத்தில் ஏதோ தகராறு ஏற்பட்டு பெரிய கலாட்டாவானதுடன் அந்த நிறுவனம் மூடப்பட்டுவிட்டது.

சில சமயம் ஹரி வயலினில் புதுப்புது ராகங்களை, சுவரங்களை உருவாக்கும்போது சுகுணா மெய் மறந்து கேட்டுக் கொண்டிருப்பாள். "இவன் நான் கற்றுக் கொடுத்த அதே ஹரிதானா?" என்று சில சமயம் வியப்பும் அடைவாள்.

"குருவையே மிஞ்சிவிட்டான் உன் சீடன்" என்று ராமகிருஷ்ணன் பரிகாசம் செய்வான்.

ஹரி வயலினைக் கொண்டு வந்து பப்லூ படுத்திருந்த கட்டிலுக்குப் பக்கத்தில் தரையில் அமர்ந்து வாசிக்கும் போது பழைய நினைவுகள் அவன் மனதில் அலையாய் எழும்பின. 'போன பிறவியில் புண்ணியம், பாவம் சரிசமமாக செய்திருப்பேன் போலும். இந்தப் பிறவியில் பார்வை இல்லாவிட்டாலும் கடவுளுக்கு ஒப்பான அண்ணன், அண்ணி கிடைத்தார்கள். அவர்கள்தான் எனக்கு இரண்டு கண்கள்' என்று நினைத்துக் கொண்டான்.

நிசப்தமாக இருந்த அந்தச் சூழ்நிலையில் அவன் இதயத்தில் இருக்கும் வேதனை முழுவதும் கரைந்து இசையாய் மாறிவிட்டது போல் வயலினிலிருந்து ஸ்வரங்கள் வெளியேறி அந்தச் சூழ்நிலை முழுவதும் பரவிக் கொண்டிருந்தன.

அந்த இசையில் தன்னையே மறந்து தவநிலையில் இருக்கும் முனிவரைப் போல் அமர்ந்திருந்தவனுக்கு வாசலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்கவே இல்லை. அதிலிருந்து தங்கப் பதுமை போன்று ரொம்ப அழகாக, நளினமாக இருந்த இளம் பெண் ஒருத்தி இறங்கி வேகமாக ஓடி வந்து வாசற் கதவைத் தட்டப்போனவள் அப்படியே நின்றுவிட்டாள்.

உள்ளேயிருந்து கேட்டுக் கொண்டிருந்த இசை இதயத்தைக் கசக்கிப் பிழிவது போல் இருந்தது.

அதற்குள் காரிலிருந்து மேலும் நான்கைந்து பெண்கள் இறங்கி வந்தார்கள்.

"என்ன ஆச்சு? கதவைத் தட்டாமல் இருப்பானேன்?" ஒரு பெண் கேட்டாள்.

"அந்த இசை நம் கவிதாவை மந்திரம்போட்டாற் போல் கட்டிப் போட்டுவிட்டது போலும். அதான் பதுமையாக நின்றுவிட்டாள்." இன்னொரு பெண் கவிதாவின் முகத்திற்கு நேராக விரல்களை ஆட்டினாள்.

"கதவைத் தட்டுங்கப்பா முதலில். காரில் உட்கார்ந்து உட்கார்ந்து இடுப்பெல்லாம் ஒரே வலி." நிற்கவும் திராணி இல்லாதது போல் சுவற்றில் சாய்ந்து கொண்டாள் ஒருத்தி.

முனிவரின் தவத்தை கலைக்க வந்த தேவக் கன்னிகை போல் கவிதா பயந்து கொண்டே மெதுவாக விரல்களால் கதவைத் தட்டினாள்.

"கடவுளே! கடவுளே! கதவைத் தட்டக் கூட உன் கையில் தெம்பு இல்லையா? அவ்வளவு மெதுவாக தட்டினால் எப்படி? உள்ளே இருக்கும் ஆள் யாரோ இந்த உலகத்திலேயே இல்லை போலிருக்கு" என்று சொல்லிக் கொண்டே படபடவென்று வேகமாக கதவைத் தட்டினாள் ஒரு பெண்.



வீட்டிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த இசை சட்டென்று நின்று விட்டது.

கதவு மறுபடியும் பலமாக தட்டப்பட்டது. "வந்து விட்டேன்." உள்ளே இருந்து குரல் கேட்டது.

"அப்பாடா!" கதவைச் சத்தப்படுத்திய பெண் நிம்மதியாக மூச்சைவிட்டுக் கொண்டாள்.

சில வினாடிகள் கழித்து விளக்குகள் எரிந்தன. கதவுகள் திறக்கப்பட்டன.

"யாரது?" ஹரி கேட்டான். மூச்சை உள்ளே இழுத்துப் பிடித்து வைத்திருந்தது போல் அவன் குரல் ஒலித்தது.

"நான்தான் கவிதா. சுந்தரியின் ஒன்றுவிட்ட சித்தியின் மகள். நாங்க மாலையிலேயே வந்திருக்கணும். வழியில் கார் ரிப்பேராகிவிட்டதால் தாமதமாகிவிட்டது." அந்தப் பெண்ணின் குரல் மன்னிப்பு கேட்பது போல் ஒலித்தது.

ஹரியின் இதயம் வேகமாக துடித்தது. சுந்தரியும் வந்திருக்கிறாளா? ஏன் அவள் பேசவில்லை? தன்னுடன் பேச விருப்பம் இல்லாமல் கவிதாவை முன்னாடி தள்ளியிருப்பாளோ? கவிதா சுந்தரியின் ஒன்றுவிட்ட சித்தியின் மகள். தாய் தந்தை சிறுவயதிலேயே இறந்து போய் விட்டதால் சுந்தரியின் வீட்டிலேயே வளர்ந்து வந்தாள். கவிதாவைப் பற்றி சுந்தரி பல முறை ஹரியிடம் சொல்லியிருக்கிறாள்.

"உள்ளே வாங்க." நகர்ந்து கொண்டு உள்ளே வருவதற்காக வழியை விட்டான்.

எல்லோரும் சலசலவென்று பேசிக் கொண்டே உள்ளே வந்தார்கள். கதவை ஒரு கையால் பிடித்துக் கொண்டு நின்றிருந்த ஹரி தனக்கு மிகவும் பழக்கமான பாதங்களின் சத்தத்திற்காக காதுகளைத் தீட்டிக் கொண்டான். ஆனால் அப்படி

எந்த சத்தமும் கேட்கவில்லை. பலவிதமான காலடிச் சத்தங்கள் ஒன்றாக கலந்து ஒலித்தன. டிரைவர் சூட்கேஸ்களை கொண்டு வந்து உள்ளே வைத்தான்.

"கவிதா! முதலில் குளிக்கணும். தூசி படிந்து ஒரே எரிச்சலாக இருக்கு." ஒரு பெண் குரல் கொடுத்தாள்.

"பசியால் உயிரே போய்விடும் போலிருக்கு" - கரகரவென்று இருந்த குரலில் இன்னொருத்தி ராகம் பாடினாள்.

"எனக்குத் தூக்கம் தூக்கமாக வருகிறது. முதலில் படுக்க இடம் காட்டச் சொல்லு." இன்னொரு குரல் தூக்கக் கலக்கத்துடன் ஒலித்தது.

"நாழியாகிவிட்டதே. நீங்க வரமாட்டீங்களோ என்று நினைத்தேன்." ஹரி முணுமுணுப்பது போல் சொன்னான். 'வந்தவர்கள் அரைடஜனுக்கு மேல் இருப்பார்கள் போலிருக்கு எப்போ சமையலை ஆரம்பித்து எப்போ முடிப்பது?'

கவிதா அவன் அருகில் வந்தாள். "நாங்க யாருமே சாப்பிடவில்லை. பால் இருக்குமா? இருந்தால் டீ கலந்து கொள்கிறோம்."

"பிரிஜ்ஜில் இருக்கு."

"அப்போ வாங்க. கிச்சனில் எது எங்கே இருக்கோ, கொஞ்சம் சொல்லிக் கொடுத்தால் டீ போடுகிறேன்."

ஹரி சமையலறைக்குள் வந்தான். பாத்திரம், டீ தூள், சர்க்கரை, பால் எல்லாம் எடுத்துக் கொடுத்தான். கோப்பைகளை ட்ரேயில் அடுக்கினான்.

"சுந்தரி ஏன் வரவில்லை?" அந்தக் கேள்வியைக் கேட்காமல் அவனால் இருக்க முடியவில்லை.

"முதலில் வருவதாகத்தான் சொன்னாள். இந்தப் பயணமே அவளுக்காகத்தான் சித்தப்பா ஏற்பாடு செய்



திருந்தார். ஆனால் கடைசி நிமிடத்தில் வரமாட்டேன் என்று மறுத்துவிட்டாள். பயணத்தை நிறுத்த வேண்டாமே என்று நாங்கள் கிளம்பி வந்தோம்."

ஏனோ தெரியவில்லை, ஹரிக்கு இதயத்திலிருந்த பாரம் நீங்கி விட்டாற் போல் இருந்தது. நேற்று முதல் துளைத்துக் கொண்டிருந்த வேதனை அறவே நீங்கி விட்டாற் போல் நிம்மதியாக உணர்ந்தான்.

"வெறும் டீ தண்ணிதானா கவிதா! பசி என் வயிற்றைக் கிள்ளுகிறது." சோர்வுடன் சொன்னாள் ஒருத்தி.

"வீட்டில் எல்லாம் இருக்கு. சமையல் செய்து கொள்கிறீர்களா?" ஹரி சொன்னான்.

"இந்த நேரத்திலா? சமைத்து சாப்பிட்டு முடிப்பதற்குள் பொழுது விடிந்துவிடும். ஒரு வேளை சாப்பிடாமல் இருந்தால் உன் உடம்புக்கு நல்லது அனசூயா. ஏற்கனவே பருமனாக இருக்கிறாய்." ஒரு பெண் கிண்டல் செய்தாள்.

"கொஞ்சம் இருங்க. இதோ வந்து விடுகிறேன்." ஹரி சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே போனான்.

"இவனுக்கு உண்மையிலேயே கண் பார்வை இல்லையா?" ஒரு பெண் சந்தேகமாக கேட்டாள்.

"உண்மைதான் ரஜனீ! அவனுக்குக் கண் தெரியாது." கவிதா சொன்னாள்.

கவிதா குளித்துவிட்டு வரும்போது ஹரி தட்டில் பிரெட் மற்றும் பிஸ்கெட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தான்.

"இதெல்லாம் எங்கிருந்து வந்தது?" கவிதா வியப்புடன் கேட்டாள்.

"தெரு முனையில் இரானி ஹோட்டல் இருக்கு. வாங்கிக்

கொண்டு வந்தேன்" ஹரி சொன்னான்.

"தனியாகவா?"

"ஆமாம். எனக்குப் பார்வைதான் இல்லையே தவிர கால்கள் இருக்கே" என்றான்.

கவிதாவால் நம்ப முடியவில்லை.

ஹரி பலமாக மூச்சை உள்ளே இழுத்துக் கொண்டான். கவிதா பயன்படுத்திய சோப் எதுவோ தெரியவில்லை. அதன் நறுமணம் அறை முழுவதும் பரவியிருந்தது.

எல்லோரும் பிரெட், பிஸ்கெட் சாப்பிட்டுவிட்டு டீ யை குடித்தார்கள். கவிதாவும் ஹரியுமாக சேர்ந்து பாயை விரித்துப் போட்டதும் படுத்துத் தூங்கிவிட்டார்கள்.

ஹரி பப்லூவின் கட்டில் மீது உட்கார்ந்து கொண்டான். கவிதா அங்கே வந்தாள்.

"பெரிய அத்தான் இன்னும் வரவில்லையே?" என்று கேட்டாள்.

"சீட்டாட்டத்தில் மூழ்கிவிட்டால் அண்ணாவுக்கு நேரம் போவதே தெரியாது." ஹரி சொன்னான்.

"உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்து விட்டோம்." கவிதா மன்னிப்பு கேட்டுக் கொள்ளும் தோரணையில் சொன்னாள்.

ஹரிக்கு சுந்தரியின் திருமணத்தைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ரொம்ப துடிப்பாக இருந்தது. இனம் புரியாத தயக்கம் அவனைத் தடுத்துவிட்டது.

பக்கத்து அறையிலிருந்து யாரோ பலமாக குறட்டை விடும் சத்தம் கேட்டது.



"அனசூயாவாகத்தான் இருக்கும்." - கவிதா முறுவலுடன் சொன்னாள்.

வந்தவர்களின் பெயர்களையும், அவர்களைப் பற்றிய விவரங்களையும் கவிதா தெரிவித்தாள். இங்கே நான்கு நாட்கள் தங்கிவிட்டு, திருவனந்தபுரம், கன்யாகுமரி போகப் போவதாகவும் தெரிவித்தாள்.

* * *

## 4

கவிதா மற்றும் அவளுடைய சிநேகிதிகள் தங்கியிருந்த நான்கு நாட்களும் சிரிப்பும் பேச்சுமாக வீடே ரணகளப் பட்டது. உணவு வேளையின் போதும், தூங்கும்போதும் தவிர ஒரு நிமிடம் கூட வீட்டில் தங்காமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்தார்கள். மிருக காட்சிசாலைக்கு போகும்போது கவிதா ஹரியை, பப்லூவை கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றாள்.

ஹரி பப்லூவின் கையைப் பிடித்துக் கொண்டு அவர்களுடன் நடந்தான். புள்ளிமான் ஓடுகிறது என்றும், நீர் யானையின் குட்டி அழகாக இருக்கிறதென்றும் அவர்கள் கலகலவென்று பேசிக் கொள்வதை கேட்கும் போது ஹரிக்கு என்னவோ போல் இருந்தது. சூரியோதயம் அழகாக இருக்கும் என்றும், வானம் நீலமாய், மரங்கள் பச்சை நிறத்தில், வானவில்லில் ஏழு வர்ணங்கள் இருக்கும் என்றும் எல்லோரும் சொல்லக் கேட்டிருக்கிறான். அப்படி என்றால் என்னவோ, அசல் அவை எப்படி இருக்குமோ அவனுக்குத் தெரியாது. வெண்மைக்கும், கறுப்புக்கும் உள்ள வித்தியாசம் கூடத் தெரியாது. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் வெறும் இருட்டுதான்.

கவிதாவும், அவளுடைய சிநேகிதிகளும் சற்று தொலைவில் இருந்த பிக்னிக் ஸ்பாட்டுக்குப் போவதாக முடிவு செய்தார்கள். அன்று பௌர்ணமி என்பதால் மூன்லைட் டின்னருக்கும் ஏற்பாடு செய்தார்கள். ராமகிருஷ்ணனையும் வரச் சொல்லி வற்புறுத்தினார்கள். ஆனால் சீட்டாட்டம் இருக்கும் போது ராமகிருஷ்ணனுக்கு வேறு எந்த விஷயமும் மனதில் விழாது. தம்பியையும், பப்லூவையும் அவர்களுடன் அனுப்பி வைத்தான்.

கவிதா ஹரிக்குத் தெரியாமல் வயலினை காரில் எடுத்து வைத்தாள். நிலா வெளிச்சத்தில் ஆட்டம், பாட்டம், சாப்பாடு எல்லாம் முடிந்த பிறகு கவிதா வயலினைக் கொண்டு வந்து ஹரியின் கையில் கொடுத்தாள்.

"இது எங்கிருந்து வந்தது? யார் கொண்டு வந்தாங்க?" ஹரி கேட்டான்.

"நான்தான்." கவிதா சொன்னாள்.

ஹரியை வாசிக்கச் சொல்லி எல்லோரும் வற்புறுத்தினார்கள். ஹரியின் கைகள் அந்த இசைக் கருவியை அன்புடன் தடவிக் கொடுத்தன. சுருதி சேர்த்து வயலின் வாசிக்க ஆரம்பித்தான்.

ஒரு மணி நேரம் எல்லோரும் தங்களையே மறந்து போய் அந்த இசை வெள்ளத்தில் மூழ்கி விட்டார்கள். வயலின் மீது நர்த்தனம் புரியும் அந்த விரல்களில், சுமானை இயக்கும் அந்தக் கையில் ஏதோ மந்திர சக்தி இருக்க வேண்டும். எல்லோரும் அந்த சக்திக்கு கட்டுப்பட்டவர்கள் போல் மயங்கிவிட்டார்கள்.

சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த அவன் விரல்களின் தொடுகை அந்த வயலினையும் மயக்கிவிட்டதோ என்னவோ! அதிலிருந்து புறப்பட்ட நாதம் கிளுகிளுப்



மூட்டுவது போல் வானத்தில் மிதக்கச் செய்து கொண்டிருந்தது.

பப்லூ வந்து சித்தப்பாவின் மடியில் தலைவைத்து படுத்துக் கொண்டான். சித்தப்பாவின் இசை, அவனை வேறு உலகிற்கு அழைத்துப் போவது போலிருந்தது.

ஹரி வாசித்து முடித்ததும் எல்லோரும் இந்த உலகிற்கு மீண்டு வந்தார்கள். அடுத்த நிமிடம் கைத்தட்டல்களால் அந்த இடம் முழுவதும் அதிர்ந்தது.

கெஸ்ட் ஹவுஸை முன்கூட்டியே ரிசர்வ் செய்திருந்ததால் அன்று இரவு எல்லோரும் அங்கேயே தங்கிவிட்டார்கள்.

ஹரிக்கு உறக்கம் வரவில்லை. தன் கழுத்தைக் கட்டிக் கொண்டு படுத்திருந்த பப்லூவை மெதுவாக நகர்த்திவிட்டு எழுந்து வெளியே வந்தான். அவன் மனம் முழுவதும் விசித்திரமான உணர்வுகள் பரவியிருந்தன. என்றும் இல்லாதவிதமாக இந்த நான்கு நாட்களும் கவிதா, அவள் சிநேகிதிகள் செய்த ஆரட்டியும், சிரிப்பும், கும்மாளமும் கேட்ட பிறகு கண் பார்வை இல்லாததால் வாழ்க்கையில் தான் எவ்வளவு இழந்து விட்டோம் என்று அவன் மனதுக்குப்பட்டது.

கடவுள் தனக்கு மட்டும் இப்படி அநியாயம் செய்வானேன்? நினைக்க நினைக்க மனதில் வேதனை அலையாய்ப் பொங்கியது. மெதுவாக நடந்து ஒரு மரத்தின் அடியில் சாய்ந்து கொண்டு நின்றான். நிலவின் குளிர்ச்சி அவன் உடலைத் தாக்கியது. ஹரிக்கு திடீரென்று இந்த வாழ்க்கையை எப்படியாவது முடித்துக் கொண்டு மறுபடியும் பிறவி எடுத்து எல்லோரையும் போல் தானும் வாழ வேண்டும் என்ற கோரிக்கை பலமாகத் தோன்றியது.

சற்று நேரம் கழித்து பின்னாலிருந்து காலடிச் சத்தம் கேட்டது. அவன் பின்னால் திரும்பி "கவிதா" என்று அழைத்தான்.

கவிதா வியப்படைந்தாள். "வந்தது நான்தான் என்று எப்படி தெரிந்தது?"

"உன் காலடிச் சத்தம் கேட்டுத்தான்" என்றான் முறுவலுடன்.

சற்று நேரம் இருவரும் பேச்சே வராதது போல் மௌனமாக இருந்தார்கள்.

கவிதா சொன்னாள். "நாளைக்கு நாங்கள் கிளம்புகிறோம் இல்லையா? உனக்கு தாங்க்ஸ் சொல்லத்தான் வந்தேன்."

"தாங்க்ஸ் எதுக்கு? அவ்வளவு பெரிய காரியம் நான் என்ன செய்து விட்டேன்?"

"எங்களுக்காக நீ ஊருக்குப் போகாமல் இருந்துவிட்டாயாமே? பெரிய அத்தான் சொன்னான்."

ஹரி பெருமூச்சு விட்டான்.

"அசல் இந்தப் பயணமே சுந்தரிக்காகத்தான், துணைக்காக நாங்களும் கிளம்பினோம். அவளானால் கடைசியில் வரமாட்டேன்னு சொல்லிவிட்டாள். நாங்கள் புறப்பட்டு வந்தோம். அக்கா வராதது உனக்கு ஏமாற்றமாக இருக்கு இல்லையா?"

"இல்லை கவிதா. அப்படி எதுவும் இல்லவே இல்லை. உண்மையைச் சொல்லணும் என்றால் நீ இப்படி உன் சிநேகிதிகளுடன் வந்தது, ஜாலியாக நான்கு நாட்கள் தங்கியது, எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கு."

நிலா வெளிச்சம் இலைகளின் வழியாக அவன் முகத்தில் விழுந்து கொண்டிருந்தது. கவிதா ஒரு நிமிடம், மரத்தின் மீது தோளைச் சாய்த்து இரண்டு கைகளையும் கட்டிக்கொண்டு நின்றிருந்த ஹரியை கண் இமைக்காமல் பார்த்தாள். அந்த முகத்தில்தான் எவ்வளவு களை! எவ்வளவு தூய்மை!



"ஹரி! நீ ஆபரேஷனுக்காக முயற்சி செய்ததே இல்லையா?" கவிதா கேட்டாள்.

"அண்ணா பார்க்காத டாக்டர் இல்லை. செய்யாத முயற்சி இல்லை. ஆபரேஷன் செய்தாலும் கண் பார்வை கிடைக்க வாய்ப்பு இல்லைன்னு சொல்லிவிட்டார்கள்." ஒரு நிமிடம் நிறுத்தி விட்டு மீண்டும் சொன்னான். "இந்தக் கசப்பு உண்மையை தாங்கிக் கொள்வது இன்னும் கஷ்டமாக இருக்கு. தெரிந்து கொள்ளாமலே இருந்திருக்கலாமோ என்னவோ?"

அவன் குரல் பாரமாக ஒலித்தது. அந்தக் குரலில் வெளிப்பட்ட வேதனையைக் கண்டு கவிதாவின் இதயம் இரக்கத்தால் கரைந்து விட்டது.

"பிரசாத் வெளிநாட்டிலிருந்து எப்போது வரப் போகிறான்?" ஹரி பேச்சை மாற்றினான்.

பிரசாத் கவிதாவின் அண்ணன். மேற்படிப்புக்காக கனடாவுக்குச் சென்றிருந்தான்.

"அடுத்த மாதம்" என்றாள்.

"அவன் வந்துவிட்டால் நீ உன் பெரியப்பா வீட்டில் இருக்கமாட்டாய் என்று நினைக்கிறேன்."

"ஆமாம்."

"உன் படிப்பு? இத்துடன் நிறுத்தப் போகிறாயா, இல்லை...."

அவன் வார்த்தைகளை இன்னும் முடிக்கக் கூட இல்லை. அதற்குள் கவிதா வீலென்று கத்திக் கொண்டே அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

"என்ன ஆச்சு?" பதட்டத்துடன் கேட்டான்.

"ஹரி! பாம்பு! எவ்வளவு பெரிதாக இருக்கு தெரியுமா?

இந்தப் பக்கம் தான் வருகிறது" கவிதா அவன் தோளை பலமாக பற்றிக் கொண்டாள்.

"பாம்பு எந்தப் பக்கம் இருக்கு? எதிரேயா? வலது பக்கமா, இடது பக்கமா?"

"எதிரே!" கவிதா மறுபடியும் கத்தினாள்.

ஹரி சட்டென்று கவிதாவின் கையை பற்றிக்கொண்டு மின்னல் போல் வலது பக்கம் திரும்பி வேகமாக நடந்தான். கொஞ்சம் தூரம் போன பிறகு "இப்போ எங்கே இருக்கு?" என்று கேட்டான்.

"அதே இடத்தில்."

"கெஸ்ட் ஹவுஸ் எந்தப் பக்கம்?"

"இன்னும் கொஞ்சம் முன்னாடி போகணும்."

ஹரி கவிதாவின் கையை விடாமலேயே அந்தப் பக்கம் விரைந்தான். இருவரும் கெஸ்ட் ஹவுஸை அடைந்தார்கள்.

"மற்றவர்களை எழுப்புவோமா?" கவிதா கேட்டாள்.

"நன்றாக தூங்கிக் கொண்டு இருப்பவர்களை எழுப்புவானேன்? பாம்புதான் நம் பக்கம் வரவில்லையே?" என்றான் ஹரி.

இருவரும் படிகள் மீது அமர்ந்து கொண்டார்கள். ஹரி கவிதாவின் கையில் சிறைப்பட்டிருந்த தன் கையை மெதுவாக விடுவித்துக் கொள்ளப் போனான். கவிதா விடவில்லை. எங்கே அவன் கை நழுவி விடுமோ என்று பயப்படுவது போல் மேலும் அழுத்தமாக பிடித்துக் கொண்டாள்.

"எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டு இருக்கிறோம்? தூக்கம் வராமல் நான் மட்டும் வரவில்லை என்றால் நீ அதே இடத்தில் நின்று கொண்டு இருந்திருப்பாய்.



மை காட்!" பயமும், அதிர்ச்சியும் அவள் குரலில் வெளிப்பட்டன.

"நம் தலையில் எழுதியிருப்பதை அந்தக் கடவுளே வந்தாலும் மாற்றமுடியாது கவிதா." அவன் குரல் விரக்தியுடன் ஒலித்தது.

"வேதாந்தமா?" கவிதா கலகலவென்று நகைத்தாள்.

கவிதாவின் சிரிப்பு அவன் காதுகளுக்கு இனிமையாக இருந்தது.

"ஹரி! நிலா வெளிச்சம் எவ்வளவு நன்றாக இருக்கு தெரியுமா?" கவிதா சொன்னாள்.

ஹரி மௌனமாக இருந்தான். நிலா வெளிச்சம் எப்படி இருக்குமோ தனக்கெப்படி தெரியும்?

"இந்தப் பௌர்ணமி இரவை, பாம்பு வந்த போது நாம் இருவரும் இப்போ ஓடி வந்ததை என்னால் மறக்கவே முடியாது." கவிதா சொன்னாள்.

ஹரி தலையைக் குனிந்து கொண்டான். கவிதா அந்த வார்த்தைகளை மனப்பூர்வமாக சொல்வது போல் தோன்றினாலும் அவனுக்கு நம்பிக்கை வரவில்லை.

* * *

கவிதாவும் மற்றவர்களும் கிளம்பிப் போய் இரண்டு நாட்கள் ஆகிவிட்டது. 450929/ 6214013

அன்று காலை பத்து மணிக்கு கோர்ட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த ராமகிருஷ்ணன் தபால்காரர் கொண்டு வந்து கொடுத்த கடிதத்தை பார்த்துவிட்டு மறுபடியும் உள்ளே வந்தான். ஹரி வேலைக்காரியிடம் சமையலறையை கழுவி விடச் சொல்லிக் கொண்டு இருந்தான்.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

"ஹரீ! கஞ்சனூர் மாமா கடிதம் எழுதியிருக்கிறார். சுவாமிநாதன் சித்தப்பாவின் கார் இந்தப் பக்கம் ஏதோ வேலையாய் வருகிறதாம். உங்க அண்ணியை, குழந்தைகளை அதிலேயே அனுப்பி வைக்கிறாராம். ஜெயாவை இன்னும் ஒரு வாரம் கழித்து அனுப்புவதாக எழுதியிருக்கிறார். இன்று வியாழக்கிழமைதானே. உங்க அண்ணியும், குழந்தைகளும் வரப்போவது இன்று மாலைதான்." ராமகிருஷ்ணன் சொன்னான்.

அதைக் கேட்டதும் ஹரியின் முகம் மலர்ந்தது. அண்ணி வந்ததும் சண்டை போடணும். உன் தங்கை சுந்தரி வருகிறாள் என்று கல்யாணத்திற்கு வராதே என்று என்னைத் தடுத்து விட்டீர்கள்; கடைசியில் அவள் வரவே இல்லை பாருங்க ளென்று கோபித்துக் கொள்வது போல் நடிக்கணும். ஹரி பலவிதமாக மனதிலேயே ஒத்திகை பார்க்கத் தொடங்கினான்.

"மாலையில் எப்போ வருவார்களோ என்னவோ?" ராமகிருஷ்ணன் சொன்னான்.

"எதுக்கும் நீ சீக்கிரமாக வந்து விடு அண்ணா."

"வராமல் இருப்பேனா? தான் வரும்போது எதிரே நின்று வரவேற்கவில்லை என்றால் உன் அண்ணி என்னை உயிரோடு இருக்க விடுவாளா என்ன?" ராமகிருஷ்ணன் சிரித்தான்.

சொன்னதுபோலவே மாலையில் சீக்கிரமாக வீட்டுக்கு வந்துவிட்டான். அண்ணாவின் உதவியுடன் ஹரி சமையலை முடித்துவிட்டான். குழந்தைகள் வந்ததும் குளிப்பதற்கு வெந்நீர் முதற்கொண்டு போட்டு தயாராக வைத்தான். படுக்கையை உதறிப் போட்டான். அவன் காதுகள் வாசலில் வந்து நிற்கப் போகும் காரின் சத்தம் கேட்பதற்காக ஆவலுடன் காத்திருந்தன.



வீட்டின் முன் கார் வந்து நின்ற சத்தம் கேட்டது.

"பப்லூ! எல்லோரும் வந்துட்டாங்க போலிருக்கு." அழைத்துக் கொண்டே வெளியில் வந்தான்.

ராமகிருஷ்ணன் மனதில் திடீரென்று குறும்புத்தனமான எண்ணம் பளிச்சிட்டது. மனைவி என்ன செய்வாளோ பார்ப்போம் என்று வெளியே வராமல் அறைக்குள்ளேயே சீரியஸாக பைலை படிப்பது போல் உட்கார்ந்து கொண்டான்.

வாசலில் வந்து நின்ற ஹரிக்கு காரிலிருந்து யார் யாரோ இறங்கி வரும் சத்தம் கேட்டது. ஆனால் அந்தச் சத்தம் அறிமுகம் ஆனது இல்லை. முற்றிலும் புதுசு. குழந்தைகளின் சுத்தலோ, அண்ணியின் குரலோ எதுவுமே கேட்கவில்லை.

"பப்லூ! கார் வந்தது நம் வீட்டுக்கு இல்லையா?" சந்தேகத்துடன் கேட்டான்.

"நம் வீட்டுக்குத்தான் சித்தப்பா. ஆனால் அம்மா, அக்கா யாருமே வரவில்லை. யாரோ புது ஆட்கள் வந்திருக்காங்க." அவன் குரலில் ஏமாற்றம் தெரிந்தது.

அதற்குள் "ராமகிருஷ்ணன் வீட்டில் இருக்கிறாரா?" பழக்கமில்லாத குரல் கேட்டது.

"இருக்கிறார். நீங்க யாரு?" ஹரி கேட்டான்.

"நான் சுவாமிநாதனின் மாப்பிள்ளை. ராமகிருஷ்ணனை கொஞ்சம் கூப்பிட முடியுமா?"

அதற்குள் ராமகிருஷ்ணன் அங்கே வந்தான். "பாஸ்கர்! நீயா! என்ன விஷயம்?"

பாஸ்கர் ஒரு நிமிஷம் தயங்கினான். "உங்க மனைவியும், குழந்தைகளும் வந்து கொண்டிருந்த கார் செங்கல்பெட்

அருகில் வரும்போது ஆக்ஸிடெண்ட் ஆகிவிட்டது. நான் மட்டும் எப்படியோ தப்பித்துக் கொண்டேன். மற்ற எல்லோருக்கும் நல்ல அடி. டிரைவர் ஆபத்தான நிலையில் செங்கல்பெட் ஆஸ்பத்திரியில் இருக்கிறான்."

தயங்கித் தயங்கி அவன் சொல்லிக் கொண்டிருந்த போது ராமகிருஷ்ணன் அப்படியே சிலையாக நின்றுவிட்டான்.

அந்தச் செய்தியைக் கேட்டதும் ஹரி பதற்றமடைந்து விட்டான். "ஆக்ஸிடெண்ட் ஆகி விட்டதா? எப்போ? எங்கே? அண்ணிக்கும், குழந்தைகளுக்கும் ஆபத்து இல்லையே?" என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தான்.

அதற்குள் பாஸ்கருடன் வந்த இரண்டு பேர் மற்றொரு வேனிலிருந்து உயிரற்ற உடல்களை ஒவ்வொன்றாக எடுத்து வந்து ஹாலில் படுக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்ததும் அந்தத் தெருவில் இருப்பவர்கள் எல்லோரும் அந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள்.

அந்த உடல்களை பார்த்ததுமே ராமகிருஷ்ணன் பிரமை பிடித்தவன் போல் நின்று விட்டான். மூளையில் எங்கேயோ நரம்பு ஏதோ அறுந்துவிட்டாற் போல் தாங்க முடியாத வலி. யாரோ சம்மட்டியால் அடிப்பது போன்ற உணர்வு. உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. கண் இமைக்காமல் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. இப்பொழுதுதான் நீங்க தைரியமாக இருக்கணும்." பாஸ்கர் ராமகிருஷ்ணனின் தோளில் இரக்கத்துடன் தட்டிவிட்டு அழைத்து வந்து நாற்காலியில் உட்கார வைத்தான். அடுத்த நிமிடம் ராம கிருஷ்ணனுக்கு நினைவு தப்பிவிட்டது.

"இங்கே அருகில் யாராவது டாக்டர் இருக்கிறாரா?" பாஸ்கர் கேட்டான்.



"நான் போய் அழைத்து வருகிறேன்." கும்பலில் ஒருத்தன் வேகமாக ஓடினான்.

"என்ன ஆச்சு? ஏன் பேச மாட்டேங்கறீங்க? எங்க அண்ணி, குழந்தைகள் எப்படி இருக்காங்க?" கும்பலை விலக்கிக் கொண்டு ஹரி முன்னால் வந்தான்.

பாஸ்கர் வியப்புடன் ஹரியின் பக்கம் பார்த்தான்.

"அவனுக்குக் கண் பார்வை இல்லை." யாரோ சொன்னார்கள்.

பாஸ்கர் ஒரு நிமிடம் திகைத்துப் போனான். பிறகு ஹரியின் கையைப் பற்றி அழைத்துச் சென்று தரையில் படுக்க வைத்திருந்த பிணங்களை கையால் தொடச் செய்தான்.

"இதென்ன? இங்கே ஏன் படுக்க வைத்திருக்கீங்க?" பனிக்கட்டியாய் சில்லென்று இருந்த அந்த உடல்களைத் தொட்டதும் "அண்ணீ!" என்று வீலென்று கத்தினான். ஹோவென்று கதறி அழுதான். "இது பொய்! என்னால் நம்ப முடியாது. நம்பமாட்டேன். அண்ணீ! பேசுங்க அண்ணீ." ஹரி அண்ணியின் உடல் மீது விழுந்து கதறினான்.

யாராலும் அவனைத் தேற்ற முடியவில்லை.

"அண்ணி! வீடு கவனம். பப்லூவையும், அண்ணாவையும் நீதான் பார்த்துக் கொள்ளணும் என்று பொறுப்பை ஒப்படைத்து விட்டு போனாயே. இதற்காகத்தானா? இதுக்குத்தான் கடவுள் உன் வாயால் அந்த வார்த்தைகளைச் சொல்ல வைத்தாரா? அதுதான் நீ என்னிடம் பேசிய கடைசி வார்த்தையாக இருக்கும் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லையே அண்ணீ ...."

"அண்ணா!" ஜெயா பெரிய அண்ணனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"ஜெயா! உனக்கு என்ன வேணும்? அண்ணிகிட்டே போகணுமா? வேலை செய்த களைப்பில் இப்பொழுதுதான் தூங்குகிறாள் பாவம். அவளை எழுப்பாதே. உனக்கு என்ன வேணுமோ சொல்லு. நான் வாங்கித் தருகிறேன்" என்றான்.

ஜெயா மேலும் அழத் தொடங்கினாள்.

"ஹரி! ஜெயாவை அடுத்த அறைக்கு அழைத்துப் போ. வீட்டில் எங்கேயும் சின்ன சத்தம் கூட இருக்கக்கூடாது."

"சரி அண்ணா. ஜெயா! இப்படி வாம்மா."

"உனக்கு ஏதாவது வேணும்னால் சின்ன அண்ணாவிடம் கேட்டுக் கொள். வாங்கித் தருவான். அவ்வளவுதானே தவிர சத்தம் போடாதே." கடிந்து கொள்வது போல் சொல்லிவிட்டு ராமகிருஷ்ணன் தன்னுடைய அறைக்குச் சென்று கதவைத் தாழ்போட்டுக் கொண்டுவிட்டான்.

"என்னப்பா ஹரி! இவன் இப்படிப் பேசுகிறானே? மூளை ஏதாவது...." கஞ்சனூர் மாமா பாதியில் நிறுத்திவிட்டார்.

"ஆமாம் மாமா. டாக்டர் அண்ணாவைக் கவனமாக பார்த்துக் கொள்ளச் சொல்லி எச்சரித்து இருக்கிறார். மூளையில் கோளாறு ஏற்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகப் படுகிறார்." தாழ்ந்த குரலில் சொன்னான் ஹரி.

"அடக் கடவுளே! இந்தச் சோதனை வேறா?"

தற்போது ராமகிருஷ்ணன் இருந்த நிலையில் அவன் கையால் தகன காரியங்களை செய்ய வைக்க முடியாது என்று தெரிந்துவிட்டது. எந்த விஷயத்திலும் அவனை வற்புறுத்தக் கூடாது என்று டாக்டர் சொல்லிவிட்டார்.

அதனால் அந்தக் கடமையை ஹரிதான் செய்ய வேண்டிய



தாகி விட்டது. கஞ்சனூர் மாமாவின் மேற்பார்வையில் ஹரி எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றினான்.

அண்ணியின் சிதைக்கு தீயை மூட்டும்போது அவன் இதயம் வெடித்துச் சிதறுவது போல் இருந்தது. தகதகவென்று எரியும் அந்தச் சத்தம் ரொம்ப நாட்கள் வரையில் அவன் காதுகளில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது. அண்ணி குடித்தனத்திற்கு வந்தது முதல் சமீபத்தில் நடந்த எத்தனையோ நிகழ்ச்சிகள் அவன் மனதில் திரைப்பட காட்சிகள் போல் ஓடிக் கொண்டிருந்தன.

கஞ்சனூர் மாமா பெரிய துணையாய் கூடவே இருந்து ஆக வேண்டிய காரியங்களை கவனித்துக் கொண்டார். புருஷோத்தமன் ரொம்ப நெருங்கிய உறவினர் போல் வீட்டோடு தங்கி, கேட்காமலேயே அறிவுரைகளை வழங்கினார். திருநாகம் மாமி தான் ஒருத்திதான் இவர்களுக்கு வேண்டியவள் என்பது போல் வீட்டு வேலைகளை எல்லாம் தானே செய்தாள். எல்லோரும் தங்களால் ஆன உதவியைச் செய்தார்கள். வேண்டிய அளவுக்கு இரக்கம் காட்டினார்கள்.

பத்தாவது நாள் அன்று பெங்களூரிலிருந்து சுந்தரியின் பெற்றோர்கள் வந்தார்கள். சுந்தரி வரவில்லை. அவர்களுடன் கவிதா வந்திருந்தாள்.

வந்த உறவினர்கள் எல்லோரும் ஆளுக்கொரு அறிவுரை வழங்கினார்கள். ராமகிருஷ்ணனை ஏதாவது ஆஸ்பத்திரியில் சேர்க்கச் சொல்லி புருஷோத்தமன் சொன்னார். கஞ்சனூர் மாமா கூடிய சீக்கிரத்தில் ஜெயாவுக்கு வேறு வரன் பார்த்துத் தருவதாக சொன்னார். ஏற்கனவே சம்மதம் தெரிவித்து இருந்தவர்கள் சகுனம் சரியில்லை என்று பின் வாங்கி விட்டார்கள்.

"ராமகிருஷ்ணனை பார்த்தால் ரொம்ப பாவமாக இருக்கு. மூளைக்கோளாறு வேறு; அந்தப் பையனுக்கோ கண் பார்வை இல்லை. ஜெயா கல்யாணம் ஆக வேண்டிய பெண். இனி இந்தக் குடித்தனம் எப்படி நடக்குமோ என்னவோ?" சுந்தரியின் தாய் நீட்டி முழக்கினாள்.

ஹரி யார் என்ன சொன்னாலும் சிரத்தையாக கேட்டுக் கொண்டான். தனக்குள் இருந்த சக்தியெல்லாம் திரட்டிக் கொண்டு நடமாடிக் கொண்டு இருந்தானே ஒழிய அவன் மனதில் துக்கம் எரிமலையாக பொங்கிக் கொண்டிருந்தது.

"சித்தப்பா! அம்மாவை எங்கே அழைத்துக் கொண்டு போனாய்?" ஒரு நாள் பப்லூ கேட்டான்.

"சுவர்க்கத்தில் விட்டு விட்டு வந்தேன் பப்லூ. அம்மாவுக்கு ரெஸ்ட் வேண்டும் என்று டாக்டர் சொன்னார்" - ஹரி சமாதானப்படுத்த முயன்றான்.

"நாமும் சுவர்க்கத்திற்குப் போகலாம் வா. எனக்கு அம்மாவை உடனே பார்க்கணும் போலிருக்கு" - பப்லூ அழத் தொடங்கினான்.

ஹரி சட்டென்று பப்லூவைத் தூக்கிக் கொண்டு மார்போடு அணைத்துக் கொண்டான். "நமக்கு அவ்வளவு அதிர்ஷ்டம் இல்லை கண்ணா. அந்த அதிர்ஷ்டம் மட்டும் இருந்திருந்தால் அம்மாவுடன் நீயும், நானும் கல்யாணத்திற்குப் போயிருப்போம்" என்றான். பப்லூவை சமாதானப் படுத்துவதற்கு ஹரிக்கு ரொம்ப பொறுமை தேவைப்பட்டது.

வந்த உறவினர்கள் எல்லோரும் கிளம்பிவிட்டார்கள். "அவ்வப்போது வந்து பார்த்துவிட்டுப் போகிறேன்" கஞ்சனூர் மாமா கிளம்பும் முன் சொல்லிவிட்டுப் போனார். கடைசியாக அன்று மாலை கவிதாவும், சுந்தரியின் பெற்றோரும் கிளம்பிக் கொண்டு இருந்தார்கள்.



ஹரி கொல்லையில் மல்லிகைக் கொடிக்குப் பக்கத்தில் இருந்த திண்ணையின் மீது முழங்காலில் தலையை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான். ஹரியைத் தேடிக் கொண்டு கவிதா அங்கே வந்தாள்.

"ஹரி!"

ஹரி சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டான்.

"நான் கிளம்புகிறேன் ஹரி."

"நல்லது."

"போகும் முன் ஒரு விஷயத்தை உன்னிடம் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன்."

என்ன என்பது போல் ஹரி தலையை உயர்த்தினான்.

"இனிமேல் நீதான் இந்தக் குடித்தனத்திற்கு ஆதாரம். பெரிய அத்தானுக்கும், ஜெயாவுக்கும் தைரியம் சொல்ல வேண்டிய பொறுப்பு உன் மீது இருக்கிறது."

"எனக்கு . . . எனக்கு யார் தைரியம் சொல்வார்கள் கவிதா?"

"உனக்கு நீயேதான் தைரியம் சொல்லிக் கொள்ளணும் ஹரி."

"கடவுள் ஏன் இவ்வளவு அநியாயம் செய்தார் என்று தெரியவில்லை. அன்ரிக்கு நீங்க வரப் போவதாக கடிதம் வராமல் இருந்திருந்தால் நானும் அண்ணியுடன் கிளம்பிப் போயிருப்பேன். நிம்மதியாக அவர்களுடனே. . ." துக்கம் தொண்டையை அடைத்துவிட்டது. அதற்கு மேல் அவனால் பேசமுடியவில்லை. முகத்தை முழங்கால்களுக்கு இடையில் புதைத்துக் கொண்டான். அவன் அழுதுகொண்டிருப்பதற்கு நிதர்சனமாக தோள்கள் குலுங்கின.

கவிதா அவன் அருகில் அமர்ந்து கொண்டாள். "மனதிலேயே எங்களைத் திட்டிக் கொள்கிறாயா? நீயும் இல்லை என்றால் உங்க அண்ணா என்னவாகி இருப்பார்? நீயே சொல்லு. ஜெயாவின் வாழ்க்கை எவ்வளவு நரகமாகியிருக்கும்? அதை நினைத்துப் பார்த்தாயா?"

"அண்ணி உலகத்தை விட்டே போய்விட்டாள். அண்ணாவுக்கு மனநிலை சரியாக இல்லை. பிறந்த போது இல்லை கவிதா! உண்மையிலேயே என் கண்கள் போனது இப்பொழுதுதான்." அவன் குரல் நடுங்கியது.

"இது போன்ற நேரத்தில்தான் தைரியமாக இருக்கணும் ஹரி. பெரிய அத்தானுக்கு சிகிச்சை அளித்தால் மறுபடியும் சாதாரணமாக மாறுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. தைரியமாக இருப்பேன் என்று எனக்கு பிராமிஸ் பண்ணு." கவிதா அவன் கையை தன் கையில் எடுத்துக் கொண்டாள்.

"நீ சொன்னது போலவே தைரியமாக இருப்பேன் கவிதா! என் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் அண்ணனை பழையபடி மாற்றுவதற்கு முயற்சி செய்வேன்."

"இந்த உலகில் உனக்கு கவிதா என்ற நெருங்கிய சிநேகிதி ஒருத்தி இருக்கிறாள் என்பதை மறந்து விடாதே. எந்தப் பிரச்சனை வந்தாலும் முதலில் எனக்குக் கடிதம் எழுதுவாய் இல்லையா?"

"எழுதுகிறேன்."

கவிதா அவன் கையை விடுவித்து தன் கையிலிருந்த மோதிரத்தை எடுத்து அவனுடைய சுண்டுவிரலில் மாட்டிவிட்டாள்.

"இதென்னது?" என்று கேட்டான்.

"நம்முடைய நட்பின் சின்னம். நீ என்னை மறந்து



போகாமல் இருப்பதற்காக கொடுக்கும் பரிசு."

"இவை எதுவும் இல்லாமலேயே நீ என் நினைவில் இருப்பாய்." அவன் சட்டென்று மோதிரத்தைக் கழற்றப் போனான்.

"ப்ளீஸ்! இருக்கட்டும். பெரியப்பா என்னை அழைக்கிறார். நேரமாகி விட்டது. வரட்டுமா?" கவிதா வாசலுக்கு விரைந்தாள்.

* * *

## 5

அப்பொழுதுதான் வெளியிலிருந்து வந்த ஹரி உடைகளை மாற்றிக் கொண்டிருந்தான்.

ஜெயா குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

"பாங்கிலிருந்து பணம் கொண்டு வந்தாயா அண்ணா?"

"இல்லை."

"வீட்டில் மளிகைச் சாமான் தீர்ந்துவிட்டது."

"அரிசி இருக்கு இல்லையா?"

"இருக்கு."

"ஒரு வேளை உணவுகூட இல்லாமல் எத்தனையோ பேர் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். நமக்கு இரண்டு வேளை சாப்பிடுவதற்கு மோர் சாதமாவது இருக்கே என்று திருப்திப்பட்டுக் கொள்ளணும்."

ஜெயா பதில் சொல்லவில்லை.

"சித்தப்பா! எனக்கு சாக்லேட் வாங்கிக்கிட்டு வந்தாயா?" பப்லூ ஓடி வந்தான்.

"வாங்கிக்கிட்டு வரவில்லை என்றால் என்னுடன் பேச மாட்டேன்னு சொன்னாயே." ஹரி சட்டைப் பையிலிருந்து சாக்லேட்டை எடுத்துக் கொடுத்தான்.

"சமையல் முடிந்து விட்டதா ஜெயா?"

"சாதமும், குழம்பும் செய்திருக்கிறேன்."

"தட்டில் எடுத்து வை. அண்ணன் என்ன செய்கிறான்?"

"சற்று முன் பப்லூ நாற்காலியை இழுத்துச் சத்தப் படுத்தியதற்கு, வெளியே வந்து முதுகில் இரண்டு அடி கொடுத் தான். பப்லூவை சமாதானப்படுத்தி, அண்ணாவை அறைக் குள்ளே அனுப்புவதற்குள் ரொம்ப திண்டாடிவிட்டேன்."

ஹரி பப்லூவை அருகில் இழுத்துக் கொண்டான். "பப்லூ! அப்பா உன்னை அடித்தாரா?"

"ஆமாம் சித்தப்பா."

"சத்தம் போடக்கூடாது என்று சொல்லியிருந்தேனே கண்ணா."

"இனி அப்படி செய்யமாட்டேன் சித்தப்பா."

ஹரி பப்லூவின் தலையை அன்போடு வருடிவிட்டான்.

ஜெயா ஒரு தட்டில் சாதம் போட்டு குழம்பு ஊற்றி ஹரியின் கையில் கொடுத்தாள். ராமகிருஷ்ணனுக்கு ஒவ்வொரு நாள் ரொம்ப கோபம் வரும். சில சமயம் அவனை சமாளிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிடும். அதுபோன்ற சமயத்தில் ஜெயாவும், பப்லூவும் ரொம்ப பயப்படுவார்கள். பெரிய அண்ணன் கோபமாக இருப்பது தெரிந்தால் ஜெயா அந்தத் திசைக்கே போகமாட்டாள்.

ஹரி உணவுத் தட்டை எடுத்துக் கொண்டு அ[illegible]றயின்



கதவைத் தட்டினான். ரொம்ப நேரம் தட்டிய பிறகுதான் ராமகிருஷ்ணன் கதவைத் திறந்தான்.

"என்ன வேணும்?" ராமகிருஷ்ணன் எரிச்சலுடன் கேட்டான்.

"சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன் அண்ணா." - அமைதியான குரலில் சொன்னான் ஹரி.

"உங்க அண்ணியிடமிருந்து கடிதம் வந்ததா?"

"வந்தது. நாளை மாலையில் வருவதாக எழுதி யிருக்கிறாள்."

ராமகிருஷ்ணன் மௌனமாக இருந்தான்.

ஹரி உள்ளே வந்து உணவுத் தட்டை மேஜை மீது வைத்தான். சாப்பிட உட்கார்ந்து கொள்ளப் போன ராமகிருஷ்ணன் "யார் பரிமாறினது?" என்றான்.

"ஜெயாதான்."

"கறி பரிமாற வேண்டும் என்று தெரியாதா? வரவர ஜெயாவுக்கு மறதி ரொம்ப அதிகமாகிவிட்டது. போய் எடுத்துக் கொண்டு வா."

ஹரி ஏதோ சொல்லப் போனான். பிறகு நிறுத்திக் கொண்டு நேராக சமையல் அறைக்குப் போனான். வேண்டு மென்றே குரலை உயர்த்தி "என்ன? கத்தரிக்காய் கறி அடிபிடித்துவிட்டதா? வரவர உனக்கு பயமே இல்லாமல் போய்விட்டதா" என்று கத்தினான்.

"அண்ணா!" ஜெயா திகைத்துப் போனாள்.

"ஷ். . . அண்ணாவுக்குக் கோபம் வராமல் இருப்பதற் காகத்தான் இப்படிச் செய்கிறேன்." தாழ்ந்த குரலில் சொல்லி விட்டு மறுபடியும் குரலை உயர்த்தினான்.

"இன்னொரு தடவை இப்படி நடந்தால் சும்மா இருக்கமாட்டேன். அண்ணா எதைத் தொட்டு கொண்டு சாப்பிடுவார் என்ற ஞானம் இருக்க வேண்டாமா?"

அதற்குள் ராமகிருஷ்ணன் அங்கே வந்துவிட்டான். அண்ணனின் காலடிச் சத்தம் கேட்டதும் ஹரி ஜெயாவை அடிப்பது போல் கையை ஓங்கினான்.

உடனே ராமகிருஷ்ணன் தம்பியின் கையைப் பிடித்து தடுத்துவிட்டான்.

"அண்ணா! என்னைத் தடுக்காதீங்க. ஜெயாவுக்குக் கொஞ்சம் கூட பயமே இல்லை." ஹரி விடுவித்துக் கொள்ளப் போனான்.

"சிறியவள் தானே? அவளுக்கு என்ன தெரியும்? கல்யாணம் ஆக வேண்டிய பெண் மீது கையை ஓங்குவதாவது? ஒரு நாள் கறி இல்லாவிட்டால் குடி ஒன்றும் மூழ்கிவிடாது."

"நீ இவ்வளவு நல்லவனாக இருப்பதால்தான் அவள் இஷ்டம் வந்தது போல் இருக்கிறாள். நீ வா அண்ணா, சாப்பிடு." ஹரி கெஞ்சுவது போல் சொன்னான்.

அந்த விதமாக ராமகிருஷ்ணனை வேளாவேளைக்கு சாப்பிட வைப்பது ஹரியின் தனிப்பட்ட பொறுப்பாகி விட்டது. வீட்டு வேலை எவ்வளவு இருந்தாலும் ஜெயா வாயே திறக்காமல் செய்துவிடுவாள். ஆனால் மனநலம் சரியில்லாத பெரிய அண்ணனிடம் போகப் பயப்படுவாள்.

மறுநாள் காலையில் புருஷோத்தமன் வந்தார். சற்று நேரம் பொதுவாக பேசிவிட்டு கிளம்பும் முன் ஹரியைத் தனியாக அழைத்து ரகசியம் பேசுவது போல் சொன்னார்.

"ஹரீ! உனக்குக் கண் பார்வை இல்லாததால் எங்கே என்ன நடக்கிறதென்று தெரியறதில்லை. அடுத்த வீட்டு திருநாகம்



மாமியின் மகன் வேணு இருக்கானே, அந்தத் தடிப்பயல் எதுக்காக உங்க வீட்டுக்கு அடிக்கடி வரணும்? அவனுக்கு இங்கே என்ன வேலை? ஜெயா கல்யாணம் ஆக வேண்டிய பெண். நாளைக்கு ஏதாவது ஆனால் உனக்குத்தான் கஷ்டம். பின்னால் வருத்தப்பட்டு பிரயோஜனம் இல்லை. கவனமாக இரு. அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்" என்று எச்சரித்தார்.

"சரி தாத்தா." ஹரி சொன்னான்.

ஹரி கேட்காவிட்டாலும் நேற்று மதியம் தான் வந்த போது வேணுவும், ஜெயாவும் எப்படி சிரித்துப் பேசிக் கொண்டு நெருக்கமாக இருந்தார்களோ புருஷோத்தமன் விலாவாரியாக சொன்னார்.

ஹரிக்கு வேணு, ஜெயா இருவரின் மீதும் கோபம் வந்தது. புருஷோத்தமன் கிளம்பிப் போன பிறகு ஜெயாவை அழைத்தான்.

"நேற்று வேணு நம் வீட்டுக்கு வந்தானா?"

"ஆமாம்."

"என்னிடம் ஏன் சொல்லவில்லை?"

"மறந்து போய்விட்டேன்." தாழ்ந்த குரலில் சொன்னாள்.

"ஜெயா! நம் வீட்டு நிலைமை உனக்குத் தெரியும். முட்டாள்தனமாக நடந்து கொள்ளாதே. எனக்குக் கண் பார்வை இல்லை. அண்ணன் இருந்தும் இல்லாதவனாகி விட்டான். நீ மட்டும் கவனமாக நடந்து கொள்ளவில்லை என்றால் உன் வாழ்க்கை சீரழிந்து விடும். நம் குடும்ப கௌரவம் நடுத் தெருவுக்கு வந்துவிடும்."

"புருஷோத்தமன் தாத்தா உன்னிடம் என்ன சொன்னாரோ எனக்குத் தெரியாது. வேணு ஒன்னும் தரக்குறைவாக

நடந்து கொள்ளவில்லை அண்ணா." ஜெயா குரலில் கோபமும் ரோஷமும் வெளிப்பட்டன.

"நீ கவனமாக நடந்து கொள். அதைத்தான் சொல்ல வந்தேன்."

"சரி அண்ணா."

நாளுக்கு நாள் ஹரி பல பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பாங்கிலிருந்து எடுத்து வரும் பணம் தண்ணீராக செலவழிந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு தடவையும் பணம் எடுக்கும்போது தன்னுடைய வாழ்நாளே குறைந்து வருவது போன்ற வேதனை ஏற்பட்டது. சேமிப்பில் இருந்த பணத்தில் பெரும்பகுதி ராமகிருஷ்ணனின் மருத்துவச் சிகிச்சைக்கு செலவாகிவிட்டது.

மனநலம் சரியில்லாத அண்ணன். . . கல்யாணம் ஆக வேண்டிய தங்கை... உலகம் தெரியாத பப்லூ... இவர்களுடன் ஹரியின் வாழ்க்கை, புயலில் சிக்கிக் கொண்ட கப்பல் போல் தத்தளித்துக் கொண்டிருந்தது.

எப்படியாவது அதை தன் வசத்தில் கொண்டு வந்து சரியான வழியில் நடத்திச் செல்ல வேண்டும் என்று ஹரி தன்னால் முடிந்த வரையில் போராடிக் கொண்டிருந்தான்.

* * *

**ம**றுநாள் காலையில் ஹரி குளித்துக் கொண்டு இருந்தான். பப்லூ முதுகு தேய்த்துவிடுகிறேன் என்று சொல்லிக் கொண்டு சித்தப்பாவுக்கு கிச்சு கிச்சு மூட்டிக் கொண்டிருந்தான்.

"சீக்கிரம் ஆகட்டும் பப்லூ. சித்தப்பாவுக்கு வேலை இருக்கு. புருஷோத்தமன் தாத்தா வந்து விடுவார். வெளியில் போகணும்." ஹரி கெஞ்சினான்.



"சித்தப்பா! இன்னிக்கு நாம் சினிமாவுக்குப் போகலாமா?" பப்லூ கேட்டான்.

"நீயும், ஜெயா அத்தையும் போய்விட்டு வாங்க. நான் வரவில்லை."

"நீ வரவில்லை என்றால் நானும் போகமாட்டேன்." பப்லூ அடம் பிடித்தான்.

"என்னால் வரமுடியாது கண்ணா. சினிமாவுக்குப் போவானேன்? அடுத்த வாரம் நாடகம் பார்க்கப் போகலாம். அதில் நான் வயலின் வாசிக்கப் போகிறேன்."

அதற்குள் வாசற் கதவு தட்டிய சத்தம் கேட்டது.

"ஜெயா! யார் வந்திருக்காங்களோ பாரு". ஹரி குரல் கொடுத்தான்.

ஜெயா போய் கதவைத் திறந்தாள்.

"வந்தது யாரு?" டவலால் உடலை துடைத்துக் கொண்டே மறுபடியும் குரல் கொடுத்தான். ஜெயா பதில் சொல்லவில்லை.

"புருஷோத்தமன் தாத்தாதானே?"

"இல்லை." ஜெயா பட்டும் படாமலும் சொல்லிவிட்டு சமையல் அறைக்குள் சென்றாள்.

"பின்னே வந்தது யாரு?" ஹரி கேட்டான்.

"வேணு." பப்லூ சொன்னான்.

ஹரியின் முகம் சீரியஸாக மாறியது. வழக்கமாக இருந்தால் வேணுவின் பெயரைக் கேட்டதும் 'வா. . . வா' என்று உற்சாகமாக வரவேற்பான். இன்று மௌனமாக இருந்து விட்டான்.

"ஜெயா! இன்னிக்கு என்ன சமையல்? நானும் சாப்பிட வரலாமா?" உரிமையாக கேட்டுக் கொண்டே சமையலறையை நோக்கிப் போனான்.

ஜெயா பதில் சொல்லவில்லை.

"ஹரி! உங்க நாடகம் என்னிக்கு? என்னிடம் டிக்கெட் புக் ஒன்று கொடுத்தாயானால் விற்றுத் தருகிறேன்."

ஹரி பதில் சொல்லாமல் அறைக்குள் போய் உடைகளை மாற்றிக் கொள்ளத் தொடங்கினான்.

"என்ன ஆச்சு? அண்ணன் தங்கை இருவரும் இன்னிக்கு மௌனவிரதமா?" வேணு பரிகாசமாக கேட்டான்.

ஹரி அலமாரி அருகில் சென்று சீப்பை எடுத்துக் கொண்டு தலை வாரிக் கொள்ள ஆரம்பித்தான்.

"சித்தப்பா! சினிமா." பப்லூ மறுபடியும் நினைவுப் படுத்தினான்.

"வேண்டாம் என்று சொன்னால் கேளேன்." ஹரி எரிந்து விழுந்தான்.

என்றும் கோபித்துக் கொள்ளாத சித்தப்பா இன்று கடிந்து கொண்டதும் பப்லூ முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.

"என்ன பப்லூ? எந்த சினிமாவுக்குப் போறீங்க?" வேணு கேட்டான்.

"அண்ணாமலை."

"ரஜினி படமா? நானும் பார்த்ததில்லை. ஜெயாவும் வருகிறாளா? அவளும் வருவதாக இருந்தால் மூவருமாக சேர்ந்து போகலாம்."



"நான் வரப் போவதில்லை." ஜெயா சட்டென்று சொன்னாள்.

"இளவரசியார் இன்னிக்கு ரொம்ப கோபத்தில் இருப்பது போல் தெரிகிறது. காரணம் என்னவோ?" வேணு பரிகாசமாக கேட்டான்.

"வேணு!" உரத்த குரலில் கத்திக் கொண்டே ஹரி ஹாலுக்கு வந்தான். அவன் முகம் ஆவேசத்தினால் சிவந்து விட்டிருந்தது. "வேணு! நான் வீட்டில் இல்லாதபோது நீ இங்கே வருவதோ, என் தங்கை ஜெயாவுடன் நீ பேசுவதையோ நான் விரும்பவில்லை" என்றான்.

ஹரியின் குரலில் தென்பட்ட கடுமைக்கும், கோபத்திற்கும் வேணு திகைத்துப் போனான். ஒரு நிமிடம் எதுவும் பேசமுடியாதவன் போல் அப்படியே நின்றுவிட்டான்.

ஹரி வேணுவின் அருகில் வந்தான். "வேணு! நீ எங்கள் வீட்டுக்கு வராமல் இருந்தால் இன்னும் சந்தோஷப்படுவேன். எங்கள் வீட்டு நிலைமையும் முன் போல் இல்லை. ஜெயா கல்யாணம் ஆக வேண்டியவள்."

வேணுவின் முகத்தில் சிரிப்பு மறைந்தது. "அதாவது உங்கள் வீட்டு நிலைமையை வாய்ப்பாக எடுத்துக் கொண்டு ஜெயாவுடன் அளவுக்கு மீறி பழகுவதாக நினைக்கிறாயா? ஜெயா! உன்னுடைய அபிப்பிராயமும் அதுதானா?"

"நீ இங்கிருந்து போய்விடு வேணு. இனி மேல் வராதே. அண்ணா சொன்னபடி செய்." அழுகை கலந்த குரலில் சொன்னாள் ஜெயா.

வேணு ஒரு நிமிடம் மௌனமாக இருந்தான். பிறகு ஓரடி ஹரியை நோக்கி எடுத்து வைத்தான். "ஹரி! இன்னிக்கு ஒரு முக்கியமான விஷயம் உன்னிடம் சொல்லணும் என்றுதான்

வந்தேன். என் உற்சாகத்தை அடியோடு குலைத்துவிட்டாய். இருந்தாலும் சொல்ல நினைத்ததை சொல்லி முடித்தபிறகு கிளம்புகிறேன். நீ சொன்னது போலவே இன்று உங்கள் நிலைமை வேறு. முன் போல் இருந்தால் உங்களிடம் இப்படிக் கேட்கும் துணிச்சல் எனக்கு இருந்திருக்காது. இப்போது நிலைமை மாறிவிட்டது. உனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் நானே ஜெயாவைத் திருமணம் செய்து கொள்கிறேன். வரதட்சணையோ, சீர்வரிசையோ எதுவும் எனக்கு வேண்டாம். இந்தத் திருமணம் நடந்தால் உனக்கு, உங்க அண்ணா, பப்லூ எல்லோருக்கும் வாழ்நாள் முழுவதும் துணையாக இருப்பேன்."

"வாயை மூடு!" ஹரி கத்தினான்.

"ஆவேசமடையாதே ஹரி. பத்தாயிரம் ரூபாய் வரதட்சணை கொடுத்து என்னைவிட உசந்த நிலையில் உள்ள வரனை ஜெயாவுக்குக் கொண்டு வர உன்னால் முடிந்தால் எனக்கும் சந்தோஷம்தான். அப்படி நடந்தால் வருத்தப்படவும் மாட்டேன். ஆனால் அப்படி உன்னால் செய்ய முடியாத பட்சத்தில் நான் சொன்ன பிரஸ்தாபனையை நினைவில் வைத்துக் கொள். நான் வெளிப்படையாக இப்படிப் பேசுவதில் எந்தத் தவறும் இல்லை என்று நினைக்கிறேன். நீ சொன்னது போல் உங்க வீட்டுக்கு வருவதை குறைத்துக் கொள்கிறேன். நீ இல்லாதபோது வரவே மாட்டேன். சரிதானே?" வேணு செருப்பை மாட்டிக் கொண்டு போய்விட்டான்.

ஹரி பெருமூச்சு விட்டான். தன்னுடைய சொற்கள் வேணுவின் மனதை காயப்படுத்திவிட்டது புரிந்தது. வேணு இந்த வீட்டுக்குக் கொஞ்சம் ஒத்தாசையாக இருப்பது உண்மைதான் என்றாலும் ஊர்வாய் பொல்லாதது. ஜெயாவின் எதிர்காலம் நல்லவிதமாக இருக்கணும் என்றால் நாலுபேர் நாலுவிதமாக பேசுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது.



சற்று நேரம் கழித்து சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்த ஜெயாவிடம் கேட்டான்.

"ஜெயா! வேணுவிடம் நான் சொன்னதில் தவறு ஏதாவது இருக்கா?"

"எந்தத் தவறும் இல்லை அண்ணா. என்னுடைய நன்மைக்காகத்தானே அப்படிச் சொன்னாய்."

ஜெயாவின் குரலில் மறைமுகமாக தென்பட்ட வேதனை ஹரியின் மனதில் ஆழமாகப் பதிந்தது.

* * *

**வ**ங்கியில் இருந்த பணம் கற்பூரமாக கரைந்து போய்க் கொண்டிருந்தது. அவ்வளவு பணம் செலவு செய்து சிகிச்சை அளித்த பிறகும் ராமகிருஷ்ணனின் போக்கில் எந்த மாற்றமும் தென்படவில்லை. மருத்துவ சிகிச்சை அளிப்பதோடு மந்திர தந்திரங்கள், பூஜைகள் எல்லாம் செய்து பார்த்தாகிவிட்டது. ஹரி முருகனுக்கு நேர்ந்து கொண்டு செவ்வாய்க் கிழமை விரதம் இருந்து பார்த்தான். எந்தக் கடவுளின் காதுகளிலும் ஹரியின் வேண்டுகோள் விழவில்லையோ இல்லை இந்த சமாசாரம் அவர்களுக்கு அப்பாற்பட்டதோ தெரியவில்லை. பலன் மட்டும் கிடைக்கவேயில்லை.

ராமகிருஷ்ணனை மெண்டல் ஆஸ்பத்திரியில் சேர்க்கச் சொல்லி புருஷோத்தமன் வேறு அடிக்கடி நச்சரித்துக் கொண்டிருந்தார். முதல் தடவை அவர் அந்த வார்த்தையைச் சொன்னதும் ஹரியால் ஆவேசத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"இனி ஒரு நாளும் இது போன்ற அறிவுரைகளை வழங்காதீங்க." கோபமாகச் சொன்னான்.

"அப்படிச் சொல்லக் கூடாத வார்த்தையை நான் என்ன சொல்லிவிட்டேன்? அண்ணாவுக்காக எத்தனை நாட்கள் ஜெயாவுக்குக் கல்யாணம் செய்யாமல் இருப்பாய்? கல்யாணம் முடிந்து ஜெயா போய்விட்டால் உங்க அண்ணனை யார் பார்த்துக் கொள்வார்கள்? நீயே சொல்லு."

"நான் இல்லையா? பப்லூ இல்லையா? என் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் அண்ணாவை எங்கேயும் அனுப்ப மாட்டேன். அவனால் யாருக்கும் எந்த தொல்லையும் இல்லை. அவனுக்குத் தேவை வேளைக்கு ஒரு பிடி சாதம். அதை சாப்பிட்டுவிட்டு தன்னுடைய அறையிலேயே கதவை தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு அவன் பாட்டுக்கு இருப்பான்." கடைசி வார்த்தைகளை சொல்லும் போது அவன் குரல் நடுங்கியது. 'அண்ணாவை பத்திரமாக பார்த்துக் கொள் ஹரி.' அண்ணியின் வார்த்தைகள் காதுகளில் எதிரொலிப்பது போல் இருந்தது.

ஆறு மாதங்கள் கழிந்த பிறகும் ஹரியின் மனதில் அந்த ரணம் இன்னும் ஆறவில்லை. அந்தத் துக்கம் மறையவில்லை. அண்ணியின் நினைவு வந்த போதெல்லாம் விழிகள் குளமாகிக் கொண்டிருந்தன.

"வசதி இருக்கும்போது ஜம்பமாகப் பேசினார்கள் சரி. இல்லாத போதும் அந்த பவிசு எதுக்கு? என் மகன் வேணு ஜெயாவை பண்ணிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப் படுகிறான். 'மாமி! என் தங்கையை உங்க வீட்டுமருமகளாக்கிக் கொள்ளுங்கள்' என்று வாயைத் திறந்து ஒரு வார்த்தை கேட்டால் என்னவாம்? குருடனாக இருந்தாலும் அந்த ஹரிக்கு இருக்கும் திமிரு யாருக்கும் இல்லை" - அங்கே இங்கே திருநாகம் மாமி பேசுவது ஹரியின் காதுகளில் விழாமல் இல்லை.



ரொம்ப முயற்சி செய்த பிறகு அவனுக்கு ஒரு நாடக கம்பெனியில் வேலை கிடைத்தது. அவர்கள் கொடுக்கும் சம்பளம் குறைவாக இருந்தாலும் அதிகாரம் செய்வது அதிகம். வருஷத்திற்கு இரண்டு மூன்று நிகழ்ச்சிகள் நடந்தால் அதிகம். ஆனால் ரிகர்சல் என்ற பெயரில் உயிரை எடுத்து விடுவார்கள். வேறு வழி இல்லாததால் ஹரி அந்த நாடக கம்பெனியில் தொடர்ந்து இருந்தான். ஒவ்வொரு மாதமும் சம்பளம் கைக்கு வருவதற்குள் பெரும்பாடாக இருந்தது.

இந்த ஆறு மாதங்களில் கஞ்சனூர் மாமா இரண்டு மூன்று தடவை வந்துவிட்டுப் போனார். கவிதா பெங்களூரிலிருந்து அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். அன்பும், நட்பும் பிரதிபலிக்கும் அந்தக் கடிதங்கள் இந்த கஷ்டகாலத்தில் கோடை மழையாய் ஹரியின் மனதைக் குளிர்வித்துக் கொண்டிருந்தன. அடிக்கடி அந்தக் கடிதங்களைப் படித்துப் பார்க்க வேண்டும் என்று தோன்றினாலும் சும்மா சும்மா படித்துக் காட்டச் சொன்னால் ஜெயா என்ன நினைத்துக் கொள்வாளோ என்ற கூச்சமும், தயக்கமும் அவனைத் தடுத்தன. சில சமயம் அந்தக் கடிதங்களை கையால் தடவிப் பார்த்து விட்டு மறுபடியும் பெட்டியில் வைத்து விடுவான்.

கஞ்சனூர் மாமா போன தடவை வந்தபோது வேணுவின் பிரஸ்தாபனை வந்தது. 'அந்தப் பையன் உண்மையிலேயே விருப்பப்பட்டால் பேஷாக ஜெயாவை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விடலாம்' என்று அறிவுரை வழங்கினார். இப்போ இருக்கிற நிலைமையில் இதைவிட பெரிய இடத்தைப் பார்க்க முடியாது என்றும் சொன்னார். அவ 'ர வேலை இருந்ததால் அன்று இரவே ஊருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். "ஹரி! நீ போய் திருநாகம் மாமியிடம் பேசிவிட்டு எனக்குக் கடிதம் எழுது. அந்த மாமி

சம்மதம் சொன்னதும் முஹூர்த்தம் வைத்து விடலாம்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

அன்று இரவு சாப்பாடு முடிந்த பிறகு ஹரி ஜெயாவை அழைத்தான். ஜெயா வந்து அருகில் அமர்ந்து கொண்டாள்.

"ஜெயா! அண்ணி இருந்தால் இந்தக் கேள்வியை அண்ணியே உன்னிடம் கேட்டிருப்பாள். அண்ணி இல்லாததால் நானே கேட்கவேண்டியதாகிவிட்டது. வேணுவைப் பண்ணிக் கொள்ள உனக்கு விருப்பம்தானா?"

ஜெயா உடனே பதில் சொல்லவில்லை.

"சொல்லு ஜெயா! உன் மனதில் இருப்பதை வெளிப் படையாகச் சொல்லு."

"வேணுவுக்கு என்னை ரொம்பப் பிடிக்கும் அண்ணா." தாழ்ந்த குரலில் சொன்னாள்.

"நான் கேட்டது உன்னைப் பற்றி."

"எனக்கும் விருப்பம்தான்."

"மனப்பூர்வமாகச் சொல்கிறாயா?"

"ஆமாம்."

"நம் நிலைமை இப்படி ஆகிவிட்டதே என்று உன் மனதைச் சமாதானப்படுத்திக் கொள்கிறாயா? அப்படி ஏதாவது இருந்தால் வெளிப்படையாக சொல்லு. நீ எனக்கு ஒரு நாளும் பாரமாகிவிட மாட்டாய். உனக்கு விருப்பம் இல்லாத இடத்தில் கட்டிக் கொடுக்க மாட்டேன்."

"உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா அண்ணா."

"அப்போ நல்ல நாள் பார்த்து திருநாகம் மாமியிடம் பேசட்டுமா?"



"சரி அண்ணா."

"அப்பாடா. இப்பொழுதுதான் என் மனதிற்கு நிம்மதியாக இருக்கு." ஹரி எளிதாக மூச்சுவிட்டுக் கொண்டான்.

* * *

இரண்டு நாட்கள் கழித்து நல்ல நாளாக பார்த்து ஹரி புருஷோத்தமனையும் அழைத்துக் கொண்டு திருநாகம் மாமி வீட்டுக்குப் போனான். ஹரி தங்கள் வீட்டுக்கு வரப்போகிறான் என்ற செய்தி மாமிக்கு முதல்நாள் இரவே தெரிந்துவிட்டது. அன்று இரவு சாப்பிடும்போது வேணு "அம்மா! ஜெயாவின் கல்யாண விஷயமாக பேசுவதற்கு ஹரி நம் வீட்டுக்கு வரப்போகிறான். நீ சம்மதம் என்று சொல்லிவிடு" என்றான்.

"சம்மதம் சொல்லாமல் எப்படி இருப்பேன்? அந்த நல்ல நாளுக்காகத்தானே காத்திருக்கிறேன்." திருநாகம் மாமி மகனுக்குச் சமாதானம் சொன்னாள்.

ஹரி இந்தத் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்து விட்டான் என்று தெரிந்ததும் வேணு அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஜெயாவுடன் தான் நடத்தப் போகும் குடித்தனத்தைப் பற்றி பலவிதமான கனவுகளை வைத்திருந்தான்.

அவர்கள் வரும் நேரத்திற்கு தன்னால் வீட்டில் இருக்க முடியாது என்று முன் கூட்டியே ஹரியிடம் தெரிவித்து விட்டிருந்தான். "அம்மாவிடம் எல்லா விஷயங்களையும் பேசிவிட்டேன். நீங்க வந்து கேட்க வேண்டியதுதான் பாக்கி" என்று உத்தரவாதம் அளித்தான்.

வேணு வேலைக்காக தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருந்தான். தனக்கு என்று வருமானம் இருந்தால் மாமியார் கொடுமையிலிருந்து ஜெயாவைக் காப்பாற்றிவிட

முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. சோதனை செய்வது போல் ஹரி வரப்போவதாக சொன்ன அதே நாளன்று அவனுக்கு ஒரு இண்டர்வியூ இருந்தது. போகாமல் இருந்தால் வேலை கிடைக்கும் வாய்ப்பு நழுவிவிடும். அதான் தான் இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று ஹரியிடம் தெரிவித்தான்.

ஹரியும், புருஷோத்தமனும் வந்தபோது திருநாகம் மாமி தேவைக்கு அதிகமான மகிழ்ச்சியை முகத்தில் காட்டிக் கொண்டே வரவேற்றாள்.

"வாப்பா . . . வா. . . வா. வழி தவறி வந்துவிட்டாய் போலிருக்கே" என்று நையாண்டித்தனம் கலந்த குரலில் கேட்டாள்.

அந்த வார்த்தையைக் கேட்டதும் ஹரிக்கு என்னவோ போல் இருந்தது. பத்து நிமிடங்கள் பொதுவாக பேசிய பிறகு ஹரி வந்த காரியத்தைப் பற்றி புருஷோத்தமன் மாமியிடம் சொன்னார்.

திருநாகம் மாமி முகத்தில் போலி வியப்பைக் காட்டினாள். "என்னது? உங்க ஜெயாவை என் மகன் வேணூவுக்குக் கொடுப்பதா? என் காதுகளை என்னால் நம்பவே முடிய வில்லையே" என்று கன்னத்தில் கையைப் பதித்தாள். "நீங்களோ அந்தஸ்து உள்ளவர்கள். உங்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளும் தகுதியும், அதிர்ஷ்டமும் எங்களுக்கு இருக்கா என்ன? நானோ பொல்லாதவள். என் வாயைப் பார்த்தால் எந்தப் பெண்ணும் வரமாட்டாள் என்று சொன்னது நீதானே ஹரி" என்று நீட்டி முழக்கினாள்.

மாமி குத்திக் காட்டிப் பேசியபோது ஹரியின் முகம் கன்றி விட்டது. கோபம் வந்தாலும் கட்டுப்படுத்திக் கொண்டான்.



திருநாகம் மாமி புருஷோத்தமன் பக்கம் திரும்பினாள். "இதற்கு முன் என் மகன் வேணூவுக்கு உங்க வீட்டுப் பெண்ணைக் கொடுங்கள் என்று இவனுடைய அண்ணா, அண்ணியிடம் எத்தனையோ முறை வெட்கத்தை விட்டு கேட்டிருக்கிறேன். உண்டு இல்லைன்னு பதில் சொல்லாமல் தட்டிக் கழித்தார்கள். சரி போகட்டும் அவர்களுடைய அந்தஸ்துக்கு நம்மை மதிக்காமல் இருப்பது நியாயம் தானே என்று சமாதானப்படுத்திக் கொண்டேன். நேற்றுதான் என் மகன் வேணூவுக்காக ஒரு வரன் வந்தது. வீட்டுக்கு ஒரே மகள். ஐயாயிரம் வரதட்சணை, இருபது பவுன் நகை போட்டு, ஒரு கிலோ வெள்ளிப் பாத்திரம் தருவதாக தரகர் வந்து சொல்லிவிட்டுப் போனார். வீடு, தோட்டம் என்று சொத்து இருப்பவர்கள். எனக்கு இருக்கிறது ஒரே மகன். அவனுடைய கல்யாணம் சீரும் சிறப்புமாக நடக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு மட்டும் இருக்காதா? இவர்களால் அதை எல்லாம் செய்ய முடியுமா என்ன?" வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் நைஸாக சொன்னாள்.

"நீங்க சொல்வது உண்மைதான். இருந்தாலும் ஜெயாவை உங்க மகன் விரும்புகிறான் இல்லையா." - புருஷோத்தமன் நடுநிலைமை வகிப்பது போல் சொன்னார். திருநாகம் மாமி இப்படிப் பேசியது அவருக்கு வேடிக்கையாகவும், உள்ளூர சந்தோஷமாகவும் இருந்தது.

"அதான் சொல்கிறேன். அவர்கள் கொடுப்பதாக சொன்ன வரதட்சணை, சீர்வரிசை எல்லாம் இவர்களை தரச் சொல்லுங்கள். பெண் யாராக இருந்தாலும் எனக்குக் கவலை இல்லை. எனக்கு வேண்டியது பணம். தீர்க்க வேண்டிய கடன்கள் சிலது எங்களுக்கு இருக்கு. வேணூ ஒரு அப்பாவி. கூச்சம் அதிகம். இந்த வார்த்தையை உங்களிடம் சொல்லத்

தயங்கி என்னையே உங்களிடம் பேசச் சொன்னான்." திருநாகம் மாமி தீர்மானமாக சொல்லிவிட்டாள்.

ஹரி நாற்காலியிலிருந்து எழுந்து கொண்டான். "போய் வருகிறோம் மாமி."

"நல்லது தம்பி. வரதட்சணை பணம் எல்லாம் தோது பட்ட பிறகு செய்தி சொல்லி அனுப்புங்கள். உடனே முஹூர்த்தம் வைத்துவிடலாம்." மாமி வாசல் வரையில் வந்து அவர்களை வழியனுப்பி வைத்தாள்.

* * *

## 6

"இனி அவர்களைப் பற்றி என்னிடம் பேசாதீங்க தாத்தா. ஜெயாவை தனக்குப் பிடித்திருப்பதாக வேணு சொன்ன தால்தான் போனேனே தவிர, ஜெயாவுக்கு வயது ஏறிக் கொண்டு போகிறதே என்றோ, அவளுக்கு ஒரு பிடி சாப்பாடு போட முடியவில்லை என்றோ நான் நினைக்கவில்லை. காலம் எப்போதும் இப்படியே இருக்குமா என்ன? என்னிக்காவது எங்களுடைய நிலைமை சரியாகாதா? எனக்கு நல்ல வேலை கிடைக்காமல் போய்விடுமா? கடவுள் நல்ல வழி காட்டாமல் போக மாட்டார்."

திருநாகம் மாமியின் வீட்டிலிருந்து வந்த பிறகு ஹரி கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டே சொன்னான். ஹரி இப்படி அமைதியாக. பேசியது புருஷோத்தமனுக்குக் கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. ஹரி வேணுவை திட்டினால் மேலும் தூபம் போட்டு காது குளிரக் கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஹரி வேணுவை குறை எதுவும் சொல்லாதது அவருக்கு வியப்பாக இருந்தது.



"திருநாகம் மாமி சொன்னது உண்மைதானோ என்னவோ. வரதட்சிணை வேண்டுமென்று வாய் திறந்து கேட்க முடியாமல் நாம் வரும் போது வீட்டில் இல்லாமல் சாக்கு போக்கு சொல்லி தப்பித்துக் கொண்டு இருக்கலாம் இல்லையா" என்றார் புருஷோத்தமன்.

ஹரி ஒப்புக்கொள்ளவில்லை. "வேணு தாயின் வாய்க்கு பயப்படுவானே ஒழிய உண்மையிலேயே ஜெயாவை விரும்பவில்லை என்றால் சம்பந்தம் பேச என்னை வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கமாட்டான். நம் வீட்டு நிலைமை சரியில்லையே தவிர மாமி கேட்டதில் எந்த தவறும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. திருநாகம் மாமி ரொம்ப பாவம். அங்கே இங்கே சமையல் வேலை செய்து, மாவு அரைத்து, அப்பளம் இட்டு மகனைப் படிக்க வைத்தாள். மகனின் திருமணம் சீரும் சிறப்புமாக நடக்க வேண்டும் என்று மாமி ஆசைப்படுவது நியாயம்தானே? வாய் துடுக்கு அதிகம் என்பதால் மகன் மீது இருக்கும் கோபத்தை என் மீது காட்டி விட்டாள். அவ்வளவு தான்." ஹரி சொன்னான்.

திருநாகம் மாமி வீட்டிலிருந்து வரும்போது அவன் இதயம் முழுவதும் கோபம் பரவியிருந்தது உண்மைதான். ஆனால் கொஞ்சம் நேரம் கழித்து யோசித்துப் பார்த்தபோது திருநாகம் மாமி கேட்டதில் தவறு எதுவும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. ஜெயாவை பண்ணிக் கொள்ள மாட்டேன் என்று மாமி சொல்லவில்லையே! வரதட்சணை வேண்டும் என்று கேட்கிறாள். நியாயம்தானே? அவ்வளவு ஏன்? தனக்கு மட்டும் வரதட்சிணை கொடுக்கக்கூடிய சக்தி இருந்திருந்தால் மாமியின் வீட்டு வாசற்படி ஏறியிருப்பானா என்ன? தங்களுடைய நிலைமை சரியாக இல்லை என்றால் அதற்கு மாமி என்ன செய்வாள்? மாமி தங்களிடம் எதற்காக கருணை காட்ட வேண்டும்?

இப்படி எல்லாம் யோசித்த பிறகு ஹரிக்கு மாமியின் மீது கொஞ்சம் கூட கோபம் வரவில்லை. ஜெயாவின் திருமணத்தை வேணுவுடன் நடத்த வேண்டும் என்று நினைத்தால் முன்னாலேயே காசு பணம் கொஞ்சம் சேர்த்து வைத்திருக்கணும். இப்போ வருத்தப்பட்டு பிரயோஜனம் இல்லை.

நாடகத்திற்கு ஒத்திகை பார்ப்பதற்காக ஹரி கிளம்பிப் போய் விட்டான். "கால் ரொம்ப வலிக்கிறது. கொஞ்சம் படுத்துக் கொண்டால்தான் சரியாக இருக்கும்" என்று சொல்லிக் கொண்டே புருஷோத்தமன் கட்டில் மீது படுத்துக் கொண்டார்.

ஹரி கிளம்பிப் போன பிறகு ஜெயா புருஷோத்தமன் அருகில் வந்தாள்.

"தாத்தா! அங்கே என்னதான் நடந்தது?" என்று கேட்டாள்.

மதியம் அண்ணாவும், புருஷோத்தமனும் கிளம்பிப் போனது முதல் ஜெயாவின் உள்ளம் கனவு காணத் தொடங்கியது. வேணு என்றால் ஜெயாவுக்கும் இஷ்டம்தான். ரொம்ப நல்லவன். தன்னை ஒரு இளவரசியைப் போல் பார்த்துக் கொள்வான். அண்ணி எப்போதும் சொல்லிக் கொண்டே இருப்பாள். "மனைவியை அபூர்வமாக பார்த்துக் கொள்ளும் கணவன் கிடைத்தால் அந்தப் பெண்ணின் வாழ்க்கை சுவர்க்கம்தான். காசு பணத்தைவிட அன்பான மனம் இருப்பது ரொம்ப முக்கியம்." ஜெயா மனதில் அந்த வார்த்தைகள் ஆழமாக பதிந்துவிட்டன. பெரிய அண்ணா, அண்ணியை பார்க்கும்போது குடும்ப வாழ்க்கை என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைத்திருந்தாள்.



ஜெயாவின் கேள்விக்கு புருஷோத்தமன் உடனே பதில் சொல்லவில்லை. கட்டிலை ஒட்டினாற் போல் நின்றிருந்த ஜெயாவின் உடல் அழகை கண்ணாலேயே பருகிக் கொண்டிருந்தார். ஜெயா அன்று மலர்ந்த மலரைப் போல் தூய்மையாக இருந்தாள். தன்னுடைய இளமை காலத்தில் புருஷோத்தமன் சிருங்கார புருஷனாக வாழ்க்கையைக் கழித்திருந்தார். ஒரு பெண்ணைப் பார்த்ததுமே அவள் சுபாவம் எப்படிப்பட்டது என்று அவரால் சுலபமாக சொல்ல முடியும். பலவிதமான பெண்களுடன் பழகியிருந்ததால் இந்த வித்தை அவருடைய ரத்தத்திலேயே இருந்தது.

இளமைப் பருவத்தில் இருந்தாலும் மனதளவில் ஜெயா குழந்தைதான். தன் உடலில் இளமை பூத்துக் குலுங்கிக் கொண்டிருப்பதை அறியாத அளவுக்கு அப்பாவியாக இருந்தாள். உலகின் போக்கு தெரிந்தவளாக இருந்தால் அவருடைய பார்வையில் இருந்த வேட்கையை உடனே புரிந்து கொண்டிருப்பாள்.

"பரவாயில்லை தாத்தா! நான் ஒன்றும் வருத்தப்பட மாட்டேன். சொல்லுங்க" என்றாள். திருநாகம் மாமி வீட்டிலிருந்து வந்தது முதல் ஹரி எரிச்சலுடன் பேசியபோதே போன காரியம் முடியவில்லை என்று ஜெயாவுக்குப் புரிந்து விட்டது. ஏமாற்றம் வெள்ளம்போல் பொங்கி அவளை மூழ்கடித்தது. 'என்னதான் நடந்தது?' என்று அண்ணாவிடம் கேட்கும் துணிச்சல் அவளுக்கு இருக்கவில்லை.

"என்ன நடந்ததோ சொல்லச் சொல்கிறாயா? வந்து இப்படி உட்காரு. விவரமாக சொல்கிறேன்" என்றார் புருஷோத்தமன்.

மனதில் எந்த விதமான கல்மிஷம் இல்லாத ஜெயா கொஞ்சம் கூட தங்காமல் கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள்.

சிறுவயது முதல் புருஷோத்தமனை பார்த்திருப்பதால் அவரிடம் இயல்பாக பழகுவாள்.

மடியில் இரு கைகளையும் வைத்தபடி தலைகுனிந்து, அப்பாவிப் பெண் போல் அமர்ந்திருந்த ஜெயாவைப் பார்க்கப் பார்க்க புருஷோத்தமனின் மனம் காற்றில் மிதப்பது போல் இருந்தது.

ஜெயாவுக்கு ஆறுதல் சொல்வது போல் அவள் கையைப் பற்றிக் கொண்டு திருநாகம் மாமி சொன்னதை விட பலமடங்கு ஜோடித்துச் சொன்னார்.

“வேணு ஏன் இப்படிச் செய்தான் என்று புரியவில்லை.” ஜெயாவின் குரலில் ஏமாற்றம் தெரிந்தது.

“வேணு ஒரு ரெண்டுங்கெட்டான். ஏதோ ஒரு பேச்சுக்கு உன்னை கல்யாணம் செய்துகொள்வதாக நம்மிடம் சொன்னானே தவிர ஹரி உண்மையிலேயே சம்பந்தம் பேச தங்கள் வீட்டுக்கு வருவான் என்று எதிர்பார்த்திருக்க மாட்டான். வீட்டிலும் இதைப் பற்றி சொன்னதாக தெரியவில்லை. அந்த அம்மாளுக்கு நாங்க இந்த வேலையாக வந்திருக்கிறோம் என்று தெரியவே தெரியாது.”

“வேணு இப்படி செய்வான் என்று எதிர்பார்க்கவில்லை.” ஜெயாவுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது.

“உலகமே அப்படித்தான் இருக்கு. உன்னைப் போன்ற இளம் பெண்கள் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கணும். என்ன இது? அழுது கொண்டு இருக்கிறாயா? என் கண் இல்லையா, அழாதே.”

ஏற்கனவே உள்ளூர வேதனைப் பட்டுக் கொண்டிருந்த ஜெயாவுக்கு புருஷோத்தமன் இப்படிச் சொன்னதும் துக்கம் மடைதிறந்த வெள்ளமாக வெளியேறியது.



புருஷோத்தமன் ஜெயாவின் தோளைச் சுற்றி கையை போட்டு அருகில் இழுத்துக் கொண்டு முதுகை தடவிக் கொடுத்தார். “இதுக்குப் போய் அழுவார்களா? வேணு பண்ணிக் கொள்ளவில்லை என்றால் உனக்குக் கல்யாணமே ஆகாமல் போய் விடுமா என்ன? தங்கப் பதுமையாக இருக்கிறாய். எந்தப் பணக்கார வீட்டுப் பிள்ளையோ வந்து உன்னைக் கொத்திக் கொண்டுபோய் விடுவான். அழாதே.” ஆறுதல் சொல்வது போல் மேலும் அணைத்துக் கொண்டார். அவரிடமிருந்து வீசிய மூக்குப் பொடியின் நெடியில் ஜெயாவுக்கு மூச்சுத் திணறியது. எப்படியோ அவருடைய பிடியிலிருந்து விடுபட்டு நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

புருஷோத்தமன் மறுபடியும் ஆறுதல் சொல்வது போல் அருகில் இழுத்துக் கொள்ள முயன்றார். ஆனால் ஜெயா இடத்தைவிட்டு நகரவில்லை.

“இதோ பாரும்மா. அவன் மறுபடியும் வருவான். தனக்கு எதுவும் தெரியாது. அம்மாதான் வாய்க்கு வந்தபடி பேசியிருக்கிறாள் என்று உன்னை நம்ப வைக்க முயற்சி செய்வான். அவன் பேச்சை நம்பாதே. இந்தக் காலத்து இளைஞர்கள் எல்லோருமே போக்கிரிகள். இனிக்க இனிக்கப் பேசி பெண்களை வலையில் போட்டுக் கொள்வார்கள். நீதான் கவனமாக இருக்கணும். உங்க அண்ணி இந்த உலகிலேயே இல்லை. பெரிய அண்ணன் பைத்தியமாகிவிட்டான். சின்ன அண்ணாவுக்குக் கண் பார்வையில்லை. பாவம், எல்லாக் கஷ்டங்களும் உனக்குத்தான். இது போன்ற நேரத்தில் நீதான் ஜாக்கிரதையாக இருந்து கொள்ளணும்.”

“சரி தாத்தா.” ஜெயா நன்றி கலந்த குரலில் சொன்னாள்.

“நான் ஒருத்தன் பெருந்துணையாக இருக்கும் போது நீ எதுக்காக கவலைப்படணும்? உனக்கு எந்த கஷ்டம் வந்தாலும்

என்கிட்டே சொல்லு. நான் பார்த்துக் கொள்கிறேன்." புருஷோத்தமன் சொன்னார்.

ஜெயா தலையை அசைத்தாள்.

"அந்த வேணு வந்தால் அவனுடன் நீ பேசவே கூடாது. என் மீது ஆணை."

சரி என்பது போல் பார்த்தாள்.

"உன் மனதில் இன்னும் ஏதோ இருக்கு. என்ன விஷயம் சொல்லு."

"அது வந்து . . . . வேணுவைத் திருமணம் செய்து கொண்டால் இரண்டு அண்ணாவும் என்னிடமே இருக்கலாம் என்று நினைத்தேன்."

"அடி பைத்தியக்காரி! உனக்கு அது போன்ற எண்ணம் இருந்தால் பணக்காரனை கல்யாணம் செய்து கொள்ளணும். வேணுவால் உன்னையே காப்பாற்ற முடியாது. அதோடு திருநாகம் மாமியின் நாட்டாமையில் உங்க அண்ணன்களால் அந்த வீட்டில் ஒரு நிமிடம் இருக்க முடியுமா?"

"வேணு விருப்பப்பட்டால் மாமியால் என்ன செய்ய முடியும் என்று நினைத்தேன்."

"நீ எவ்வளவு அப்பாவியாக இருக்கிறாய் என்று இதிலிருந்து தெரிகிறது. அண்ணன்களை உன்னோடு வைத்துக் கொள்ளணும் என்று நினைத்தாயானால் நீ கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவன் பணக்காரனாகவும், அம்மா அப்பா என்று யாரும் இல்லாதவனாகவும் இருக்கணும். அப்பொழுதுதான் நீ நினைத்தது நடக்கும்."

ஜெயா பெருமூச்சு விட்டுக் கொண்டு அங்கிருந்து போய்விட்டாள். தாத்தா சொல்வது உண்மைதான். ஆனால்



அப்படிப்பட்ட நபர் எங்கிருந்து கிடைப்பான்? மனதில் ஒரு நிமிடம் ஏமாற்றம் படிந்தாலும் உடனே தேறிக் கொண்டாள். யார் கண்டார்கள்? கடவுளாக பார்த்து யாரையாவது அனுப்பி வைப்பாரோ என்னவோ?

ஒத்திகையை முடித்துக் கொண்டு ஹரி வீடு திரும்பும் போது ரொம்ப நேரமாகிவிட்டது. ஜெயா உணவைப் பரிமாறிக் கொண்டிருந்த போது ஹரி சொன்னான்.

"ஜெயா! கம்பெனிக்காரர்கள் சென்னையில் நாடகம் போடப் போகிறார்களாம். எப்படியும் பத்து நாட்கள் ஆகிவிடும். நான் கட்டாயம் போக வேண்டும். மாட்டேன்னு சொன்னால் வேலை போய்விடும் போல் இருக்கு. என்ன செய்வது என்று தெரியவில்லை" என்றான்.

"வேலை போனால் எப்படி சமாளிக்க முடியும் அண்ணா? நீ போய் வா." ஜெயா சொன்னாள்.

"பெரிய அண்ணாவையும் பார்த்துக் கொண்டு தனியாக நீ எப்படி சமாளிப்பாய்?"

"பரவாயில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன். வேண்டுமானால் புருஷோத்தமன் தாத்தாவை அந்தப் பத்து நாட்களும் நம் வீட்டில் தங்கிக் கொள்ளச் சொல்லு."

"அப்படித்தான் செய்யணும்." வேறு வழியில்லாதவன் போல் ஹரி சொன்னான்.

அன்று இரவு கட்டிலில் படுத்துக் கொண்டானே தவிர ஹரிக்குத் தூக்கம் வரவில்லை. ஜெயாவின் திருமணம், அண்ணா வின் நிலைமை, பப்லூவின் படிப்பு . . எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கும்போது மலைப்பாக இருந்தது. தான் ஊரில் இல்லாத போது ஜெயாவால் அண்ணனைச் சமாளிக்க முடியுமா? கடவுளே! என்னை

குருடனாக படைத்தது போதாது என்று பிரச்னைகளை எல்லாம் என் தலையில் சுமத்துகிறாயே? முன் பிறவியில் என்ன குற்றம் செய்தேனோ தெரியவில்லையே? ஹரி வாய்விட்டுப் புலம்பவில்லை என்றாலும் அவன் மனதில் எண்ணங்கள் கொந்தளித்துக் கொண்டிருந்தன.

தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தவனுக்கு தொலைவில் யாரோ அழுவது போல் சத்தம் கேட்டது. காதுகளைத் தீட்டிக் கொண்டான். சந்தேகமே இல்லை. யாரோ விசும்பி விசும்பி அழுவது போன்ற சத்தம் கேட்டது.

"ஜெயா!" தாழ்ந்த குரலில் அழைத்தான். பதில் குரல் வரவில்லை. கட்டிலை விட்டு இறங்கி அறையிலிருந்து வெளியேறினான். பக்கத்து அறையில் ஜெயா படுத்துக் கொள்ளும் கட்டிலில் தடவிப் பார்த்தான். ஜெயா படுக்கையில் இருக்கவில்லை.

ஹரி மெதுவாக கொல்லைப்புறம் சென்றான், கதவு திறந்து இருந்தது. கொல்லை வாசற்படியில் ஜெயா உட்கார்ந்திருந்தாள்.

"ஜெயா!" பதட்டத்துடன் அழைத்தான்.

அழுகைச் சத்தம் நின்றுவிட்டது.

ஹரி குனிந்து தங்கையின் தோளைப் பற்றி எழுப்பினான். "ஜெயா! அழுது கொண்டிருக்கிறாயா?"

"இல்லை அண்ணா. தூக்கம் வரவில்லை. அதான் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டேன்."

"எனக்குக் கண்கள்தான் இல்லை. காதுகள் கூட இல்லை என்று நினைத்துவிட்டாயா ஜெயா?" ஹரியின் குரலில் நிஷ்டூரம் கலந்திருந்தது.



"அண்ணியின் நினைவு வந்துவிட்டது. அதான்..." ஜெயா சமாளிக்க முயன்றாள்.

ஹரி ஒரு நிமிடம் அப்படியே நின்றுவிட்டான். பிறகு தங்கையின் தோளில் ஆதரவுடன் தட்டிவிட்டு "அண்ணி எங்கேயும் போய்விடவில்லை. நம் எல்லோர் மனதிலும் ஐக்கியமாகிவிட்டாள். அந்தத் தைரியத்தில்தான் வாழ்ந்து வருகிறேன்." தைரியம் சொன்னான்.

* * *

நாடக அரங்கத்தில் திரை விலகுவதற்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன. ஹரி கடவுள் வாழ்த்து பாடுவதற்காக மேடை மீது ஏறினான். ஹால் முழுவதும் கூட்டம் நிரம்பி வழிவது போல் பேச்சு சத்தம் கேட்டது. ஹரி கடவுள் வாழ்த்து பாடிவிட்டு ஸ்டேஜுக்கு பின்னால் போய்விட்டான்.

நாடகம் தொடங்கியது. முதலாவது காட்சியிலேயே மக்கள் கூச்சல் போடத் தொடங்கினார்கள். இரண்டாவது காட்சியில் ஹீரோவுக்கும் ஹீரோயினுக்கும் காதல் மலரும் கட்டம். நடிக்க வந்த இருவருமே மேடைக்கு புதுசு போலும். வசனம் பேசினால் நடிப்பு வரவில்லை. நடிக்க முயற்சி செய்தால் வசனத்தை கோட்டை விட்டார்கள். நடிகர்களுக்கு பதில் பார்வையாளர்களே வசனம் பேச ஆரம்பித்தார்கள். கூச்சலும், ரகளையும் அதிகரித்தன. ஹீரோவும், ஹீரோயினும் மிரண்டு போய் உளறத் தொடங்கினார்கள். ஸ்டேஜ் மீது பழைய செருப்புகளும், அழுகிய தக்காளிகளும் பறந்து வந்தன.

ஹீரோயின் ஸ்டேஜுக்கு வலதுப் பக்கமும், ஹீரோ இடதுப் பக்கமும் ஓடி மறைந்து விட்டார்கள். கர்டென் விழவில்லை.

"இது எந்த காட்சி" யாரோ கத்தினார்கள்.

"ஹீரோ ஹீரோயின் மரத்தைச் சுற்றி டூயட் பாடப் போயிருக்கிறார்கள். வருவார்கள்." யாரோ நக்கலாக பதில் சொன்னார்கள்.

"கர்டெனை போட்டுத் தொலையுங்களேன்." மேனேஜர் சத்தியது மைக்கில் எல்லோருக்கும் கேட்டது. அரங்கம் முழுவதும் கொல்லென்று சிரிப்புச் சத்தம். பார்வையாளர்கள் ரகளை செய்யத் தொடங்கினார்கள்.

உள்ளே ஹீரோயினாக நடித்த பெண் "நீங்க என்னை கொன்று போட்டாலும் சரி, மறுபடியும் ஸ்டேஜுக்கு போகமாட்டேன்" என்று பிடிவாதம் பிடித்தாள்.

"அம்மாடியோவ்! கால் நடுங்குது. நெஞ்சு படபடக்குது. நான் போக மாட்டேன்." ஹீரோவாக நடிக்க வந்த இளைஞனும் மிரண்டு போயிருந்தான்.

மேனேஜருக்கு மூளையே கலங்கிவிடும் போல் இருந்தது. நிறைய பப்ளிஸிட்டீ செய்து பணத்தை ஏற்கனவே வசூல் செய்துவிட்டார்கள். நாடகம் இவ்வளவு மோசமாக இருக்கும் என்று நினைக்கவில்லை. பார்க்க வந்த மக்கள் உதைக்காமல் விடமாட்டார்கள் போலிருந்தது.

"பணத்தைத் திருப்பிக் கொடுங்க. இல்லையா நாடகம் போடுங்கள்." அரங்கத்தில் கூச்சல் அதிகரித்தது.

"ஹீரோ ஹீரோயின் இன்னும் டூயட் பாடி முடிக்க வில்லையா?"

மேனேஜர் ஹரியின் கையைப் பிடித்து அழைத்து வந்து ஸ்டேஜ் பக்கம் தள்ளி விட்டார். "உனக்குத் தெரிந்த பாட்டுகள் ஏதாவது பாடு. அதற்குள் நிலைமையை சரி செய்ய முயற்சி செய்கிறேன்."



ஹரி பதில் சொல்வதற்குள் மேனேஜர் மைக்கில் "சிறிய இடைவெளி நேரத்தில் இனிமையான வயலின் இசையை கேளுங்கள். வழங்கப் போகிறவர் திரு ஹரி கிருஷ்ணா" என்று அறிவிப்பு செய்துவிட்டார்.

ஹரி இதற்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்ளவில்லை. எதைத் தொடங்குவது என்று தெரியவில்லை. கையில் வயலினுடன் ஒரு நிமிடம் சிலையாக நின்றுவிட்டான்.

"நீ யாரு தம்பி? தேசிய கீதம் பாட வந்தாயா? எங்களுக்கு நாடகம்தான் வேண்டும்." யாரோ கத்தினார்கள்.

ஹரி சுருதியை சரி செய்து கொண்டான்.

"பாட்டு வேண்டாம். உள்ளே போ."

ஹரி எதையும் பொருட்படுத்தவில்லை.

"மிஸ்டர் ஹரி கிருஷ்ணா! உன்னைத்தான். காது கேட்கவில்லையா. உள்ளே போ. ஹரே ராமா . . . ஹரே கிருஷ்ணா . . . தம்மாரேதம்." இளைஞர்கள் பாடத் தொடங்கினார்கள்.

எதை வாசிப்பது என்று குழம்பிக் கொண்டிருந்த ஹரி அந்தப் பாட்டை வாசிக்கத் தொடங்கினான்.

மக்கள் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தாலும் ஹரி வாசிப்பதை நிறுத்தவில்லை. இளைஞர்கள் சேர்ந்து பாட ஆரம்பித்தார்கள். போகப் போக அரங்கத்தில் சத்தம் குறைந்தது. பார்வையாளர்கள் ஹரியின் வாசிப்பை ரசிக்கத் தொடங்கினார்கள். பாட்டு முடிந்தது.

"ராப் வாசிக்கத் தெரியுமா?" யாரோ கேட்டதும் ஹரி அடுத்ததாக வாசித்தான்.

மக்கள் ஆர்வத்துடன் ரசித்ததோடு கைகளை தட்டி

உற்சாகப்படுத்தினார்கள். அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஹரி வாசித்துக் கொண்டே போனான்.

நடுவில் மேனேஜர் வந்து "மூன்றாவது காட்சி தொடங்கப் போகிறது" என்று மைக்கில் சொன்னதும் "நாடகம் வேண்டாம். பாட்டுதான் வேண்டும்." மக்கள் கத்தினார்கள். ஆக மொத்தம் தொடர்ந்து இரண்டு மணி நேரம் ஹரி தனக்குத் தெரிந்த பாட்டுகளை வாசித்து சபையில் இருந்தவர்களை மகிழ வைத்தான்.

கடைசியில் ஹரி தேசிய கீதம் வாசிக்கத் தொடங்கியதும் எல்லோரும் எழுந்து நின்று ஜனகனமன பாடினார்கள்.

பத்து நிமிடங்களில் அரங்கம் காலியாகி விட்டது. ஹரி உள்ளே வந்தான். மேனேஜர் அவன் கையைப் பற்றி குலுக்கிவிட்டு "ஹரீ! எங்களைக் காப்பாற்றிவிட்டாய். நீ மட்டும் இல்லை என்றால் இன்னிக்கு எங்க உயிரே போய்விட்டிருக்கும்" என்றார்.

"தாங்க்ஸ். எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்." ஹரி சொன்னான்.

"இதோ கொண்டு வருகிறேன்." மேனேஜர் போய் விட்டார். உள்ளே போனதும் அவரை யாரோ பிடித்துக் கொண்டுவிட்டார்கள். ஹரி தண்ணீர் கேட்ட விஷயமே அவருக்கு மறந்து போய்விட்டது.

யார் யாரோ கூட்டமாக பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரே சத்தமும், சந்தடியுமாக இருந்தது. ஹரி இரண்டு மூன்று பேரிடம் தண்ணீர் கேட்டுப் பார்த்தான். யாரும் கொண்டு வந்து தருவதாக தெரியவில்லை. புது இடம் என்பதால் ஹரியால் தானாக போய் தேடிக் கொள்ளவும் முடியவில்லை. தாகத்தால் நாக்கு வரண்டு விட்டது.



யாரோ வேகமாக வரும் சத்தம் கேட்டது.

"ப்ளீஸ்! கொஞ்சம் தண்ணீர் கொடுக்க முடியுமா? எனக்குக் கண் தெரியாது" என்றான்.

வேகமாக வந்து கொண்டிருந்த நபர் சட்டென்று நின்று பின்னால் திரும்பி ஓடிய சத்தம் கேட்டது. ஹரி பெருமூச்சு விட்டுக்கொண்டான். தன்னுடைய தாகம் தீர வேண்டும் என்றால் இந்த ரகளையெல்லாம் குறைய வேண்டும். அது வரையில் யாரிடம் கேட்டாலும் பிரயோஜனம் இருக்காது.

ஐந்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது. அவன் இதழ்களில் படுவது போல் குளிர்ந்த நீர் இருக்கும் டம்ளரை யாரோ நீட்டினார்கள். ஹரி பின் வாங்குவதை கவனித்து அவன் வலது கையைப் பற்றி டம்ளரை பிடித்துக் கொள்ளச் செய்தார்கள்.

ஹரி அவசர அவசரமாக தண்ணீரைப் பருகினான். "அப்பாடா" என்று மூச்சு விட்டுக் கொண்டான். அந்த நபர் யாரோ ஹரி தண்ணீர் குடிக்கும் வரையில் டம்ளரை விடாமல் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

"ரொம்ப தாங்க்ஸ். கடவுள் போல் வந்து என் உயிரைக் காப்பாற்றினீங்க" என்றான்.

பதிலுக்கு கலகலவென்று சிரிப்பு சத்தம் கேட்டது.

ஹரி கூர்ந்து கேட்டான். அவன் புருவங்கள் முடிச்சேறின. "நீங்க... நீங்க..." என்றான் படபடப்புடன்.

சிரிப்பு சத்தம் அதிகரித்தது.

"கவிதா!" நம்பமுடியாதவன் போல் கேட்டான்.

"யெஸ் மிஸ்டர் ஹரி கிருஷ்ணா! கவிதாவேதான். இன்னைக்கு எதிர்பாராமல் தங்களின் தரிசன பாக்கியம் கிடைத்தது."

ஹரி சட்டென்று கவிதாவின் கையை அழுத்தமாக பற்றிக் கொண்டு ஆழமாக மூச்சை உள்ளே இழுத்துக் கொண்டான். அவனுக்கு ரொம்பப் பிடித்தமான நறுமணம் அவன் நாசியைத் தாக்கியது. கவிதா பயன்படுத்தும் பவுடரா இல்லை பர்ஃப்யூமா? எது என்று தெரியவில்லை.

"ரொம்ப கூட்டம். இன்னிக்கு நீ இவர்களுடைய கைகால்கள் உடையாமல் காப்பாற்றிவிட்டாய்" என்றாள்.

"பார்வையாளர்களில் நீயும் இருந்தாயா? எனக்குத் தெரியவே தெரியாது."

"நீ இருப்பது எனக்கும் தெரியாது. நாடகம் தொடங்கிய பத்து நிமிடங்கள் கழித்து வந்தேன்." கவிதா சொன்னாள்.

எதிர் பார்க்காமல் கவிதாவைச் சந்தித்தது ஹரிக்கு சந்தோஷமாக இருந்தது.

"உனக்கு இங்கே ஏதாவது வேலை இருக்கா?" கவிதா கேட்டாள்.

"ஊஹூம். அவர்களுடன் கிளம்பி லாட்ஜுக்கு போக வேண்டியதுதான்."

"அப்படி என்றால் என் கூட வா."

"எங்கே?"

"நான் எங்கே அழைத்துப் போகிறேனோ அங்கே. அது நரகமாகவே இருந்தாலும் சரி. வருவாயா மாட்டாயா?"

"கட்டாயம் வருகிறேன். இவர்களுடன் இருப்பதைவிட அதுவே தேவலை. இவர்களும், இவர்களுடைய பேச்சும். . . மூன்றாம் தரமான ஜோக்குகளும். ச்சீ. . . ச்சீ."

பத்து நிமிடங்கள் கழித்து மேனேஜரிடம் சொல்லிவிட்டு கவிதாவும் ஹரியும் தியேட்டரைவிட்டு வெளியே வந்தார்கள்.



கவிதா ஹரியின் கையைப் பற்றிக் கொண்டு நடக்கிறாள் என்பதை விட ஹரி அவளுடைய கையைப் பிடித்து அழைத்துச் செல்வது போல் இருந்தது. சாலையில் போக்கு வரத்து அதிகமாக இருந்தது.

"இந்த நேரத்தில் பஸ் கிடைக்குமா?" ஹரி கேட்டான்.

"பஸ் எதுக்கு? நான் கார் கொண்டு வந்திருக்கிறேன்." கவிதா கார் கதவைத் திறந்து, ஹரி உட்கார்ந்த பிறகு இந்தப் பக்கமாக வந்து டிரைவிங் இருக்கையில் அமர்ந்தாள்.

"உனக்கு டிரைவிங் தெரியுமா?" ஹரி வியப்புடன் கேட்டான்.

"எது வராது என்று கேள்" கவிதா நகைத்தாள்.

"உன்னை இங்கே சந்தித்ததை என்னால் இன்னும் நம்ப முடியவில்லை."

"நன்றாக கிள்ளி விடட்டுமா? கனவு இல்லை நினைவு என்று புரியும்."

"வேண்டாம் தாயே. கனவாகவே இருந்தாலும் பரவாயில்லை. மனசுக்கு பிடிச்சிருக்கு. அது போதும்." - ஹரியும் சிரித்தான்.

கவிதா டிரைவ் செய்துகொண்டே விடாமல் பேசிக் கொண்டிருந்தாள். நான்கு நாட்களுக்கு முன்னால் கிளாஸ் மேட் அம்புஜத்தின் கல்யாணத்திற்காக சென்னைக்கு வந்தாளாம். கல்யாணம் முடிந்துவிட்டது. இன்னும் ஒரு வாரமாவது தங்க வேண்டும் என்று அவர்கள் வீட்டில் வற்புறுத்தியதால் தங்கிவிட்டாள். அம்புஜம், அவள் கணவன், பெற்றோர்கள் எல்லோரும் சேர்ந்து திருப்பதிக்குச் சென்று இருக்கிறார்களாம். இவளையும் வரச் சொல்லி அழைத்திருக் கிறார்கள். ஆனா‍ட இன்னொரு சிநேகிதி தங்கையின்

திருமணம் இருப்பதால் தங்கிவிட்டாளாம்.

"அவர்களுடன் போகாமல் இருந்தது நல்லதாகிவிட்டது உன்னைச் சந்திக்க முடிந்தது. நீ மறுபடியும் எப்போ ஊருக்குத் திரும்பணும்?" கவிதா காரை வீட்டு வராண்டாவின் முன்னால் நிறுத்திக் கொண்டே கேட்டாள்.

"நாளை இரவு." ஹரி சொன்னான்.

"நாளைக்கேவா?" கவிதாவின் குரலில் ஏமாற்றம் வெளிப்பட்டது.

"நாளை இரவு வரையில் என்றால் இருபத்தி நாலுமணி நேரம்." ஹரி சொன்னான்.

"ஆமாம். நிமிடங்களில், வினாடிகளில் மாற்றிச் சொன்னால் இன்னும் அதிகமாக இருப்பது போல் தோன்றும்." கவிதா கிண்டல் செய்தாள்.

கவிதா ஹரியை அழைத்து வந்து கட்டிலில் அமரச் செய்தாள்.

"கவிதா! உன் சிநேகிதி வீட்டில் அவர்கள் இல்லாத நேரத்தில் நான் தங்குவது சரியாக இருக்குமா?" சந்தேகத்துடன் கேட்டான் ஹரி.

"ஏன் சரியாக இருக்காது? அம்புஜம் எனக்கு எப்படி ஒரு நல்ல சிநேகிதியோ, அதுபோல் நீயும் எனக்கு நல்ல நண்பன். அவர்கள் ரொம்ப நல்லவர்கள். தவறாக எதுவும் நினைக்க மாட்டார்கள். உன்னிடம் நிறைய பேசணும். இந்த தங்கமான வாய்ப்பை யாருக்காகவும் என்னால் நழுவ விட முடியாது. நீ உட்கார்ந்து கொள். நான் போய் சாப்பாட்டுக்காக ஏற்பாடு செய்கிறேன்." கவிதா கீழே ஓடினாள்.

ஹரியின் மனதில் ஒரு பக்கம் சந்தோஷமாகவும், இன்னொரு பக்கம் ஏதோ பாரம் அழுத்துவது போலும்



இருந்தது. தன்னுடைய விரலில் கவிதா அணிவித்திருந்த மோதிரத்தைத் தடவிப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

* * *

# 7

இரவு பத்து மணி ஆகிவிட்டது. எல்லோரும் சாப்பிட்டாகிவிட்டது. ஜெயா ஹரி சொல்லிவிட்டு போனது போல் பெரிய அண்ணாவுக்கு இரவு படுத்துக் கொள்ளும் முன் தூக்க மாத்திரையைக் கொடுத்து விழுங்கச் செய்தாள். அறையிலிருந்து ராமகிருஷ்ணன் குறட்டை விடும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. பகல் முழுவதும் ஓடி ஆடியதில் களைத்துப் போன பப்லூ மாலை ஏழு மணிக்கே தூங்கிப் போய்விட்டான். ஜெயா அவனை வலுக்கட்டாயமாக எழுப்பி நாலு பிடி ரசம் சாதம் ஊட்டிவிட்டு மறுபடியும் தூங்கச் செய்தாள்.

சாப்பாடு ஆனதுமே புருஷோத்தமன் சுருட்டு வாங்குவதற்காக கடைத் தெருவுக்குக் கிளம்பினார். சுருட்டுக் கட்டை வாங்கிக்கொண்டு அப்படியே வாய் நிறைய வெற்றிலையும், புகையிலையும் போட்டுக் கொண்டு திரும்பி வந்து படுத்துக் கொண்டார்.

துணைக்கு அவர் இருப்பதால் ஜெயாவுக்கு தைரியமாக இருந்தது. வாசற் கதவு சரியாக சாத்தியிருக்கிறதா என்று மற்றொருமுறை சரிபார்த்துவிட்டு பப்லூ பக்கத்தில் வந்து படுத்துக் கொண்டாள். அவள் மனதில் வேதனை நிரம்பியிருந்தது. அன்று அவ்வளவு வீறாப்பாக சொல்லிவிட்டுப் போன வேணூ அதற்குப் பிறகு கண்ணில் படவே இல்லை. பப்லூவை அனுப்பி வேணூவின் நண்பன் கோபாலனை வரச்

சொன்னாள். வேணு ஊரில் இல்லை என்றும், எங்கே போயிருக்கிறானோ எப்போ வருவானோ எதுவும் தெரியாது என்றும் கோபாலன் தெரிவித்தபோது ஜெயா சிலையாகி விட்டாள். புருஷோத்தமன் தாத்தா சொன்னது உண்மைதான் போலும். இந்தக் காலத்துப் பசங்களை நம்பவே கூடாது. சும்மா ஒருபேச்சுக்கு கல்யாணம் செய்து கொள்வதாக சொல்லியிருப்பானாக இருக்கும். அசல் அவனுக்கு அந்த எண்ணமே இல்லையோ என்னவோ. வேணு தன்னை ஏமாற்றியிருக்கிறான். இனி அவனைப் பற்றி நினைக்கவே கூடாது. ஜெயா மனதிலேயே முடிவு செய்து கொண்டு கண்களை மூடிக் கொண்டாள்.

"அம்மா ஜெயா!" புருஷோத்தமன் அழைக்கும் குரல் கேட்டது.

"என்ன வேண்டும் தாத்தா?" திடுக்கிட்டு எழுந்து கொண்டே கேட்டாள்.

"குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாம்மா. நெஞ்சில் ஏதோ அடைப்பது போல் இருக்கு."

"இதோ கொண்டு வருகிறேன்." ஜெயா சட்டென்று சமையல் அறைக்குச் சென்று டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

அவசர அவசரமாக தண்ணீர் பருகியவர் "முதுகில் வலிக்கிறாற் போல் இருக்கு. அமிர்தாஞ்சனம் இருந்தால் கொஞ்சம் தடவி விடுகிறாயா?" என்று சொல்லிக் கொண்டே முதுகை காண்பித்தார்.

"சரி தாத்தா." ஜெயா அமிர்தாஞ்சனம் கொண்டு வந்து புருஷோத்தமனின் முதுகில் தேய்க்கத் தொடங்கினாள்.

"ராமகிருஷ்ணன் ரகளை எதுவும் செய்யாமல் தூங்கி



விட்டான் போலிருக்கே." புருஷோத்தமன் கேட்டார்.

"தூக்க மாத்திரை கொடுத்துவிட்டேன் இல்லையா, அதான்."

"அப்படி என்றால் இனி எழுந்து கொள்ளமாட்டான் என்று சொல்லு. பப்லூ தூங்கிவிட்டானா?"

"எட்டு மணிக்கே தூங்கிவிட்டான்."

"எத்தனை நேரம் அப்படி நின்று கொண்டு இருப்பாய்? இப்படி வந்து உட்காரு."

"பரவாயில்லை தாத்தா."

"உன் கையால் அமிர்தாஞ்சனம் தேய்த்து விட்ட பிறகு வலி கொஞ்சம் குறைந்திருக்கு. பாழாய்ப் போன முதுகுப் பிடிப்பு. வயதானாலே இப்படித்தான். நீ நின்று கொண்டிருந்தால் என் மனசுக்குக் கஷ்டமாக இருக்கு" - புருஷோத்தமன் தோள்களில் கையைப் பதித்து வலுக் கட்டாயமாக உட்கார வைத்தார்.

ஜெயா வேறு வழியில்லாதவளாய் கட்டில் விளிம்பில் அமர்ந்து கொண்டாள். பகல் முழுவதும் வீட்டு வேலைகளை ஓயாமல் செய்ததில் அவளுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்தது.

புருஷோத்தமன் ஜெயா எதிர்பார்த்தது போல் "போதும். நீ போய் படுத்துக் கொள்" என்று சொல்லவில்லை. "இங்கே இல்லை அங்கே" என்று மாற்றி மாற்றி முதுகைக் காட்டிக் கொண்டிருந்தவர் திடீரென்று திரும்பி ஜெயாவை மார்போடு அணைத்துக் கொண்டார். ஒரு நிமிடம் ஜெயாவுக்கு மூச்சுக் காற்று, சுருட்டின் நெடி எல்லாமாக சேர்ந்து அவளுடைய தூக்கக் கலக்கத்தை துரத்திவிட்டன.

"ச்.. சி.. ச்சி... என்ன இது?" இரண்டு கைகளாலேயும் அவரை பலமாக தள்ளிவிட்டாள். ஆனால் புருஷோத்தமனின் கைகளில் எங்கிருந்து பலம் வந்ததோ தெரியவில்லை புள்ளிமானை வேட்டையாட வந்த புலியைப் போல் ஜெயாவின் மீது பாய்ந்தார். அவருடைய இரும்புப் பிடியிலிருந்து விடுபட முடியாமல் ஜெயா துடித்தாள்.

* * *

**அ**ரை மணி நேரம் கழித்து ஜெயா அந்த அறையிலிருந்து நடை பிணமாக, தடுமாறும் நடையுடன் தள்ளாடிக் கொண்டே வெளி வந்தாள் அந்த நிமிடம் அவளுக்கு தன் மீதும், தன் உடல் மீதும் அளவு கடந்த வெறுப்பு ஏற்பட்டது. களங்கப்பட்டுவிட்ட இந்த உடலை சுமப்பதைவிட தற்கொலை செய்து கொள்வதே மேல் என்று தோன்றியது. எதிரே இருந்த உலக்கையை எடுத்து புருஷோத்தமனின் தலையில் அடித்து கொலை செய்தால் என்ன என்று கூடத் தோன்றியது. ஆனால் இதயம் வெடித்துவிடுவது போல் அழுவதைத் தவிர அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.

பின்னால் காலடிச் சத்தம் கேட்டது.

ஜெயா திரும்பிப் பார்த்தாள். புருஷோத்தமன் பின்னால் வந்து நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் ஜெயா பத்ரகாளியாய் எழுந்து நின்று கொண்டாள். "இங்கே எதுக்காக வந்தீங்க? வீட்டில் துணையாக இருப்பேன் என்று அண்ணாவை நம்ப வைத்து. . . ." ஜெயா அழுதுகொண்டே உரத்தக் குரலில் கத்தப் போனாள்.

புருஷோத்தமன் சட்டென்று அருகில் வந்து கையால் ஜெயாவின் வாயை மூடினார். "ஜெயா! தயவு செய்து கத்தி ரகளை செய்யாதே. இந்த விஷயம் வெளியில் தெரிந்தால், ஆண்பிள்ளை . . . எனக்கு எந்த நஷ்டமும் இல்லை. உன்



வாழ்க்கைதான் சீரழிந்துவிடும். எனக்கு உன் மீது அந்த எண்ணமே இருந்தது இல்லை. அந்த பான் கடைக்காரன் புகையிலையுடன் வேறு எதையோ போட்டுவிட்டான் போலிருக்கு. அதான் என் புத்தி பிசகி விட்டது. என்னையும் அறியாமல் தவறு நடந்துவிட்டது." இரண்டு கைகளாலேயும் படபடவென்று கன்னத்தில் போட்டுக் கொண்டார். "உன் கால்களில் வேண்டுமானாலும் விழுகிறேன். செய்த தவறுக்கு நீ என்ன தீர்வு சொன்னாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்." ஜெயாவின் கைகளை பற்றிக் கொண்டார்.

ஜெயா அருவருப்புடன் அந்தக் கைகளை உதறிவிட்டாள்.

"ஜெயா! நீ தற்கொலை அது இது என்று விபரீதமாக எந்த முடிவுக்கும் வந்துவிடாதே. அப்படி எதுவும் செய்யமாட்டேன் என்று எனக்கு சத்தியம் செய்து கொடு." கையை முன்னால் நீட்டினார்.

ஜெயா அவரை வெறுப்புடன் பார்த்துக் கொண்டே ஓரடி பின்னால் வைத்தாள். "இங்கிருந்து போய்விடுங்க முதலில்."

"போய் விடுகிறேன். மறுபடியும் சொல்கிறேன். நீ என்ன சொன்னாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். உள்ளே வா." ஜெயாவின் தோற்றத்தை பார்க்கும் போது அவருக்கு பயமாக இருந்தது. உள்ளே போய்விட்டார்.

ஜெயா அதே இடத்தில் சிலையாக நின்று கொண்டிருந்தாள். பொங்கி வந்த துக்கத்தை, புடவைத்தலைப்பால் வாயைப் பொத்தி கட்டுப்படுத்தினாள். அத்தனை துக்கத்திலும் அவளுக்கு ஒரு விஷயம் மட்டும் தெளிவாக புரிந்தது. இந்த உடல் மீது எவ்வளவு வெறுப்பு ஏற்பட்டாலும் சரி. தான் செத்துப் போக முடியாது. தானும் இல்லை என்றால் இரண்டு

அண்ணன்களும் எப்படி வாழப்போகிறார்கள்? பப்லூவை யார் பார்த்துக் கொள்வார்கள்? இஷ்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த உடலை சுமந்துதான் ஆகணும்.

* * *

மற்ற நாட்களை போலவே அன்று காலையிலும் சூரியன் உதித்தான். இரவு முழுவதும் அழுது அழுது கொல்லைத் திண்ணையிலேயே ஜெயா தூங்கிப் போய்விட்டாள். பப்லூ அத்தையைத் தேடிக் கொண்டு அங்கே வந்தான்.

"அத்தை! ஏன் இங்கே படுத்திருக்கிறாய்? பால்காரன் வந்திருக்கிறான். எழுந்துகொள்." பப்லூ தோள்களை பற்றி உலுக்கிய பிறகுதான் விழிப்பு வந்தது. திடுக்கிட்டு எழுந்து கொண்டாள். நேற்று இரவு நடந்த பயங்கரமான நிகழ்ச்சி நினைவுக்கு வந்தபோது உடல் முழுவதும் நடுக்கம் பரவியது. அது கனவா இல்லை நினைவா என்ற சந்தேகமும் ஏற்பட்டது. பப்லூவை தூக்கிக் கொண்டு உள்ளே வந்தாள்.

இயந்திரகதியில் வீட்டு வேலைகளை செய்து முடித்தாள். பத்து மணி ஆகும்போது புருஷோத்தமன் "ஜெயா!" என்று அழைத்துக் கொண்டே உள்ளே வந்தார். அந்தக் குரலை கேட்கும்போது ஜெயாவுக்கு உடல்மீது கம்பளிப்பூச்சி ஊறுவது போல் இருந்தது. அவரை கண்ணால் பார்க்கவும் விரும்பாதவளாய் உள்ளே இருந்தாள்.

"பப்லூ! குடிக்கத் தண்ணீர் கொண்டு தரச் சொல்லி உங்க அத்தையிடம் சொல்லு."

"பப்லூ வீட்டில் இல்லை. விளையாடப் போயிருக்கிறான்." பிடிக்கா விட்டாலும் பதில் சொல்லவேண்டிய கட்டாயம்.

அதைக் கேட்டதும் புருஷோத்தமன் சமையல் அறைக்

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002



குள் வந்தார். அவர் கைகளில் சின்ன பெட்டி இருந்தது.

"ஜெயா! இதை எடுத்துக் கொள்." பெட்டியை அவள் முன்னால் வைத்தார்.

450929 / 6214013

"அது என்ன?" நெற்றியைச் சுளித்துக் கொண்டே கேட்டாள்.

"திறந்து பாரு. உனக்கே புரியும்."

"எனக்கு எதுவும் புரிய வேண்டியதில்லை. இனிமேல் இந்த வீட்டு வாசற்படி ஏறாமல் இருந்தால் அதுவே போதும்."

"ஜெயா! நேற்று இரவு நடந்ததை நீ இன்னும் மறக்கவில்லையா? என்னாலும் மறக்க முடியவில்லை. உன் வாழ்க்கையை அனாவசியமாக பாழடித்து விட்டேன். எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் தகும். என் சொத்தை எல்லாம் உனக்குக் கொடுத்துவிட்டு காசி ராமேஸ்வரம் என்று போய் விடலாமா என்று தோன்றுகிறது. இவை என்னுடைய முதல் மனைவியின் நகைகள். எல்லாமே உனக்காக கொண்டு வந்தேன். பணம் வேண்டுமானாலும் தருகிறேன். ஜெயா! ஆவேசப்படாமல் நான் சொல்வதை முழுவதுமாக கேட்டுக் கொள். நான் உன்னிடம் வேண்டுவதெல்லாம் ஒன்றுதான். நேற்று இரவு நடந்ததை கெட்ட கனவாக நினைத்துக்கொண்டு மறந்து விடு. வாழ்க்கை முழுவதும் நீ சந்தோஷமாக இருக்கணும். வேறு யாராவதாக இருந்தால் தன் வழியைப் பார்த்துக் கொண்டு போயிருப்பார்கள். ஆனால் நான் அப்படிப் பட்டவன் இல்லை. பொறுப்பு தெரிந்தவன். வயதில் பெரியவன். உனக்காக எது வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறேன். என் சொத்து முழுவதும் உன் பெயருக்கு எழுதி வைக்கட்டுமா? இல்லை உன்னையே கல்யாணம் செய்து கொண்டு உன் இரண்டு அண்ணன்களையும், பப்லூவையும் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றச் சொல்கிறாயா? எது செய்யச்

சொன்னாலும் எனக்கு சம்மதம்தான். அவசரமே இல்லை ஆவேசம் குறைந்த பிறகு நிதானமாக யோசித்து முடிவு செய். மாலையில் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

ஜெயா திகைத்துப் போனவளாக நின்றுவிட்டாள். எதிரே இருந்த நகைப் பெட்டி அவளைப் பார்த்து பழிப்பது போல் இருந்தது. நடந்ததை நினைத்து புருஷோத்தமன் வருத்தப் படுகிறார் என்றும், அவர் குரலில் தென்பட்ட பச்சாத்தாபம் உண்மையானது என்றும் அப்பாவி ஜெயா நம்பிவிட்டாள்.

* * *

"இன்னிக்காவது எனக்கு விடை கொடுக்கிறாயா?" ஹரி முறுவலுடன் கேட்டான்.

மாலை வேளையில் கடற்கரையில் கவிதா அவனுக்கு எதிரே அமர்ந்து கொண்டு மணலில் வீடு கட்டிக் கொண்டிருந்தாள்.

"ஹரீ! உன்னிடம் ஒன்று கேட்கட்டுமா?"

"பேஷாக் கேளு."

"என்னுடைய சொந்த விஷயங்களை எல்லாம் உன்னிடம் சொன்னேன் என்பதற்காக என்னை தாழ்வாக நினைக்க மாட்டாயே?" தாழ்ந்த குரலில் கேட்டாள்.

"என்ன பேச்சு இது கவிதா? இதுதானா நீ என்னைப் புரிந்து கொண்ட லட்சணம்?" ஹரியின் குரலில் நிஷ்டூரம் வெளிப்பட்டது.

"என்ன செய்வது ஹரி? எனக்கு என்று யாருமே இல்லாத தனிமை. இருக்கும் ஒரே ஒரு அண்ணாவும் வெளிநாட்டில் இருக்கிறான். என்னுடைய சுபாவமே அப்படித்தானோ



இல்லை பிராப்தம்தான் இல்லையோ, மனம் விட்டுப் பேசும் அளவுக்கு எனக்கு எந்த சிநேகிதியும் இல்லை."

"உன் கவனத்தை முழுவதுமாக படிப்பில் செலுத்து கவிதா. ஓரளவுக்காவது மன அமைதி கிடைக்கும்."

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது."

பேச வார்த்தைகளே இல்லாதது போல் இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டார்கள்.

"என்ன யோசிக்கிறாய் கவிதா?" ஹரி மென்மையான குரலில் கேட்டான்.

"எதைப்பற்றியும் யோசிக்கவில்லை. மாலை வேளையில் சிவப்பாக தென்படும் வானத்தை, கடல் அலைகளின் கொந்தளிப்பை பார்த்துக் கொண்டிருக்கிறேன். எவ்வளவு அழகான காட்சி தெரியுமா? உன்னால் பார்க்க முடிந்தால் வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டாய்."

"இனிமேலும் மறக்கமாட்டேன். நீதான் விவரமாக வர்ணித்தாய் இல்லையா? நன்றாக நினைவு இருக்கும்."

"நேரமாகி விட்டது. இனி கிளம்புவோமா?"

"சரி. கிளம்புவோம்." ஹரியும் எழுந்து கொண்டான்.

கவிதா ஹரியின் கையைப் பற்றிக்கொண்டாள். இருவரும் மணலில் நடக்கத் தொடங்கினார்கள். மாலை நேரத்தில் உடலை இதமாகத் தழுவும் கடற்காற்று, ஹோவென்று கேட்கும் அலைகளின் ஓசை, கவிதாவின் அருகாமையில் வீசும் நறுமணம். . . எல்லாமாக சேர்ந்து ஹரியின் மனதில் ஆழமாக பதிந்து போய் விட்டன.

"ஹரீ! போனதுமே திருநாகம் மாமியிடம் பேசிவிட்டு எனக்குக் கடிதம் எழுது. தனியாக போகிறாய், பணம் ஜாக்கிரதை."

"கவனமாக இருப்பேன் கவிதா. நீ செய்யும் இந்த உதவியை வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டேன். மாமியிடம் பேசி முகூர்த்தம் குறித்ததும், கடிதம் எழுதுகிறேன். கட்டாயம் வருவாய் இல்லையா?"

"வருவது மட்டுமா? கல்யாண வேலை எல்லாம் நானே பார்த்துக் கொள்கிறேன்."

"உனக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்று தெரியவில்லை."

"இன்னொரு தடவை அப்படிச் சொன்னாய் என்றால் உன்னை இங்கேயே விட்டுவிட்டுப் போய்விடுவேன்." கவிதா குரலில் பொய்க் கோபம் காட்டியபடி ஹரியின் கையை விட்டுவிட்டாள்.

"வேண்டாம் வேண்டாம். அப்படிச் சொல்லாதே தாயே." ஹரி சிரித்தான்.

"இல்லை என்றால் திரும்பத் திரும்ப அதே பேச்சு பேசுவானேன்? நன்றி சொல்லும் அளவுக்கு பெரிய காரியம் நான் என்ன செய்து விட்டேன்? என்னிடம் இருக்கும் பணத்தை ஒரு தேவைக்காக உனக்குக் கடனாக தருகிறேன். அவ்வளவுதானே!"

"இனிமேல் அப்படிப் பேசமாட்டேன். சரிதானே?" ஒப்புக் கொள்வது போல் சொன்னான்.

"அப்படி வா வழிக்கு. இப்படிப் பேசினால்தான் எனக்குப் பிடிக்கும்."

"உனக்குப் பிடித்தாற்போல் பேசுவது மட்டுமே இல்லை கவிதா. உனக்குப் பிடித்த காரியங்களை மட்டுமே செய்யணும்னு தோன்றுகிறது."



இருவரும் கார் அருகில் வந்தார்கள். ஹரி தானாக போய் கதவைத் திறந்து கொண்டு உள்ளே உட்கார்ந்து கொண்டான். ஒரு தடவை சொல்லித் தந்தால் போதும் மனதில் நன்றாக பதிய வைத்துக் கொள்வான். அவனுடைய நினைவாற்றல் ரொம்ப அபூர்வம்.

சென்னையில் இந்த நான்கு நாட்களும் நாலு நிமிடங்கள் போல் வேகமாக கழிந்துவிட்டன. நாடகக் கம்பெனிக்காரர்கள் அன்னிக்கே கிளம்பிப் போய்விட்டாலும் கவிதா ஹரியை வற்புறுத்தி தங்க வைத்தாள். வரதட்சணை கொடுக்க முடியாமல் ஜெயாவின் திருமணம் தடைப்பட்டுவிட்டது என்று ஹரி மூலமாக கேள்விப்பட்டதும் அந்தப் பணத்தை தான் தருவதாகவும், உடனே திருமணத்தை நிச்சயம் செய்யச் சொல்லியும் சொன்னாள்.

கவிதாவிடம் கடன் பெற்றுக் கொள்வது சுலபம்தான். ஆனால் திருப்பிக் கொடுப்பது ரொம்ப கஷ்டம் என்று ஹரிக்குத் தெரியும். அவனுடைய தயக்கத்தை கவிதா பொருட்படுத்தவில்லை. கையோடு பணத்தை வித்ட்ரா செய்து ஹரியிடம் கொடுத்தாள். இந்த விஷயம் தனக்கும் ஹரிக்கும் தவிர வேறு யாருக்கும் தெரிய வேண்டியதில்லை என்று ஹரியிடம் சத்தியம் வாங்கிக் கொண்டாள்.

மனதிலேயே கவிதாவுக்கு நன்றி தெரிவித்தபடி, தங்கையின் கல்யாணத்தைப் பற்றி இனி கவலைப்பட வேண்டியதில்லை என்ற நிம்மதியுடன் ஹரி ரயிலில் ஏறினான்.

* * *

**கா**லை பத்து மணிக்கு ஹரியின் வீட்டிலிருந்து பெரிதாக ரகளை நடப்பது போல் கூச்சல் போடும் சத்தம் கேட்டதும் அக்கம் பக்கத்து வீடுகளில் இருப்பவர்கள் தங்களுடைய வேலைகளை விட்டுவிட்டு எட்டிப் பார்க்கத் தொடங்கினார்கள்.

ஒரு நிமிடம் முன்னால் ஹரி புருஷோத்தமனின் கழுத்தை நெறித்து கொலை செய்யும் அளவுக்குப் போய் விட்டான்.

"அண்ணா! அண்ணா!!" ஜெயா உள்ளே இருந்து ஓடி வந்தாள். அவள் மட்டும் விலக்கியிருக்காவிட்டால் அந்த நிமிடம் ஹரியின் கையில் புருஷோத்தமனின் உயிர் போயிருக்கும்.

"அண்ணா! இது என் விருப்பத்தின்படி நடந்த கல்யாணம் தான். எதற்காக ஆவேசப்படுகிறாய்? என்னுடைய திருமணத்திற்காகத்தானே இரவும் பகலும் கவலைப்பட்டுக் கொண்டு இருந்தாய். நீ நிம்மதியாக இருக்க வேண்டுமென்று தான் இந்தக் காரியத்தைச் செய்தேன்." இரண்டு கைகளிலும் முகத்தை மூடிக் கொண்டு ஜெயா ஹோவென்று கதறினாள்.

ஜெயா விலக்கிவிட்டதில் தொலைவில் போய் விழுந்த புருஷோத்தமன் தப்பித்தேன் பிழைத்தேன் என்று நினைத்துக் கொண்டே முதுகை நீவி விட்டபடி அங்கே இருந்த கட்டிலில் அமர்ந்து கொண்டார். ஹரி செய்த ரகளையைக் கண்டு அவர் கொஞ்சம் கூட பயப்படவில்லை. நேற்று காலையில் ஜெயாவை டாக்ஸியில் கோவிலுக்கு அழைத்துச் சென்று அவள் கழுத்தில் தாலியைக் கட்டிய அந்த நிமிடம் முதல் அவர் வெட்கம், மானம் போன்றவற்றை விட்டுவிட்டார். ஜெயாவை தான் திருமணம் செய்து கொண்ட செய்தியைக் கேட்டதும் எல்லோரும் தன்னை எப்படி பார்ப்பார்களோ அவருக்குத் தெரியாதது இல்லை. ஊராரின் ஏளனப் பார்வைகளுக்கும், பேச்சுகளுக்கும் பயப்பட்டால் தங்கப் பதுமை போன்ற ஜெயா தனக்குக் கிடைத்திருப்பாளா?

அன்று இரவு எதிர்பாராமல் ஜெயாவிடம் கிடைத்த அனுபவம் அவருடைய நரம்புகளை முறுக்கேற்றியது. ஏதோ மயக்கத்தில் தவறு செய்துவிட்டது போல் ஜெயாவிடம்



மன்னிப்பு கேட்டுக் கொண்டார். பச்சாத்தாபப்படுவது போல் நடித்தார். ஜெயாவுக்கு தன் மீது நம்பிக்கை ஏற்படுவதற்காக முதல் மனைவியின் நகைகளை எல்லாம் கொண்டு வந்து குவித்தார். ஜெயா அந்த நகைகளை ஏறெடுத்துக் கூடப் பார்க்கமாட்டாள் என்று அவருக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் சும்மா ஒரு பேச்சுக்கு அவளுக்காக தான் எது வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருப்பதாக சொன்னதை ஜெயா சீரியஸாக எடுத்துக் கொள்வாள் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை.

அன்று மாலை புருஷோத்தமன் மறுபடியும் வந்தபோது "நேற்று இரவு நடந்ததற்கு உண்மையிலேயே வருத்தப் படறீங்களா?" என்று கேட்டாள்.

"நீ இன்னும் என் பேச்சை நம்பவில்லை. அப்படித்தானே." நொந்து கொள்வது போல் நடித்தார் புருஷோத்தமன். ஜெயாவின் கண்களில் ஒரு நிமிடம் மின்னல் போல் தென்பட்டு மறைந்த பழி உணர்ச்சியை அவர் கவனிக்கவில்லை.

"அப்படி என்றால் என் இரண்டு அண்ணன்களையும் இனிமேல் நீங்கதான் காப்பாற்ற வேண்டும். என் வாழ்க்கை எப்படியும் நாசமாகிவிட்டது. நம் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்" ஜெயா சொன்னாள்.

புருஷோத்தமன் வாயைப் பிளந்தார்.

ஜெயா பொங்கி வந்த கண்ணீரை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டாள். "உண்மையாகத்தான் சொல்கிறேன். நேற்று நடந்த நிகழ்ச்சிக்கு நிஜமாகவே வருத்தப்படுவதாக இருந்தால் உடனே நம் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். ஹரி அண்ணா ஊரிலிருந்து வருவதற்கு முன்பே இந்தத் திருமணம் முடிந்து விட வேண்டும்." வேகமாக மொழிந்து விட்டு ஜெயா உள்ளே போய்விட்டாள்.

புருஷோத்தமனுக்கு வாயடைத்து போய் விட்டது 'பாவம் ஜெயா! எவ்வளவு அப்பாவியாக இருக்கிறாள்' என்று அந்த நிமிடம் அவள் மீது இரக்கம் கூட தோன்றியது. ஆனால் அது ஒரு நிமிடம் மட்டும்தான். அடுத்த நிமிடம் அவருடைய உள்ளமும், உடலும் துள்ளிக் குதித்தன. மறுபடியும் இளமை திரும்பிவிட்டது போல் உற்சாகம் பொங்கியது. மறுபடியும் யோசித்துப் பார்த்தபோது இது ஒன்றும் நடக்கக் கூடாத விஷயமாக தோன்றவில்லை. நடுவயது கடந்தவன் பருவத்தில் இருக்கும் பெண்ணை மணம் புரிவது இந்த உலகில் புதிய விஷயம் ஒன்றுமில்லை. வீட்டு நிலைமை சரியாக இல்லாமல், பொருளாதார ரீதியாக நலிந்து போயிருக்கும் குடும்பங்களில் பெற்றோர்கள் தாமே சுயமாக மகளை வயதானவனுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பது வழக்கம்தானே? மிஞ்சிப் போனால் நான்கு நாட்கள் எல்லோரும் சிரிப்பார்கள். சிரித்துவிட்டுப் போகட்டுமே. போகப் போக மக்கள் இந்த விஷயத்தை மறந்து போய்விடுவார்கள். இந்த உலகில் மானாபிமானத்தைப் பார்த்தால் மனதிற்குப் பிடித்த மாதிரி வாழ முடியாது.

ஹரி ஜெயாவின் அருகில் வந்தான். தங்கையின் தோளைச் சுற்றிலும் கையைப் போட்டு அருகில் இழுத்துக் கொண்டான். ஆபத்தில் சிக்கிக் கொண்ட குழந்தையை அரவணைக்கும் தாயைப் போல் அன்புடன் அவள் தலையை வருடிவிட்டான்.

"ஜெயா! அழாதேம்மா. நீயாக விரும்பிப் பண்ணிக் கொண்டாயோ 'இல்லை இந்தக் கிழட்டுக் குரங்கு உன்னை ஏமாற்றி வசப்படுத்திக் கொண்டதோ புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு நான் ஒன்றும் முட்டாள் இல்லை. இந்தக் கல்யாணம் உன் விருப்பத்தின்படி நடந்திருந்தால் நான் இருக்கும் போதே நடந்திருக்கும். நான் இல்லாத நேரமாக



பார்த்து மாய வார்த்தைகள் பேசி உன்னை இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்கச் செய்துவிட்டான்." சொல்லும் போதே ஹரிக்கு ஆவேசம் பொங்கி வந்தது. புருஷோத்தமனை கண்டந்துண்டமாக வெட்டிப் போட்டால் ஒழிய ஆத்திரம் அடங்காதுபோல் இருந்தது.

கட்டில் மீது அமர்ந்திருந்த புருஷோத்தமனுக்கு, கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கொண்டதும் நெஞ்சு படபடப்பு குறைந்து மூச்சு சீராக வந்தது. ஹரி தன்னை கிழட்டுக் குரங்கு என்று சொன்னதும் ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. அதிலும் நேற்று தான் திருமணம் செய்துகொண்ட இளம் மனைவியின் முன்னால் அந்தச் சொல்லைக் கேட்க நேர்ந்தது அவமானமாக இருந்தது. கட்டிலை விட்டு வேகமாக எழுந்து கொண்டார்.

"இதோ பாரு. முதலில் மரியாதையாக பேசக் கற்றுக் கொள்."

"உனக்கு ஒரு மரியாதை ஒரு கேடா? உன்னைக் கொலை செய்தால் தவிர என் கோபம் அடங்காது. நீயும் ஒரு மனிதனா? பேத்தி வயதில் இருப்பவளை தாரமாக்க உனக்கு எப்படி மனசு வந்தது? காட்டுக்குப் போக வேண்டிய வயதில் உனக்குக் கல்யாணம் தேவைப்பட்டதா? நாலுபேரை அழைத்து நியாயம் கேட்காமல் விடமாட்டேன்."

"வாய்க்கு வந்தபடி பேசாதே. உன் தங்கையை நான் ஏமாற்றினேனா? கல்யாணம் செய்து கொள்வதாக சொல்லி ஏமாற்றிவிட்டு போன அந்த வேணுப் பயல் உன் கண்ணுக்கு நல்லவனாக தென்படுகிறான் போலும். பாவம்! ஏழைப் பட்டவர்கள், கஷ்டத்தில் இருக்கிறார்களே என்று கருணை காட்டியதற்கு நீ எனக்கு நன்றி காட்டும் லட்சணம் இதுதானா? நாலு பேரை அழைத்து நியாயம் கேட்கப் போகிறாயா?

தாராளமாக கூப்பிடு. எனக்கென்ன பயம்? நானும் சொல்லுவேன். 'எங்களுக்கு யாருமே இல்லை. பெரிய அண்ணன் பைத்தியமாகிவிட்டான். சின்னவன் கண்ணில்லாதவன். நீங்கதான் ஒரு வழிகாட்டணும். உங்கள் காலடியில் இடம் கொடுத்தால் போதும்' என்று உன் தங்கை என் கால்களில் விழாத குறையாக கெஞ்சினாள். அதான் கருணை காட்டினேன் என்று சொல்லுவேன். தன் விருப்பத்தின் பேரில்தான் இந்தக் கல்யாணம் நடந்தது என்று உன் தங்கையே சொல்லும்போது அதை நம்பாமல் என்னையே குறை சொல்கிறாயா?"

"என்ன ஜெயா! இது உண்மைதானா?" ஹரி தங்கையின் பக்கம் திரும்பினான்.

ஏற்கனவே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடமாடிக் கொண்டிருந்த ஜெயா இந்த ரகளையில் மேலும் தளர்ந்து போய்விட்டாள். "எல்லாமே உண்மைதான் அண்ணா! இனி இந்தப் பேச்சை இத்துடன் விட்டுவிடு. என் துரதிர்ஷ்டத்தை யாராலும் மாற்ற முடியாது. நீ என்ன செய்தாலும் நடந்து முடிந்துவிட்ட திருமணம் பொய்யாகி விடாது." வேண்டுவது போல் அழுது கொண்டே சொன்னாள்.

ஹரி சிலையாகி விட்டான். "ஜெயா! என்ன காரியம் செய்து விட்டாய்? அவ்வளவு தாங்கிக் கொள்ள முடியாத கஷ்டம் என்ன வந்து விட்டது நமக்கு? உனக்குக் கல்யாணம் செய்ய வேண்டும் என்று நினைத்தேனே தவிர என்றைக்காவது உன்னை பாரமாக நினைத்தேனா? எவ்வளவு அப்பாவியாக இருக்கிறாய்? எச்சில் கையால் காக்காவை கூட விரட்டாத இந்த ஆள் நம் குடும்ப பாரத்தை ஏற்றுக் கொள்ளப் போகிறானாமா? அப்படியே வாழ முடியாது என்ற நிலைமை வந்து விட்டால் தலா ஒரு துளி விஷம் குடித்து உயிரை



மாய்த்துக் கொள்ள மாட்டோமா? உன் வாழ்க்கையை இப்படி நரகமாக பார்ப்பதைவிட அதுவே எனக்கு சந்தோஷமாக இருந்திருக்கும். அண்ணி இறந்து போன அன்று கூட எனக்கு இவ்வளவு வேதனை ஏற்பட்டதில்லை," ஹரியின் குரலில் வேதனையும், வருத்தமும் இழையோடின.

* * *

# 8

ஏறத்தாழ ஒரு மாதம் வரையிலும் ஜெயா, புருஷோத்தமனின் திருமணத்தைப் பற்றி அந்தத் தெருவில் கதை கதையாக பேசிக் கொண்டிருந்தார்கள். "புருஷோத்தமனுக்கு கேடு காலம் என்ன வந்தது?" என்று சிலர் விமரிசனம் செய்தால், இன்னும் சிலர் "அவரைக் குற்றம் சொல்வானேன்? அந்தப் பெண்ணின் விருப்பத்தின் பேரில் தான் இந்தக் கல்யாணம் நடந்ததாக சொல்கிறார்களே. இந்தக் காலத்து பெண்களே இப்படித்தான்! பணம் இருந்தால் போதும். கிழவனாக இருந்தாலும் கழுத்தை நீட்டத் தயாராக இருப்பார்கள். சொத்துக்கு ஆசைப்பட்டு அவரை மயக்கி விட்டிருப்பாள்" என்று ஜெயாவை வாய்க்கு வந்தபடி ஏசினார்கள்.

இந்தத் திருமணம் நடந்ததில் மிகவும் சந்தோஷப் பட்டவர்களில் முதலாவது ஆள் திருநாகம் மாமிதான். அன்னிக்கு சண்டை போட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியே போய்விட்ட மகன் இனி எப்பொழுது திரும்பி வந்தாலும் கவலை இல்லை என்ற நிம்மதி ஏற்பட்டது.

புருஷோத்தமன் தன் வீட்டில் குடியிருந்தவர்களை காலி செய்ய வைத்து தான் அந்த வீட்டில் குடியேறினார். வீட்டுக்கு

புதுசாக பெயிண்ட் அடிக்கச் செய்தார். வங்கி லாக்கரிலிருந்து எல்லா நகைகளையும் எடுத்து வந்து ஜெயாவிடம் கொடுத்தார். திருமணம் முடிந்து ஒரு மாதம் ஆன பிறகும் ஜெயா குடித்தனத்திற்கு வரவில்லை. இந்த விஷயமாக புருஷோத்தமன் தினமும் ஹரியுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். ஜெயா இஷ்டப்பட்டால் அனுப்பி வைப்பதற்கு தனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்று ஹரி சொல்லி விட்டான். இரண்டு அண்ணன்களும், பப்லூவும் வந்தால் தவிர வரமாட்டேன் என்று ஜெயா பிடிவாதம் பிடித்தாள். புருஷோத்தமன் வீட்டுக்கு எல்லோருமாக போய் இருப்பதில் ஹரிக்குக் கொஞ்சம் கூட விருப்பம் இல்லை.

புருஷோத்தமன் நான்கு பெரிய மனிதர்களை அழைத்து வந்து பேச்சு வார்த்தை நடத்தினார். தன் கழுத்தில் ஏதோ ஒரு விதமாக மஞ்சள் கயிறு விழுந்துவிட்டது. அது போதும் என்று ஜெயா நினைத்தாள். கணவனுடன் குடித்தனம் செய்யணும் என்றோ, மற்ற பெண்களை போல் நகையும், பட்டுப்புடவையுமாக வளைய வரணும் என்றோ அவள் ஆசைப்படவில்லை. அது போன்ற எண்ணங்கள் அவள் மனதிலேயே இருக்கவில்லை. ஆனால் புருஷோத்தமன் மனைவி மீது தனக்கு இருக்கும் உரிமைகளை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. தினமும் வந்து ஹரியை, ஜெயாவை வசைபாடிவிட்டுப் போவார்.

"விரும்பித்தானே அவரைப் பண்ணிக் கொண்டாய். அவருடைய வீட்டுக்குப் போவதுதான் சரி." ஹரி தங்கையிடம் சொன்னான்.

"நான் அந்த எண்ணத்தில் அவரைத் திருமணம் செய்து கொள்ளவில்லை. இந்தத் திருமணம் நடந்தால் நாம் எல்லோரும் ஒரே இடத்தில் இருக்கணும். வாழ்நாள் முழுவதும்



நம்மைக் காப்பாற்றும் பொறுப்பு அவருடையதுதான். அந்த விஷயத்தை ஏற்கனவே தாத்தாவிடம் தெளிவாக சொல்லி விட்டேன்." ஜெயா தீர்மானமாக சொன்னாள்.

ஹரிக்கு வேறு வழியில்லாமல் போய் விட்டது. ஜெயாவின் திருப்திக்காக ஓரிரு மாதங்களாவது புருஷோத்தமன் வீட்டில் இருந்தாக வேண்டும். பிறகு வேறு வழி யோசிக்கலாம். எல்லோரும் சேர்ந்து புருஷோத்தமன் வீட்டுக்குப் போவதாக முடிவு செய்யப்பட்டது.

ஜெயாவை வீட்டுக்கு அழைத்துப் போகும் போது புருஷோத்தமன் செய்த ஆர்ப்பாட்டம் கொஞ்சநஞ்சமில்லை. பூக்களால் அலங்கரிக்கப்பட்ட டாக்ஸியைக் கொண்டு வந்தார். ஊர்வலத்திற்கு முன்னால் பாண்ட் மேளத்திற்கு ஏற்பாடு செய்தார். கிழவரின் உற்சாகத்தைப் பார்த்து ஊர் மக்கள் மறைவில் நக்கலாக சிரித்தார்கள். ஊர்வலத்தின்போது சுற்றி இருப்பவர்களின் கிண்டல் பேச்சுக்கள் ஹரியின் காதுகளில் விழாமல் இல்லை. பற்களைக் கடித்துக் கொண்டு கோபத்தையும், ஆத்திரத்தையும் அடக்கிக் கொண்டான். கசாப்புக் கடைக்கு அழைத்துப் போகும் ஆடு போல் ஜெயா தலைகுனிந்து மௌனமாக இருந்தாள்.

புருஷோத்தமனின் வீட்டை அடைந்ததும் ஜெயா தன்னையும் அறியாமல் பெருமூச்சு விட்டுக் கொண்டாள். புருஷோத்தமன் ரொம்ப பெருமையுடன் தங்களுடைய வீட்டை சுற்றி காண்பிக்கத் தொடங்கினார். ஹரிக்கும், ராமகிருஷ்ணனுக்கும் எந்த அறை வசதியாக இருக்குமோ என்று ஜெயா யோசித்துக் கொண்டிருந்தாள்.

அந்த வீட்டில் எல்லாமே இருந்தன. எதற்கும் குறைவு இல்லை. பகல் முழுவதும் அண்ணன்களுக்கு வேண்டியதை பார்த்துப் பார்த்துச் செய்யும்போது ஜெயாவுக்கு திருப்தியாக

இருந்தது. ஆனால் இரவு நேரத்தில் புருஷோத்தமன் காட்டும் அன்பின் தொல்லை தாங்க முடியாமல் நரகத்தில் இருப்பது போல் புழுவாக துடித்து வந்தாள்.

ஜெயா குடித்தனத்திற்கு வந்து இன்னும் ஒரு வாரம் கூட ஆகவில்லை.

அன்று மாலை வீட்டு வாசலில் ஜட்கா வண்டி ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து பாரித்த உடல் கொண்ட பெண்மணி ஒருத்தியும், அவளுடன் மூன்று குழந்தைகளும் இறங்கினார்கள்.

"வாங்க. யார் வேண்டும் உங்களுக்கு?" புதிதாக இல்லத்தரசியின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஜெயா வாசலுக்கு வந்து நயமான குரலில் விசாரித்தாள்.

புருஷோத்தமன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்று தெரிந்த பிறகு நிறைய பேர் ஏதாவது ஒரு சாக்கு வைத்துக் கொண்டு வேடிக்கை பார்க்க வந்தார்கள். ஜெயா முடிந்த வரையில் இயல்பாக பேசி அவர்களை உபசரித்து வந்தாள். ஜட்கா வண்டியிலிருந்து இறங்கிய அந்த மாது ஜெயாவை ஏற இறங்கப் பார்த்தாள். அது போன்ற பார்வைகளுக்கு ஜெயா ஏற்கனவே பழகியிருந்தாள். 'நீ தானா அது' என்று உறுதிப்படுத்திக் கொள்ளும் பார்வைகள்.

"வீட்டில் அவர் இல்லையா?" அதிகாரம் கலந்த குரலில் கேட்டாள் அந்த அம்மாள்.

"இல்லை. கடைத் தெருவுக்குப் போயிருக்கிறார் வருகிற நேரம்தான்."

வண்டிக்காரன் பெட்டிகளைக் கொண்டு வந்து உள்ளே வைத்தான்.

"வண்டிக்காரனுக்குக் கூலி கொடுத்து அனுப்பிவிடு."



ஜெயாவிடம் சொல்லிவிட்டு "டேய் கண்ணா . . . குட்டீ . . லக்ஷ்மீ. உள்ளே வாங்க" குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு உரிமையுடன் வீட்டுக்குள் நுழைந்தாள்.

ஜெயா உள்ளேயிருந்து பணம் கொண்டு வந்து வண்டிக்காரனிடம் கொடுத்து அனுப்பிவிட்டாள். 'இந்த அம்மாள் யாராக இருக்கும்?' என்று யோசித்தபடி வாசற்படியிலேயே ஒரு நிமிடம் நின்று விட்டாள்.

ஜெயா உள்ளே வந்ததும் "அவர் இல்லையா?" மறுபடியும் அந்த அம்மாள் கேட்டாள்.

"தாத்தாவைத்தானே கேட்கிறீங்க. கடைத் தெருவுக்குப் போயிருக்கிறார்." ஜெயா பொறுமையுடன் பதில் சொன்னாள்.

"தாத்தாவா!" வியப்புடன் பார்த்தாள் அந்த அம்மாள். பொங்கி வந்த சிரிப்பை அடக்குவது போல் இதழ்களை இறுக்கினாள். வயதுக்கு பொருத்தம் இல்லாத வகையில் மை தீட்டியிருந்த அந்தக் கண்கள் ஏதோ அதிசயத்தைப் பார்த்து விட்டது போல் அகலமாக விரிந்தன.

"கிழவரின் மூளையைக் கலங்கச் செய்த பேத்தி நீதானா?" ஜெயாவை தலைமுதல் கால் வரையில் ஏற இறங்கப் பார்த்தாள்.

இந்த உலகில் செடி கொடிகளுக்கு மட்டுமே அல்லாமல், மனிதர்களின் பார்வைக்கும் முட்கள் இருக்கும் என்று ஜெயாவுக்கு முதல் முறையாக புரிந்தது.

"ஆகட்டும். எல்லாம் விவரமாக பிறகு பேசிக் கொள்ளலாம். முதலில் குழந்தைகளுக்கு சாப்பிட ஏதாவது இருக்கா பாரு. காலையில் ஒரு பிடி சாப்பிட்டது. பாழாய் போன ரயில் நாலு மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தது. முதலில் குளித்தால்தான் சரியாக இருக்கும்." சொல்லிக் கொண்டே அந்த அம்மாள் கொண்டை ஊசிகளை எடுத்து

விட்டு தலைமுடியைப் பிரித்தாள். கொண்டை ஊசிகளுடன் சவுரியையும் எடுத்து பக்கத்தில் வைத்துக் கொண்டே "வேலைக்காரி இருந்தால் வெந்நீர் போடச் சொல்லு" என்றாள்.

அந்த அம்மாளின் பேச்சு, கேள்வி கேட்கும் தோரணை எல்லாம் பார்த்துவிட்டு புருஷோத்தமனுக்கு நெருங்கிய உறவாக இருக்கும் என்று ஜெயா நினைத்தாள்.

ஜெயா சமையல் அறைக்குள் சென்று புருஷோத்தமன் வாங்கி வைத்திருந்த ஸ்வீட் பாக்கெட்டை கொண்டு வந்து அந்த அம்மாளிடம் தந்தாள். அதைப் பார்த்ததும் குழந்தைகள் காணாததைக் கண்டது போல் "அம்மா! எனக்கு. . . எனக்கு" என்று கைகளை நீட்டிக் கொண்டே மேலே விழுந்தார்கள்.

அந்த அம்மாள் தலா ஒரு மைசூர் பாக்கை கொடுத்து விட்டு தானும் வாயில் போட்டுக் கொண்டாள். ஜெயாவைப் பார்த்துவிட்டு "நான் யாரென்று தெரியுமா?" என்று கேட்டாள்.

தெரியாது என்பது போல் ஜெயா தலையை அசைத்தாள்.

"உங்க தாத்தாவுக்கு ரொம்ப வேண்டியவள். உன்னைவிட முன்னாடி அவருக்கு பேத்தியாக இருந்தவள்" என்றாள்.

ஜெயாவுக்கு அந்தப் பேச்சில் இருந்த சிலேடை புரியவில்லை. இருந்தாலும் வெறுமே தலையை அசைத்துவிட்டு உள்ளே போய் விட்டாள்.

கடைத்தெருவிலிருந்து கூடை நிறைய பழங்கள், மல்லிகைப்பூ பொட்டலத்துடன் உற்சாகமாக உள்ளே நுழைந்த புருஷோத்தமன், ஹால் சோபாவில் கொத்தமல்லி கட்டு போல் இருந்த தலைமுடியை நுனிமுடிச்சு போட்டுக் கொண்டு, சாவகாசமாக சவுரியின் சிடுக்கை எடுத்துக் கொண்டிருந்த பெண்மணியைப் பார்த்ததும் திடுக்கிட்டார்.



"காமாட்சி! நீயா! எப்போ வந்தாய்?" வலிந்த சிரிப்பை உதிர்த்துக் கொண்டே கேட்டார்.

"இப்பொழுதுதான்." அந்த அம்மாளின் பார்வையில் கத்தியின் கூர்மை இருந்தது.

"கிளம்பி வருவதாக ஒரு கார்டு போட்டிருந்தால் ஸ்டேஷனுக்கு வந்திருப்பேன் இல்லையா?"

"நீங்க செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் என்கிட்டே சொல்லிவிட்டுத்தான் செய்யறீங்களா?"

புருஷோத்தமன் பதில் சொல்லவில்லை. அதற்குள் குழந்தைகள் இனிப்புப் பாக்கெட்டை காலி செய்து விட்டார்கள். அவர்களுடைய பார்வை புருஷோத்தமன் கொண்டு வந்த பழங்கள் மீது விழுந்தது. பாய்ந்து வந்து தங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு சாப்பிடத் தொடங்கினார்கள். பரக்கா வெட்டித்தனமாக சாப்பிட்டுக் கொண்டிருந்த குழந்தைகளைப் பார்க்கும்போது புருஷோத்தமனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ஆளுக்கு கன்னத்தில் ஒன்று கொடுத்தால் என்ன என்று தோன்றியது. எப்படியோ கட்டுப் படுத்திக் கொண்டார்.

குட்டீ என்று அழைக்கப்பட்ட சிறுமி ஒரு ஆப்பிளை கடித்துவிட்டு "அம்மா! ரொம்ப இனிப்பாக இருக்கு" என்று சொல்லிக் கொண்டே காமாட்சியிடம் ஓடினாள்.

"அப்படியா? எங்கே பார்க்கலாம்?" குட்டியின் கையிலிருந்த ஆப்பிளை கடித்துச் சாப்பிட்டாள். "ஆமாம். ரொம்ப இனிப்பாக இருக்கு" என்று சொல்லிவிட்டு பழத்தை முழுவதுமாக தானே சாப்பிட்டுவிட்டாள்.

அந்தக் காட்சியை பார்க்கமுடியாதவர் போல் புருஷோத்தமன் கூடையை எடுத்துக் கொண்டு உள்ளே போய்விட்டார்.

ஜெயா சமையல் அறையில் ஏதோ வேலையாக இருந்தாள்.

புருஷோத்தமன் ஜெயாவின் அருகில் சென்றார். "ஜெயா! அந்த அம்மாள் எனக்கு என்ன உறவு என்று உனக்குத் தெரியுமா?" தாழ்ந்த குரலில் கேட்டார்.

தெரியாது என்பது போல் பார்த்தாள் ஜெயா. புருஷோத்தமனின் முகத்தில் 'அப்பாடா' என்ற நிம்மதி தென்பட்டது.

"அந்த அம்மாளின் பெயர் காமாட்சி; எனக்கு தூரத்து சொந்தம். அவளுக்கு யாருமே இல்லை. எலிமெண்டரி ஸ்கூலில் டீச்சராக இருக்கிறாள். குழந்தைகளுக்கு படிப்பு வரட்டுமே என்றுதான் குழந்தைகளை அவளுடைய பொறுப்பில் விட்டிருக்கிறேன். நல்லவள்தான். வாய்தான் கொஞ்சம் துடுக்கு."

ஜெயா மௌனமாக கேட்டுக் கொண்டாள். சற்று நேரம் கழித்து ஜெயா போட்டுக் கொடுத்த வெந்நீரில் காமாட்சி குளித்துவிட்டு வந்தாள். சவுரியை வைத்து அழகாக பின்னி பிச்சோடா போட்டுக் கொண்டாள். கூடையிலிருந்த மல்லிகைப்பூ பொட்டலத்தை சுவாதீனமாக பிரித்துக் கொண்டையில் முடித்தாள். குழந்தைகளுக்கு உணவு பரிமாறிவிட்டு தானும் சாப்பிட்டாள். குழந்தைகளை தூங்கச் செய்துவிட்டு நேராக போய் புருஷோத்தமனின் அறையில் உட்கார்ந்து கொண்டாள்.

புருஷோத்தமன் சாப்பாடு ஆனதும் தன்னுடைய அறையை நோக்கி வந்தார். உள்ளே காமாட்சி இருப்பதை கவனித்துவிட்டு உள்ளே போவதற்கு விருப்பமில்லாமல் அங்கே இங்கே நடைபயின்று விட்டு திரும்பிப் போய்விட்டார்.

இரவு ரொம்ப நேரம் ஆன பிறகும் காமாட்சி இடத்தை



விட்டு நகருவதற்கு விருப்பம் இல்லாதது போல் அந்த அறையிலேயே அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

ஜெயா குழந்தைகள் பக்கத்தில் படுத்துக் கொண்டு விட்டாள். அந்த அறைக்கும் இந்த அறைக்கும் குட்டி போட்ட பூனையைப் போல் சுற்றிச் சுற்றி வந்த புருஷோத்தமன் ஜெயா விழித்துக் கொண்டு இருப்பதை உணர்ந்து "ஹரி இன்னும் வீடு திரும்பவில்லையா?" என்று கேட்டார்.

"இன்னும் வரவில்லை. ரிகர்சல் முடிய ரொம்ப நேரமாகுமாம். பதினாறாம் தேதியன்று நாடகம் இருக்கிறதாம்." ஜெயா சொன்னாள்.

"ரிகர்சலுக்குப் போகும்போது அவன் மட்டும் போனால் போறாதா? கூடவே பப்லூவையும் அழைத்துக்கிட்டுப் போவானேன்? பாவம்! குழந்தை நேரத்தோடு தூங்க வேண்டாமா?" பப்லூவிடம் அக்கறை இருப்பது போல் விசாரித்தார்.

"பப்லூவுக்குப் பழக்கம்தான் தாத்தா." ஜெயா சொன்னாள்.

உண்மையில் புருஷோத்தமனுக்கு பப்லூவிடம் எந்த கரிசனமும் கிடையாது. ஆனால் ஜெயாவுடன் பேசுவதற்கு ஏதாவது சாக்கு வேண்டுமே!

ஜெயாவுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்தது. ஒருக்களித்து படுத்தவள் அப்படியே தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

வேறு வழியில்லாதவர் போல் புருஷோத்தமன் தன்னுடைய அறைக்குத் திரும்பினார்.

"பேத்தியிடம் பேச வேண்டியதெல்லாம் பேசியாகி

"விட்டதா?" காமாட்சியின் குரலில் ஏளனம் வெளிப்பட்டது.

புருஷோத்தமன் பதில் பேசவில்லை.

"தாத்தாவாம் தாத்தா. யாராவது கேட்டால் சிரிக்க மாட்டார்களா?" காமாட்சி மோவாய்க்கட்டையை தோள் பட்டையில் இடித்துக் கொண்டாள்.

"போதும் நிறுத்து. தொடக்கத்திலிருந்து அப்படி கூப்பிட்டு பழக்கம். இதில் ஊரார் சிரிப்பதற்கு என்ன இருக்கு?" கடிந்து கொள்வது போல் சொன்னார்.

"அது கிடக்கட்டும். இந்தக் கிழவயதில் உங்களுக்குப் பெண்டாட்டி இல்லாமல் நடக்கவில்லையாக்கும்." காமாட்சியின் கண்களில் வியப்பை விட பொறாமைதான் அதிகமாக இருந்தது.

"அதெல்லாம் உனக்கு தேவையில்லாத விஷயம். இப்போ நீ எதுக்காக இங்கே வந்தாய்? நானே வந்து விவரமாக சொல்லப் போவதாக கடிதம் எழுதியிருந்தேனே."

"நீங்க வந்து சொல்லும் வரையில் என்னால் எப்படி காத்துக்கிட்டு இருக்க முடியும்?" அடிபட்ட பெண்புலி போல் பாய்ந்தாள் காமாட்சி. "இத்தனை வருஷங்களாக உங்க குழந்தைகளுக்காக உழைத்து, நான் சம்பாதிப்பதையும் அவர்களுக்காகவே செலவு செய்து வந்தேன். உங்களுடன் ரகசியமாக குடித்தனம் செய்து வருவதாக ஊரார் என்னைப் பார்த்துச் சிரித்து ஏளனம் செய்து வந்தாலும் லட்சியப் படுத்தாமல் நேர்மையாக இருந்ததற்கு எனக்குக் கிடைத்த பிரதிபலன் இதுதானா? இந்த ஆண்களே இப்படித்தான். இனிக்க இனிக்கப் பேசிக் கொண்டே கழுத்தை அறுப்பதில் வல்லவர்கள்."

"காமாட்சி! குரலைக் கொஞ்சம் அடக்கு. பழைய கதை



எல்லாம் இப்போ எதுக்கு? நடந்தது நடந்துவிட்டது. அந்தப் பெண் எனக்கு எந்த மருந்து வைத்தாளோ தெரியாது, என் புத்தி பிசகி விட்டது. இனி நடக்க வேண்டியதைச் சொல்லு. உன் பேச்சை எப்போ மறுத்திருக்கிறேன்? நீ சொன்னது போலவே செய்கிறேன். அதை விட்டு விட்டு கத்தி கூச்சல் போட்டாய் என்றால் எனக்குக் கோபம் வரும். நானும் கத்துவேன். ஊரார் முன்னால் இரண்டுபேரும் அவமானப்பட வேண்டியிருக்கும். நீயே யோசித்துப் பாரு." புருஷோத்தமன் அருகில் வந்து கெஞ்சினார்.

புருஷோத்தமனைப் பற்றி காமாட்சிக்கு நன்றாகவே தெரியும். அவர் காட்டும் இந்த பச்சாத்தாபம் உண்மையானது இல்லை என்று அந்த நிமிடமே புரிந்து கொண்டு விட்டாள்.

"புதுசாக நான் என்ன சொல்லப்போகிறேன்? உங்க சொத்தை எல்லாம் குழந்தைகளின் பெயருக்கு எழுதி வைத்து விட்டு கார்டியனாக என்னைப் போடுங்கள். பணத்திற்கு ஆசைப்பட்டுத் தானே அந்தச் சிறுக்கி உங்களைக் கல்யாணம் செய்து கொண்டாள்?"

ஜெயாவை காமாட்சி அப்படிச் சொன்னது அவருக்குக் கோபத்தை வரவழைத்தாலும் வெளியில் எதுவும் சொல்ல முடியாமல் தவித்தார்.

காமாட்சி மேலும் சொன்னாள். "அவளை வீட்டிலிருந்து உங்களால் அனுப்ப முடியவில்லை என்றால் என்னிடம் சொல்லுங்கள். ஒரே நாளில் பெட்டியைத் தூக்கிக் கொண்டு போகும் விதமாக செய்கிறேன்."

"காமாட்சி! ஜெயா கழுத்தில் மூன்று முடிச்சு போட்டிருக்கிறேன். அவளை வெளியேற்றினால் ஊர் உலகம் சும்மா இருக்குமா? நீயே சொல்லு."

"அய்யோ பாவம். திடீரென்று உலகத்தைப் பார்த்து

பயப்படுவானேன்? உங்க முதல் மனைவி எப்படி இறந்து போனாளோ இந்த உலகத்திற்குத் தெரியாது என்று நினைத்தீர்களா? இளமையில் நீங்க செய்த அக்கிரமங்கள் யாருக்குத் தான் தெரியாது? உங்களுக்கு பயமாக இருந்தால் என்னிடம் சொல்லுங்கள். அந்தப் பழி ஏதோ என் மீது போட்டுக் கொள்கிறேன். இப்பவே சொல்லிவிடுகிறேன். இந்த விஷயத்தில் ஒரு முடிவு தெரியும் வரையில் நான் இந்த ஊரை விட்டுப் போகமாட்டேன். அந்தப் பெண் இந்த வீட்டை விட்டுப் போகணும், இல்லையா சொத்து முழுவதும் குழந்தைகள் பெயருக்கு எழுதி வைக்கணும். இல்லை என்றால் நடக்கிற கதையே வேறு." காமாட்சி மிரட்டினாள்.

"கத்தாதே காமாட்சி." புருஷோத்தமன் வேண்டுகோள் விடுத்தார்.

"சரி. கத்தமாட்டேன். எனக்கு மட்டும் மரியாதை தெரியாதா? உங்களுக்கு தலைகுனிவு ஏற்படுவது போல் நடந்து கொள்வேனா?" காமாட்சி நைச்சியமாக சொல்லிக் கொண்டே எழுந்து போய் கதவைச் சாத்தி தாழ் போட்டு விட்டு வந்தாள். கொண்டையில் இருந்த பூச்சரத்தை சரி செய்து கொண்டே புருஷோத்தமன் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

புருஷோத்தமன் எதுவும் செய்யமுடியாமல் அசட்டு சிரிப்பு சிரித்தார்.

* * *

## 9

**நா**ன்கு நாட்கள் கழிந்தன.

நாடகத்தின் ஒத்திகை முடிந்துவிட்டது. ஹரி வயலினை எடுத்துப் பெட்டியில் வைத்துக் கொண்டிருந்தான். அந்த அறை



முழுவதும் தபலா சத்தத்துடன், நடிகர்களின் கூச்சல்களுடன் எதிரொலித்துக் கொண்டிருந்தது. நடிகர்கள் தங்களுக்குள் ஜோக்கடித்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். வீட்டுக்குப் போனதும் மனைவி தன்னை எப்படி வசைப் பாடுவாள் என்று கதாநாயகன் நடித்துக் காட்டியபோது எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

இதற்குமுன் ரிகர்சல் முடிந்ததும் ஹரி வீட்டுக்குப் போக வேண்டும் என்று தவிப்பான். ஆனால் ஜெயாவின் திருமணம் நடந்த பிறகு வீட்டைப் பற்றி நினைத்தாலே பயமாக இருந்தது. நான்கு நாட்களுக்கு முன்னால் வீட்டுக்கு வந்த காமாட்சி புருஷோத்தமனுக்கு எந்தவிதமான உறவோ தெரியவில்லை. அந்த அம்மாளின் வாய் ரொம்ப பொல்லாதது. எப்போ பார்த்தாலும் கத்திக் கொண்டே இருப்பாள். முகத்திற்கு நேராக எதையும் சொல்லமாட்டாள். மறைமுகமாக குறை சொல்லிக் கொண்டே இருப்பாள். அந்தக் குழந்தைகள் குழந்தைகளே இல்லை. குட்டிப் பிசாசுகள். ஹரிக்குக் கண் தெரியாது என்பதால் வேண்டுமென்றே குறுக்கே கால்களை நீட்டுவார்கள். கத்தி ரகளை செய்து ராமகிருஷ்ணனை தூண்டி விடுவார்கள். பப்லூவை சும்மா அழவைப்பார்கள் புருஷோத்தமனிடம் அவர்களுக்குக் கொஞ்சம் கூட பயமே இல்லை. காமாட்சியும் அவர்களுடைய சேட்டைகளை ரசித்துக் கொண்டிருப்பாளே தவிர அதட்டமாட்டாள்.

இந்த ரகளை எல்லாம் சகித்துக் கொள்வது ஹரிக்குக் கஷ்டமாக இருந்தது. வேறு வீடு பார்த்துக் கொண்டு போய்விடுகிறோம் என்று சொன்னால் ஜெயா கண்ணீர் வடித்தாள். "எனக்கு விஷத்தைக் கொடுத்துவிட்டு வேறு வீடு பார்த்துக் கொள்" என்று தடை போட்டு விட்டாள். ஹரிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

முடிந்தவரையில் பப்லூவுடன் வெளியில் சுற்றிவிட்டு வருவான். ஒத்திகை இல்லாத நாட்களிலும் வீட்டில் இருக்க மாட்டான். காலையில் சீக்கிரமாக எழுந்துகொண்டு குளித்து விட்டு வயலினையும் எடுத்துக் கொண்டு பப்லூவுடன் சிவன் கோவிலுக்குப் போய்விடுவான். அங்கேயே திண்ணையில் உட்கார்ந்து கொள்வான். அந்த நேரத்தில் கோவில் கதவுகளை கூட திறந்திருக்கமாட்டார்கள். விடியற்காலை வேளையில் ஹரி வயலினை வாசித்துக் கொண்டிருக்கும்போது அந்த வழியில் போகிறவர்கள் மந்திரத்திற்கு கட்டுண்டவர்களைப் போல் அப்படியே நின்றுவிடுவார்கள். நாட்கள் செல்லச் செல்ல அந்தக் கோவில் அர்ச்சகருக்கு ஹரியிடம் ஒரு விதமான அபிமானம் ஏற்பட்டது. ஹரி அந்த வழியாக போய்க் கொண்டிருந்தால் கூப்பிட்டு பிரசாதம் வழங்காமல் விடமாட்டார்.

ஒருநாள் ஹரியை அழைத்து அன்னிக்கு சிவராத்திரி என்றும் ஹரி வந்து கோவிலில் வயலினை வாசிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ஹரி சந்தோஷமாக ஒப்புக் கொண்டான். அவனால் எல்லா பாடல்களையும் வாசிக்க முடியும் என்றாலும் கடவுள் பற்றிய பாடல்களை வாசிக்கும் போது மனம் முழுவதும் ஏதோ பரவசம் நிரம்பிவிடும்.

ரிகர்சல் முடிந்ததும் கோவிலுக்குப் போவதற்காக தயாராகிக் கொண்டிருந்த ஹரியின் தோளில் யாரோ கையைப் பதித்தார்கள். "யாரது?" என்று அந்தக் கையைத் தடவினான்.

"நான்தான் ஹரீ!" வேணு சொன்னான்.

அந்தக் குரலைக் கேட்டதும் ஹரி எரிமலையாகி விட்டான். ஒரே உதறலில் வேணுவின் கையைத் தள்ளிவிட்டு வயலினை எடுத்துப் பெட்டியில் வைக்கப் போனான்.



"ஹரீ! நீ உயிரோடு இருக்கும் போதே ஜெயாவின் வாழ்க்கை இப்படி சீரழிந்து போகும் என்று நான் நினைக்க வில்லை." வேணு சொன்னான்.

"வாயை மூடு. கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று ஜெயாவுக்கு ஆசை காட்டிவிட்டு, உங்க அம்மாவிடம் பேசச் சொல்லி என்னைத் தூண்டிவிட்டு புத்திசாலித்தனமாக அந்த நேரத்தில் வீட்டில் இல்லாதபடிக்கு தப்பித்துக் கொண்டு விட்டாய். இதெல்லாம் உனக்கு ஒரு வேடிக்கையாக இருந்தது போலும்."

"ஹரீ! நீ தவறாக புரிந்து கொண்டிருக்கிறாய். அன்று உண்மையிலேயே எனக்கு இண்டர்வியூ இருந்தது. அம்மா உங்களிடம் அப்படி எல்லாம் பேசுவாள் என்று நினைக்க வில்லை. வீட்டுக்கு வந்ததுமே அம்மா நடந்ததை எல்லாம் சொன்னாள். நன்றாக சண்டை போட்டேன். அம்மாவும் என்னைத் திட்டினாள். அந்தக் கோபத்தில் அன்னிக்கே வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டேன். கோயம்புத்தூரில் இருக்கும் சித்தப்பா வீட்டிற்குப் போனேன். அவர் மூலமாக ஏதாவது ஒரு வேலையைத் தேடிக் கொண்டு திரும்பி வந்து ஜெயாவைத் திருமணம் செய்து கொள்வதாக இருந்தேன். இவ்வளவு சீக்கிரமாக ஜெயாவுக்குத் திருமணம் முடிந்துவிடும் என்று நினைக்கவில்லை. கடவுள் மீது ஆணையாக சொல்கிறேன்."

"போதும் நிறுத்து. உன் பொய் சத்தியங்களை. உண்மை யிலேயே ஜெயாவைத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் இருந்தால் நீ ஊரைவிட்டுப் போகும்போது எங்களிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போயிருப்பாய். கோழையைப் போல் ஓடியிருக்கமாட்டாய். இப்பொழுது ஜெயாவுக்குத் திருமணம் முடிந்துவிட்டதே என்று நல்லவன் போல் நாடகம்

போடுகிறாய். இங்கிருந்து போய்விடு. உன் இரக்கமோ, முதலைக் கண்ணீரோ எங்களுக்குத் தேவையில்லை பப்லூ! வா போகலாம்." ஹரி கிளம்பப் போனான்.

பின்னாலிருந்து வேணூவின் குரல் கடினமாக ஒலித்தது. "என் இதயத்தில் இருக்கும் வேதனையை உனக்கு எப்படி புரிய வைப்பேன்? நீயும் உன் அண்ணனும் நிம்மதியாக, எந்த கவலையும் இல்லாமல் வாழணும் என்று பணத்திற்கு ஆசைப்பட்டு அந்தக் கிழவனுக்கு உன் தங்கையைக் கட்டி வைத்தாய். ஜெயாவின் வாழ்க்கையில் நெருப்பை அள்ளிக் கொட்டியது நீதான்."

"வேணூ!" ஹரி வேகமாக திரும்பினான்.

"ஏன்? உண்மையைச் சொன்னால் கோபம் வருகிறதா? ஊர் மக்கள் பேசிக் கொள்வதைத்தான் நானும் கேட்கிறேன். ஜெயாவை நான் ஏமாற்றினேன். ரொம்ப சரி. உடன் பிறந்தவன், நீ மட்டும் என்ன கிழித்தாய்? வாயில்லாத பூச்சியான ஜெயாவை கிழவனிடம் ஒப்படைத்தாய். அவருக்கு ஏற்கனவே எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா? அவரைப் போன்ற கஞ்சன் ஊர் உலகத்தில் யாருமே இருக்க மாட்டார்கள். எல்லாம் தெரிந்தும் ஜெயாவை நரகத்தில் தள்ளி விட்டாய்."

"வேணூ! உனக்கு எதுவுமே தெரியாது. நீ பேசாதே." ஹரி பற்களைக் கடித்துக் கொண்டு கோபத்தை அடக்க முயன்றான்.

"ஜெயாவின் திருமணத்திற்கு இப்போ என்ன அவசரம் வந்துவிட்டது? சரி. அப்படியே செய்தாலும் அவள் வயதுக்கு ஏற்றவனாக, அவன் ஒரு பிச்சைக்காரனாக இருந்தாலும் சரி, பார்த்துக் கட்டி வைத்திருக்கலாம் இல்லையா? ஊரிலிருந்து வந்ததும் இந்தத் திருமணத்தைப் பற்றி அம்மா விலாவாரியாக



சொன்னபோது உன்னையும், அந்த புருஷோத்தமனையும் கண்டந்துண்டமாக வெட்டிப் போடணும் என்று தோன்றியது. உங்க அண்ணி உயிரோடு இருந்தால் இப்படி நடந்திருக்குமா? உங்க அண்ணாவுக்கு மூளை சரியாக இருந்தால் ஜெயாவுக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்குமா?"

ஹரியில் முகத்தில் இயலாமை வெளிப்பட்டது. இதழ்கள் நடுங்கின. "வேணூ!" ஏதோ சொல்லப் போனான்.

"இப்பொழுதும் ஒன்றும் மிஞ்சிவிடவில்லை. ஹரி! உன்னால் ஜெயாவுக்குக் கல்யாணம்தான் செய்து வைக்க முடியும். குடித்தனம் செய்ய வைக்க முடியாது. நேராக புருஷோத்தமன் வீட்டுக்குப் போய் நடந்ததை எல்லாம் ஜெயாவிடம் சொல்கிறேன். விவாகரத்து செய்துவிட்டு என்னுடன் வரச் சொல்கிறேன். ஒரு வருடம் . . . இரண்டு வருடம். . . எத்தனை வருடங்கள் ஆனாலும் சரி. அவளை என்னுடன் அழைத்துப் போகாமல் விடமாட்டேன்."

ஹரி வேணூவின் தோள்களை பலமாக பற்றிக் கொண்டான். "வேணூ! அந்த மாதிரி எதுவும் செய்யாதே. ஏற்கனவே இந்தக் கல்யாணத்தால் ஜெயாவின் வாழ்க்கை எல்லோரும் ஏளனம் செய்யும்படியாக ஆகிவிட்டது. இன்னும் அவளுக்குத் தொல்லை கொடுக்காதே."

வேணூ ஹரியின் கையைப் பற்றி மார்போடு அழுத்திக் கொண்டான். "ஹரீ! உனக்குத் தெரியாது. வயதுக்கு ஏற்றவனுடன் ஜெயாவுக்குத் திருமணம் நடந்திருந்தால் நான் இவ்வளவு வேதனைப்படமாட்டேன். மறுப்பு சொல்லாமல் அவள் இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதித்தாள் என்றால் அதற்கு வேறு காரணம் இருக்கணும். அவளும் உன்னைப் போலவே நான் ஏமாற்றிவிட்டதாக நினைத்திருப்பாள்

இல்லையா? அதை நினைக்கும் போதுதான் என் இதயம் தவிக்கிறது."

ஹரிக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது. வேணுவின் வேதனை நடிப்பு இல்லை. உண்மையாகவே வருத்தப் படுகிறான்.

"நான் என்ன செய்யட்டும் வேணு? நான் ஊரில் இல்லாத போது இதெல்லாம் நடந்து முடிந்துவிட்டது. வரதட்சணை வேண்டும் என்று உங்க அம்மா கேட்டபோது கூட எனக்குக் கோபம் வரவில்லை. பிள்ளையைப் பெற்ற தாயாக அது அவளுடைய உரிமை, உலக வழக்கம் கூட என்று நினைத்தேன். வரதட்சணைக்குத் தேவையான பணத்தை சென்னையில் எனக்குத் தெரிந்தவர்களிடமிருந்து கடனாக வாங்கிக் கொண்டு வந்தேன். அதற்குள் இந்தக் கொடுமை நடந்துவிட்டது."

"நீ சொல்வதெல்லாம் உண்மையா?" - வேணு நம்ப முடியாதவன் போல் கேட்டான்.

"வா. வழியில் எல்லாம் விவரமாக சொல்கிறேன்." - பப்லூ வையும் அழைத்துக் கொண்டு இருவரும் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினார்கள்.

* * *

மறுநாள் மதியம் பன்னிரெண்டு மணி. ஜெயா பெரிய அண்ணனுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். காமாட்சி அப்பொழுதுதான் வக்கணையாக மூக்குப் பிடிக்க சாப்பிட்டு விட்டு, வெற்றிலையை மென்றுகொண்டே கட்டிலில் சாய்ந்த வாக்கில் அமர்ந்து தினத்தந்தியை படித்துக் கொண்டிருந்தாள். அந்த அம்மாளுக்கு அரசியலில் ஆர்வம் அதிகம். பேப்பரைப் படிக்காமல், ரேடியோவில் செய்திகளைக் கேட்காமல் அவளால் இருக்க முடியாது.

புருஷோத்தமன் ஈசிச்சேரில் அமர்ந்தபடி குட்டித் தூக்கம்



போட்டுக் கொண்டிருந்தார். பக்கத்து அறையில் குழந்தைகள் சத்தம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

வாசற்கதவு யாரோ தட்டிய ஓசை கேட்டது.

"குட்டீ. . . கண்ணா. . . லக்ஷ்மீ. . ." காமாட்சி குரல் கொடுத்தாள். விளையாட்டு மும்முரத்தில் இருந்த குழந்தைகள் காதில் வாங்கிக் கொண்டதாக தெரியவில்லை. காமாட்சி பேப்பரை பக்கத்தில் வைத்துவிட்டு முணுமுணுத்தபடி எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

எதிரே வேணு நின்றிருந்தான். "ஹரி இருக்கிறானா?" பணிவுடன் கேட்டான்.

"இல்லை." எரிச்சலுடன் சொன்னாள் காமாட்சி.

"டீச்சர்! நீங்களா?" காமாட்சியை அடையாளம் புரிந்து கொண்டது போல் வேணுவின் கண்களில் வியப்பு தெரிந்தது.

சட்டென்று நினைவுக்கு வராதது போல் காமாட்சியின் நெற்றி சுருங்கியது. பிறகு புரிந்து விட்டாற்போல் "நீ. . . நீ. . . வேணுதானே" என்றாள், வாயெல்லாம் சிரிப்புடன்.

"ஆமாம். நானேதான். நீங்க இங்கே எப்படி? புருஷோத்த மனுக்கு நீங்க உறவினரா?"

"ஒருவிதமாக அப்படித்தான் சொல்லணும். எத்தனை நாளாச்சு உன்னைப் பார்த்து. ரொம்ப பெரியவனாகி விட்டாய். உள்ளே வாயேன். குடிக்கத் தண்ணீர் வேண்டுமா?" அன்புடன் வரவேற்றாள்.

அந்த நேரத்தில் ஹரி வீட்டில் இருக்கமாட்டான் என்று வேணுவுக்கு நன்றாகத் தெரியும். நேற்று மாலை ஹரியுடன் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தான். ஜெயாவின் திருமணத்தைப் பற்றி விவரமாக தெரிந்து கொண்ட வேணு

அவளை ஒருமுறை சந்தித்துப் பேசப் போவதாக சொன்னான். ஆனால் ஹரி அதற்குச் சம்மதிக்கவில்லை. நடந்தது நடந்து விட்டது. ஜெயாவை மறந்துவிடுவது நல்லது என்றும், அவளைப் பாப்பதோ, சந்தித்துப் பேசுவதோ கூடாது என்றும் தடுத்துவிட்டான். வேணூ கெஞ்சிய போதும் ஹரி சம்மதிக்க வில்லை.

அதனால் ஹரி இல்லாத நேரமாக பார்த்து ஜெயாவைப் பார்க்கப் போக வேண்டும் என்று முடிவு செய்தான். அந்த வீட்டில் யார் யார் இருக்கிறார்களோ தெரியாது. தான் போய் ஹரியைப் பற்றி கேட்ட பிறகு ஹரி வீட்டில் இல்லை என்று சொல்லி விட்டால், மேற்கொண்டு என்ன பேசுவது, எப்படி சமாளிப்பது என்றெல்லாம் வேணூ யோசிக்கவில்லை. அந்த நேரத்தில் புருஷோத்தமன் வீட்டில் இருக்கக் கூடாது என்று மனதிலேயே கடவுளை வேண்டிக் கொண்டான்.

கதவைத் தட்டியபோது பாரித்த உடல் கொண்ட பெண்மணி கதவைத் திறந்ததும் முதலில் தடுமாறினான். அடுத்த வினாடி அவன் மனம் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது. அந்த அம்மாள் யாரோ இல்லை. சிறு வயதில் அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த காமாட்சி டீச்சர்தான்.

அந்தக் காலத்தில் காமாட்சி டீச்சருக்கு அவன் மிகவும் பிரியமான சிடனாக இருந்துவந்தான். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஸ்கூல் ஹெட்மாஸ்டருக்கும், அவளுக்கும் நடுவில் நிகழ்ந்த காதல் திருவிளையாடலில் வேணூதான் பாலமாக செயல்பட்டான். காதல் கடிதங்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பது, பதில் கடிதம் வாங்கி வருவது போன்ற வேலைகளை ரொம்ப பொறுப்பாக செய்து வந்தான். அந்த அம்மாளைப் பார்த்ததும் அவனுக்கு அதெல்லாம் நினை



வுக்கு வந்தன. காமாட்சிக்குப் பழைய நினைவு இருந்ததோ இல்லையோ தெரியாது. வேணூவை அன்புடன் வரவேற்று நாற்காலியில் அமரச் செய்தாள்.

"உங்க அம்மா சௌக்கியம்தானே" என்று குசலம் விசாரித்தாள்.

வேணூ ரொம்ப உற்சாகத்துடன் காமாட்சியின் கேள்வி களுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தான். அவளுடன் பேசிக் கொண்டிருந்தானே ஒழிய அவன் கண்கள் ஜெயாவுக்காக வீடு முழுவதும் தேடிக் கொண்டிருந்தன.

காமாட்சி புருஷோத்தமனுக்குத் தான் எந்த வகையில் உறவு ஆக வேண்டுமோ சுற்றி வளைத்து நீட்டி முழக்கிச் சொன்னாள்.

"குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்." வேணூ கேட்டான்.

காமாட்சி உள்ளே போய் காபி போடச் சொல்லி ஜெயாவிடம் சொல்வது வேணூவின் காதில் விழுந்தது.

காமாட்சி கொண்டு வந்த தண்ணீரைக் குடித்துவிட்டு ஜெயாவின் வருகைக்காக எதிர்பார்த்தபடி காமாட்சியிடம் வேண்டுமென்றே உரையாடலை நீடித்தான்.

"யாரு வந்திருக்காங்க?" பேச்சுக் குரலைக் கேட்டு உள்ளே இருந்து புருஷோத்தமன் எழுந்து வந்தார். வேணூவைப் பார்த்ததும் அவருடைய முகம் மாறியது. "என்ன விஷயம்? இந்தப் பக்கம் வரக் காரணம்?" பட்டும் படாமலும் கேட்டார்.

"எனக்கு வேலை கிடைத்துவிட்டது. ஹரியிடம் சொல்லி விட்டுப் போகலாம் என்று வந்தேன்."

"ஹரி வீட்டில் இல்லை. இப்போதைக்கு வரமாட்டான்னு நினைக்கிறேன்."

அதற்குள் ஜெயா காபி டம்ளர்களுடன் ஹாலுக்கு வந்தாள். வேணுவின் பேச்சுக் குரல் உள்ளே இருக்கும் போதே காதில் விழுந்ததோ என்னவோ? அவனைப் பார்த்து அவள் அதிர்ச்சி அடையவில்லை, பதட்டப்படவில்லை. நிமிர்ந்து பார்க்கவும் இல்லை.

புருஷோத்தமன் அங்கே இருந்ததால் வேணுவால் ஜெயாவிடம் பேசமுடியவில்லை. ஜெயா காபி கொண்டு வந்ததை பார்த்து புருஷோத்தமன் எரிச்சல் அடைந்தார்.

“எல்லா வேலைகளையும் நீதான் செய்யணுமா? குழந்தைகளிடம் கொடுத்து அனுப்பியிருக்கலாம் இல்லையா?”

காமாட்சி புருஷோத்தமனை முறைத்தாள். “காபி டம்ளர் சூடாக இருக்காதா? குழந்தைகளால் எப்படி எடுத்துக்கிட்டு வரமுடியும்? வீட்டுக்கு விருந்தாளி வந்தால் உபசரிப்பது இல்லத்தரசியின் கடமை இல்லையா?”

காபி சாப்பிட்ட பிறகு வேணு கிளம்புவதற்காக எழுந்துகொண்டான். புருஷோத்தமன் ‘அப்பாடா’ என்று மூச்சுவிட்டுக் கொண்டார்.

“என்ன அவசரம்? சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கலாம் இரு.” காமாட்சி வேணுவைப் போகவிடாமல் தடுத்து விட்டாள்.

வேணுவும் சப்பணம் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டான். தேவையில்லாத விஷயங்களைப் பேசிக் கொண்டே இரண்டு மணி நேரம் பொழுதைப் போக்கினான். புருஷோத்தமனுக்கு வெளியில் அர்ஜெண்ட் வேலை இருந்தாலும் இடத்தை விட்டு அசையவில்லை.

* * *

**ஹ**ரி தன்னுடைய அறையில் டிரங்க் பெட்டியின்



முன்னால் அமர்ந்து ஒவ்வொன்றாக எடுத்து எதையோ தேடிக் கொண்டிருந்தான். பின்னாலிருந்து ஹரியின் கழுத்தைக் கட்டிக் கொண்ட பப்லூ “சித்தப்பா! என்ன தேடிக்கிட்டு இருக்கிறாய்?” என்று கேட்டான்.

ஹரி பச்சை கலர் நூலில் பின்னப்பட்ட பையைக் காட்டி “இதில் ஒரு பொட்டலத்தை வைத்திருந்தேன் பப்லூ. இப்போ காணவில்லை. ஒரு வேளை நான் உடைகளை எடுத்து வைக்கும் போது எங்கேயாவது விழுந்து விட்டதோ என்னவோ தெரியவில்லை.” தேடிக் கொண்டே சொன்னான்.

கண்பார்வை இல்லாவிட்டாலும் ஹரியின் நினைவாற்றல் ரொம்ப கூர்மை. அவனுக்கு நன்றாக நினைவு இருந்தது. அண்ணியின் க்ரோஷா பையில்தான் வைத்திருந்தான். அதில் இல்லாமல் போனதும் இதயத்துடிப்பு ஒரு நிமிடம் நின்று விட்டது போல் இருந்தது. தவறுதலாக இடம் மாற்றிவைத்து விட்டோமோ என்று எல்லா உடைகளையும் எடுத்துப் பார்த்தான்; எங்கேயும் காணவில்லை.

“எங்கேதான் போயிருக்கும்? பூட்டு போட்டபடிதானே இருந்தது.” பதட்டத்தில் தனக்குத்தானே கேட்டுக் கொண்டான். அந்த நேரத்தில் ஜெயா காபி டம்ளருடன் அங்கே வந்தாள். “என்ன அண்ணா? எதைத் தேடிக்கிட்டு இருக்கிறாய்?” என்று கேட்டாள்.

“ஜெயா! இந்தப் பெட்டியில் ஒரு பொட்டலத்தை வைத்திருந்தேன். இப்போ காணவில்லை. நீ கொஞ்சம் தேடிப் பாரேன்” என்றான்.

ஜெயா காபி டம்ளரை ஹரியிடம் கொடுத்துவிட்டு பெட்டி முழுவதுமாக தேடினாள். ஒவ்வொரு உடையாக எடுத்துப் பார்த்தாள்.

"எங்கேயும் இல்லையே? அதில் என்ன இருந்தது?" ஜெயா கேட்டாள்.

"இல்லையா?" ஹரியின் முகத்தில் பதட்டமும், கவலையும் தெரிந்தன. காபி குடித்துக் கொண்டிருந்தவன் பாதியில் அப்படியே கீழே வைத்துவிட்டான்.

"ஜெயா! அந்தப் பொட்டலத்தில் பணம் இருந்தது. நான் சென்னையிலிருந்து வரும்போது கவிதாவிடமிருந்து பணம் கடனாக வாங்கி வந்தேன். திருநாகம் மாமி கேட்ட வர தட்சணையைக் கொடுத்து உன் திருமணத்தை முடித்து விடலாம் என்று நினைத்திருந்தேன். அதை அண்ணியின் க்ரோஷா பையில் வைத்து உடைகளுக்கு நடுவில் வைத்தேன். பை இருக்கிறது. ஆனால் பணம் இல்லை."

ஜெயா திகைத்துப் போனவளாக ஒரு நிமிடம் அப்படியே நின்றுவிட்டாள்.

"பூட்டு போட்டது போட்டபடி இருக்கு. நான் அடையாளமாக வைத்திருந்த உடைகள் கூட இடம் மாறவில்லை. பணம் எங்கேதான் போயிருக்கும்?" ஹரி சொன்னான்.

"இந்த வீட்டில் எது நடந்தாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை அண்ணா." தாழ்ந்த குரலில் சொன்னாள் ஜெயா.

"என்ன? பூட்டியிருந்த பெட்டியிலிருந்து பணம் காணாமல் போனால் கூட ஆச்சரியப்பட வேண்டிய தில்லையா? யாரும் எடுக்கவில்லை என்றால் பணம் எப்படி போகும்? தானாக கால் முளைத்து நடந்து போய்விட்டதா இல்லை எந்த யட்சிணி தேவதையாவது வந்து எடுத்துக் கொண்டு போய்விட்டதா? போய் அந்த காமாட்சியையும், புருஷோத் தமனையும் கேள்." ஹரி கோபமாக ஆணையிடுவது போல் சொன்னான்.



"அவர்களையா?" ஜெயாவின் குரலில் பயம் கலந்திருந்தது. "அண்ணா! அவர்களிடம் எப்படி கேட்கமுடியும்? கேள்வி கேட்பதற்கு நம்மிடம் என்ன ஆதாரம் இருக்கு?"

"ஏன் கேட்க முடியாது? வீட்டில் மற்றவர்கள் எல்லோரும் குழந்தைகள். காணாமல் போனது என்னுடைய பணம். நீ எடுத்திருக்க முடியாது. அவர்கள் இரண்டு பேரில் ஒருத்தர் தான் எடுத்திருக்கணும்."

"பூட்டியிருந்ததாக சொல்கிறாயே."

"பூட்டியிருந்தால் மட்டும் என்ன? சாவி கொக்கியில்தான் மாட்டி வைத்திருப்பேன். நான் குளிக்கப் போனபோதோ, சாப்பிடப் போகும் போதோ எடுத்திருக்க முடியும் இல்லையா?"

"என்ன ரகளை இங்கே?" கேட்டுக் கொண்டே புருஷோத்தமன் உள்ளே வந்தார்.

"அண்ணாவின் பெட்டியில் இருந்த பணம் காணாமல் போய்விட்டது." ஜெயா சொன்னாள்.

"பணமா? எவ்வளவு?"

ஹரி சொன்ன தொகையைக் கேட்டதும் புருஷோத்தமன் திடுக்கிட்டார். "போதுமே சட்டை கிழிந்து போனால் புதுசட்டை வாங்குவதற்கு வக்கில்லாமல் அதையே தைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறாய். உன்னிடம் அவ்வளவு பணம் எங்கிருந்து வந்தது? பணம் காணாமல் போச்சு என்று சொன்னால் யார்தான் நம்புவார்கள்?"

ஹரியின் முகத்தில் வேதனை தென்பட்டது. "உண்மையைத்தான் சொல்கிறேன். ஜெயாவின் திருமணத்திற்காக சென்னையிலிருந்து வரும்போது நண்பனிடமிருந்து கடனாக வாங்கி வந்தேன்."

"பொய் சொல்வதற்கும் ஒரு எல்லை இருக்கு. உனக்கு அவ்வளவு பெரிய ரொக்கத்தை கடன் கொடுத்த ஏமாளி நண்பன் யாரு? பெயரைச் சொல்லு பார்ப்போம். உண்மையா இல்லையா என்று நானே கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்." கோர்ட்டில் குற்றவாளியிடம் கேட்பது போல் கேட்டார்.

"அதெல்லாம் உங்களுக்கு தேவையில்லாத விஷயம். பெட்டியில் இருந்த பணம் காணாமல் போனது மட்டும் உண்மை."

"அவ்வளவு பணம் கையில் இருக்கும்போது உன் அருமை தங்கைக்கு புதுப்புடவை கூட வாங்கித் தரவில்லையே. திருநாகம் மாமி கேட்ட வரதட்சணையை கொடுக்கத் தயாராக இருந்தவன், வரதட்சணையே வாங்கிக் கொள்ளாமல் உன் தங்கையை கல்யாணம் பண்ணிக் கொண்ட எனக்கு ஒரு ஜரிகை வேட்டி கூட வாங்கிக் கொடுக்க தோன்றவில்லையா? காசு பணம் இல்லாதவர்களாச்சே என்று இரக்கப்பட்டு ஆதரித்து வந்தேன். இத்தனை நாளாக பணம் கையில் வைத்துக் கொண்டே ஓசியில் மூன்று வேளையும் மூக்குப் பிடிக்க சாப்பிட்டு வந்தீங்களா?"

"வார்த்தைகளை அளந்து பேசுங்க. நாங்க ஒன்றும் ஓசியில் சாப்பிடவில்லை. நாடகக் கம்பெனியில் எனக்குக் கிடைக்கும் ஆயிரம் ரூபாயை அப்படியே உங்கள் கையில் கொடுத்து வருகிறேன்."

"ஆயிரம் ரூபாய்! பிச்சைக் காசு. மூன்று பேர் வீட்டில் சேர்ந்து கொண்டு வேளாவேளைக்கு கொட்டிக் கொண்டால் ஆயிரம் ரூபாய் எந்த மூலைக்கு வரும்? விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டே போகும் இந்தக் காலத்தில் யாருக்குத் தான் கட்டுப்படி ஆகும்? வீட்டு வாடகை கொடுக்கிறாயா? கரெண்ட் பில் கட்டுகிறாயா? நீங்க வந்த பிறகு வீட்டுச்



செலவுகள் ஐயாயிரம் கூடி விட்டது."

"வீட்டுச் செலவுகள் கூடியதற்குக் காரணம் நாங்கள் இல்லை. நடு வீட்டில் உட்கார்ந்து கொண்டு நாட்டாமை செய்கிறாளே, அவளும், அவள் அழைத்து வந்த வானரப் பட்டாளமும்தான் காரணம். மரியாதைக் குறைவாக பேசினால் யாரும் சும்மா இருக்கமாட்டார்கள்."

"சும்மா இருக்காமல் என்ன செய்து விடுவாய்? அடித்து விடுவாயோ? எங்கே அடி பார்க்கலாம்." - புருஷோத்தமன் ஹரியின் மீது பாய்ந்தார்." ஒரு தடவை இல்லை. ஆயிரம் தடவை சொல்லுவேன். நீங்க மூன்று பேரும் சேர்ந்து என் வீட்டைக் கொள்ளையடிப்பது போறாது என்று பணம் காணவில்லை என்று புகார் செய்ய வந்துவிட்டாயா? சமுதாயத்தில் மதிப்புடன் வாழ்ந்து கொண்டிருந்தேன். உன் தங்கையின் நீலிக் கண்ணீரைப் பார்த்து ஏமாந்து போய் கல்யாணம் செய்து கொண்டுவிட்டேன். அதற்கு தினமும் அழுது கொண்டுதான் இருக்கிறேன். என் சோற்றைத் தின்று கொண்டு எனக்கே திருட்டுப்பட்டம் கட்டுகிறாயா? எவ்வளவு தைரியம் உனக்கு?"

"போதும் நிறுத்துங்க" ஹரி கத்தினான்.

"உன் பாச்சா எல்லாம் என்னிடம் பலிக்காது. நான் ஒன்று கையில் வளையல் போட்டுக் கொண்டு உட்காரவில்லை." புருஷோத்தமன் அக்கம் பக்கத்து வீடுகளுக்குக் கேட்கும் அளவுக்கு குரலை உயர்த்தினார்.

ஹரிக்கு அவருடைய போக்கு புரிந்துவிட்டது. இந்த சாக்கில் அவர் வேண்டுமென்றே சண்டையை வளர்த்து, தங்களை இழிவுப்படுத்த நினைக்கிறார். ஆவேசத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான். "உங்களுக்கு அவ்வளவு கஷ்டமாக இருந்தால் வீட்டை விட்டுப் போய் விடுகிறோம்.

உங்களிடம் பேச்சு கேட்டுக் கொண்டு இந்த வீட்டிலேயே இருக்கனும் என்ற தலையெழுத்து எங்களுக்கு இல்லை."

"போயேன். யாரை மிரட்டுகிறாய்? அவ்வளவு ரோஷம் இருப்பவனாக இருந்தால் இந்த நிமிடமே வீட்டை விட்டுப் போய்விடு."

அதுவரையில் அடக்கி வைத்திருந்த ஆவேசம் கட்டை அறுத்துக் கொண்டு வெளியேறியது. "போகாமல் இங்கேயே இருப்பதற்கு நாங்கள் ஒன்றும் அன்னக்காவடி இல்லை. என் பணத்தை நீங்கதான் எடுத்தீங்களோ அந்த காமாட்சிதான் எடுத்தாளோ தெரியாது. மரியாதையாக திருப்பிக் கொடுத்து விடுங்கள்." ஹரியும் கத்தினான்.

"என்னைப் போய் திருடன் என்கிறாயா?" புருஷோத்தமன் ஹரியின் சட்டையைப் பிடித்து உலுக்கினார்.

ஹரி அவருடைய பிடியிலிருந்து விடுபட்டு கையால் பலமாக தள்ளிவிட்டான். புருஷோத்தமன் அப்படியே மல்லாக்க விழப் போனார். நல்ல வேளையாக ஜெயா சட்டென்று அவரைத் தாங்கிக் கொண்டு கீழே விழாமல் தடுத்துவிட்டாள்.

"அண்ணா! ஊருக்குப் போகும் நேரத்தில் இந்த ரகளை எதுக்கு? ஊரிலிருந்து திரும்பி வந்த பிறகு இதைப் பற்றி முடிவு செய்து கொள்ளலாம்." ஜெயா புருஷோத்தமன் பக்கம் திரும்பினாள். "தயவு செய்து இங்கிருந்து போய்விடுங்கள்" என்று சொல்லிக் கொண்டே அவரை வலுக்கட்டாயமாக அறையை விட்டு வெளியேற்றிவிட்டு உள்ளே வந்தாள். "அண்ணா! அவருக்குச் சமமாக நீயும் சண்டை போடுவானேன்?" என்றாள்.

அந்த நிமிடம் ஹரிக்குத் தங்கையின் மீது அளவு கடந்த



கோபம் வந்தது. "நான் உயிரோடு இருக்கும் போதே அண்ணாவும், பப்லூவும் அநாதைகளைப் போல் ஏச்சு பேச்சுகளைக் கேட்க வேண்டிய நிலைமை வந்துவிட்டது. நீ இவரைக் கல்யாணம் செய்து கொண்டு எங்கள் மூவரின் வாழ்க்கையையும் நரகமாக்கிவிட்டாய்."

"அண்ணா!" ஜெயா சட்டென்று ஹரியின் கையைப் பற்றிக் கொண்டாள். "என்னை எவ்வளவு வேண்டுமானாலும் திட்டு. கோபித்துக் கொள். அவருடன் மட்டும் சண்டை போடாதே. அப்படியே போட்டாலும் வீட்டை விட்டுப் போவதாக சொல்லாதே." ஜெயா ஹோவென்று கதறி விட்டாள்.

ஜெயாவின் பதட்டத்தை, கவலையை ஹரியால் உணரமுடிந்தது. தங்கையின் அழுகை அவன் கோபத்தை அப்படியே அடக்கிவிட்டது.

ஜெயா அழுதுகொண்டே மேலும் சொன்னாள். "நீங்க வீட்டை விட்டுப் போவதாக சொன்னால் அவருக்கு சந்தோஷம்தான். ஆனால் நீங்களும் இல்லாவிட்டால் என்னால் இந்த வீட்டில் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது. இதெல்லாம் என்னுடைய தலையெழுத்து. அன்னிக்கே அண்ணியுடன் நானும் கிளம்பியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். நானும் போய்ச் சேர்ந்திருப்பேன். என்னால் உங்களுக்கு எந்த தொல்லையும் இருந்திருக்காது."

"ஜெயா!" ஹரி தங்கையின் தலையை வருடிவிட்டான். "முன்னால் போனால் குழி, பின்னால் போனால் கிணறு என்பது போல் இருக்கு என் நிலைமை. பிச்சை எடுத்து வாழ்ந்தால் கூட இதைவிட நிம்மதியாக இருந்திருப்போம் இல்லையா?"

"தவறு செய்து விட்டேன் அண்ணா. இப்படி எல்லாம்

நடக்கும் என்று நான் நினைக்கவில்லை." தாழ்ந்த குரலில் சொன்னாள்.

ஹரி பெருமூச்சுவிட்டுக் கொண்டான். ஜெயா அனுபவிக்கும் வேதனை, வருத்தம் அவன் அறியாதது இல்லை. இந்தச் சமயத்தில் தானும் கோபித்துக் கொண்டால் மேலும் கண்ணீர் வடிப்பாளே தவிர வேறு எதுவும் நடக்கப் போவதில்லை என்று அவனுக்குத் தெரியும்.

"சரி ஆகட்டும். யார் தலையில் என்ன எழுதியிருக்கோ அதுபடித்தான் நடக்கும்." தங்கையை சமாதானப்படுத்துவது போல் சொல்லிவிட்டு, உடைகளை அடுக்கிப் பெட்டியைப் பூட்டினான்.

மைசூரில் நவராத்திரி திருவிழா நடந்து கொண்டிருந்தது. விழாவில் 'கிருஷ்ணலீலைகள்' நாடகம் போட ஏற்பாடு ஆகியிருந்தது. அதற்கு முன் பெங்களூரிலும் 'மகாபாரதம்' நாடகம் போடப் போகிறார்கள். ஹரி அன்று மதியம் ரயிலுக்குக் கிளம்ப வேண்டும். எப்படியும் பெங்களூருக்குப் போகப் போகிறோம். கவிதாவைச் சந்தித்து அப்படியே பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடலாம் என்று நினைத்தான். இன்ன தேதியில் பெங்களூருக்கு வரப்போவதாகவும், தான் தங்கப் போகும் இடத்தின் முகவரியும் குறிப்பிட்டு வந்து சந்திக்கச் சொல்லி கவிதாவுக்குக் கடிதம் கூட எழுதியிருந்தான். பணம் காணவில்லை என்றதும் அவனுக்கு மூளையே கலங்கி விட்டது போல் இருந்தது.

ஹரி தோளில் மாட்டிக் கொள்ளும் பையில் பயணத்திற்குத் தேவையான உடைகளை எடுத்து வைத்துக் கொண்டான். பப்லூ ஓடி வந்தான். "சித்தப்பா! சுவாமிநாதன் மாமா வந்திருக்கிறார்" என்று சொன்னான். சுவாமிநாதன் ஒரு நடிகர். நாடகத்தில் தர்மராஜன் வேடத்தில் நடித்து வந்தார். ரயில் நிலையத்திற்குப் போகும் முன் ஹரியின் வீட்டுக்கு வந்து



அவனையும் அழைத்துப் போவதாக முன்னாடியே சொல்லியிருந்தார்.

"மாமாவை உட்காரச் சொல்லு, இதோ வந்து விடுகிறேன்" என்றான்.

"சரி சித்தப்பா." பப்லூ ஓட்டமெடுத்தான்.

"அண்ணா! காபி நீ முழுவதுமாக குடிக்கவில்லை. ஆறிப் போய் விட்டது. மறுபடியும் கலந்து எடுத்து வரட்டுமா?" ஜெயா கேட்டாள்.

"வேண்டாம். நேரமாகிவிட்டது. கிளம்புகிறேன்."

ஜெயா அண்ணனின் அருகில் வந்தாள். "அண்ணா! ரொம்ப கோபமாக இருக்கிறாய் இல்லையா? ஊருக்கு போகப் போகிறாய். திரும்பி வருவதற்கு பத்து நாளாவது ஆகும். உன்னை மறுபடியும் பார்க்கும் வரையில் எனக்கு என்னவோ போல் இருக்கும். அண்ணி கிளம்பும்போது என்னையும் உடன் அழைத்துப் போகவில்லை என்று கோபித்துக் கொண்டு அண்ணியுடன் பேசாமல் இருந்துவிட்டேன். அதற்குப் பிறகு அண்ணி இந்த உலகத்தைவிட்டே போய்விட்டாள். அது நினைவுக்கு வரும்போதெல்லாம் எனக்குச் சாப்பாடு கூட வேண்டியிருக்காது." ஜெயா விசும்பிக் கொண்டே சொன்னாள்.

ஹரி தங்கையின் தோளில் ஆதரவுடன் தட்டினான். "ஜெயா! உன் வாழ்க்கை இப்படி ஆகி விட்டதே என்ற வேதனையைத் தவிர உன் மீது எனக்கு என்றுமே கோபம் இருந்தது இல்லை. போய் வருகிறேன். கவனமாக இரு" என்றான். அறையை விட்டு வெளியேறப் போனவன் ஒரு நிமிடம் நின்றான். அருகில் வேறு யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கூர்ந்து கவனித்தான்.

தொலைவில் புருஷோத்தமனும், காமாட்சியும் பேசிக் கொள்ளும் சத்தம் தவிர வேறு எதுவும் கேட்கவில்லை.

"ஜெயா!" ஹரி அழைத்தான்.

"என்ன அண்ணா?"

"நான் போகும் முன் நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தரணும்."

"சொல்லு."

ஹரி ஒரு நிமிடம் தயங்கிவிட்டு பிறகு தாழ்ந்த குரலில் சொன்னான். "வேணு இங்கே வந்தால் அவனிடம் பேசக் கூடாது. பார்க்கவும் கூடாது."

"சரி அண்ணா."

"கொடுத்த வாக்கை மீற மாட்டாயே."

"அண்ணியின் மீது ஆணை."

"இனி ஊருக்குப் போனாலும் உன்னைப் பற்றி கவலை இல்லாமல் நிம்மதியாக இருப்பேன்."

"என்னைப்பற்றி நீ பயப்பட வேண்டியதே இல்லை அண்ணா. உன்னிடம் எதையும் மறைக்க மாட்டேன். உன்னிடம் சொல்லாமல் எதையும் செய்யவும் மாட்டேன். அவ்வளவு ஏன்? விஷத்தை விழுங்குவதாக இருந்தாலும் உன்னிடம் சொல்லிவிட்டுத்தான் செய்வேன்."

"அந்த மாதிரி எதுவும் யோசிக்காதே ஜெயா."

"ஒரு பேச்சுக்காக சொன்னேன் அண்ணா." ஜெயா விழிநீரைத் துடைத்துக் கொண்டாள்.

பப்லூ மறுபடியும் வந்தான். "சித்தப்பா! சுவாமிநாதன் மாமா சீக்கிரமாக வரச்சொல்கிறார்."



ஹரி பப்லூவைத் தூக்கிக் கொண்டு ஷோல்டர் பேக்குடன் வெளியே வந்தான். ஜெயாவும் வெளியே வந்தாள்.

"சித்தப்பா! சீக்கிரமாக வந்து விடுவாய் இல்லையா?" பப்லூ கேட்டான்.

"வேலை முடிந்ததும் ஒரு நிமிடம் கூட தங்கமாட்டேன் பப்லூ. உனக்கு ஸ்கூல் இருக்கு. இல்லை என்றால் உன்னையும் அழைத்துப் போயிருப்பேன். பெங்களூரிலிருந்து உனக்கு என்ன பொம்மை வேண்டும் சொல்லு. கார் பொம்மை வாங்கிக்கிட்டு வரட்டுமா?"

"ஊஹும். எனக்கு ஏரோப்ளேன் பொம்மைதான் வேண்டும். பெரியவன் ஆன பிறகு ஏரோப்ளேன் ஓட்டுவேன்." பெருமை பொங்கும் குரலில் சொன்னான் பப்லூ.

"கட்டாயம் ஓட்டுவாய். ப்ளேன் ஓட்டும் அளவுக்கு உன்னை பெரிய படிப்பு படிக்க வைக்கும் பொறுப்பு என்னுடையது. சரிதானே?" ஹரி பப்லூவை மார்போடு அணைத்துக் கொண்டான்.

"சீக்கிரம் கிளம்பணும். நேரமாகிவிட்டது." சுவாமிநாதன் அவசரப்படுத்தினார். ஹரி பப்லூவை ஜெயாவிடம் கொடுத்தான்.

"சித்தப்பா! டாட்டா! சீக்கிரம் வந்து விடு?" பப்லூ சொன்னான்.

ரிக்ஷாவில் அமர்ந்தபடி ஹரியும் கையை அசைத்தான்.

ஜெயா பப்லூவை தூக்கிக் கொண்டு உள்ளே வந்தாள். புருஷோத்தமனின் படுக்கை அறை கதவுகள் சாத்தியிருந்தன. காமாட்சியும் உள்ளே இருந்தாள். இருவரும் எதற்காகவோ சண்டை போடுவது போல் பேச்சுக்குரல் உச்சஸ்தாயியில் கேட்டது.

ஜெயா பெருமூச்சு விட்டுக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

* * *

# 10

"**கா**மாட்சி! உன் கை வரிசையை இங்கேயும் காட்டி விட்டாயா? பணத்தை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்? மரியாதையாக கொடுத்து விடு." உள்ளே வந்த புருஷோத்தமன் அறையின் கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, கண்களை உருட்டிக் கொண்டே கேட்டார்.

நாற்காலியில் சப்பணம் போட்டு உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு வேர்க்கடலையாக உடைத்து வாயில் போட்டுக் கொண்டிருந்த காமாட்சி அவருடைய பார்வைக்குக் கொஞ்சம் கூட பயப்படவில்லை. தன்னை இல்லை என்பது போல் தொடர்ந்து வேர்க்கடலையைச் சாப்பிட்டுக் கொண் டிருந்தாள். அந்த அலட்சியத்தைப் பார்த்ததும் புருஷோத்த மனுக்கு உடல் பற்றி எரிவது போல் இருந்தது.

"உன்னைத்தான் கேட்கிறேன்." இரட்டிப்பது போல் கேட்டார்.

"என்ன விஷயம்?" எரிச்சலுடன் கேட்டாள் காமாட்சி.

"அந்தப் பணத்தை எங்கே வைத்திருக்கிறாய் என்றுதான் கேட்கிறேன். முதலில் எடுத்துக் கொடு."

"இப்பொழுதுதானே பணம் காணவில்லைன்னு சொன்னது பொய் என்று ஹரியை அடிக்கும் அளவுக்குப் போனீங்க."

"அந்தப் பேச்செல்லாம் இப்போ அனாவசியம். அவர்கள்



முன்னாடி உன்னை திருடின்னு காட்டிக் கொடுக்க விருப்ப மில்லாமல் அப்படிப் பேசினேன். ஹரி ஒரு நாளும் பொய் சொல்லமாட்டான். பணம் காணாமல் போனது உண்மை யாகத்தான் இருக்கும்."

"ஓஹோ. ப்ளேட்டை இப்படி மாற்றிவிட்டீங்களா? ஹரி பொய்யே சொல்லமாட்டான் இல்லையா? அப்போ பணம் காணாமல் போனதும் உண்மைதான். அந்தப் பணத்தை நீங்களே எடுத்துவிட்டு எனக்கு திருட்டுப் பட்டம் கட்டப் பார்க்கறீங்களா? உங்க திட்டம் எல்லாம் எனக்குத் தெரியாதா? பணம் காணவில்லை என்று ரகளை செய்து அதை நான்தான் எடுத்தேன்னு குற்றம் சுமத்தி வீட்டை விட்டு வெளியேற்ற திட்டம் போட்டீங்க. அப்படித்தானே? உங்க குள்ளநரி தந்திரம் எல்லாம் என்கிட்டே பலிக்காது. பணம் காணவில்லை என்றால் போய் போலீஸில் ரிப்போர்ட் கொடுங்கள். என்னிடம் வந்து கேட்பானேன்?" காமாட்சி வள்ளென்று விழுந்தாள்.

"நீ எடுத்தாயோ இல்லையோ இப்பவே தெரிந்துவிடும். உன் பெட்டி சாவியை இப்படி கொடு."

"மாட்டேன். என் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் கொடுக்கமாட்டேன்."

"நீ என்ன கொடுப்பது? நானே எடுத்துக் கொள்கிறேன்." புருஷோத்தமன் அருகில் வந்து புடவைத் தலைப்பில் முடித்து வைத்திருந்த சாவிக் கொத்தை எடுக்கப் போனார்.

காமாட்சி கண்களை உருட்டிக் கோபமாக விழித்தாள். "நான் யாருன்னு உங்களுக்கு இன்னும் தெரியாது. ஒரு அடி கொடுத்தேன் என்றால் எழுந்து நடமாட இரண்டு மாதமாவது ஆகும். ஜாக்கிரதை." - கையால் அவரை வேகமாக தள்ளினாள்.

அந்தத் தள்ளலில் புருஷோத்தமன் போய் கட்டில் மீது

விழுந்தார். "காமாட்சி! எதுக்காக இப்படி என் உயிரை எடுக்கிறாய்? உனக்கு என்ன வேண்டுமோ சொல்லு. கொடுத்து விடுகிறேன். நீ போய் குழந்தைகளுடன் கிராமத்தில் இருந்து கொள்."

"அதான் சொன்னேனே. இந்த வீடு, வங்கியில் இருக்கும் பணம் எல்லாம் குழந்தைகளின் பெயரிலும், என் பெயரிலும் எழுதி வைத்துவிடுங்கள். அப்படி எழுதிக் கொடுத்த அடுத்த நிமிடம் இந்த வீட்டை விட்டுப் போய்விடுகிறேன்."

"அப்படி செய்வதற்கு சட்டம் ஒப்புக் கொள்ளாது இதைப்பற்றி ஏற்கனவே ஆயிரம் தடவை சொல்லி யிருக்கிறேன்."

"ஏன் ஒப்புக்கொள்ளாது? இதெல்லாம் நீங்க சுயமாக சம்பாதித்தது. வாங்க லாயர்கிட்டே போவோம். எப்படி எழுதினால் சட்டம் ஒப்புக் கொள்ளுமோ அவரிடமே கேட்டுத் கொள்வோம்."

"ஜெயா என் மீது கேஸ் போட்டால்?"

"அவள் வாயை எப்படி மூட வைக்கணுமோ அதை யெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்க கவலையே பட வேண்டியதில்லை."

"நீ ஒரு ராட்சசி." புருஷோத்தமன் பற்களை நற நறவென்று கடித்தார்.

"ஆமாம். நான் ராட்சசியேதான். இத்தனை வருடங்கள் என்னுடன் இருந்துவிட்டு, மோகம் தீர்ந்த பிறகு தூக்கிப் போட்டு விடுவேன் என்று சொன்னால் சும்மா இருப்பதற்கு நான் ஒன்றும் சராசரி பொம்பிளை இல்லை. என் வாழ்க்கையை உங்களுடன் பிணைத்துக் கொண்டு, உங்க குழந்தைகளுக்காகவே உழைத்து, இன்னிக்கு நீங்க பேச்சு



மாறினால் என் தலையெழுத்து இவ்வளவுதான் என்று கண்ணீர் வடித்துக் கொண்டு உட்காருவதற்கு நான் ஒன்றும் ஏமாளி இல்லை." காமாட்சி ஹிஸ்டீரியா வந்தவள் போல் கத்தினாள்.

புருஷோத்தமனுக்கு அந்த நிமிடம் காமாட்சியைப் பார்க்கும் போது கோவில் விழாக்களில் பெண்கள் தலையை விரித்துக் கொண்டு, சாமி வந்தது போல் ஆடுவார்களே அந்தக் காட்சிதான் நினைவுக்கு வந்தது. போறாத குறைக்கு காமாட்சிக்கு சின்ன வயதில் இழுப்பு வந்தபோது நெற்றியில் போட்ட சூட்டு காயத்தின் தழும்பு சிவனுடைய நெற்றிக் கண்ணைப் போல் மின்னியது. இனி இவளை கடவுளால் கூட இந்த வீட்டை விட்டு வெளியேற்ற முடியாதோ என்ற பயம் வந்துவிட்டது. சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் என்று தோன்றியது.

"காமாட்சி! நீ இப்படி மாதக் கணக்காய் என் வீட்டில் தங்கியிருந்தால் ஊர் உலகம் என்ன சொல்லுமோ, கொஞ்சம் யோசித்துப் பார்த்தாயா?" குரலில் நயத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டார்.

"உலகம் என்ன நினைத்துக் கொள்ளும்? ஆண் துணை இல்லாத பெண்ணுக்கு ஆதரவு தந்த உத்தமபுருஷன் என்று உங்களைப் பாராட்டும். உங்களுக்கு இந்தக் கல்யாணம் நடந்தது ஒருவிதத்தில் எனக்கும் நல்லதுதான். மனைவி என்று ஒருத்தி வீட்டில் இருக்கும்போது என்னை யாரும் குறை சொல்ல முடியாது. தெரியாமல் தான் கேட்கிறேன். உலகத்தைக் கண்டு ரொம்ப பயப்படுவது போல் நடிக்கறீங்களே. இதற்கு முன்பு குழந்தைகளைப் பார்க்கும் சாக்கில் கிராமத்திற்கு வந்து பத்து நாட்களுக்குக் குறையாமல் தங்கிவிட்டு நான் செய்து போட்ட பட்சணங்களை வக்கணையாக சாப்பிட்டுவிட்டு

ஏப்பம் விட்ட போது உலகம் என்ன சொல்லுமோ என்ற பயம் இல்லையா? தாலி கட்டியவன் என்னிக்கோ ஓடிவிட்டாலும் நீங்க வரும்போது மட்டும் மல்லிகைப் பூவும், புதுப்புடவையுமாக நான் வளைய வந்தது நினைவு இல்லையா? திடீரென்று ஞானோதயம் ஏற்பட்டு விட்டதா?"

"காமாட்சி! குரலை அடக்கிப் பேசு." இதெல்லாம் ஜெயா காதுகளில் விழுந்து விடுமோ என்று அவர் பயந்தார்.

காமாட்சி குரலை மேலும் உயர்த்தினாள். "எனக்கு குசுகுசுவென்று பேசத் தெரியாது. நான்தான் பொம்பிளையே இல்லை. ராட்சசி ஆச்சே."

புருஷோத்தமன் இயலாமையுடன் பார்த்தார். அதற்குள் ஹாலில் "காமாட்சி டீச்சர்!" என்று வேணு அழைக்கும் குரல் கேட்டது. அந்தக் குரலைக் கேட்டதும் காமாட்சி சட்டென்று பேச்சை நிறுத்தினாள்.

புருஷோத்தமன் வேகமாக கட்டிலை விட்டு எழுந்து கொண்டார். "எதுக்காக அந்த வேணுவை இங்கே வர அனுமதிக்கிறாய்? அவனும் அவன் பார்வையும். இன்னொரு தடவை இந்த வீட்டு வாசற்படி ஏறினால் அவன் காலை ஒடித்துவிடுவேன். இப்பவே போய் சொல்கிறேன்." வேகமாக கதவை நோக்கிப் போனார்.

"கொஞ்சம் இருங்க." காமாட்சி பின்னாலிருந்து வந்து அவரைப் பிடித்துத் தள்ளிவிட்டாள். "அவன் வந்தால் உங்களுக்கு என்ன வந்தது? உங்க அருமை மனைவியை யாரும் கடித்து விழுங்கிவிட மாட்டார்கள். வேணு எனக்குத் தெரிந்த பையன். ரொம்ப நல்லவன். இந்த வீட்டில் நான் இருக்கும் வரையில் என்னைப் பார்க்க வரத்தான் வருவான்." காமாட்சி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.



"வணக்கம் டீச்சர்." கைகளை ஜோடித்துப் பணிவுடன் வணக்கம் தெரிவித்த வேணு, பின்னாலேயே வந்த புருஷோத்தமனுக்கும் வணக்கம் சொன்னான்.

பட்டப் பகலில் பூட்டியிருந்த படுக்கை அறையிலிருந்து கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த இருவரையும் பார்த்தபோது வேணுவுக்குத் தூக்கி வாரிப் போட்டாலும் முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

புருஷோத்தமன் அவன் முகத்தைக் கூடப் பார்க்க விரும்பாதவர் போல் வேகமாக உள்ளே போய்விட்டார்.

"உட்கார்ந்து கொள் வேணு. நானே உனக்காக சொல்லி அனுப்புவோம் என்று இருந்தேன். இந்த வீட்டிற்குப் பெரிய ஆபத்து வந்து விட்டது." - காமாட்சி சாவகாசமாக உட்கார்ந்து கொண்டே சொன்னாள்.

"ஆபத்து வந்துவிட்டதா? என்ன நடந்தது?" ஆபத் பாந்தவன் போல் பார்த்தான் வேணு.

"இந்த வீட்டில் திருடு போய்விட்டது."

"திருடு போய்விட்டதா? எப்போ? திருடன் பகலில் வந்தானா இரவிலா?" பதட்டமடைந்துவிட்டது போல் நடித்தான்.

"எப்போ போச்சோ எனக்குத் தெரியாது. ஆனால் பணம் காணவில்லை என்று சொன்னார்கள்."

"வேடிக்கையாக இருக்கே." வேணு சிரத்தையாக கேட்டுக் கொள்வது போல் உட்கார்ந்து இருந்தாலும் அவன் கண், காது இரண்டுமே ஜெயாவைத் தேடிக் கொண்டிருந்தன. "காணாமல் போன ரொக்கம் எவ்வளவு?"

"அந்த விவரம் எதுவும் எனக்குத் தெரியாது. கேட்டுச்

சொல்கிறேன். ஜெயா! ஜெயா! இங்கே வாயேன்." உள் பக்கம் திரும்பிக் குரல் கொடுத்தாள்.

வேணுவின் உடலும் உள்ளமும் ஜெயாவின் வருகைக் காக துடித்துக் கொண்டிருந்தாலும் பார்வை மட்டும் காமாட்சியின் முகத்திலேயே நிலைத்திருந்தது.

"ஜெயா! உன்னைத்தான்." காமாட்சி மறுபடியும் குரல் கொடுத்தாள்.

ஜெயா ஹாலுக்கு வந்தாள்.

"பணம் போச்சு என்று சொன்னாய் இல்லையா? எவ்வளவு என்று தெரியுமா? வேணு கேட்கிறான் சொல்லு."

"ஜெயா! பணம் திருடு போய்விட்டதாமே. வீட்டில் ஆட்கள் இருக்கும் போதே திருட்டுத்தனம் நடந்தது என்றால் சும்மாவா? யார் எடுத்தார்கள் என்று கண்டுபிடிக்காமல் விடக்கூடாது. இப்படி உட்கார்ந்து கொள். விவரமாக சொல்லு." வேணு ரொம்ப உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டே எதிரே இருந்த நாற்காலியை சுட்டிக் காட்டினான்.

ஆனால் ஜெயா வேணு அங்கே இருப்பதையே பொருட் படுத்தவில்லை. அவன் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. பதுமையைப் போல் நின்று கொண்டு காமாட்சியை நேராகப் பார்த்தாள்.

"எவ்வளவு போனால் என்ன? போனது கைக்குத் திரும்பி வரப்போவதில்லை. வீட்டு விஷயங்களை வேற்று மனிதர் களிடம் பேசுவது பண்பு இல்லை. பணம் காணவில்லை என்று உங்களிடம் யாரும் புகார் செய்யவில்லையே." திடமான குரலில் சொல்லிவிட்டு விருட்டென்று திரும்பி உள்ளே போய்விட்டாள்.



"எவ்வளவு திமிராக பேசுகிறாளோ பார்த்தாயா?" காமாட்சிக்குக் கோபம் வந்துவிட்டது.

வேணுவின் உற்சாகம் அப்படியே வடிந்துவிட்டது. ஜெயா தன்னை வேற்று மனிதர்களுடன் ஒப்பிட்டுப் பேசியது அவன் இதயத்தில் ஈட்டியாய்ப் பாய்ந்தது.

காமாட்சி ஜெயாவுக்காக குரல் கொடுத்ததை கேட்டு புருஷோத்தமன் கோபமாக வெளியே வந்தார். ஜெயா ஹாலுக்கு வந்ததை, காமாட்சியிடம் சொன்னதை எல்லாம் கவனித்துவிட்டு திருப்தி அடைந்தவராக மறுபடியும் உள்ளே போய்விட்டார்.

புருஷோத்தமனுக்கு காமாட்சியைப் பார்க்கும் போதெல் லாம் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. வீட்டிலிருந்து அவளை எப்படி வெளியேற்றுவது என்று பலவிதமாக யோசித்துப் பார்த்தார். அவர் என்ன திட்டம் போட்டாலும் அதை முறியடிக்கும் திறமையும், புத்திசாலித்தனமும் காமாட்சிக்கு இருந்தது. எவ்வளவோ எதிர்பார்ப்புகளுடன் ஜெயாவை வீட்டுக்கு அழைத்து வந்தார். காமாட்சி வந்தது முதல் ஜெயா அவருக்கு எட்டாத கனியாகிவிட்டாள். காமாட்சி அவரை நாள் முழுவதும் காவல் காத்துக் கொண்டிருந்தாள். அவளை எதிர்த்துப் பேசும் துணிச்சல் அவருக்கு இருக்கவில்லை. காமாட்சி இப்படி கிராமத்தை விட்டுவிட்டு தன் வீட்டுக்கே வந்து விடுவாள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. ஜெயாவைத் திருமணம் செய்து கொண்டதில் அவருடைய விருப்பம் நிறைவேறாததோடு வீடு முழுவதும் கும்பல் சேர்ந்து விட்டது. பணம் வேறு தண்ணீராக செலவழிந்து கொண்டிருந்தது. அந்தக் கவலையில் அவருக்குத் தூக்கம் கூட வரவில்லை.

* * *

"அத்தை! கதையை பாதியில் நிறுத்திவிட்டாயே. அப்போ அந்த ராஜகுமாரன் என்ன செய்தான்?" பப்லூ சஸ்பென்ஸ் தாங்க முடியாமல் கேட்டான்.

"ராஜகுமாரனா!" ஜெயா கதையை நினைவுப்படுத்திக் கொண்டு சொல்ல ஆரம்பித்தாள். பப்லூவுடன் குட்டியும், கண்ணனும் ஆர்வத்துடன் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஜெயாவுக்கு திடீரென்று கதை சொல்வதில் ஆர்வம் போய்விட்டாற் போல் இருந்தது. வேணு அடிக்கடி இந்த வீட்டுக்கு வருவது, தன்னுடன் பேச வேண்டும் என்று முயற்சி செய்வது, வேணுவுடன் பேசக் கூடாது என்று ஹரி அண்ணன் தன்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டது. . . எல்லாமாக சேர்ந்து அவள் மனதில் நிம்மதி இல்லாமல் செய்துவிட்டன.

லக்ஷ்மி கையில் ரிப்பனுடன் வாசற்படியில் தயங்கிக் கொண்டே நின்று கொண்டிருந்தாள். அதைக் கவனித்த ஜெயா "என்ன வேணும் லக்ஷ்மீ? தலைபின்னி விடணுமா?" என்று கேட்டாள்.

லக்ஷ்மி ஆமாம் என்பது போல் தலையை அசைத்தாளே ஒழிய உள்ளே வரவில்லை. ஜெயா எழுந்து போய் அவளை அழைத்து வந்து பாயில் உட்காரவைத்தாள். சீப்பை எடுத்து அழகாக வாரி பின்னி ரிப்பனை முடிந்தாள்."

நான்கு நாட்களுக்கு முன்னால் காமாட்சி திருநாகம் மாமியின் வீட்டுக்கு அரட்டை அடிக்கப் போயிருந்தபோது லக்ஷ்மி தலைவிரிகோலமாக அழுது கொண்டிருந்தாள். ஜெயா அவளை அழைத்துச் சமாதானப்படுத்தி எண்ணெய் தடவி வாரி இரட்டை பின்னல் போட்டுவிட்டாள். சிவப்பு ரிப்பனை அழகாக ரோஜாபூ போல் முடிச்சு போட்டு விட்டதும்



லக்ஷ்மிக்கு ஒரே கொண்டாட்டமாக இருந்தது. கண்ணாடியில் தன்னுடைய தோற்றத்தைப் பார்த்துவிட்டு குதித்து கும்மாளம் போட்டாள்.

காமாட்சி வீடு திரும்பியதும் "அம்மா! என்னுடைய பின்னலைப் பாரேன்" என்று காண்பித்தாள்.

"போதுமே. யார் உனக்கு இந்த வேஷமெல்லாம் போட்டு விட்டது? இந்த வயதிலிருந்தே தளுக்கும் குலுக்கும் கற்றுக் கொண்டால் பெரியவளான பிறகு குமரனோ கிழவனோ பாரபட்சம் பார்க்காமல் வலைவீசி கைக்குள் போட்டுக் கொள்ளலாம்" என்று வசைபாடிவிட்டு முதுகில் இரண்டு கொடுத்தாள். அதே வேகத்தில் பின்னலை அவிழ்த்துவிட்டு இறுக்கமாக ஒற்றை பின்னலை போட்டுவிட்டு தேள் கொடுக்கு போல் தூக்கிக் கட்டி விட்டாள். லக்ஷ்மிக்கு தலைவாரிப் பின்னும் போதும் ஜெயாவை மறைமுகமாக ஏசிக் கொண்டே இருந்தாள்.

குழந்தைகள் வந்த புதிதில் ஜெயாவை வேண்டுமென்றே கலாட்டா செய்து தொல்லை கொடுத்தார்கள். ஆனால் ஜெயா பப்லூவை அன்பாக கவனித்துக் கொள்ளும் பாங்கு, கதைகளைச் சொல்லி சாப்பாடு ஊட்டிவிடும் நேர்த்தி எல்லாம் பார்த்தபிறகு மெள்ள மெள்ள அவள் பக்கம் ஈர்க்கப் பட்டார்கள். முதலில் ஜெயாவை எப்படி அழைப்பது என்று அவர்களுக்குப் பிரச்னையாக இருந்தது. பப்லூ அழைப்பது போல் 'அத்தை' என்று அழைக்கச் சொல்லி காமாட்சி சொல்லித் தந்தாள். 'அத்தை' என்று அழைப்பதைக் கேட்டு புருஷோத்தமன் எரிந்து விழுந்தார். முதுகில் இரண்டு போட்டுவிட்டு "சித்தீ" என்று அழைக்கச் சொன்னார். 'சித்தீ!' என்று அழைத்தால் காமாட்சி "அவள் உங்களுக்கு சித்தியா என்ன?" என்று தலையில் குட்டினாள்.

குழந்தைகள் மூவரும் ஒன்றாக சேர்ந்து கொண்டு ஒரு மனதாக முடிவு செய்து "ஜெயா" என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

ஜெயாவுக்கு அவர்களைப் பார்க்கும்போது இரக்கம்தான் ஏற்பட்டது. புருஷோத்தமன் ஒருநாளும் அவர்களை அன்புடன் நடத்தியதில்லை. காமாட்சி குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குக் காரணம் புருஷோத்தமன் மீது அதிகாரத்தை நிலைநாட்டும் எண்ணம்தானே தவிர அன்பு இல்லை. காரணமே இல்லாமல் அவர்களை அடிப்பாள். 'குழந்தைகள் மலர்களைப் போன்றவர்கள். சின்ன வயதில் அவர்களுக்கு அன்பும், ஆதரவும் இருப்பது ரொம்ப முக்கியம்' அண்ணியின் வார்த்தைகள் அவள் நினைவுக்கு வந்தன.

பப்லூவுடன் அவர்களையும் ஜெயா ஆதரிக்கத் தொடங்கினாள்.

* * *

"ஹரி! இனி அந்தப் பணத்தைப் பற்றிப் பேச்சை எடுக்காதே." கவிதா கோபித்துக் கொள்வதுபோல் சொன்னாள்.

"நீ கொடுத்த பணத்தை பயன்படுத்திக் கொள்ளாததோடு தொலைத்தும்விட்டேன்." ஹரியின் குரலில் வருத்தம் இழையோடியது.

"பயன்படக்கூடிய கொடுப்பினை இல்லாததால்தான் தொலைந்துவிட்டது. அந்தப் பேச்சை இனி விட்டுவிடு."

"என்னிக்காவது உன் கடனைத் தீர்த்து விடுகிறேன்."

"அந்தப் பேச்சுதான் வேண்டாம் என்று சொல்லி விட்டேனே."

இருவரும் பார்க்கில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள்



அங்கே வந்து ரொம்ப நேரமாகிவிட்டது போல் கூடையில் காலி பிஸ்கெட் பாக்கெட்கள், வாழைப் பழத்தோல்கள் கிடந்தன. கவிதா கீழே இருந்த காலி கோப்பைகள், பிளாஸ்க் எல்லாவற்றையும் எடுத்து கூடையில் அடுக்கி வைத்தாள்.

"மணி என்ன ஆச்சு கவிதா?"

"நாலு மணி."

"இனி கிளம்புவோமா?"

"ரயிலுக்கு இன்னும் நேரம் இருக்கிறது. அரைமணி நேரம் கழித்துக் கிளம்பினாலும் போதும்." கவிதா சொன்னாள்.

பெங்களூர் தமிழ்ச்சங்கம் நாடகக் கம்பெனிக்காரர்களை கௌரவிக்கும் வகையில் விழா ஏற்பாடு செய்திருந்தது. அதனால் திரும்பி வரும்போது பெங்களூருக்கு மறுபடியும் வர வேண்டியதாகிவிட்டது. விழா காலையிலேயே முடிந்து விட்டது. கவிதா ஹரி தெரிவித்தபடி அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள். ரயில் மாலை ஆறுமணிக்கு என்பதால் கவிதா கூடையில் பழங்கள், பிஸ்கெட், பிளாஸ்கில் காபியுடன் வந்துவிட்டாள். இருவரும் சேர்ந்து பார்க்கிற்கு வந்தார்கள். ஹரி ஜெயாவுக்குத் திருமணம் நடந்த கதையை, பணம் காணாமல் போன சமாசாரத்தை விலாவாரியாக தெரிவித்தான்.

மூன்று மணி நேரம் போனதே தெரியவில்லை. கவிதாவுக்கு ஹரியுடன் மனம் விட்டுப் பேசினாற்போலவே இல்லை. வீட்டுக்கு வந்து இரண்டு மூன்று நாட்கள் தங்கிவிட்டு போகலாம் என்று கவிதா வற்புறுத்தினாள். ஆனால் ஹரி சம்மதிக்கவில்லை. தான் பெங்களூருக்கு வந்த விஷயமே வீட்டில் சொல்ல வேண்டாம் என்றும், தன் பெயரைக் கூட வீட்டில் பிரஸ்தாபிக்கக் கூடாது என்றும் கவிதாவிடம் சத்தியம் வாங்கிக் கொண்டான்.

கூடையில் எல்லாவற்றையும் எடுத்து வைத்த பிறகு கவிதா தன்னையும் அறியாமல் பெருமூச்சு விட்டாள்.

"என்ன ஆச்சு கவிதா? என்னவோ போல் இருக்கிறாயே?"

"எப்படி இருக்கிறேன்?"

"வந்த போது இருந்த உற்சாகம், சந்தோஷம் இப்போது இல்லை."

கவிதா வியப்படைந்தாள். "கண்ணால் பார்த்தது போல் பேசுகிறாயே. சில சமயம் உனக்குக் கண் பார்வையில்லை என்ற விஷயம் பொய்யாக இருக்குமோ என்று நினைக்கத் தோன்று கிறது. ஹரீ! உன்னை ஒரு விஷயம் கேட்கட்டுமா?"

"கேளேன்."

"எதிராளிக்கு உன்னிடம் என்ன அபிப்பிராயம் இருக்கோ, உனக்கு எப்படி தெரியும்?"

"இதே கேள்வியை நான் உன்னிடம் கேட்டால் உன்னுடைய பதில் என்னவாக இருக்கும்?"

"என்னால் எதிராளியைப் பார்க்க முடியும். அவர் களுடைய முகத்தில் தோன்றும் உணர்ச்சிகளை வைத்துப் புரிந்து கொள்வேன்."

ஹரி முறுவலித்தான். "உங்களுக்குக் கண்பார்வை எவ்வளவு முக்கியமோ எனக்கு ஒலி அவ்வளவு முக்கியம். கண்ணால் பார்த்து நீங்கப் புரிந்து கொள்வது போல் காதால் ஒலியைக் கேட்டு கிரகித்துக் கொள்வேன். ஒரு மனிதன் நல்லவனா கெட்டவனா என்று முதல் பார்வையிலேயே புரிந்து கொள்வது போல் பேச்சுக் குரல் கேட்டு என்னால் உணர முடியும்."

கவிதா பதில் சொல்லவில்லை. கண் இமைக்காமல்



அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இவ்வளவு அழகான முகத்தைக் கொடுத்த அந்தக் கடவுள் கண் பார்வையைக் கொடுக்க மறந்து போனதேன்? இந்த உலகத்தில் நடக்கும் கொடுமைகள் எதையும் பார்க்காததால் ஹரியின் முகம் இவ்வளவு நிர்மலமாக இருக்கிறதோ என்னவோ?

"கவிதா! உன்னுடைய அழைப்பை ஏற்று உங்கள் வீட்டுக்கு வரவில்லை என்று தவறாக நினைக்கமாட்டாய் இல்லையா?"

"காரணத்தை வெளிப்படையாக சொன்னால் நான் ஒன்றும் தவறாக நினைத்துக் கொள்ளமாட்டேன்."

ஹரி பதில் சொல்லவில்லை. மரத்தின் மீது இருக்கும் பறவைகளின் சத்தத்தை உன்னிப்பாக கேட்பது போல் மௌனமாக இருந்துவிட்டான்.

"நீ சொல்லாவிட்டாலும் அசல் காரணம் எனக்குத் தெரியும்."

"என்ன காரணம்?"

"சுந்தரியை சந்திக்க வேண்டியிருக்கும் என்றுதான் நீ வர மறுக்கிறாய். அப்படித்தானே?"

"கவிதா! என்னை மன்னித்துவிடு. நீ என்னிடம் காட்டும் அன்பை, ஆதரவை என்னால் மறக்க முடியாது. என் மனதை கலங்கச் செய்யும் விஷயங்களைப் பேச வேண்டாம் ப்ளீஸ்."

"உன் வேதனைக்கு அர்த்தமே இல்லை ஹரி. சுந்தரி ஒரு நாளும் உனக்கு மதிப்பு தந்து பேசியதில்லை. உன்னைப் பற்றி என்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறாளோ, சொல்லட்டுமா?"

"உனக்கு. . . உனக்குத் தெரியுமா?" தாழ்ந்த குரலில் கேட்டான். அவன் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது.

என்ன இருந்தாலும் அக்கா தங்கை போல் ஒரே வீட்டில் இருப்பவர்கள். மனம் திறந்து பேசிக் கொள்ளாமல் இருப்பார்களா?

"தெரியும். உன்னைவிட எனக்குத்தான் தெரியும்."

"அப்படி என்றால் சொல்லு."

"கேட்டு உன்னால் தாங்கிக் கொள்ள முடியுமா?"

"முடியும் என்றுதான் நினைக்கிறேன்."

"அப்படி என்றால் கேட்டுக் கொள். தொடக்கத்தில் எனக்கு நீ யாரென்றே தெரியாது. சுந்தரி ஒருநாள் ஒரு போட்டோவைக் கொண்டு வந்து காண்பித்தபோது கூட படிக்கும் மாணவனாக இருக்குமோ என்று நினைத்தேன். 'கவிதா! எப்படி இருக்கிறானோ பார்த்துச் சொல்லு' என்றாள். 'யாருடைய போட்டோ இது?' என்று கேட்டேன். ஒரு நிமிடம் போனால் அவளே வர்ணனையை ஆரம்பிப்பாள் என்று எனக்குத் தெரியும்.

சுந்தரி பெருமை பொங்கும் குரலில் "இந்த இளவரசியின் மற்றொரு ரசிகன். . . சேவகன். அழகாக இருக்கிறானா இல்லையா? அதைச் சொல்லு முதலில்" என்றாள்.

"உண்மையைச் சொல்லணும் என்றால் அவன்தான் இளவரசன்போல் இருக்கிறான். அவன் முன்னால் நீ சேடிப் பெண் போல் இருக்கிறாய்" என்றேன்.

"ச்சி. . . ச்சீ. . . இந்தக் குருடனுடன் என்னை ஒப்பிடுவதாவது?" முகத்தைச் சுளித்தாள்.

"என்ன? பார்வை இல்லாதவனா?" அவள் கையிலிருந்த போட்டோவை பிடுங்கிக் கொண்டு மறுபடியும் பார்த்தேன். என்னால் நம்பவே முடியவில்லை.



"ஆமாம் கவிதா. நான்தான் அவனுக்கு கூலிங் கிளாஸ் மாட்டிவிட்டேன். ஸ்டைலாக கிராப் வாரிவிட்டேன்." என்றாள்.

அதற்குப் பிறகு பேசும்போது உன் பெயர் ஹரி என்றும், சுகுணா அக்காவின் மைத்துனன் என்றும் தெரிவித்தாள். நீ அவளை ரொம்பவும் விரும்புவதாகவும், கடிதங்களை எழுதச் சொல்லி தொல்லை கொடுப்பதாகவும் சொன்னாள். சினிமா டிராமா என்று சினேகிதிகளுடன் ஊர் சுற்றுவதில் பிசியாக இருந்த சுந்தரிக்கு உன்னுடைய கடிதங்களைப் படிக்கும் அளவுக்கு நேரமோ, பொறுமையோ இருந்தது இல்லை. உன்னுடைய கடிதங்களை பத்திரமாக எடுத்து வைத்து அவள் ஃப்ரீயாக இருக்கும்போது கையில் கொடுத்து படிக்கச் சொன்னால் அலட்சியமாக சிரிப்பாள். "நீயே படி. கேட்டுக் கொள்கிறேன்" என்பாள். என்ன பதில் எழுத வேண்டுமோ சொல்லிவிட்டு என்னை எழுதிப் போடச் சொல்லுவாள். ஆரம்பத்தில் சும்மா உன்னை அழவைப்பதற்காக, பொழுது போக்காக நானும் ஆர்வம் காண்பித்தேன். ஆனால் போகப் போக நீ எழுதிய கடிதங்களைப் படிக்கும்போது எனக்கு தயக்கமும் பயமும் ஏற்பட்டது. சுயமாக கடிதம் எழுதமுடியாத உன்னுடைய இயலாமை, மற்றவரின் தயவை நாடும்போது ஏற்படும் சிறுமை எல்லாம் நினைத்துப் பார்க்கும்போது எனக்கு என்னவோ போல் இருந்தது. உன்னை ஏமாற்றுவதில் எனக்கு விருப்பம் இல்லை. இனி பதில் எழுதப் போவதில்லை என்று பிடிவாதம் படித்தேன். "ஆல்ரைட். எழுதாதே. கடிதம் வரவில்லை என்றால் அவனே எதிர்பார்ப்பதை விட்டு விடுவான். விதியை நொந்து கொண்டு மனதை தேற்றிக் கொள்வான்" என்றாள். சுந்தரியின் சார்பில் நான் பதில் போடுவதை நிறுத்திவிட்டாலும் உன்னிடமிருந்து கடிதங்கள் வருவது நிற்கவில்லை. அந்தக் கடிதங்களைப் படிக்கக்கூடாது

என்றுதான் நினைப்பேன். சுந்தரி அவற்றை படிக்கவே மாட்டாள். பிரிக்காமலேயே கிழித்துப் போட்டு விட வேண்டும் என்றுதான் நினைப்பேன். ஆனால் என் மனம் ஒப்பவில்லை. இதுதான் கடைசி என்று நினைத்துக் கொண்டே ஒவ்வொரு தடவையும் பதில் எழுதி வந்தேன். உன்னை ஏமாற்றி வருகிறேன் என்ற குற்ற உணர்ச்சியில் எத்தனையோ இரவுகள் தூக்கம் வராமல் தவித்து வந்தேன். ஒரு தடவை சுந்தரியின் தாய் அந்தக் கடிதங்களைப் பார்த்துவிட்டாள். மகளிடம் கேட்ட போது சும்மா விளையாட்டுக்காக செய்ததாக சொன்னாள். மாமி என்னையும், சுந்தரியையும் நன்றாக திட்டினாள். அத்துடன் கடிதங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது."

"அந்தக் கடிதங்களை எழுதியது நீயா? எனக்கும் சுந்தரிக்கும் தவிர மூன்றாவது நபருக்குத் தெரியாத விஷயங்களை உன்னால் எப்படி எழுத முடிந்தது?" நம்ப முடியாதவன் போல் தயங்கிக் கொண்டே கேட்டான்.

"சுந்தரி என்னிடம் சொன்னாள். நீயும் அவளும்..."

"வேண்டாம் கவிதா. இனி எதுவும் சொல்லாதே. சுந்தரி அந்த விஷயங்களை கூட உன்னிடம் சொன்னாள் என்றால்..." அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

"சுந்தரி உன்னுடைய நட்பை எவ்வளவு விளையாட்டாக எடுத்துக் கொண்டாளோ உனக்குத் தெரியவேண்டும் என்பதற்காக இதையெல்லாம் சொல்ல வேண்டியதாகிவிட்டது."

"கேட்ட வரையிலும் போதும். மேற்கொண்டு எதுவும் சொல்லாதே."

"அதான் கேட்டால் தாங்கிக் கொள்வாயா என்று கேட்டேன்."

"அந்த தைரியம் எனக்கு இருக்குன்னு நினைத்தேன்." ஹரி



முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். அவன் மனம் முழுவதும் அருவருப்பு நிரம்பியிருந்தது. இதுநாள் வரையில் புனிதமாக கருதியிருந்த நினைவுகள் இப்போது தலைகுனிவு ஏற்படுத்துவதாக இருந்தன. எவ்வளவு முட்டாளாக இருந்து விட்டான்? சுந்தரியின் எண்ணத்தை, சுபாவத்தை தன்னால் எப்படி உணரமுடியாமல் போயிற்று? எந்த மயக்கம் தன்னை ஆட்டி வைத்தது?

ஐந்து நிமிடங்கள் கழிந்தன. தான் இப்படி உண்மையை வெளிப்படுத்தியது சரியா தவறா என்ற குழப்பம் கவிதாவை அலைக்கழித்தது.

"ஹரி!" மென்மையான குரலில் அழைத்தாள்.

அவன் பதில் சொல்லவில்லை.

"ஹரி!" அருகில் வந்தாள்.

மனம் குன்றிப்போய்விட்டவன் போல் அமர்ந்திருந்தானே தவிர தலை நிமிரவில்லை. கவிதா அவன் தோளில் கையைப் பதித்தாள்.

ஹரி தலையை உயர்த்தினான். சட்டென்று தன் விரலில் இருந்த மோதிரத்தை எடுத்து கவிதாவின் கையைப் பற்றி உள்ளங்கையில் வைத்து மூடிவிட்டான். "கவிதா! நேரமாகி விட்டது. கிளம்புவோம்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து கொள்ளப்போனான்.

கவிதா அவனை வலுக்கட்டாயமாக மறுபடியும் உட்கார வைத்தாள். "என் மீது கோபம் வந்துவிட்டதா?"

"கோபமா... உன் மீதா... எதுக்கு?"

"இந்த உண்மையை வெளிப்படுத்தியதற்கு. உன்னுடன் இவ்வளவு பழக்கம் ஏற்பட்ட பிறகு உண்மையைச் சொல்

லாமல் என்னால் இருக்க முடியவில்லை. சுந்தரியின் காரண மாக நீ வேதனையை அனுபவித்து வருவதை பார்க்கும் போது என்னால் மௌனமாக இருக்க முடியவில்லை."

ஹரி தலையைக் குனிந்து கொண்டான்.

"உன் மீது எனக்கு எந்த கோபமும் இல்லை கவிதா. நான்தான் முட்டாள்தனமாக, விவேகமில்லாமல் ஆசைகளை வளர்த்துக் கொண்டுவிட்டேன். அதை நினைக்கும் போதுதான் வெட்கப்படுகிறேன்."

"இதில் வெட்கப்பட வேண்டியது என்ன இருக்கு?"

"ஏன் இல்லை? சுந்தரி மட்டுமே இல்லை. எந்தப் பெண்ணாக இருந்தாலும் எதைப் பார்த்து என் பக்கம் ஈர்க்கப் படுவாள்? இந்த ஞானம் எனக்கு ஏன் இல்லாமல் போய் விட்டது?" தன்னையே நொந்து கொள்வது போல் சொன் னான். சுய அபிமானம் தாக்கப்பட்ட வேதனை அவன் முகத்தில் பிரதிபலித்தது.

"இதில் எனக்கும் பங்கு இருந்ததால் உண்மையைச் சொல்லி விட்டேன். ஆனால் இப்போ உன்னைப் பார்க்கும் போது அப்படி வெளிப்படுத்தி இருக்கக் கூடாதோ என்று தோன்றுகிறது."

"இல்லை கவிதா. உண்மையைச் சொல்லி மிக நல்ல காரியம் செய்தாய். இந்த விஷயத்தில் வாழ்நாள் முழுவதும் நான் உனக்கு நன்றிக் கடன்பட்டிருப்பேன்." ஹரி எழுந்து கொண்டான்.

கவிதா வலுக்கட்டாயமாக அவன் கையைப் பற்றிக் கொண்டு மறுபடியும் மோதிரத்தை அணிவிக்கப் போனாள்.

"என்னை மன்னித்துவிடு கவிதா." ஹரி கையை விடுவித்துக் கொண்டான்.



"உண்மையைச் சொன்னதற்கு எனக்கு இந்தத் தண்டனையா?"

"அப்படிச் சொல்லாதே ப்ளீஸ்."

"பின்னே நட்பின் சின்னமாக நான் கொடுத்த பரிசை ஏன் மறுக்கிறாய்?"

"நட்பு, அன்பு போன்றவற்றைப் பெறும் தகுதியும், அதிர்ஷ்டமும் எனக்கு இல்லை கவிதா. கிளம்புவோம்."

இருவரும் பார்க்கை விட்டு வெளியே வந்தார்கள். இனம் புரியாத திரை ஏதோ இருவருக்கும் இடையே நிலவியது. முன்பின் தெரியாதவர்கள் போல் மௌனமாக நடக்கத் தொடங்கினார்கள். கவிதாவுக்கு மனதில் இருந்த பாரம் குறைந்தது போல் இருந்தாலும் வேறுவிதமாக யோசித்துப் பார்க்கும் போது மேலும் பாரமாகிவிட்டது போல் இருந்தது. அவள் பயந்தது போலவே ஹரி நத்தையை போல் தன்னை ஒடுக்கிக் கொண்டுவிட்டான். அவன் முகத்தில் சிரிப்பும், உற்சாகமும் காணாமல் போய்விட்டன.

"இங்கே டாக்ஸீ ஏதாவது கிடைக்குமா?" ஹரி கேட்டான்.

"ஹரி! ஒரு நிமிஷம் வெயிட் பண்ண முடியுமா? எதிரே இருக்கும் கடையில் எனக்கு சின்ன வேலை இருக்கு. மாமி கடியாரத்தை ரிப்பேர் செய்யக் கொடுத்திருக்கிறாள். அதை வாங்கிக் கொண்டு போகணும். வீட்டைவிட்டுக் கிளம்பும் போது கூட நினைவுப்படுத்தினாள். பத்துநிமிடங்கள் கூட ஆகாது. முதலில் அங்கே போய்விட்டு பிறகு ஸ்டேஷனுக்குப் போவோமா?" கவிதா கேட்டாள்.

"இங்கிருந்து கடை எவ்வளவு தூரம்?"

"எதிரே தென்படும் சந்து முனையில்."

"கூட நானும் வருவானேன்? மறுபடியும் நான் ரோட்டை கிராஸ் செய்யணும். நீ போய் எடுத்துக்கிட்டு வா. நான் இங்கேயே நிற்கிறேன்."

"புது இடம். உன்னால் தனியாக இருக்க முடியுமா?"

"கொஞ்ச நேரம்தானே. பரவாயில்லை."

"ஐந்து நிமிடங்களில் வந்து விடுகிறேன்."

"பத்து நிமிடங்கள் ஆனாலும் பரவாயில்லை, போய் வா."

கவிதா கிளம்பிப் போனாள். ஹரி சாலையில் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தான். அத்தனை வேதனையிலும் அந்தக் கடிதங்களை கவிதா எழுதினாள் என்ற விஷயம் அவன் மனதிற்கு இனம் புரியாத நிம்மதியைத் தந்தது. பேச்சில், சுபாவத்தில் சுந்தரிக்கும், கவிதாவுக்கும் நிறைய வேறுபாடு இருப்பதை அவன் மனம் எப்பொழுதோ உணர்ந்துவிட்டது.

கவிதா கடியாரத்தைப் பெற்றுக் கொண்டு நூறுரூபாய் நோட்டாக கொடுத்தாள். முதலாளியிடம் சில்லரை இல்லாததால் கடைப் பையனை பக்கத்துக் கடைக்கு அனுப்பி வைத்தார். "ஒரு நிமிடம் இருங்க. பையன் வந்ததும் மீதியைத் தந்து விடுகிறேன்." கவிதாவிடம் சொன்னார்.

சில்லரை வாங்கி வருவதற்காக போன பையன் அம்பு போல் வேகமாக திரும்பி வந்தான். "சார்! கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாக வரும்போது யாரோ கல்லை எறிந்தார்களாம். ஒரே அடிதடி ரகளை; மூன்றாவது கடையில் நாற்காலி கண்ணாடிகள் எல்லாம் உடைத்து விட்டார்கள்." மூச்சு இறைக்க இறைக்க எப்படியோ சொல்லி முடித்தான்.

அதைக் கேட்டதும் முதலாளி கலவரமடைந்தார். "டேய்! யாருடா அங்கே? முதலில் ஷட்டர்ஸை இறக்கிவிடுங்க." சத்தம்



போட்டார். ஏற்கனவே மாணவர்களின் கும்பல் அந்தத் தெருவில் நுழைந்துவிட்டது. அவர்களை துரத்திக் கொண்டு போலீசாரும் வந்து கொண்டிருந்தார்கள்.

"நான் உடனே போகணும். சாலையில் எனக்குத் தெரிந்தவரை நிற்க வைத்துவிட்டு வந்திருக்கிறேன். அவருக்குக் கண் பார்வை வேறு இல்லை." கவிதா வேகமாக வாசலை நோக்கி ஓடினாள். ஏற்கனவே ஷட்டர்களை இறக்கி விட்டார்கள்.

"திறந்து விடுங்க. நான் வெளியில் போகணும்." கவிதா கத்தினாள்.

"இப்போ வெளியில் போனால் ஆபத்து. கொஞ்சம்நேரம் கழித்துப் போகலாம்." கடை முதலாளி வயதானவர், கவிதாவை எச்சரித்தார். பெரிய ரகளை நடப்பது போல் வெளியிலிருந்து கூச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. கவிதா திகைத்துப் போனவளாய் அப்படியே நின்றுவிட்டாள்.

கவிதாவின் வருகைக்காக காத்திருந்த ஹரிக்கு, தொலைவிலிருந்து ஏதோ ஊர்வலம் அந்தப் பக்கமாக வருவதுபோல் சத்தம் கேட்டது. இரண்டடி பின்னால் நகர்ந்து ஓரமாக நின்று கொண்டான்.

ஊர்வலம் நெருங்கிவிட்டதுபோல் முழக்கமிடும் சத்தம் கேட்டது. திடீரென்று யாரோ யாரையோ தாக்குவது போல் பெரும் கூச்சல். . . அதைத் தொடர்ந்து கடைகளை மூடுவது போன்ற சத்தம் கேட்டது. மக்கள் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். யாரோ அவன் மீது மோதினார்கள். "ஓடு. . . ஓடு. . . போலீஸ்காரங்க அடிக்க வர்ராங்க." அவனை தோளைப் பிடித்து முன்னால் தள்ளிவிட்டார்கள். கீழே விழப்போனவன் எப்படியோ சமாளித்துக் கொண்டான்.

அதற்குள் யாரோ அவனை மறுபக்கம் தள்ளிவிட்டார்கள். நடுக்கடலில் சுழலில் சிக்கிவிட்ட மனிதன் போல் தத்தளித்தான். "சார்! எனக்குக் கண் தெரியாது. கொஞ்சம் கையைப் பிடித்து அழைத்துப் போக முடியுமா?" அவனுடைய வேண்டுகோள் யாருடைய காதிலும் விழவில்லை.

மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று அவன் கால்களில் பலமாக லாட்டி அடி விழுந்தது. அப்படியே குப்புற விழுந்தான். சாலையில் நீட்டிக் கொண்டிருந்த கல் ஒன்று நெற்றியில் ஆழமாக குத்தியது. உள்ளங்கைகளில் உடைந்து போன கண்ணாடித் துண்டுகள் பலமாக பதிந்தன. "அம்மா!" அவனுடைய கத்தல் அந்த ரகளையில் கலந்து போய்விட்டது. மக்கள் அவனைத் தாண்டிக் கொண்டும், மிதித்துக் கொண்டும் ஓடினார்கள்.

* * *

## 11

ஹரிக்கு லேசாக விழிப்பு வந்தது. மயக்கத்திலிருந்து விடுபட பெரும் முயற்சி செய்தான். ஒரு நிமிடம் தான் எங்கே இருக்கிறோம் என்றோ, என்ன நடந்தது என்றோ உடனே நினைவுக்கு வரவில்லை.

அங்கே இங்கே மனிதர்கள் நடமாடும் ஓசை. . . தாழ்ந்த நிலையில் பேச்சுக் குரல்கள், மருந்துகளின் நெடி எல்லாமாக சேர்ந்து அவனை மேலும் குழப்பிவிட்டன.

"ஹரி!" யாரோ அவனை மென்மையான குரலில் அழைத்தார்கள்.



"ஊம்." முனகினான்.

"ஹரீ!" இந்த உலகில் இருக்கும் அன்பு முழுவதும் அந்தக் குரலில் வெளிப்பட்டது.

"யாரு?" மயக்கத்திலிருந்து விடுபட முயற்சி செய்து கொண்டே கேட்டான்.

"நான்தான் கவிதா. உனக்கு நன்றாக விழிப்பு வந்து விட்டதா?"

ஹரி எழுந்து கொள்ளப் போனான். "கவிதா! நான் எங்கே இருக்கிறேன்? என்ன ஆச்சு எனக்கு? " திடீரென்று எழுந்து கொண்டதில் தலை சுற்றுவது போல் இருந்தது. "அம்மா!" என்றபடி அவன் பின்பக்கமாக விழப் போனான். கவிதா சட்டென்று தாங்கி, மெதுவாக அவனைப் படுக்க வைத்தாள். அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நினைவுக்கு வந்தது. கடைத் தெருவில் கவிதாவுக்காக தான் காத்திருந்தபோது ஊர்வலம் ஒன்று அந்தப் பக்கமாக வந்தது. . . திடீரென்று கலவரம் ஏற்பட்டது... தன்னை யாரோ தள்ளிவிட்டதில் கீழே விழுந்து நெற்றியில் அடிபட்டது. . . எல்லாம் நினைவுக்கு வந்தன.

"கவிதா!" என்று அழைத்தபடி நெற்றியில் இருந்த கட்டைத் தடவிப் பார்ப்பதற்காக கைகளைத் தூக்கப் போனான். இரண்டு கைகளிலும் கட்டு போடப்பட்டிருப்பது போல் பாரமாக இருந்தன. கையை அசைக்க முயன்றபோது தாங்க முடியாத வேதனை ஏற்பட்டது. ஒரு நிமிடம் குழம்பி விட்டான். அடுத்த நிமிடம் அவன் பயத்தினால் பதறி விட்டான்.

சட்டென்று எழுந்து கொண்டான். "கவிதா! என்ன நடந்தது? என் கைகளுக்கு என்ன ஆச்சு? ரொம்ப அடிபட்டு விட்டதா?"

"அடி ஒன்றும் படவில்லை. நீ ஓய்வு எடுத்துக்கொள்." கவிதா அவன் தோள்களை பற்றி பின்னால் படுக்க வைக்கப் போனாள். ஆனால் சாத்தியப்படவில்லை.

"கவிதா! உனக்குத் தெரியாது. என் வாழ்க்கைக்கு கைகள்தான் ஆதாரம். வயலினை வாசிக்க முடியாது என்றால் நான் நடை பிணமாகிவிடுவேன். நான் ஒருத்தன் மட்டுமே இல்லை. அண்ணன், பப்லூவின் பொறுப்பும் என் மீது இருக்கிறது. அவர்களை பத்திரமாக பார்த்துக் கொள்வதாக அண்ணிக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன்." ஹிஸ்டீரியா வந்தவன் போல் சொன்னான்.

கவிதா சட்டென்று அவனை சிறுகுழந்தையை அணைத்துக் கொள்வது போல் மார்போடு அணைத்துக் கொண்டாள். "பயப்படத் தேவையே இல்லை ஹரீ. உன் கைகளுக்கு ஒன்றும் ஆகவில்லை. அதிர்ஷ்டவசமாக அடி பலமாக படவில்லை. உன் கைகளில் குத்திய கண்ணாடித் துண்டுகளை நீக்கிவிட்டு டாக்டர் கட்டு போட்டிருக்கிறார். நான்கு நாட்களில் காயம் ஆறிவிடும். நீ பதட்டப்படாமல் ஓய்வு எடுத்துக் கொண்டால் இன்னும் சீக்கிரமாகவே தேவலையாகிவிடும். என் பேச்சை நம்பு."

"நான் இங்கே வந்து எவ்வளவு நேரம் இருக்கும்?"

"ஏறத்தாழ இருபத்திநாலு மணிநேரம்."

"ஒருநாள் ஆகிவிட்டதா? என்னுடைய வயலின்?"

"பத்திரமாக எடுத்து வைத்திருக்கிறேன் ஹரீ! சுவாமிநாதன் மாமாவைச் சந்தித்து உன் ஆக்ஸிடெண்ட் விஷயத்தைச் சொன்னேன். அவரும் இத்தனை நேரம் இங்கேதான் இருந்தார். மருந்துகள் வாங்கிவருவதற்காக வெளியே போயிருக்கிறார். கவலைப்படாமல் இரு."



கவிதாவின் குரலைக் கேட்கும் போது ஹரி ரொம்ப நாட்களுக்கு பிறகு அண்ணியின் அருகாமையில் இருப்பது போல் நிம்மதியாக உணர்ந்தான். நயமான அவளுடைய பேச்சில் ஏதோ தைரியம் கிடைத்து விட்டது போல் இருந்தது.

நான்கு நாட்கள் கழிந்தன. கவிதா மாலை வேளையில் பிளாஸ்கில் காபி, கூடையில் பழம், பிஸ்கெட் முதலியவற்றை எடுத்துக் கொண்டு நர்ஸிங் ஹோமுக்குள் நுழைந்தாள்.

ஹரி கட்டில் மீது அமர்ந்து கொண்டு பக்கத்து கட்டிலில் இருந்த நோயாளியுடன் பொதுவாக பேசிக் கொண்டிருந்தான்.

"எப்படி இருக்கிறாய் ஹரி?" கவிதா கேட்டாள்.

"நன்றாகவே இருக்கிறேன். ஆஸ்பத்திரியிலிருந்து எப்போடப்பா வெளியேறுவேன் என்று இருக்கு."

கவிதா டம்ளரில் காப்பியை ஊற்றி அவனிடம் கொடுத்தாள்.

"சுவாமிநாதன் மாமாவுடன் என்னையும் ஊருக்கு அனுப்பியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்போ பாரு. உனக்கு எவ்வளவு சிரமம்?" ஹரி காபியைக் குடித்துக் கொண்டே சொன்னான்.

ஹரியின் கைக்கட்டை அவிழ்த்துவிட்டார்கள். வலது முழங்கையில் ஏற்பட்ட காயத்தைத் தவிர மற்ற காயங்கள் முழுவதுமாக குணமாகி விட்டன. இன்னும் ஒரு வாரத்தில் எல்லாம் சரியாகிவிடும் என்று டாக்டர் தெரிவித்தார்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் சுவாமிநாதன் கிளம்பிப் போய்விட்டார். தானும் அவருடன் கிளம்புவதாக ஹரி சொன்னான். ஆனால் கவிதா சம்மதிக்கவில்லை. டாக்டருடன் பேசிவிட்டு ஹரிக்கு முழுவதுமாக குணமாகும் வரையில் நர்ஸிங் ஹோமிலேயே இருப்பதற்கு ஏற்பாடு செய்தாள்.

கவிதாவின் அன்பான உபசரிப்பு இதமாக இருந்தாலும் அவளுக்கு மேலும் சிரமம் தருவதில் ஹரிக்கு விருப்பம் இல்லை.

"டாக்டரிடம் சொல்லி என்னை சீக்கிரமாக டிஸ்சார்ஜ் செய்யச்சொல்லு. அங்கே அண்ணாவுடன் ஜெயா தனியாக அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பாள்." ஹரி கவிதாவிடம் சொன்னான்.

"தேவைக்கு மேல் ஒரு நிமிடம் கூட உன்னை இங்கே இருக்க விடமாட்டேன். ஜெயாவிடமிருந்து கடிதம்தான் வந்துவிட்டதே. எல்லோரும் நலமாக இருப்பதாகவும், தங்களைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்றும் எழுதியிருந்தாள் இல்லையா? நீ எதைப் பற்றியும் கவலைப் படாமல் நிம்மதியாக இரு." கவிதா ஹரியைச் சமாதானப் படுத்தும் வகையில் சொன்னாள்.

அதற்குள் அந்த அறையில் யாரோ பெண்மணி நுழைவது போல் புடவையின் சலசலப்பும், கை வளைகளின் சத்தமும் கேட்டன.

பக்கத்து பெட்டில் இருந்த நோயாளியின் தாய் "விசாலம் மாமியா... வாங்க வாங்க" என்று வரவேற்கும் குரல் கேட்டது.

"மகளுக்கு இப்போ எப்படி இருக்கு?" என்று உடல் நலனை விசாரித்தபடி அந்தப் பக்கமாக போகப் போன அந்த மாது திடீரென்று ஹரியின் கட்டில் அருகில் நின்றாள்.

"கவிதா! நீ இங்கே இருக்கிறாயே? யார் இந்தப் பையன்? அட... சுகுணாவின் மச்சினன் ஹரி இல்லையா?" வியப் படைந்தவளாய் கேட்டாள் அந்த மாது.

"ஆமாம் மாமி. அவனுக்கு ஆக்ஸிடெண்ட் என்று கேள்விப்பட்டு பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன்."



பதட்டத்தை அடக்கியபடி அவசர அவசரமாக கவிதா பதில் சொன்னது ஹரியின் கவனத்திலிருந்து தப்பவில்லை.

"ஹரி! இந்த ஊருக்கு எப்போ வந்தாய்? ஆக்ஸிடெண்ட் ஆன விஷயமே எங்களுக்குத் தெரியாதே?" விசாலம் மாமி ஹரியின் அருகில் வந்தாள்.

ஹரி கைகளை ஜோடித்து வணக்கம் தெரிவித்தான். "நாடகக் கம்பெனியின் சார்பில் வந்தேன். கடைத் தெருவில் நடந்து போகும்போது மாணவர்களின் ஊர்வலத்தில் மாட்டிக் கொண்டு விட்டேன். ஒரே ரகளை. அந்தச் சமயத்தில் கீழே விழுந்துவிட்டதில் அடிபட்டு விட்டது."

"கவிதா! போனவாரம் யாரோ சிநேகிதிக்கு அடிபட்டு விட்டதாகவும், ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு வந்ததாகவும் நள்ளிரவுக்கு பிறகு வீடு திரும்பினாயே. அந்த சிநேகிதி இவன்தானா?"

"மாமீ!!"

"சீ... வாயை மூடு. பொய் சொல்வதற்கு உனக்கு எவ்வளவு தைரியம்? என்னை ஏமாற்ற முடியும் என்ற துணிச்சல்தானே? காலேஜுக்கு மட்டம் போட்டு விட்டு நீ இங்கே வருவதை என்னால் கண்டு பிடிக்க முடியாது என்றுதானே நினைத்தாய்? உன் சிநேகிதிகள் என்னிடம் கொஞ்சம் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். அதை முதலில் தெரிந்து கொள். நீ சுஜாதா வீட்டில் பிளாஸ்க் கேட்டு வாங்கிப்போன விஷயம் அவளாக சொல்லாவிட்டால் எனக்கு இந்த விஷயமெல்லாம் தெரிந்திருக்க நியாயம் இல்லை. கல்யாணம் ஆக வேண்டியவள், புத்தி, ஞானம் இருப்பவள் செய்யும் காரியம் இதுதானா? எவனோ ஒருத்தனுக்காக ஆஸ்பத்திரிக்கு வந்து போய்க்

கொண்டிருந்தால் பார்க்கிறவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்?"

"மாமீ! இதெல்லாம் உங்களுக்குத் தேவையில்லை. இது என்னுடைய சொந்த விஷயம்."கவிதா கோபமாக சொன்னாள்.

கட்டில் மீது விறைப்பாக அமர்ந்தபடி இந்தப் பேச்சை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஹரி சட்டென்று இடை புகுந்தான். "கவிதா! அவசரப்படாதே." - விசாலம் மாமியின் பக்கம் திரும்பினான்."மாமீ! தயவு செய்து மன்னித்துவிடுங்கள். இதெல்லாம் என்னால்தான் வந்தது. அடிபட்டு ரோட்டில் கிடந்தவனை கவிதா ஆஸ்பத்திரியில் சேர்த்தது உண்மைதான். நானோ கண் பார்வை இல்லாதவன். இந்த ஊரில் எனக்குத் தெரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை. அதான் தினமும் வந்து பார்த்துவிட்டு போகச் சொல்லி நான்தான் அவளிடம் கேட்டுக்கொண்டேன். அன்னிக்கே உங்களிடம் இந்த விஷயத்தைத் தெரிவித்துவிட்டு உங்களையும் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வருவதாக கவிதா சொன்னாள். நான்தான் வேண்டாம் என்றேன். அனாவசியமாக உங்களுக்குத் தொல்லை கொடுப்பானேன் என்று நினைத்தேன். இரண்டே நாட்களில் குணமாகி ஊருக்குப் போய்விட முடியும் என்று நினைத்துவிட்டேன்."

ஹரியின் நயமான வார்த்தைகள் விசாலம் மாமியின் கோபத்தைக் கொஞ்சம் குளிரச் செய்தன.

"அது இல்லை தம்பீ! கவிதாவின் பொறுப்பை அவளுடைய அண்ணன் எங்களிடம் ஒப்படைத்துவிட்டுப் போயிருக்கிறான். அதான் கவலைப்படுகிறேன். இல்லா விட்டால் யார் எப்படி போனால் எனக்கென்ன வந்தது? சரி. நடந்தது நடந்து போச்சு. சிறியவர்கள் தவறு செய்தால் பெரியவர்கள்தான் புத்திமதி சொல்லணும். உனக்கு இப்போ குணமாகிவிட்டது இல்லையா? இன்னும் எத்தனை நாட்கள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டுமோ டாக்டரிடம் கேட்டுக் கொள்கிறேன். நாளை முதல் எங்க டிரைவரை அனுப்பி வைக்கிறேன். நீ இருக்கும் வரையில் தினமும் வந்து பார்த்து விசாரித்துவிட்டுப் போவான். கவிதா! கிளம்பு. வீட்டுக்குப் போகலாம்." ஆணையிடுவது போல் சொன்னாள் விசாலம் மாமி.



"நான் பிறகு வருகிறேன்." கவிதா கோபத்தை அடக்கிக் கொண்டே சொன்னாள்.

"பைத்தியம் போல் பேசாதே. வரவர உன் போக்கே சரியில்லை. இன்னிக்கே உன் அண்ணனுக்குக் கடிதம் போடுகிறேன்."

"கவிதா! நீ கிளம்பு ப்ளீஸ்." ஹரியின் குரலில் வேண்டு கோள் தென்பட்டது.

கவிதா ஒரு நிமிடம் தயங்கிவிட்டு மறுபேச்சு பேசாமல் கிளம்பினாள்.

"ஹரி! போய் வருகிறேன். உனக்கு ஏதாவது தேவையாக இருந்தால் டிரைவரிடம் சொல்லி அனுப்பு." - விசாலம் மாமியும் கிளம்பி விட்டாள்.

அவர்கள் போய்விட்டது போல் காலடிச் சத்தம் தேய்ந்து மறைந்தது. ஹரி பெருமூச்சுவிட்டுக் கொண்டான். கவிதாவின் மீது மாமிக்கு எவ்வளவு அதிகாரம் இருக்கிறதோ அவனுக்கு முதல் முறையாக புரிந்தது. ஏற்கனவே கவிதா இதைப் பற்றிச் சொன்னபோது அவன் நம்பவில்லை. ஆனால் இன்று சுயமாக உணர்ந்துவிட்டான். அந்த நிமிடம் அவனுக்கு கவிதாவிடம் எல்லையில்லாத இரக்கம்தான் ஏற்பட்டது.

நர்ஸிங்ஹோமில் ஹரி முள்மீது அமர்ந்திருப்பது போல் உட்கார்ந்திருந்தான். நேற்று விசாலம் மாமீ கவிதாவை உடன் அழைத்துப் போனது முதல் அவன் மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. விஷயத்தை சரியாக தெரிந்து கொள்ளாமல் மாமி அப்படி கவிதா மீது எரிந்து விழ வேண்டிய அவசியம்தான் என்ன?

இதில் தான் ரோஷப்பட்டுக் கொள்வதில் அர்த்தமே இல்லை. டாக்டரைச் சந்தித்துப் பேச வேண்டும் என்று நினைத்தான். டாக்டர் பிசியாக இருப்பதாகவும் ஓய்வு கிடைத்ததும் வந்து தகவல் தெரிவிப்பதாகவும் நர்ஸ் சொன்னாள். காயங்கள் முழுவதுமாக குணமடைந்துவிட்டன. அன்று இரவே ஊருக்குப் போய்விட வேண்டும் என்று முடிவு செய்தான்.

காலையில் விசாலம் மாமியின் டிரைவர் வந்திருந்தான். "உங்களுக்கு என்ன வேண்டுமோ அம்மா கேட்டுக்கிட்டு வரச் சொன்னாங்க" என்றான்.

"எதுவும் வேண்டாம். இன்று இரவு கிளம்பி ஊருக்குப் போவதாக மாமியிடம் தெரிவித்துவிடு, போதும்" என்றான் ஹரி.

டிரைவர் கிளம்பிப் போய்விட்டான். அவனை மறுபடியும் அழைத்து இந்த விஷயத்தை கவிதாவிடமும் தெரிவிக்கச் சொல்லிச் சொல்வோமா என்று நினைத்தான். ஆனால் விசாலம் மாமி தவறாக ஏதாவது கற்பனை செய்து கொண்டுவிட்டால் என்ன செய்வது என்று தயங்கினான்.

அவனிடமிருந்த பணம் ஊருக்கு டிக்கெட் வாங்குவதற்கு போதுமானதாக இருந்தது. ஆஸ்பத்திரி செலவை எப்படி சமாளிப்பதென்று புரியவில்லை. ஏதோ யோசனையில் ஷர்ட் பட்டனை திருகிக் கொண்டிருந்தவனுக்கு திடீரென்று ஒரு



எண்ணம் வந்தது. கழுத்தில் கட்டியிருந்த கறுப்புக் கயிற்றில் கோர்க்கப்பட்டிருந்த தாயத்தை எடுத்தான். ஆஞ்சநேயரின் உருவம் அதில் பதிக்கப்பட்டிருந்தது. அதைக் கையால் தொடும்போது பழைய நினைவுகள் அலைமோதின.

அவனுக்கு பதினாலு வயது இருக்கும்போது டைபாயிட் ஜுரத்தில் படுக்கையில் விழுந்தான். ஒரு மாதம் தொடர்ந்து மருந்து மாத்திரை சாப்பிட்ட பிறகும் ஜுரம் குறையவில்லை. இளைத்துத் துரும்பாகிவிட்டான். சுயமாக எழுந்து நடமாட முடியாத அளவுக்கு பலவீனம் வந்து சேர்ந்து விட்டது. அந்தச் சமயத்தில் அண்ணி பட்ட கவலை கொஞ்ச நஞ்சமில்லை. ஜாதகத்தில் ஏதோ தோஷம் இருப்பதாக யாரோ சொன்னதும் கோவிலுக்கு போய் அர்ச்சனை, அபிஷேகம் எல்லாம் செய்தாள். காத்து கறுப்பு பட்டிருக்கும் என்று திருநாகம் மாமி சொன்னதை கேட்டு, தாலிச் சரட்டில் இருந்து கொஞ்சம் தங்கம் எடுத்து ஆஞ்சநேயர் தாயத்து செய்ய வைத்தாள். பிறகு அதை மந்திரிக்கச் செய்து கறுப்புக் கயிற்றில் கோர்த்து கழுத்தில் கட்டிவிட்டாள். டாக்டர் மருந்துகளை மாற்றியதாலோ இல்லை தாயத்தின் மகிமையோ தெரியவில்லை, கொஞ்சம் கொஞ்சமாக ஹரியின் உடல்நிலை தேறி வந்தது. அந்த தாயத்தை தொடும் போதெல்லாம் அண்ணியின் நினைவு அவன் மனதில் வந்து போகும்.

வேறு நிலைமையாக இருந்தால் அவன் உயிரையும் கொடுப்பதற்கு தயாராக இருப்பானே தவிர அந்த தாயத்தை இழக்கச் சம்மதிக்கமாட்டான். ஆனால் இப்போது வேறு வழியில்லை. ஒரு பக்கம் வேதனையாக இருந்தாலும் சங்கடமான இந்த நிலையில் பயன்படப் போகிறது என்று நினைக்கும்போது திருப்தியாக இருந்தது. ஹரி கழுத்திலிருந்து தாயத்தை எடுத்து சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

நர்ஸ் வந்து டாக்டர் ஓய்வாக இருப்பதை தெரிவித்தாள். அவளுடைய உதவியோடு ஹரி டாக்டர் இருந்த அறைக்குச் சென்றான்.

"வாப்பா ஹரி! இரவு ஊருக்குப் போகலாம்னு இருப்பதாக நர்ஸிடம் சொன்னாயாமே, உண்மைதானா?"

"ஆமாம் டாக்டர்."

"உடம்பு தேவலையா? வலி எதுவும் இல்லையே? மருந்துகளும், டானிக்கும் தருகிறேன். ரெகுலர் ஆக சாப்பிடு. தெம்பாக இருக்கும்."

"அப்படியே செய்கிறேன். நீங்க தவறாக நினைக்கவில்லை என்றால் ஒரு விஷயம் சொல்வோம் என்று வந்தேன்."

"என்ன?"

"உங்களுடைய பீஸ், மற்ற மருத்துவச் செலவுகள் எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. தற்போது என்னிடம் இந்த தாயத்தும், வயலினும் தவிர வேறு எதுவும் இல்லை. இவற்றை உங்களிடம் வைத்துவிட்டுப் போகிறேன். ஊருக்குப் போனதும் உங்களுடைய பணத்தை கூடிய சீக்கிரம் அனுப்பி விடுகிறேன்." சட்டைப் பையிலிருந்து தாயத்தை எடுத்து மேஜை மீது வைத்தான்.

டாக்டர் ஒரு நிமிடம் மௌனமாக கண் இமைக்காமல் ஹரியின் முகத்தைப் பார்த்தார். "நீ சொல்வது சரிதான். ஆனால் இவற்றை மறுபடியும் உன்னிடம் சேர்ப்பது எப்படி?"

"நாடகக் கம்பெனியிலிருந்து யாராவது பெங்களூருக்கு வந்து கொண்டே இருப்பார்கள். அவர்கள் மூலமாக வர வழைத்துக் கொள்கிறேன்."

"அது வரையில் நான் இதை காவல் காக்க வேண்டு



மாக்கும்." டாக்டர் தாயத்தை எடுத்து ஹரியில் கையில் வைத்தார். "ஹரீ! நீ எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஊருக்குப் போய்ச் சேரு. பண விஷயத்தில் நான் கண்டிப்பாக இருப்பவன்தான். ஆனால் பணம்தான் வாழ்க்கை என்று நினைப்பவன் இல்லை. கவிதாதான் உன்னை இந்த நர்ஸிங் ஹோமில் சேர்த்தாள். நான் டாக்டருக்குப் படித்து இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்திருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் கவிதாவின் அப்பா செய்த உதவிதான். கவிதாவின் நண்பன் என்ற முறையில் உனக்கு இந்த உதவி செய்வதை சந்தோஷமாக நினைக்கிறேன். உன்னை ஆஸ்பத்திரியில் சேர்க்க வந்தபோது கவிதா எவ்வளவு பதட்டமடைந்துவிட்டாள் தெரியுமா? 'அங்கிள்! கைகள்தான் அவன் வாழ்க்கைக்கு ஆதாரம். எப்படியாவது அவனைக் காப்பாற்றுகள்' என்று கண்ணீர் வடித்தாள். நான் எவ்வளவு சொன்னாலும் வீட்டிற்குப் போக மறுத்துவிட்டாள். இரவு முழுவதும் உன் கட்டில் அருகில் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்."

ஹரி தவறு செய்துவிட்டவன் போல் தலையைக் குனிந்து கொண்டான். இந்த ஊருக்கு வந்து கவிதாவுக்கு இவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கப் போகிறாம் என்று நினைத்திருக்க வில்லை.

"அதோ. கவிதா வந்துவிட்டாள்" - திடீரென்று டாக்டர் சொன்னார்.

ஹரியின் மனதில் சந்தோஷம் பரவியிது. அவனுக்கு மிகவும் விருப்பமான அந்த பவுடரின் நறுமணம், காலடிச் சத்தம், புடவையின் சலசலப்பு கேட்டபடி அமர்ந்திருந்தான். ஊருக்குப் போகும்முன் கவிதாவைச் சந்திப்பது நடக்காத காரியம் என்றே நினைத்திருந்தான்.

"அங்கிள்! உங்க பேஷண்ட் என்ன சொல்கிறான்?" உள்ளே நுழையும் போதே கேட்டாள்.

"இன்று இரவு ஊருக்குப் போகப் போகிறானாம்."

"நீங்க பர்மிஷன் கொடுத்துவிட்டீர்களா?"

"ஆமாம்."

கவிதா பேக்கை திறக்கும் சத்தம் கேட்டது. "அங்கிள்! உங்களுடைய பீஸ்..."

"நோ... நோ... கவிதா! அவன் ஒரு இசைக்கலைஞன் என்று நீதானே சொன்னாய். அவனுக்கு வைத்தியம் செய்ய வாய்ப்பு கிடைத்தது எனக்கு சந்தோஷம். மிஸ்டர் ஹரீ! இனி வயலினை வாசிக்கும் நேரத்தில் எப்போதாவது என்னை நினைவுப்படுத்திக் கொண்டால் போதும். அதைவிட பெரிய ஃபீஸ் எனக்கு வேறு எதுவும் இல்லை."

அதற்குள் நர்ஸ் வந்து மூன்றாவது அறையில் இருக்கும் நோயாளியை வந்து பார்க்க வேண்டும் என்று சொன்னதும் டாக்டர் எழுந்து போனார்.

அறையில் ஒரு நிமிடம் நிசப்தம் நிலவியது.

"இரவு ஊருக்குப் போகிறாயா ஹரீ?"

"ஆமாம். உன்னுடைய உதவியை வாழ்நாள் முழுவதும் மறக்கவே மாட்டேன்." ஹரியின் குரலில் நன்றி உணர்ச்சி வெளிப்பட்டது.

"பஸ்ஸிற்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறதே. சற்று நேரம் எங்கேயாவது போய்விட்டு வருவோமா?" கவிதா கேட்டாள்.

ஹரி எழுந்து கொண்டான். கவிதா கையை நீட்டி



அவனுடைய கையைப் பற்றிக் கொண்டாள். ஹரியின் விரல்கள் தன்னையும் அறியாமல் அவள் கையை ஒரு நிமிடம் அழுத்தமாக பற்றின. அவளுடைய தொடுகையிலிருந்து அன்பு, நெருக்கம் போன்ற ஏதோ ஒன்று அவன் உடலில் மின்சாரம் போல் பாய்ந்து இதயத்தைத் தொட்டது.

"மாமீ வீட்டில் இல்லையா?" ஹரி கேட்டான்.

"மாமியின் சிநேகிதியின் மகன் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறான். அவர்களுடன் ஊர் சுற்றுவதில் பிசியாக இருக்கிறாள்."

இருவரும் காரில் அமர்ந்து கொண்டார்கள். கவிதா டிரைவ் செய்து கொண்டிருந்தாள். ஹரி மௌனமாக பின்னால் சாய்ந்து கொண்டான். ரொம்ப தூரம் பயணித்ததை உணர்ந்தவனாய் "நாம் எங்கே போகிறோம்?" என்று கேட்டான்.

"ஊகித்துச் சொல்லு பார்ப்போம்."

கவிதா காரை ஓரமாக நிறுத்தினாள்.

ஹரி கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினான். வயல்களிலிருந்து வீசும் தென்றல் காற்று குளிர்ச்சியுடன் உடலைத் தழுவியது.

"ஊர் எல்லையில் இருக்கிறோம். சரிதானே?" என்றான்.

கவிதா வியப்புடன் பார்த்தாள். "கண்ணால் பார்த்தது போல் சொல்லிவிட்டாய். ஊர் எல்லையில் இருக்கும் இந்த இடம் எனக்கு ரொம்ப பிடிக்கும். மாலை நேரத்தில் சூரியன் மறையும் அந்த அழகை பலமுறை பார்த்து இருந்தாலும் ஒவ்வொரு தடவையும் புதுசாக மேலும் அழகாக இருப்பது போல் தோன்றும். இங்கே கொஞ்ச நேரம் உட்காருவோமா?"

இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள்.

"ஏதாவது பேசு ஹரி?"

"நான் உனக்கு ரொம்ப சிரமம் கொடுத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு கவிதா."

"நானே உன்னிடம் மன்னிப்பு கேட்பதாக இருந்தேன்."

"நேற்று உங்க மாமி அப்படி பேசியபோது. . ."

"ப்ளீஸ் ஹரீ! அந்த அவமானம் உன்னுடையது இல்லை. என்னுடையது. தயவு செய்து அந்த விஷயத்தை மறந்துவிடு."

"உன்னைத் தாழ்வாக பேசும் அதிகாரம் விசாலம் மாமிக்கு இல்லை."

"கோபம் வரும்போது நானும் சில சமயம் அப்படித்தான் நினைத்துக் கொள்வேன். ஆனால் அண்ணன் என்னுடைய பொறுப்பை மாமியிடம் ஒப்படைத்துவிட்டுப் போயிருக் கிறான்."

"மாமியின் போக்கு சரியில்லை என்று அண்ணாவுக்குக் கடிதம் எழுதலாமே."

"எழுதிப் பிரயோஜனம் இல்லை என்பதை சுயமாக புரிந்து கொண்டுவிட்டேன்." கவிதாவின் குரல் பாரமாக ஒலித்தது. "ஹரீ! சில சமயம் என்னுடைய பொறுமையை நினைத்துப் பார்க்கும்போது எனக்கே வியப்பாக இருக்கும். அம்மா, அப்பா உயிரோடு இருந்தபோது ரொம்ப செல்லமாக வளர்ந்தேன். சின்ன விஷயத்திற்குக் கூட அடம் பிடிப்பேன். அவர்கள் போன பிறகு என் உலகமே தலைகீழாகிவிட்டது. அம்மா, அப்பா இருவருமே ஆறுமாத வித்தியாசத்தில் இறந்து போனது என்னுடைய துரதிர்ஷ்டம்தான். ஒருத்தராவது உயிரோடு இருந்திருக்கலாம் இல்லையா?" கவிதாவின் குரல் நடுங்கியது.



ஹரியால் ஒரு நிமிடம் பதில் சொல்ல முடியவில்லை. "உன் அண்ணன் இருக்கிறான் இல்லையா?" என்றான் நயமான குரலில்.

"அண்ணன் இருந்தும் பிரயோஜனம் இல்லை. மேல் படிப்புக்காக வெளிநாடு சென்றவன் வேலை கிடைத்ததும் அங்கேயே தங்கிவிட்டான். திருமணம் செய்து கொண்டு அங்கேயே செட்டில் ஆகப் போவதாக சொல்லிவிட்டான். என்னுடைய பொறுப்பை மாமியிடம் ஒப்படைத்ததுடன் அவன் கடமை முடிந்துவிட்டதாக நினைக்கிறான். அப்பாவை பெற்ற பாட்டிக்கு என்னை ரொம்ப பிடிக்கும். இறக்கும் முன் தன்னுடைய பெயரில் இருந்த சொத்து, பணம் எல்லா வற்றையும் என் பெயருக்கு எழுதி வைத்தாள். அண்ணாவுக்கு ஏற்கனவே என்னைக் கண்டால் ஆகாது. பாட்டி என் பெயருக்குச் சொத்தை எழுதி வைத்தபிறகு மேலும் வெறுக்கத் தொடங்கினான். பெற்றோரின் நிழலில் அபூர்வமாக வளர்ந்த அந்தப் பதினாறு வருடங்களை நினைத்துப் பார்க்கும்போது இப்படி இழிவான வாழ்க்கையை வாழத்தான் வேண்டுமா என்று சில சமயம் வெறுப்பாக இருக்கும்."

"கவிதா!"

"ஆமாம் ஹரீ! எனக்குத் திருமணம் நடப்பதில் மாமிக்கு விருப்பம் இல்லை. ஏதாவது சாக்கு சொல்லி வந்த வரன்களை எல்லாம் தட்டிக்கழித்து வருகிறாள். போன வருடம் அண்ணா வின் நண்பன் ஒருவன் என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக குடும்ப நண்பர் மூலமாக தெரிவித்தான். பெரிய படிப்பு, வெளிநாட்டில் நல்ல வேலை. திருமணம் செய்து கொண்டு மனைவியையும் அழைத்துப் போகணும் என்று திட்டம் போட்டிருந்தான். மாமியும், மாமாவும் எப்படியாவது தங்களுடைய மகள் சுந்தரியை அவனுக்குத் திருமணம் செய்து

வைக்கணும் என்று முயற்சி செய்தார்கள். கடைசியில் அவனும் சம்மதம் தெரிவித்துவிட்டான். ஆனால் சுந்தரி தன்னுடைய கிளாஸ்மேட்டை கல்யாணம் செய்துகொள்வேன் என்று ரகளை செய்ததால் அது நடக்கவில்லை. அவன் வேறு பெண்ணை மணம் புரிந்து கொண்டு வெளிநாட்டுக்குப் போய்விட்டான். மாமா, மாமி என்னுடைய பணத்தை தங்களுடைய விருப்பம் போல் செலவு செய்வார்கள். அது போறாது என்று நான் பணத்தை கண்டபடி செலவழிப்பதாக அண்ணாவிடம் புகார் செய்வார்கள். அண்ணாவுக்கோ அவர்கள் சொன்னதுதான் வேதம். மாமியின் சொல்படி நடந்து கொள்ளச் சொல்லி அதட்டி கடிதம் எழுதுவான். மனதில் வேதனை இருந்தாலும் இதழ்களில் முறுவலுடன் வளையம் வரப் பழகிக் கொண்டேன். இதுதான் என்னுடைய வாழ்க்கை."

"கவிதா! யோசித்துப் பார்க்கும்போது உன்மீதும் தவறு இருப்பது போல் தோன்றுகிறது. மாமியின் அதிகாரத்தை நீ எதுக்காக சகித்துக் கொள்ளணும்? மாமியை எதிர்த்துப் பேசும் தைரியம் உனக்கு இல்லையா?"

"என்னுடைய போராட்டம் எதுவும் பலிக்கவில்லை ஹரீ. மேலும் பிரச்னை வளர்ந்ததுதான் மிச்சம். ஹாஸ்டலில் தங்குவதற்கு முயற்சி செய்தேன். மாமி அதற்கும் முட்டுக் கட்டை போட்டுவிட்டாள்." கவிதா பெருமூச்சு விட்டாள்.

ஹரிக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. கவிதா எழுந்து போய் காரில் இருந்த வயலினை எடுத்து வந்து ஹரியின் கையில் தந்தாள். "ஒரு தடவை வாசிக்கிறாயா ஹரீ! ப்ளீஸ்... எனக்காக" என்றாள்.

"இங்கேயா... இப்பொழுதா..."

"ஆமாம். முதல் தடவை நான் உங்க வீட்டுக்கு வந்தபோது



பிக்னிக் போனோம். நினைவு இருக்கா? அன்று இரவு நீ வயலின் வாசித்ததை என்னால் மறக்கவே முடியாது. அதே போல் அடிபட்டு நினைவு இல்லாத நிலையில், 'கவிதா! என்னுடைய கைகள்தான் எனக்கு வாழ்க்கையே' என்று புலம்பினாய். அதையும் என்னால் மறக்க முடியாது."

ஹரிக்கு டாக்டர் சொன்னது நினைவுக்கு வந்தது.

"உன் விரல்கள் மறுபடியும் வயலின் இசைப்பதை நான் பார்க்கணும்."

ஹரி வயலினை கையில் எடுத்துக் கொண்டான். அவன் விரல்கள் வயலின் மீது நடனம் புரியத் தொடங்கின. ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட இளவரசியைப் போல் இனிமையான இசை வயலினிலிருந்து புறப்பட்டது.

போகப் போக அவன் விரல்கள் வேகமாக அசைந்தன. அந்த மாலை வேளையில் இனிமையான இசையைக் கேட்டு அக்கம் பக்கத்து குடிசைகளில் வாழும் மக்கள் வெளியில் வந்து நின்று ரசிக்கத் தொடங்கினார்கள்.

ஹரி சற்று நேரம் வாசித்த பிறகு நிறுத்தினான்.

"இது என்ன ராகம்?" கவிதா ஆர்வத்துடன் கேட்டாள்.

"இதுவா? மாலை நேரம் என்று சொன்னாய் இல்லையா? அப்போ இது சந்தியா ராகம்."

"பெயரே வித்தியாசமாக இருக்கு."

"இரண்டு ராகங்களின் கலப்பு இது. எனக்குத் தெரியாமலேயே கம்போஸ் செய்துவிட்டேன்." ஹரி மறுபடியும் இசைத்துக் காண்பித்தான்.

கவிதா கலகலவென்று நகைத்தாள். அந்தச் சிரிப்புச் சத்தம் கோவில்மணி போல் ஹரியின் இதயத்தில் எதிரொலித்தது.

* * *

## 12

ஜெயா கிணற்றடியில் பப்லூவுக்கு தலைக்கு எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள். மற்ற குழந்தைகள் வாசலில் காற்றாடியை விட்டபடி கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். காமாட்சி வாசலுக்கும் கொல்லைக்கும் குட்டி போட்ட பூனை போல் இரண்டு மூன்று முறை சுற்றிச் சுற்றி வந்தாள். வாசலுக்கு வந்தவள் தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு மெள்ள ராமகிருஷ்ணன் இருக்கும் அறையின் அருகில் வந்தாள். ஓசைப் படுத்தாமல் தாழ்ப்பாளை நீக்கினாள்.

காலை முதல் ராமகிருஷ்ணன் அமைதி இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தான். ஜெயா சாப்பாடு கொண்டு வந்த போது சாப்பிடாமல் வீசி எறிந்தான். கைகளை பின்னால் கட்டிக் கொண்டு ஏதோ யோசிப்பது போல் அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டாலே காமாட்சி பயந்து நடுங்குவாள். அதனால் கதவை லேசாக திறந்து வைத்து நாதாங்கியை சத்தப்படுத்திவிட்டு, யாரோ துரத்தி வருவது போல் வேகமாக தன் அறைக்குத் திரும்பி வந்தாள்.

கதவு திறந்து கொண்டதும், ஜெயாதான் மறுபடியும் சாப்பாடு கொண்டு வருகிறாள் போலும் என்று நினைத்த ராமகிருஷ்ணன் கோபமாக "ஜெயா! எத்தனை முறை சொல்லியிருக்கிறேன், கோர்ட்டில் கேஸ் நடந்து கொண்டிருக்கும்போது சாப்பாடு கொண்டு வராதே என்று" சத்தம் போட்டான். ஆனால் அவன் எதிர்பார்த்தது போல் ஜெயா உள்ளே வரவில்லை. நெற்றியைச் சுளித்தபடி கதவு பக்கம் பார்த்தான். கதவு திறந்திருந்தது.



"யுவரானர்! ஜஸ்ட் எ மினிட் இந்தக் கதவைத் திறந்து வைத்த குற்றவாளியை இப்பவே உங்கள் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிறேன்." என்று சுவர் பக்கம் திரும்பி பணிவாக சொல்லிவிட்டு கதவைத் திறந்து கொண்டு வேகமாக வெளியேறி விட்டான். வாசற்கதவு திறந்து இருந்தது.

ஏறத்தாழ அரைமணி நேரம் கழித்து ஜெயா பப்லூவின் தலையை துவட்டியபடி உள்ளே வந்தாள். அண்ணாவின் அறைக் கதவு திறந்து இருப்பதை பார்த்துவிட்டு வீலென்று கத்தினாள். சட்டென்று பப்லூவை கீழே இறக்கிவிட்டு அண்ணாவின் அறைக்குள் ஓடினாள். அறையில் யாருமே இல்லை. "கதவைத் திறந்தது யாரு? அண்ணாவைக் காண வில்லையே? எங்கே போயிருப்பான்? பப்லூ! அப்பாவைக் காணுமடா கண்ணா" என்று அழுதுகொண்டே வாசலை நோக்கி ஓடினாள்.

"சித்த முன்னால் கூட பார்த்தேனே. கோர்ட்டில் பேசுவது போல் சுவரிடம் பேசிக் கொண்டிருந்தானே. எங்கேதான் போயிருப்பான்?" ஒன்றும் தெரியாத அப்பாவி போல் காமாட்சி கன்னத்தில் கையை வைத்துக் கொண்டாள்.

ஜெயாவின் பின்னாலேயே பப்லூவும் இடுப்பிலிருந்து நழுவும் டவலை ஒரு கையால் பிடித்துக் கொண்டே வெளியில் ஓடினான். வாசலில் பட்டம் விட்டுக் கொண்டிருந்த குழந்தைகள் கூட இந்த விஷயம் தெரிந்ததும் ஆட்டத்தை நிறுத்திவிட்டு ஜெயாவின் பின்னால் ஓடினார்கள்.

முதல்நாள் வேணு வீட்டுக்கு வந்தபோது தனக்கு கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மைசூர் பாக் ரொம்ப பிடிக்கும் என்று காமாட்சி சொல்லியிருந்தாள். வேணு காலையில் எழுந்ததும் முதல் வேலையாய் கடைத் தெருவுக்குப் போய் அரைகிலோ மைசூர்பாக் வாங்கிக் கொண்டு ஜெயா வீட்டுக்குக்

கிளம்பினான். வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தவனுக்கு, கலைந்த தலைமுடியுடனும், ஈரப்புடவையுடனும் ஜெயா வேகமாக போய்க் கொண்டிருப்பது தென்பட்டது. பின்னாலேயே இடுப்பில் டவலுடன் பப்லூவும் ஓடி வருவதை பார்த்து பதட்டமடைந்துவிட்டான். ஜெயா துக்கம் தாங்க முடியாமல் எந்த காரின் கீழேயோ விழுந்து தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்தில் ஓடுகிறாள் என்று நினைத்து விட்டான். உடனே "ஜெயா. . . ஜெயா. . . ஓடாதே. நில்லு" என்று அவள் பின்னாலேயே ஓடினான்.

ரொம்ப சீரியஸாக ஏதோ யோசித்தபடி வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்த ராமகிருஷ்ணன் பின்னாலிருந்து "அண்ணா!" என்று ஜெயாவின் குரல் கேட்டதும் நடையின் வேகத்தைக் கூட்டி சட்டென்று பக்கத்தில் தென்பட்ட காம்பவுண்டுக்குள் நுழைந்துவிட்டான். பல குடும்பங்கள் குடியிருக்கும் அடுக்கு மாடி கட்டிடம் இருக்கும் காம்பவுண்ட் அது. நடுவில் இருந்த குழாய் அருகில் பெண்கள் சிலர் தண்ணீர் பிடித்தபடி வம்பு பேசிக் கொண்டிருந்தார்கள். அழுக்குச் சட்டையும், வளர்ந்த தாடியுடன் உள்ளே ஓடி வந்த ராம கிருஷ்ணனைப் பார்த்ததும் எல்லோரும் பயந்து போய் விட்டார்கள்.

"எவனோ பைத்தியம் உள்ளே வந்துவிட்டான். ஓடுங்க. . . ஓடுங்க" என்று அலறிக் கொண்டே ஆளுக்கொரு பக்கமாக ஓடினார்கள். ராமகிருஷ்ணன் ஒரு வீட்டில் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான்.

"ஜெயா! என்ன ஆச்சு உனக்கு? எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?" பின்னாலிருந்து ஓடி வந்த வேணு ஜெயாவைத் தடுத்து நிறுத்தினான்.

"வேணு! பெரிய அண்ணா வீட்டைவிட்டு ஓடிவிட்டார்."



அழுகை கலந்த குரலில் ஜெயா சொன்னாள்.

"யாரு? ராமகிருஷ்ணனா! எப்போ?"

"இப்பொழுதுதான்."

வேணு நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டான். "ஜெயா! கவலைப்படாதே. இருவருமாக சேர்ந்து தேடுவோம்" என்றான்.

எல்லோருமாக சேர்ந்து ராமகிருஷ்ணன் நுழைந்த காம்பவுண்டுக்குள் நுழைந்தார்கள். ஏற்கனவே மக்கள் அங்கே கும்பலாக கூடியிருந்தார்கள்.

"அந்தப் பைத்தியம் வீட்டுக்குள் நுழைந்து கதவைப் பூட்டிக் கொண்டுவிட்டான். குழந்தை வேறு தூளியில் இருக்கு. குழந்தையை என்ன செய்வானோ என்னவோ." குழந்தையின் தாய் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள்.

"போலீஸுக்குத் தகவல் சொல்வது நல்லது. அவன் பைத்தியம்தானோ இல்லை திருடனோ, யாருக்குத் தெரியும்?" யாரோ சொன்னார்கள்.

"பைத்தியமேதான். அந்தச் சிரிப்பும், தோற்றமும் பார்த்தாலே தெரியவில்லையா? மெண்டல் ஆஸ்பத்திரிக்கு போன் செய்தால் அவர்களே வந்து பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள்." இலவசமாக அறிவுரை வழங்கினாள் ஒருத்தி.

அதற்குள் வேணு, ஜெயா, குழந்தைகள் எல்லோரும் அங்கே வந்து சேர்ந்தார்கள். வேணு அங்கே கூடியிருந்த மக்களைச் சமாதானப்படுத்தினான். "அவனுக்கு மனநிலை சரியில்லை என்பது உண்மைதான். ஆனால் யாருக்கும் தீங்கு செய்யமாட்டான். நீங்க எல்லோரும் கொஞ்சம் விலகி யிருந்தால் அவனை அழைத்துப் போகிறோம்." என்றான்.

"வேணு! அண்ணனை எப்படி அழைத்துப் போக

முடியும்? மறுபடியும் ஓடிவிட்டால் என்ன செய்வது?" ஜெயா கேட்டாள்.

"அதுவும் பாயிண்டுதான். ஒரு நிமிடம் இரு. இதோ வருகிறேன்."

வேணு ஐந்து நிமிடங்களில் டாக்ஸியுடன் திரும்பி வந்தான். வேணுவின் வேண்டுகோளுக்கு இணங்கி மக்கள் தொலைவில் போய் நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ஜெயா! போய் உங்க அண்ணனைக் கூப்பிடு. கதவைத் தட்டு." வேணு சொன்னான். ஜெயா போய் அழைத்தாள்.

"நான் வர மாட்டேன். அண்ணா ரொம்ப கோபமாக இருக்கிறார் என்று அண்ணியிடம் போய் சொல்லு." உள்ளே இருந்து ராமகிருஷ்ணனின் குரல் கேட்டது.

ஜெயா இயலாமையுடன் பார்த்தாள். வேணுவுக்கு மின்னல் போன்ற யோசனை வந்தது. ஜெயாவை நகரச் சொல்லி ஜாடை காட்டினான். ஒரு நிமிடம் கழித்து கதவின் அருகில் சென்றான். குரலை மாற்றிப் பேசுவது வேணுவுக்குக் கைவந்த கலை. அக்கம் பக்கத்து வீடுகளில் யார் எப்படி பேசுவார்கள், எப்படி நடந்து கொள்வார்கள் என்று நடித்துக் காட்டுவான். கல்லூரியில் மிமிக்ரி செய்து பரிசுகளையும் பெற்று இருக்கிறான்.

வேணு கதவைத் தட்டிக் கொண்டே சுகுணாவின் குரலில் "என்னங்க? என்ன ரகளை இது? வீட்டுக்குப் போகலாம் வாங்க" என்றான்.

தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மக்கள் கொல்லென்று சிரித்தார்கள். ஜெயாவின் முகம் அவமானத்தால் கன்றி விட்டது. வேணு எதையும் பொருட்படுத்த



வில்லை. தொடர்ந்து சுகுணா பேசுவது போலவே நயமான குரலில் பேசினான்.

ராமகிருஷ்ணன் தன்னையே நம்பமுடியாதவன் போல் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். அதற்காகவே காத்திருந்த வேணு சட்டென்று ராமகிருஷ்ணனை அசைய விடாமல் பிடித்துக் கொண்டான். டாக்ஸி டிரைவரின் உதவியோடு டாக்ஸியில் வலுக்கட்டாயமாக ஏற்றி உட்கார வைத்தான். கூடியிருந்த மக்களும் உதவி செய்தார்கள். எப்படியோ எல்லோருமாக சேர்ந்து ராமகிருஷ்ணனை வீட்டுக்கு அழைத்து வந்து அறைக்குள் தள்ளி கதவைச் சாத்தினார்கள்.

"வேணு! இன்னிக்கு நீ செய்த இந்த உதவியை என்னிக்குமே மறக்கமாட்டேன். சமயத்திற்கு நீ மட்டும் வரவில்லை என்றால் அண்ணாவுக்கு என்ன ஆகியிருக்குமோ?" விழிகளில் நிறைந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே ஜெயா சொன்னாள்.

"ஜெயா!" வேணுவால் அதற்கு மேல் பேச முடியவில்லை. அந்த நிமிடம் ஜெயா தன்னிடம் பேசியது சந்தோஷமாக இருந்தாலும், அந்த நிலையில் அவளைப் பார்க்கும்போது வேதனை யாகவும் இருந்தது.

"ஜெயா! உன்னிடம் ஒரு விஷயம் கேட்கட்டுமா?"

"என்ன?"

"சமீபகாலமாக நீ என்னை எதிரியைப் பார்ப்பது போல் பார்க்கிறாய். காரணம் என்ன? நம் திருமண விஷயத்தில் நான் சொன்னதை நீ நம்பவில்லை. அது என்னுடைய துரதிர்ஷ்டம் தான்."

ஜெயா தலையைக் குனிந்து கொண்டாள். "உன்னிடம்

பேசமாட்டேன் என்று ஹரி அண்ணாவிடம் சத்தியம் செய்து இருக்கிறேன்."

வேணு நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டான். "அவ்வளவுதானே? வேறு எதுவும் இல்லையே. உங்க அண்ணாவிடம் கொடுத்த வாக்குதான் காரணம் என்றால் எனக்கு வருத்தம் இல்லை. நீ இந்த நரகத்தில் விழுவதற்கு நானும் ஒரு காரணமாக இருந்துவிட்டேன். அதான் இந்த புதை குழியிலிருந்து உன்னை மீட்க வேண்டும் என்று தவிக்கிறேன்."

"சாத்தியப்படாதவற்றை பற்றி பேசாதே வேணு." ஜெயா பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

வேணு ஜெயாவின் கையைப் பற்றிக் கொண்டான். "ஜெயா! இந்த வீட்டுக்கு வராமல், உன்னைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியவில்லை. அண்ணனிடம் கொடுத்த வாக்கை மீறச் சொல்லி நான் உன்னிடம் கேட்கப் போவதில்லை. என்னைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக் கொண்டு போகாமல் இருந்தால் போதும். என்னை எதிரியாக நினைக்காதே ப்ளீஸ்."

"முயற்சி செய்கிறேன் வேணு." ஜெயா கையை விடுவித்துக் கொண்டாள்.

"நீ கொண்டு வந்த மைசூர்பாக் ரொம்ப நன்றாக இருந்தது வேணு" என்று சொல்லிக் கொண்டே காமாட்சி அங்கே வந்தாள்.

வீட்டுக்கு வந்ததுமே வேணு தான் வாங்கி வந்த மைசூர் பாக்கை காமாட்சியின் கையில் கொடுத்தான். குழந்தைகள் கேட்டு தொல்லை கொடுப்பார்கள் என்று காமாட்சி எது சாப்பிட்டாலும் அறைக்குள் தனியாக உட்கார்ந்து சாப்பிடுவாள்.



"ராட்சசி! அரைகிலோ மைசூர்பாக்கையும் அதற்குள் தின்று தீர்த்துவிட்டாள் போலும். இப்படி என்று தெரிந்திருந்தால் பத்து கிலோ கொண்டு வந்து வாயை அடைத்திருப்பேன்." வேணு உள்ளூர கறுவிக்கொண்டான்.

காமாட்சியின் காலடிச் சத்தம் கேட்டதும் ஜெயா வேணுவின் கையை விடுவித்துக் கொண்டாலும், அந்தக் காட்சி அந்த அம்மாளின் கண்களில் பட்டுவிட்டது. அவர்கள் இருவரும் பேசிக் கொள்வதற்கு வாய்ப்பு தருவது போல் காமாட்சி வேண்டுமென்றே அறையை விட்டு வெளியே வரவில்லை.

"போய் வருகிறேன் டீச்சர்." காமாட்சியிடம் பணிவாக சொன்னவன் ஜெயாவின் பக்கம் திரும்பி கண்களாலேயே விடை பெற்றுக் கொண்டான்.

"ஜெயா! பாவம் வேணு. உனக்காக அவ்வளவு கஷ்டப் பட்டு உதவி செய்தால் ஒரு வாய் காபி கூட கொடுக்காமல் அனுப்புவதாவது? போய் காபி கலந்து எடுத்துக்கிட்டு வா. வேணு! காபி சாப்பிடாமல் நீ இங்கிருந்து போகக் கூடாது" ஆணையிடுவதுபோல் சொன்னாள் காமாட்சி.

வேணு மறுபடியும் உட்கார்ந்து கொண்டான். ஜெயா காபி கலந்து எடுத்து வந்தாள். ரொம்ப நாட்களுக்குப் பிறகு ஜெயாவின் கையால் காபி குடிக்கும்போது வேணுவுக்கு சுவர்க்கத்தில் இருப்பது போல் தோன்றியது.

புருஷோத்தமன் அப்பொழுதுதான் கடைத் தெருவிலிருந்து திரும்பி வந்தார். காமாட்சி கைகளை ஆட்டியபடி நடந்ததை எல்லாம் விலாவாரியாக தெரிவித்தாள்.

"அசல் அந்தப் பைத்தியம் அறையை விட்டு எப்படி வெளியே வந்தான்? கதவைத் திறந்தது யாரு?" புருஷோத்தமன் கத்தினார்.

வேணுவும், ஜெயாவும் ஒரே டாக்ஸியில் வந்தார்கள் என்று தெரிந்ததுமே அவருக்கு ஆத்திரமாக இருந்தது. வேணு சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு காபி குடிப்பதை பார்த்தபோது அவருடைய கோபம் மேலும் அதிகரித்தது.

புருஷோத்தமன் இப்படி கேட்டதும் காமாட்சி திடுக்கிட்டாள். இருந்தாலும் உடனே சமாளித்துக் கொண்டு "ஆமாம். இதுவரைக்கும் எனக்கு அந்த யோசனையே வர வில்லை. நானோ, குழந்தைகளோ அந்தப் பக்கமே போக மாட்டோம். அவனைப் பார்த்தாலே எங்களுக்கு பயம். ஜெயா திறந்திருக்க வாய்ப்பு இல்லை. யார்தான் திறந்திருப்பார்கள்?" சந்தேகம் தொனிக்கும் குரலில் சொல்லிக் கொண்டே புருஷோத்தமன் பக்கம் பார்த்தாள்.

"ஆமாம். இது ஆராயவேண்டிய விஷயம்தான்." வேணு யோசிப்பது போல் பார்த்தான்.

"இதோ பாருங்க. உங்களுக்கு அவர்களை பிடிக்கவில்லை என்றால் வீட்டைவிட்டு அனுப்பி விடுங்க. அவ்வளவுதானே தவிர இப்படி கதவைத் திறந்து வைத்து அந்தப் பைத்தியத்தை வெளியே விடலாமா? ஏதோ நல்ல காலம். ஒன்றும் நடக்கவில்லை. இல்லாவிட்டால் இன்னிக்கு அநியாயமாக எந்த பஸ்ஸின் கீழேயோ விழுந்திருப்பான்." காமாட்சி கரிசனம் பொங்கும் குரலில் புருஷோத்தமனை அதட்டினாள்.

"நானா? கதவை நான்தான் திறந்துவிட்டேன் என்று சொல்கிறாயா?" புருஷோத்தமன் மார்பில் கையால் அறைந்து கொண்டார்.

"அரிச்சந்திரனை போல் நடித்தது போதும். கடைத் தெருவுக்குப் போகும்முன் அந்த அறையின் முன்னால் குறுக்கும் நெடுக்குமாக நீங்க நடந்ததை யாரும் பார்க்கவில்லை



என்ற நினைப்பு போலும்". காமாட்சி நீட்டி முழக்கினாள்.

"காமாட்சி! உன்னை. . . உன்னை. . ." புருஷோத்தமன் கைப்பிடியை இறுக்கியபடி பற்களை நறநறவென்று கடித்தார்.

"உண்மையைச் சொன்னால் என் மீது கோபம் வருவானேன்?" காமாட்சி தோள்பட்டையில் இடித்துக் கொண்டாள்.

ஜெயா புருஷோத்தமனை வெறுப்புடன் பார்த்துவிட்டு உள்ளே போய் விட்டாள். புருஷோத்தமன் அறைக்குள் வந்து நாற்காலியில் சரிந்தார். "கடவுளே! இந்தச் சனியின் தொல்லையிலிருந்து எப்படி விடுபடுவது?"- தனக்குத்தானே பேசிக் கொள்வது போல் வெளியில் சொன்னார். ஜெயா ஏதோ வேலையாக அந்த அறைக்குள் வந்தாள். அவளைப் பார்த்ததும் அவருடைய கோபம் கட்டுக்கு அடங்காமல் போய்விட்டது.

"என் கண்ணைக் கட்டி அவனோடு கொஞ்சி குலாவலாம் என்று நினைத்தாயா? உன் ஆட்டமெல்லாம் என்கிட்டே நடக்காது. நான் ஒன்றும் முட்டாள் இல்லை. இன்னொரு தடவை அவனுடன் பேசியதாக தெரிந்தால் நடக்கிற கதையே வேறு." புருஷோத்தமன் ருத்ரதாண்டவம் ஆடியபடி உரத்த குரலில் கத்தினார்.

ஹரி அப்பொழுதுதான் ஊரிலிருந்து வந்து இறங்கினான். அவன் வீட்டுக்குள் நுழையும்போதே புருஷோத்தமனின் கத்தல்கள் தெருவில் கேட்டுக் கொண்டிருந்தன.

ஹரியைப் பார்த்ததும் பப்லூ "சித்தப்பா வந்தாச்சு" என்று ஓடி வந்து கால்களைக் கட்டிக் கொண்டான். ஹரி சூட்கேஸை கீழே வைத்துவிட்டு பப்லூவைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தான்.

புருஷோத்தமன் சொன்ன குற்றச்சாட்டுக்குக் கோபமாகப் பதில் சொல்லப் போன ஜெயா அண்ணனைப் பார்த்ததும் சட்டென்று நிறுத்திக் கொண்டாள்.

"என்ன ரகளை இங்கே? என்ன நடந்தது?" ஹரி கேட்டான்.

ஜெயா பதில் சொல்லாமல் சமையல் அறைக்குள் சென்று விட்டாள். ஹரியைப் பார்த்ததும் புருஷோத்தமனின் குரல் மேலும் உயர்ந்தது.

"என்ன நடந்ததா? என் மானம் மரியாதை எல்லாம் தெருவுக்கு வந்துவிட்டது. அந்தப் பைத்தியம், உன் தங்கை, நீ எல்லோருமாக சேர்ந்து என் வாழ்க்கையை குட்டிச்சுவராக் கிட்டீங்க. தெருவில் போகணும் என்றாலே பயமாக இருக்கு. எல்லோரும் என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். இப்படி நடக்கும் என்று தெரியாமல் கல்யாணம் செய்து கொண்டு விட்டேன். சனியுடன் ராகுவும், கேதுவும் சேர்ந்தது போல் மூன்றுபேரும் என்னைப் பிடித்துக் கொண்டுவிட்டீங்க. வீட்டை விட்டு போகச் சொன்னாலும் போகாமல் என் உயிரை எடுக்கறீங்க. இனி இந்தத் தொல்லை எல்லாம் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. எந்த ரயிலின் கீழேயோ விழுந்து செத்துப்போனால் தவிர இந்த சனி என்னை விடாது. நான் செத்தபிறகு என் சொத்தை எல்லாம் நீங்களே தின்னு தீர்க்கப் போறீங்க. எனக்குத் தெரியும். என்னை உயிரோடு கொல்லத் தான் இந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தீங்க." புருஷோத்தமன் வாய்க்கு வந்தபடி கத்தினார்.

ஹரி அவருடைய பேச்சைப் பொருட்படுத்தவில்லை. "ஜெயா!" என்று அழைத்தான்.

ஜெயா டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து ஹரியிடம் தந்தாள்.



"என்ன நடந்தது?" ஹரி கேட்டான்.

ஜெயா சுருக்கமாக ராமகிருஷ்ணன் வீட்டை விட்டுப் போனதை, வேணுவின் உதவியுடன் திரும்ப அழைத்து வந்த விஷயத்தைத் தெரிவித்தாள்.

"அவ்வளவுதானா? அதைவிட வேறு எதுவும் நடக்க வில்லையா? பொய் சொல்வதற்கு உனக்கு வெட்கமாக இல்லையா? அவன் உன் கையைப் பிடித்துக் கொண் டானாமே? அதை ஏன் மறைக்கிறாய்?" ஜெயாவின் கன்னத்தில் பளாரென்று அறைந்தார் புருஷோத்தமன்.

ஜெயா உதட்டைக் கடித்துக் கொண்டு கோபத்தை, அவமானத்தை விழுங்கினாள். "பெரிய அண்ணனைக் காண வில்லை என்று ரொம்ப பயந்துபோய்விட்டேன். வேணுவின் உதவி இல்லை என்றால் அண்ணாவை வீட்டுக்கு அழைத்து வந்திருக்க முடியாது. இதுதான் நடந்தது. தெரியாமல்தான் கேட்கிறேன். இவரைக் கல்யாணம் செய்துகொண்ட குற்றத்திற் காக நான் யாரிடமும் பேசக் கூடாது என்றால் எப்படி?"

"உன் தங்கை எவ்வளவு திமிராக பேசுகிறாள் பார்த் தாயா?" புருஷோத்தமன் தணலை மிதித்த குரங்கு போல் குதிக்கத் தொடங்கினார்.

ஜெயா தன்னுடைய பேச்சை நிறுத்தவில்லை. "அசல் வேணு இந்த வீட்டுக்கு வர வேண்டிய அவசியம் என்ன? வந்த போதெல்லாம் மணிக்கணக்காக உட்கார்ந்து யாருடன் பேசிக் கொண்டிருக்கிறான்? காமாட்சியை ஏன் எதுவும் கேட்க மாட்டேங்கறீங்க?"

ஜெயா துணிச்சலுடன் கேட்டதும் புருஷோத்தமன் திகைத்துப் போனார்.

"தூரத்து சொந்தம் என்று சொல்லிக்கொண்டு வந்தவள்

இந்த வீட்டில் மாதக் கணக்கில் தங்குவானேன்? நீங்க பதில் சொல்லவில்லை என்றால் நானே அந்த அம்மாளிடம் கேட்பதாக இருக்கிறேன்."

"ஜெயா!" ஹரி தங்கையை தடுப்பது போல் சொன்னான்.

"அண்ணா! நான் கேட்டதில் என்ன தவறு இருக்கு? எத்தனை நாட்களுக்குத்தான் என்னை வாயை மூடிக் கொண்டு இருக்கச் சொல்கிறாய்? என் வாழ்க்கை எப்படியும் நாசமாகி விட்டது. அந்தக் குழந்தைகளின் எதிர்காலமாவது நன்றாக இருக்கணும் என்று நினைக்கிறேன். பூனையை இருட்டு அறைக்குள் பூட்டி வைத்தால் புலியாய் மாறி மேலே பாயும் என்ற விஷயம் இவருக்குத் தெரியாதோ என்னவோ? குளிக்க வென்னீர் போடுகிறேன்." சொல்ல நினைத்ததை சொல்லி முடித்துவிட்டது போல் ஜெயா உள்ளே போய்விட்டாள்.

"உன் தங்கை சொல்வதை கேட்டாயா? சாப்பாட்டுக்கு வக்கு இல்லாதவர்களை உட்காரவைத்து மூன்று வேளையும் விருந்துச் சாப்பாடு போட்டால் இப்படித்தான் திமிராக பேசுவார்கள்."

ஹரியின் முகம் கன்றிவிட்டது. சும்மா சும்மா சாப் பாட்டுக்கு வக்கு இல்லாதவர்கள் என்று அவர் தாழ்த்திப் பேசுவதை கேட்டுக் கொண்டு பொறுமையாக இருப்பது அவனுடைய சக்திக்கு மிஞ்சின காரியமாகிவிட்டது. ஜெயாவை அழைத்து புத்திமதி சொல்லும் பொறுமையோ, சுய அபிமானத்தை அடக்கிக் கொண்டு புருஷோத்தமனை சமாதானப்படுத்தும் தெம்போ அவனிடம் இருக்கவில்லை.

பப்லூவை அழைத்துக்கொண்டு தன்னுடைய அறைக்குச் சென்றான். பப்லூவின் உதவியோடு தங்களுடைய உடைகளை, உடமைகளை பெட்டியில் அடுக்கி வைத்தான்.



யதேச்சையாக உள்ளே வந்த ஜெயா அண்ணன் செய்து கொண்டிருக்கும் காரியத்தைப் பார்த்துத் திகைத்துப் போனாள். "அண்ணா! என்ன காரியம் இது?" சட்டென்று அருகில் வந்தாள்.

"டாக்ஸியை எடுத்துக்கிட்டு வரப் போகிறேன். இந்த நரகத்தில் என்னால் இனி இருக்கமுடியாது. நாங்க மூன்று பேரும் தனியாக போகிறோம்."

"இப்பொழுதுதானே ஊரிலிருந்து வந்தாய்? திடீரென்று எங்கே போக முடியும்? வாடகைக்கு வீடு எப்படி கிடைக்கும்?"

"ஏதோ ஒரு இடத்திற்குப் போய்க் கொள்கிறோம். சுவாமி நாதன் மாமா வீட்டுப் பக்கத்து போர்ஷன் காலியாக இருப்பதாக சொன்னார். அது கிடைக்குமா என்று விசாரிக்கிறேன். அது கிடைக்கவில்லை என்றாலும் கோவில் அர்ச்சகர் ரொம்ப நல்லவர். வேறு இடம் கிடைக்கும் வரையில் ஆதரவு காட்டாமல் இருக்கமாட்டார்."

ஜெயா மௌனமாக இருந்துவிட்டாள். எப்போதும் போல் போகக் கூடாது என்று அண்ணனைத் தடுக்கவில்லை.

ஹரி செருப்பு அணிந்து கொண்டே சொன்னான். "ஜெயா! உன்னை இந்த நரகத்தில் விட்டுவிட்டுப் போவதில் எனக்கு விருப்பம் இல்லை. நீயும் எங்களுடன் வந்துவிடு. வேண்டுமானால் காமாட்சி மாமி கிளம்பிப் போனபிறகு மறுபடியும் நீ இங்கே..."

"வேண்டாம் அண்ணா. நான் வரப்போவதில்லை. நீங்கள் கிளம்புங்கள்." இடைமறிப்பது போல் ஜெயா சொன்னாள்.

"என் மேல் கோபமா ஜெயா?"

"இல்லை அண்ணா. நானே சில நாட்களாக இதைப்பற்றி யோசித்து வருகிறேன். இத்தனை நாளும் உங்களை கட்டாயப்

படுத்தி இங்கே தங்க வைத்தது என்னுடைய முட்டாள் தனம்தான். அவர் உங்களை மேலும் மேலும் வார்த்தைகளால் சொல்லிக் காட்டுவதற்கு நானே வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துவிட்டேன்."

ஹரியால் பதில் பேசமுடியவில்லை. ஜெயாவின் வாழ்க்கை சீர்குலைந்து போய்விட்டது. அதை சரிசெய்ய தன்னால் முடியாமல் போனது ரொம்ப வேதனையாக இருந்தது. தான் தனியாக போனால் ஜெயா அவ்வப்போது வந்து தங்களிடம் கொஞ்ச நாட்களாவது நிம்மதியாக இருக்கக்கூடும்.

அரைமணியில் ஹரி டாக்ஸியுடன் திரும்பி வந்தான். அவனுடன் சுவாமிநாதனும் வந்திருந்தார். அந்த போர்ஷன் காலியாக இருப்பதாக ஹரி தெரிவித்தபோது ஜெயாவுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

ராமகிருஷ்ணன் எந்த பிரச்னையும் பண்ணாமல் அறையிலிருந்து வெளியே வந்து டாக்ஸியில் அமர்ந்து கொண்டான். ஜெயா பப்லூவைத் தூக்கிக் கொண்டு வந்து டாக்ஸியில் உட்கார வைத்தாள். "அத்தை! நீயும் வா." பப்லூ அத்தையின் கையைப் பிடித்துக் கொண்டான்.

"நாளைக்கு வருகிறேன். உனக்காக சாக்லேட், பபிள்கம் எல்லாம் வாங்கி வருகிறேன்." ஜெயாவின் குரலில் அழுகையை அடக்கும் முயற்சி வெளிப்பட்டது.

"ஜெயா! நான் எது செய்தாலும் நம் எல்லோருடைய நன்மையை யோசித்துத்தான் செய்வேன் என்று உனக்குத் தெரியும்."

"தெரியும் அண்ணா."

"என் மீது கோபம் இல்லையே?"



"ஊஹூம்...."

"நாளை வந்து உன்னை அழைத்துப் போகிறேன்."

"நீ வர வேண்டாம். நானே வருகிறேன்."

"சரி. போய் வருகிறோம்."

டாக்ஸி கிளம்பிப் போய்விட்டது. புருஷோத்தமன் அந்த நேரத்தில் வீட்டில் இல்லை. வெளியே எங்கேயோ போயிருந்தார். காமாட்சி உள்ளே இருந்தாலும் எழுந்து வாசலுக்கு வரவில்லை.

தரையோடு ஒட்டிக்கொண்டுவிட்டாற் போல் ஜெயாவின் கால்கள் நகர மறுத்தன. எப்படியோ முயற்சி செய்து உள்ளே வந்தாள். அதுவரையில் இருந்து வந்த தைரியம், துணிச்சல் எல்லாம் திடீரென்று காணாமல் போய்விட்டது போல் இருந்தது. சமையலறைக்குள் வந்தவள் தரையில் உட்கார்ந்து விட்டாள். அந்த வீட்டில் பரவியிருந்த தனிமை, சூனியம் அவளையும் ஆட்கொண்டு விட்டது போல் இருந்தது. உள்ளேயிருந்து துக்கம் பொங்கி வந்தது. முழங்காலில் முகத்தைப் புதைத்துக்கொண்டு மௌனமாக அழுது கொண்டிருந்தாள்.

இரண்டு நிமிடங்கள் .... யாரோ தோளில் கையைப் பதித்தார்கள். ஜெயா நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் சோகம் தெரிய லக்ஷ்மி எதிரே நின்றிருந்தாள். கண்ணனும், குட்டியும் எப்போ வந்தார்களோ தெரியவில்லை. மௌனமாக நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'கவலைப்படாதே. நாங்க உனக்கு துணையாக இருப்போம்' என்று தைரியம் சொல்லுவது போல் இருந்தது.

"ஜெயா! ஏன் அழுதுக்கிட்டு இருக்கிறாய்?" லக்ஷ்மி அப்பாவியாக கேட்டாள்.

ஜெயா விழிநீரைத் துடைத்துக் கொண்டு லக்ஷ்மியை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டதும் மற்ற குழந்தைகளுக்கும் தைரியம் வந்துவிட்டது. அருகில் வந்து நின்றார்கள். ஜெயா எழுந்து போய் மருதாணியை எடுத்து வந்தாள். "உங்களுக்கு மருதாணி இட்டுவிடுவதாக சொன்னதை மறந்தே போய்விட்டேன். வாங்க இட்டுவிடுகிறேன்" என்றாள்.

மூன்று குழந்தைகளும் "முதலில் எனக்கு. . . எனக்கு" என்று கைகளை நீட்டினார்கள்.

"ஒரே நேரத்தில் எல்லோருக்கும் எப்படி இடுவது? எல்லோரையும் விட சின்னவன் குட்டி முதலில் அவனுக்கு வைக்கிறேன். சரிதானே?" என்று சொல்லிவிட்டு குட்டியின் கையைப் பற்றிக் கொண்டாள்.

ஜெயாவின் ஆணைக்குக் கட்டுப்படுவது போல் மற்ற இருவரும் தங்களுடைய முறை வருவதற்காக காத்திருந்தார்கள். அந்த நேரத்தில் காமாட்சி அங்கே வந்தாள். ஜெயாவின் அருகில் அமர்ந்தபடி கதை பேசிக் கொண்டிருந்த குழந்தைகளைப் பார்த்ததும் அவள் மனதில் தீப்பற்றி எரிவது போல் இருந்தது.

"அண்ணன்மார்களை வீட்டை விட்டு அனுப்பி விட்டாயே. என்ன விஷயம்?" உதட்டை சுழித்துக் கொண்டே கேட்டாள்.

ஜெயா சரேலென்று நிமிர்ந்து பார்த்தாள். காமாட்சியின் கண்களில் தென்பட்ட பொறாமையை ஒரு நிமிடம் கண் இமைக்காமல் அப்படியே பார்த்தாள்.

"போக வேண்டிய நேரம் வந்தால் போய்த்தானே ஆகணும். என்னதான் சொந்தம் என்றாலும் இன்னொருத்தர்



வீட்டில் எத்தனை நாட்களுக்கு இருக்க முடியும்?" நிதானமான குரலில் சொன்னாள் ஜெயா.

அதைக் கேட்டதும் காமாட்சியின் முகம் விழுந்து விட்டது. கண்கள் கோபத்தில் சிவந்தன. தலையைக் குனிந்தபடி மருதாணி இட்டுக் கொண்டிருந்த ஜெயா காமாட்சியின் முகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை கவனிக்கவில்லை. காமாட்சி வேகமாக அந்த இடத்தை விட்டு வெளியேறினாள்.

* * *

450929 தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002
6214013

## 13

கிழக்கில் சூரியன் உதித்துக் கொண்டிருந்தான். பறவைகளின் சத்தம் தொடங்கிவிட்டது.

கட்டில்மீது படுத்திருந்த ஹரி தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ள முயற்சிப்பது போல் புரண்டு படுத்தான். ஜன்னல் வழியாக வீசிய குளிர்ந்த காற்று அவன் கன்னத்தைத் தழுவியது. மனம் விழித்துக் கொண்டாலும் உடல் மட்டும் ஒத்துழைக்க மறுத்தது.

தினமும் காலையில் விழிப்பு வந்ததும் ஒரு நிமிடம் அப்படியே படுத்துக் கொண்டு இயற்கை அன்னை இனிமையாக வழங்கும் பறவைகளின் சத்தம், காற்றில் அசைந்தாடும் இலைகளின் ஓசை இவற்றை ரசிப்பது அவனுடைய வழக்கம். விடியற்காலை வேளையில் யாரும் விழித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். வாகனங்களின் இரைச்சல் இருக்காது. அந்த நேரத்தில் புத்துணர்ச்சி ஏதோ உடலில் பாய்வது போல் அவனுக்குத் தோன்றும். உடனே வயலினை எடுத்து தனக்குப் பிடித்த பாட்டுகளை வாசிப்பான். புதிய ராகங்கள் அவன் கை

வழியாக வயலினுள் புகுந்து கொண்டு வெளியேற தவிப்பது போல் இருக்கும். இசையில் உடலும், உள்ளமும் காற்றில் மிதப்பதுபோல் உணரத் தொடங்கும் அபூர்வமான நிமிடங்கள் அவை.

வழக்கம் போல் உடனே எழுந்து வயலினை எடுத்து வாசிக்க வேண்டும் என்ற விருப்பத்தை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டான். இப்போ ஜெயா கூட இல்லை. முதலில் அண்ணனுக்கு காபி கலந்து தர வேண்டும். புருஷோத்தமன் வீட்டிலிருந்து வெளியே வந்துவிட்டோம் என்ற நினைப்பு வந்ததும் பெரிய பாரம் நீங்கிவிட்டது போல் நிம்மதியாக இருந்தது. வீட்டு வேலைகளை தனியாக செய்வதில் சிரமங்கள் இருந்தாலும், புருஷோத்தமனின் குத்தல் மொழிகளை இனி கேட்க வேண்டியதில்லை. இந்தக் காரியத்தை முன்னாடியே செய்திருக்க வேண்டும். சுவாமிநாதன் மாமா தெய்வம் போல் வந்து இந்தச் சமயத்தில் உதவி செய்தார். நன்றி உணர்ச்சி பெருக மனதிலேயே அவருக்குக் கும்பிடு போட்டான்.

புதுவீடு என்பதால் இடத்தைப் புரிந்து கொள்வதற்கு என்ன இருந்தாலும் நான்கைந்து நாட்கள் தேவைப்படும். பக்கத்து போர்ஷனில் சுவாமிநாதனின் மனைவி மகளுக்கு பள்ளி எழுச்சி பாடிக் கொண்டிருந்தாள்.

"ரமணீ! எழுந்திரு. பாட்டை சாதகம் பண்ணணும்."

"ஊம்." தூக்கக் கலக்கத்தில் முனகுவது கேட்டது.

"என் கண் இல்லையா? அந்த நாகமணியின் மகளைப் பாரு. ஆறு மாதம் கற்றுக் கொண்டாளோ இல்லையோ, அதற்குள் ரேடியோவில் பாட ஆரம்பித்து விட்டாள். நீயும்தான் இரண்டு வருடங்களாய் பாட்டு படித்து வருகிறாய். என்ன பிரயோஜனம்? ரேடியோ ஸ்டேஷன் கேட் அருகில் கூட



போனதில்லை. நீ பாட்டு கற்றுக் கொள்ளணும் என்ற தவிப்பு எனக்குத்தானே தவிர உனக்குக் கொஞ்சம் கூட சிரத்தை போறாது. எத்தனை முறை சொல்லியிருக்கிறேன், காலையிலேயே எழுந்து சாதகம் பண்ணணும்னு."

"தூக்கம் வருது மம்மீ."

"பாழாய் போன தூக்கம். முதலில் எழுந்து சாதகம் பண்ணு. பெரிய பெரிய இசை வித்வான் எல்லோரும் காலையிலேயே எழுந்து மணிக்கணக்கா பாடுவார்களாம். எங்க அத்தை சொல்லிக் கொண்டு இருப்பாள். சின்ன வயதில் எங்க அத்தை பற்கள் கிட்டித்துப் போகும் குளிர்காலத்திலும் குளத்தில் கழுத்தளவுக்கு நீரில் நின்று சாதகம் செய்வாளாம். தலையெழுத்து சரியில்லாமல் கணவன் சீக்கிரமாக போய்ச் சேர்ந்துவிட்டான். சங்கீதத்தை பாதியிலேயே நிறுத்தி விட்டாள். இல்லை என்றால் அவளைப் போன்ற இசை மேதை நம் நாட்டில் யாராவது இருக்க முடியுமா என்ன?"

"ஆரம்பித்து விட்டாயா உன் அத்தையின் புராணத்தை? காலையில் எழுந்து காபி அடுப்பை பற்ற வைத்தாயா இல்லையா?" சுவாமிநாதன் சலித்துக் கொண்டார்.

"சித்தெ இருங்க. ரமணீ! என் கண் இல்லையா? இன்னிக்கு உன்னை சினிமாவுக்கு அனுப்பி வைக்கிறேன்."

"உண்மையாகவா?" அந்தக் குரலில் தூக்கக் கலக்கம் பறந்து போய்விட்டது.

"உன் மேல் சத்தியமா."

"ஐயா! அம்மான்னா அம்மாதான்." - உற்சாகத்துடன் எழுந்து கொண்டாள்.

"பங்கஜம்! அவளுக்கு பாட்டு வந்தால் வரட்டும். இல்லா

விட்டால் போகட்டும். நீ இப்படி தினமும் அவளுக்கு லஞ்சம் கொடுத்து பழக்காதே." சுவாமிநாதன் கடிந்து கொண்டார்.

"நீங்க அப்படித்தான் சொல்வீங்க. இன்னும் சின்னவள் தானே. போகப் போகச் சரியாகிவிடும்." பங்கஜம் சால்ஜாப்பு சொன்னாள்.

இரண்டு நிமிடங்கள் கழித்து ஹார்மோனியம் ஒலிக்கத் தொடங்கியது. "ஸ்ரீ . . . கண . . . நாத சிந்தூராவர்ண." வாயப்பாட்டும் கேட்டது.

கட்டில் மீது படுத்திருந்த ஹரி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டு இரண்டு கையாலேயும் காதுகளைப் பொத்திக் கொண்டான்.

ஏற்கனவே கட்டைக்குரல். போறாத குறைக்கு அபசுருதி வேறு. ஹார்மோனியத்தின் சுருதிக்கும் அந்த குரலுக்கும் கொஞ்சம் கூட ஒத்துப் போகவில்லை.

ஹரியால் எதையும் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் இசையில் அபசுருதியை மட்டும் தாங்கிக் கொள்ள முடியாது. உடனே எழுந்து போய் "தாயே! இசையை கொலை செய்யாதே. தயவு செய்து உடனே பாட்டை நிறுத்து" என்று கத்த வேண்டும் போல் இருந்தது. ஆனால் அப்படி செய்ய முடிய வில்லை. சற்றுமுன்தானே சுவாமிநாதனுக்கு மனதிலேயே நன்றி தெரிவித்தான். அவ்வளவு உதவி செய்த மனிதரிடம் போய் "அய்யா! உங்க மகளுக்கு கட்டைக் குரல். ஆயிரம் ஜென்மம் எடுத்தாலும் அவளுக்கு பாட்டு வர வாய்ப்பு இல்லை" என்று எப்படி சொல்வது?

வாடகை வீடுகளில் குடி இருப்பவர்களின் நிலைமை இதுதான். அடுத்தடுத்து போர்ஷன்களில் இருப்பவர்கள் வெவ்வேறு சுபாவம் கொண்டவர்களாக இருந்தால் அட்ஜெஸ்ட் பண்ணிக் கொண்டு போவதைத் தவிர வேறு வழியில்லை.



சற்றுமுன் புருஷோத்தமனின் குத்தல் மொழிகளை இனி கேட்க வேண்டியதில்லை என்று சந்தோஷப்பட்டுக் கொண்ட தெல்லாம் ஆவியாகிவிட்டது. இந்த வீட்டில் இருந்தால் தினமும் காலையில் எழுந்து கொண்டதும் இந்த கர்ண கடூரமான இசையைக் கேட்க வேண்டுமே என்ற பயம் வந்துவிட்டது.

"டேய் பப்லூ." பக்கத்தில் படுத்திருந்த பப்லூவைத் தட்டி எழுப்பினான்.

"சித்தப்பா! காதுகளை மூடிக்கிட்டு இருக்கிறேன். உன் பேச்சு என் காதில் சரியாக விழவில்லை" என்றான்.

"சுவாமிநாதன் மாமா வீட்டுக்குப் போய் தீப்பெட்டி வாங்கிக்கிட்டு வா. ஸ்டவ் பற்ற வைத்து அண்ணாவுக்கு காபி போட்டுக் கொடுக்கணும்."

பப்லூ எழுந்து அடுத்த போர்ஷனுக்கு ஓடினான். பப்லூ மாமியிடம் தீப்பெட்டி வேண்டுமென்று கேட்டது ஹரியின் காதுகளில் விழுந்து கொண்டுதான் இருந்தது.

"இதோ தீப்பெட்டி. எடுத்துக்கொள். காதை ஏன் பொத்திக்கிட்டு இருக்கே? காது வலியா?" மாமி கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஹரிக்குச் சிரிப்புத்தான் வந்தது. எழுந்து போர்வையை மடித்து வைக்கும்போது "சித்தப்பா! இதோ தீப்பெட்டி" என்று கொண்டு வந்து கொடுத்தான்.

பப்லூவின் பின்னாலேயே டவலால் முகத்தைத் துடைத்தபடி சுவாமிநாதன் உள்ளே வந்தார்.

"என்னப்பா ஹரி! அதற்குள் விழித்துக் கொண்டு விட்டாயா? புது இடம் இல்லையா? நன்றாக தூங்கினாயா?" என்று குசலம் விசாரித்தார்.

"ஊம். நன்றாக தூங்கிவிட்டேன்."

"சித்தப்பா! ஸ்டவ்வை பற்ற வைத்து டிகாக்ஷனுக்குத் தண்ணி வைக்கட்டுமா?" பப்லூ கேட்டான். அவனுக்கு அந்த ஒரு வேலை மட்டும்தான் தெரியும்.

"சித்தெ இரு. நானே வருகிறேன்."

"ஸ்டவ் எதுக்கு மூட்டணும்? காபி போடத் தானே! உங்களுக்கும் சேர்த்து என் மனைவி கலந்து கொண்டு இருக்கிறாள். பங்கஜம்! உன்னைத்தான். காபி கலந்தாச்சா?" அடுத்த போர்ஷனுக்குக் கேட்பது போல் குரல் கொடுத்தார்.

"ஆச்சு. எடுத்துக்கிட்டு வர்றேன்."

"அடடா. உங்களுக்கு வீண் சிரமம் ஏன்?" ஹரி சங்கடத்துடன் சொன்னான்.

"இதில் சிரமம் என்ன இருக்கு? நீயோ பார்வை யில்லாதவன். சின்னப் பையனையும் வைத்துக் கொண்டு சிரமப்படுவானேன்? கஞ்சியோ கூழோ நம் வீட்டிலேயே சாப்பிடலாம் இல்லையா?"

"வேண்டாம் மாமா. ஒருத்தருக்கு மூன்று பேர் இருக்கிறோம். இது ஒரு நாளில் முடிந்து போகிற விஷயம் இல்லையே! வீட்டு வேலை செய்வது எனக்குப் பழக்கம்தான்." ஹரியின் குரல் திடீரென்று கம்மிவிட்டது. "கடவுள் எனக்கு அநியாயம் செய்தாலும் அண்ணி எனக்கு வழிகாட்டியாக இருந்தாள். எந்த வேலையாக இருந்தாலும் செய்யக்கூடிய திறமையும், பொறுமையும் எனக்கு இருக்கு."



"வேற்று மனிதனைப் போல் கூச்சப்படாதே. உனக்கு நெருங்கியவனாக இருக்கணும் என்றும், நம் இரு குடும்பங்கள் ஒன்றோடு ஒன்று இணைய வேண்டும் என்றும் ஆசைப் படுகிறேன்." சுவாமிநாதன் சொன்னார்.

அவருடைய பேச்சில் மறைந்திருந்த பொருளை உணர்ந்த ஹரி மௌனம் வகித்தான்.

பத்து மணிக்கு மேல் சுவாமிநாதன் சாப்பிட்டுவிட்டு ஏதோ வேலையாக வெளியில் போய்விட்டார். ஹரி பொருட்களை எல்லாம் எடுத்து வைத்துவிட்டு சமையலை முடிக்கும்நேரம் பங்கஜம் உள்ளே வந்தாள். வரும்போதே "என்ன தம்பீ! நாங்க பக்கத்தில் இருக்கும் போதே நீ இப்படி அடுப்பை மூட்டுவது எனக்குக் கொஞ்சம் கூடப்பிடிக்க வில்லை. அவர் அவ்வளவு சொன்ன பிறகும் கேட்காமல் சமைக்கத் தொடங்கிவிட்டாயா?" நிஷ்டூரமாக கேட்டாள்.

"பரவாயில்லைங்க" அவர்கள் மனதை நோகடிப்பது ஹரிக்கும் கஷ்டமாகத்தான் இருந்தது.

"கிண்ணத்தில் வெங்காய சாம்பார் கொண்டுவந்தேன்." பங்கஜம் கிண்ணத்தைச் சமையலறையில் வைத்துவிட்டு வந்தாள். "ஹரீ! நீ இந்தப் போர்ஷனுக்கு குடி வந்தது எவ்வளவு சந்தோஷமாக இருக்கு தெரியுமா? கடவுள் சிலசமயம் நம்மைக் கேட்காமலேயே நம்முடைய விருப்பங்களைத் தீர்த்து வைப்பார் போலும். என் மகள் ரமணிக்குச் சங்கீதம் கற்றுக் கொடுக்கணும்னு ரொம்ப தவிக்கிறேன். அது என்ன கர்மமோ எத்தனை மாஸ்டர்களை ஏற்பாடு செய்தாலும் ஒருத்தர் கூட பத்து நாட்களுக்கு மேல் நீடிக்கவில்லை. அப்படியும் அவர்கள் கேட்ட சம்பளம், டிபன், காபி எல்லாம் கொடுத்து வந்தேன். என் மகள் ரேடியோவில் பாடணும். அதை நான் கேட்கணும்.

இதுதான் என் விருப்பம். இந்த ஜென்மத்தில் என் விருப்பம் நிறைவேறுமா இல்லயோ தெரியாது. அதோ! என் மகள் ரமணியே வந்துவிட்டாள். வாம்மா ரமணீ! வா. . . வா. . . ஹரியிடம் உன்னைப் பற்றித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஹரி நம் பக்கத்து போர்ஷனில் குடி வந்தது முன் பிறவியில் நாம் செய்த பாக்கியம். இரண்டு வேளையும் ஹரியிடம் வந்து சிரத்தையாக சங்கீதம் கற்றுக் கொள்." ஆணையிடுவது போல் சொன்னாள்.

சமையலை முடித்துவிட்டு தோளில் கிடந்த டவலில் கையைத் துடைத்துக் கொண்டிருந்த ஹரி பதில் எதுவும் சொல்லவில்லை. திடீரென்று சோர்வு ஆட்கொண்டது போல் இருந்தது. புருஷோத்தமனின் சுடுசொற்களிலிருந்து தப்பித்துக் கொண்டோம் என்றால் இங்கே இந்தக் கட்டைக் குரல் சொந்தக்காரிக்குப் பாட்டு கற்றுக் கொடுக்கணுமா? குரலைக் கேட்கும் போதே எங்கேயாவது ஓடிவிட்டால் தேவலை என்று நினைத்தானே? அப்படி இருக்கும்போது அந்த இசைக் குயிலுக்கு தான் சங்கீதம் கற்றுத் தருவதா? வேறு நரகமே தேவையில்லை. நெருப்புக்கு பயந்து எண்ணெய் சட்டியில் விழுந்தாற்போல் இருந்தது அவன் நிலைமை.

பங்கஜம் மாமி கிளம்பிப் போனபிறகு ஹரி தட்டில் சாதம் பரிமாறிக் கொண்டு ராமகிருஷ்ணன் அறைக்கு எடுத்து வந்தான். தனக்குத் தானே ஏதோ பேசிக்கொண்டிருந்த ராமகிருஷ்ணன் ஹரி சாப்பாடு எடுத்து வருவதைப் பார்த்து விட்டு "நீ எதுக்கு எடுத்து வந்தாய்? ஜெயா எங்கே போனாள்?" என்று கோபமாக கேட்டான்.

"ஜெயா இப்போ நம் வீட்டில் இல்லை அண்ணா. புருஷோத்தமன் வீட்டில் இருக்கிறாள்." அண்ணனைச் சமாதானப்படுத்துவது போல் சொன்னான்.



ராமகிருஷ்ணன் சட்டென்று தம்பியின் அருகில் வந்தான். தோளில் கையைப் பதித்து, குரலைத் தாழ்த்திக் கொண்டு "ஜெயாவை நம்முடன் அழைத்து வரவில்லையா? உனக்குக் கொஞ்சமாவது புத்தி இருக்கா? கல்யாணம் ஆக வேண்டிய பெண்ணை வேற்று மனிதர் வீட்டில் விட்டு வைப்பதாவது? இந்தச் செய்தி உங்க அண்ணியின் காதுக்கு எட்டினால் என்னை உயிரோடு இருக்கவிடுவாளா? போய் முதலில் ஜெயாவை அழைத்து வா." வலுக்கட்டாயமாக வாசல் பக்கம் தள்ளிவிட்டான்.

"முதலில் சாப்பிடு அண்ணா. நான் போய் அழைத்து வருகிறேன்."

"ஊஹூம். இப்போ உடனே போய் அழைத்து வந்துவிடு."

"அண்ணா!"

"ஷ்! மேற்கொண்டு ஒரு வார்த்தை பேசாதே. நீ போய் அழைத்து வரப் போகிறாயா இல்லை நானே போகட்டுமா?"

"வேண்டாம் அண்ணா. நானே போகிறேன்." வேறு வழியில்லாதவனாய் ஹரி வெளியில் வந்தான்.

பின்னாலிருந்து ராமகிருஷ்ணன் குரல் கொடுத்தான். "ஹரீ! அப்படியே கஞ்சனூர் மாமாவுக்கு டெலிகிராம் கொடு. அண்ணியை, குழந்தைகளை உடனே அனுப்பச் சொல்லு. எத்தனை நாட்களுக்குத்தான் வீட்டைக் காவல் காத்துக் கொண்டிருக்க முடியும்? எனக்கு வேறு வேலை இல்லையா என்ன?" ராமகிருஷ்ணன் சலித்துக் கொண்டான்.

* * *

ஜெயா குழந்தைகளை வரிசையாக உட்கார வைத்து சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்தாள். அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தாளே ஒழிய அவள் மனம் மட்டும்

அண்ணன்களைச் சுற்றிச்சுற்றி வந்தது. புது இடத்தில் ஹரி அண்ணா என்ன அவஸ்தை படுகிறானோ என்னவோ? புருஷோத்தமனை கல்யாணம் செய்து கொண்டதில் தன்னுடைய சொந்த சுகம் எதுவும் எதிர்பார்க்கவில்லை என்றாலும், அண்ணன்களும், தானும் ஒரே இடத்தில் இருக்கலாம் என்று தவறாக எடை போட்டுவிட்டாள். புருஷோத்தமன் மட்டும் தன்னுடைய மனதைப் புரிந்து கொண்டு இந்த ஒரு விருப்பத்தை நிறைவேற்றியிருந்தால் அவர் தனக்கு இழைத்த தீங்கைக் கூட மன்னித்து விடத் தயாராக இருந்தாள். ஆனால் அவள் நினைத்தது நடக்கவில்லை. புருஷோத்தமன் போன்ற கஞ்சனிடமிருந்து அது போன்ற இரக்கத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என்று புரிந்துவிட்டது.

குழந்தைகள் சாப்பிட்டு முடித்துவிட்டார்கள். கையில் மோர் பாத்திரத்துடன் பழைய நினைவுகளில் மூழ்கியிருந்தவள் "ஜெயா!" என்று ஹரி அழைக்கும் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டாள். தன் காதுகளையே நம்ப முடியாதவள் போல் ஒரு நிமிடம் அப்படியே நின்றுவிட்டாள். மற்றொருமுறை ஹரி அழைத்ததும் விருட்டென்று வாசலுக்கு வந்தாள்.

"அண்ணா! நீதானா! இப்பொழுதுதான் உன்னைப் பற்றி நினைத்துக்கொண்டு இருந்தேன். சமையல் ஆகிவிட்டதா? அண்ணாவுக்குச் சாப்பாடு கொடுத்தாயா? பப்லூவை ஏன் அழைத்து வரவில்லை?" கேள்வி மேல் கேள்வியாக கேட்டாள்.

"பப்லூ வீட்டில் இருக்கிறான். சமையல் எல்லாம் ஆகிவிட்டது. அண்ணா காலையிலிருந்து காபி கூட சாப்பிடவில்லை. நீ வந்தால் தவிர சாப்பிடமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறான். என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை." ஹரியின் குரலில் இயலாமை வெளிப்பட்டது.



ஜெயா ஒரு நிமிடம் மௌனமாக அண்ணனைப் பார்த்தாள். ஏதோ முடிவுக்கு வந்தவள் போல் "ஒரு நிமிடம் இரு" என்று உள்ளே போய் கையில் இருந்த மோர் பாத்திரத்தை சமையலறையில் வைத்துவிட்டு வந்தாள். "சீக்கிரமாக வந்து விடுவேன். சண்டை போடாமல் விளையாடுங்கள்" என்று குழந்தைகளிடம் சொல்லிவிட்டு ஹரியிடம் வந்தாள். இடுப்பில் செருகியிருந்த புடவைத் தலைப்பை எடுத்து சரி செய்துவிட்டு தோளைச் சுற்றிலும் போர்த்திக் கொண்டாள். "கிளம்புவோமா?" ஹரியிடம் கேட்டாள், அவன் கையைப் பற்றிக் கொண்டே.

சற்று நேரம் கழித்து புருஷோத்தமன் வீட்டுக்கு வந்தார். வெயிலில் அலைந்துவிட்டு வந்ததாலோ என்னவோ அவருக்கு ரொம்ப வியர்த்துக் கொட்டியது. அப்பாடா என்று ஈசிச் சேரில் சாய்ந்து கொண்டே "குட்டீ! குடிக்கத் தண்ணி கொண்டு வா" என்று குரல் கொடுத்தார்.

தண்ணீர் டம்ளருடன் காமாட்சி அங்கே வந்தாள்.

"நீ எடுத்துக்கிட்டு வருவானேன்? குழந்தைகள் எங்கே?" எரிச்சலுடன் கேட்டார்.

"விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்." காமாட்சி அவருடைய எரிச்சலைப் பொருட்படுத்தவில்லை.

"சாப்பாடு பரிமாறட்டுமா இல்லை சித்த நேரம் போகலாமா?" ரொம்ப பணிவான குரலில் கேட்டாள்.

"நீயா! ஏன்? ஜெயா எங்கே போனாள்?"

"பிறந்த வீட்டுக்கு."

புருஷோத்தமன் மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை. எப்போ போனாள்? யாருடன் போனாள் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் இருந்தாலும் கட்டுப்படுத்திக் கொண்டார்.

"எனக்குப் பசி இல்லை. ஜெயா வரட்டும். வந்த பிறகு சாப்பிட்டுக் கொள்கிறேன்" என்றார்.

"எப்போ வருவாளோ என்னவோ? தனக்காக காத்திருக்க வேண்டாம்னு சொல்லச் சொன்னாள். பிறகு உங்கள் விருப்பம். ஆசை மனைவி பரிமாறினால் தவிர சாப்பாடு இறங்காது என்றால் பட்டினியாக இருக்க வேண்டியதுதான். அவளுக் கென்ன? ஊரைச் சுற்றிவிட்டு எப்போ வேண்டுமானாலும் வருவாள். இந்தக் கிழட்டுப் புருஷனால் எதுவும் செய்ய முடியாது என்று அவளுக்கு நன்றாகத் தெரியும்."

"வாயக்கு வந்தபடி பேசாதே." புருஷோத்தமன் கோபமாக ஈசிச்சேரிலிருந்து எழுந்து கொண்டார்.

"இப்போ நான் தவறாக என்ன சொல்லிவிட்டேன்? உங்களை கிழவன் என்று சொல்லாமல் கட்டிளம் காளை என்று சொல்வார்களா? இப்படி நீங்க அப்பாவியாக இருப் பதை பார்த்தால் எனக்கு இரக்கமாக இருக்கு. அந்தச் சிறுக்கி ரொம்ப சாமர்த்தியமாக அண்ணன்களை வீட்டைவிட்டு அனுப்பிவிட்டாள். அவளுடைய திட்டம் என்னவென்று புரிந்து கொள்ளாத முட்டாளாக இருக்கீங்க. இங்கே நான் ஒருத்தி ராட்சசி போல் இருபத்தி நாலு மணி நேரமும் காவல் இருப்பதால் அந்த வேணுவுடன் இஷ்டம் வந்தது போல் இருக்க முடியவில்லை. அவனுடன் கூட்டு சேர்ந்து கொண்டு தான் அண்ணன்களை வெளியில் அனுப்பியிருக்கிறாள். இனி பிறந்த வீட்டுக்குப் போகும் சாக்கில் எங்கே வேண்டுமானாலும் போய் வரலாம் இல்லையா? போகக் கூடாது என்று நீங்கள் தடை சொன்னால் கிழவனை சந்தேகப் பேய் பிடித்து ஆட்டுகிறது. அதான் இளம் மனைவியைப் பிறந்த வீட்டுக்குக் கூட அனுப்ப மறுக்கிறான் என்று ஊரார் உங்களைத்தான்



தூற்றுவார்கள்" காமாட்சி வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் பேசினாள்.

அதைக் கேட்டதும் புருஷோத்தமனின் முகம் விழுந்து விட்டது. அந்த நிமிடம் காமாட்சி சொன்னது உண்மையாகத் தான் இருக்கும் என்று தோன்றியது. "என் தலையெழுத்து இப்படி எல்லாம் நடக்கும் என்று தெரியாமல் கல்யாணம் பண்ணிக் கொண்டுவிட்டேன்" இரு கைகளாலேயும் தலையை பிடித்துக் கொண்டார்.

"இப்போ மட்டும் என்ன மிஞ்சிவிட்டது? அவள் அப்படியே பிறந்த வீட்டில் கிடக்கட்டும்."

புருஷோத்தமன் கோபமாக முறைத்தார். "உன் அறிவுரைகள் இங்கே யாருக்கும் தேவையில்லை." நாற்காலி மீது கிடந்த அங்கவஸ்திரத்தை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டே "இந்தத் தடவை அவள் மட்டும் வாசற்படியை தாண்டிப் போகட்டும், காலை உடைத்துப் போட்டு விடுகிறேன்" என்று கத்தியபடி வேகமாக வெளியேறினார்.

பின்னால் நின்றிருந்த காமாட்சி உதட்டைச் சுழித்து விட்டு மோவாய் கட்டையைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டாள்.

* * *

ஜெயா பெரிய அண்ணனுக்குச் சாப்பாடு பரிமாறினாள். மருந்து மாத்திரை கொடுத்துவிட்டு படுக்கையை ஒழுங்குப் படுத்தினாள். அண்ணன் தூங்கிய பிறகு வெளியே வந்தாள். வீட்டைப் பெருக்கித் துடைத்து ஹரிக்காக தட்டைப் போட்டு சாப்பாடு பரிமாறினாள்.

"நீயும் சாப்பிடு ஜெயா." ஹரி சொன்னான்.

"வேண்டாம் அண்ணா. நான் மறுபடியும் சீக்கிரமாக வீட்டுக்குப் போகனும். நீ சாப்பிடு. அதற்குள் நான் துணிகளைத் துவைத்து விட்டு வருகிறேன்." கிணற்றடி பக்கம் போனாள்.

"வேண்டாம் ஜெயா. மாலையின் நான் வந்து பார்த்துக் கொள்கிறேன்" ஹரி குரல் கொடுத்தான்.

ஜெயா காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஹரி சாப்பிட்டு முடிப்பதற்குள் மளமளவென்று துணிகளைத் துவைத்து கொடியில் உலர்த்திவிட்டு வந்தாள்.

"நாளை மறுபடியும் வருகிறேன். நான் வரும் வரையில் நீ வீட்டு வேலைகள் எதுவும் செய்ய வேண்டாம். சமையல் வேலையை மட்டும் பார்த்தால் போதும்."

ஹரி பெருமூச்சு விட்டுக் கொண்டான். "ஜெயா! எத்தனை நாட்களுக்கு இப்படி நடக்கும்?"

"நான் உயிரோடு இருக்கும் வரைக்கும்."

"அந்தக் கிழவர் சும்மா இருப்பாரா? ஏதாவது சொல்லி உன்னைப் படுத்தி வைத்தால்?"

"அதான் நீ சீக்கிரமாக கல்யாணம் செய்து கொள்வது நல்லது என்கிறேன்."

"கல்யாணமா... எனக்கா? உனக்கு மூளை கலங்கிவிட்டதா ஜெயா?"

"இதில் தவறென்ன இருக்கு? உனக்கு என்ன குறை?"

"எனக்கு என்ன குறை? கண் பார்வை இல்லை. மனநலம் பாதிக்கப்பட்ட அண்ணன், வளர்த்து ஆளாக்க வேண்டிய அண்ணன் மகன், இவர்களுடைய பொறுப்பு என் மீது இருக்கிறது. கையில் காலணா இல்லை. நிரந்தர வருமானமும் இல்லை. இதெல்லாம் ஒரு குறையா என்ன? இந்த வீட்டுக்கு



வருபவள் இவர்களை வீட்டை விட்டு துரத்தினால்தான் ஆச்சு என்று என் தலைமீது ஏறி உட்கார்ந்தால் தவிர நம் பிரச்னைகள் ஒரு முடிவுக்கு வரப் போவதில்லை."

"நீ அப்படி சொன்னால் என்னால் பதில் சொல்ல முடியாது அண்ணா. பெரிய அண்ணன் பழையபடி ஆவார் என்றோ, நம் பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என்றோ நான் நினைக்கவில்லை. நம் தலையெழுத்து சரியாக இருந்திருந் தால் அண்ணி நம்மைவிட்டுப் போயிருக்கமாட்டாளோ என்னவோ? கஷ்டங்கள் சூழ்ந்து கொண்டதும் மனிதன் தொடக்கத்தில் கலவரப்படுவான். அவற்றிலிருந்து மீளுவதற்கு பலவிதமாக முயற்சி செய்வான். ஆனால் அவை தீராத பிரச்னைகள் என்று புரிந்தபிறகு பழக்கப்பட்டுப் போய் விடுவான். அவற்றுடன் சேர்ந்து வாழும் பொறுமை தானாகவே வந்துவிடும். நாமும் அந்த வழியைத்தான் பின்பற்ற வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன்."

"ஜெயா!" ஹரி வியப்புடன் சொன்னான். நேற்று வரையில் அப்பாவிச் சிறுமியாக இருந்த ஜெயாதானா இப்படி பேசியது? பல அனுபவங்களை ஜீரணித்துக் கொண்ட பெரிய மனுஷிபோல் வாழ்க்கைக்குப் புதிய அர்த்தங்களை, விளக்கத்தைச் சொல்கிறாளே!

"இனி நான் கிளம்புகிறேன் அண்ணா. பப்லூ ஸ்கூலை விட்டு வந்ததும் என்னிடம் அனுப்பு. அங்கே குழந்தைகளுடன் சற்று நேரம் விளையாடிவிட்டு வரட்டும்."

"அப்படியே அனுப்புகிறேன். சாப்பிடச் சொன்னால் மறுத்துவிட்டாய். நாங்க இப்படி தனியாக வந்துவிட்டோம் என்ற கோபம் இன்னும் போகவில்லை போலும்."

"இல்லை அண்ணா. மனப்பூர்வமாக சொல்கிறேன். நீ செய்தது ரொம்ப நல்ல காரியம். என் முட்டாள்தனத்தினால்

என் வாழ்க்கையைச் சீர்குலைத்துக் கொண்டதோடு, இத்தனை நாளும் உங்களையும் தொல்லைக்கு ஆளாக்கிவிட்டேன். எல்லோரும் சேர்ந்து இருக்கணும் என்று யோசித்தேனே தவிர அதனால் உங்களுக்கு ஏற்படக்கூடிய சங்கடங்களை, பிரச்னைகளை நினைத்துப் பார்க்கவில்லை."

ஹரியின் முகத்தில் ஆவேசம் தென்பட்டது. "ஜெயா! உண்மையைச் சொல்லு. புருஷோத்தமன் தன்னுடைய வார்த்தை ஜாலத்தில் உன்னை மயக்கி, இந்தத் திருமணத்தை நடத்திக் கொண்டுவிட்டார் இல்லையா? நான் சொன்னது சரிதானே?"

ஜெயா பதில் சொல்லவில்லை. மௌனமாக இருந்து விட்டாள். கண்பார்வை இல்லாமல் போனதால் ஹரியால் ஜெயா முகத்தில் மாறிய உணர்வுகளைக் கண்டு கொள்ள முடியவில்லை. அந்த நிமிடம் மட்டும் அவனால் பார்க்க முடிந்திருந்தால் நடக்கக் கூடாதது நடந்து தங்கை பலிக்கடாவாக்கப்பட்ட விஷயத்தைப் புரிந்து கொண்டிருப்பான்.

"பதில் சொல்லு ஜெயா. நான் சொன்னது உண்மை தானே?"

"நடந்து முடிந்தவற்றைப் பற்றி இப்போது பேசுவதாலோ, நினைப்பதாலோ என்ன பிரயோஜனம் அண்ணா?"

கிணற்றிலிருந்து பேசுவது போல் ஒலித்த தங்கையின் குரலைக் கேட்டதும் ஹரியின் மனம் கலங்கிவிட்டது. அருகில் வந்து தங்கையின் தோள் மீது கையைப் பதித்தான். "ஜெயா! நடந்து முடிந்து போன விஷயத்தைப் பற்றி நீ எவ்வளவு வேதனைப்படுகிறாயோ எனக்குத் தெரியும். மனிதன் என்ற பிறகு வாழ்க்கையில் ஏதோ ஒரு சமயம் தவறு செய்வது சகஜம். அந்த தவறை திருத்திக் கொள்ளும் வாய்ப்பு சிலருக்குத்தான்



கிடைக்கும். எல்லோருக்கும் அந்த அதிர்ஷ்டம் இருக்காது. ஜெயா! ஆசைப்படுவதில் எந்த தவறும் இல்லை. அதோடு ஏமாற்றத்தையும் எதிர்கொள்ளும் தைரியம் மனிதனுக்கு இருந்தால் எந்த பிரச்னையும் அவனை பாதிக்காது. இப்பவும் ஒன்றும் மிஞ்சிப் போய்விடவில்லை. ரொம்ப நாளாக உன்னிடம் ஒரு விஷயம் சொல்லணும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். சமயமும் சந்தர்ப்பமும் சரியாக இல்லாததால் சொல்லவில்லை. ஜெயா! இன்னிக்கே டுடோரியல் காலேஜுக்குப் போய் விசாரிக்கிறேன். உன் வேதனையை, அதிருப்தியை படிப்பின் மீது மனதை செலுத்துவதன் மூலமாக மறந்து போக முயற்சி செய். அதில் உன் மனதிற்கு அமைதி கிடைக்கும்."

"அண்ணா."

"ஆமாம் ஜெயா! கை நிறைய வேலை இல்லை என்றால் மனம் கள்ளு குடித்த குரங்காக ஆட்டம் போட்டு நம்மையே புதைகுழியில் தள்ளிவிடும். உன்னுடைய படிப்புக்கு புருஷோத்தமன் ஒத்துழைப்பு தரமாட்டார் என்றும் ஆட்சேபணை சொல்லுவார் என்றும் எனக்குத் தெரியும். உன் படிப்புச் செலவுக்கு நீ அவரைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை. அதை எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். உங்க தெரு முனையிலேயே இருக்கும் பாலாஜி டுடோரியல் என்றால் உனக்குச் சௌகரியமாக இருக்கும்."

"ஏற்கனவே நீ சிரமப்பட்டுக் கொண்டு இருக்கும்போது மேலும்..."

"அதைப் பற்றி நீ கவலைப்படாதே." ஹரி சொல்லிக் கொண்டிருந்த போது புருஷோத்தமன் வேகமாக உள்ளே வந்தார்.

"ஜெயா எங்கே? வீட்டில் சொல்லாமல் கொள்ளாமல்

வருவதாவது? எல்லாம் அவள் இஷ்டம்தானா?" உள்ளே வரும் போதே கூச்சல் போடத் தொடங்கினார்.

"குரலை கொஞ்சம் தாழ்த்திப் பேசுங்கள். இது நம்முடைய வீடு இல்லை. அக்கம் பக்கத்து வீடுகளில் எல்லோருக்கும் காதில் விழும்." ஜெயா எச்சரித்தாள். "வரும்போது குழந்தைகளிடம் சொல்லிவிட்டுத்தான் வந்தேன். என் மீது இவ்வளவு அதிகாரம் கொண்டாடுவதற்கு முன் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லுங்கள். நான் உங்களை எதற்காக திருமணம் செய்து கொண்டேனோ உங்களுக்கு நன்றாகவே தெரியும். என் அண்ணன்களை வாழ்நாள் முழுவதும் காப்பாற்றுவேன் என்றும், அவர்களுக்கு எந்தக் குறையும் வராமல் பார்த்துக் கொள்வேன் என்றும் பொய் சத்தியம் செய்து என்னை ஏமாற்றிவிட்டீர்கள். எனக்குக் கொடுத்த வாக்கை நீங்கள் காப்பாற்றியிருந்தால் உங்களுக்கும், உங்களுடைய குழந்தைகளுக்கும் வாழ்நாள் முழுவதும் உழைத்து என் நன்றிக்கடனைத் தீர்த்து இருப்பேன். ஆனால் சொத்து கரைந்து போகிறதே என்று அவர்களை வீட்டை விட்டு துரத்திட்டீங்க. என் உடலால்கூட அவர்களுக்கு உழைக்கக் கூடாது என்று தடுப்பதற்கு உங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். நான் தினமும் இங்கே வந்து இந்த வீட்டு வேலைகளைச் செய்யத்தான் போகிறேன். இதில் உங்களுக்கு ஆட்சேபணை இருந்தால் சொல்லுங்கள். நான் அங்கேயே சாசுவதமாக இருந்து விடுகிறேன். ஊர் உலகம் என்ன சொல்லுமோ என்ற கவலை எனக்கு இல்லை." எந்த தயக்கமும் இல்லாமல் கச்சிதமாக தன் மனதில் இருப்பதை ஜெயா சொல்லி முடித்தாள்.

இந்தத் தகறாருக்கு நடுவில் தான் பேசுவதா வேண்டாமா என்று தயங்குவது போல் ஹரி மௌனமாக இருந்தான்.



புருஷோத்தமனுக்கு ஒரு நிமிடம் வாயடைத்துப் போய் விட்டது. கொஞ்சம் கூட பயமோ, தயக்கமோ இல்லாமல் ஜெயா தன் எதிரில் நின்று பேசியதைக் கேட்டதும் அவருடைய ஆவேசம் அப்படியே அடங்கிவிட்டது.

தான் மேலும் பிடிவாதம் பிடித்தால் சொன்னது போலவே ஜெயா இங்கேயே இருந்துவிடக்கூடும். இளம் மனைவியை விட்டுவிட புருஷோத்தமன் தயாராக இல்லை. அதோடு ஜெயா இங்கேயே இருந்துவிட்டால் காமாட்சி தன்னுடைய வீட்டைவிட்டு நகரமாட்டாள். எல்லாவற்றையும் யோசித்துவிட்டு ப்ளேட்டைத் திருப்பிவிட்டார்.

"இவ்வளவு சின்ன விஷயத்திற்கு அவ்வளவு பெரிய வார்த்தைகள் எதுக்கு? ஏதோ வயதில் பெரியவன். வெயிலில் சுற்றிவிட்டு வீட்டுக்கு வந்தால் தண்ணீர் கொடுக்கவும் நாதியில்லை. அதான் கோபம் வந்துவிட்டது. உங்க அண்ணன்களைப் பார்க்கப் போகக் கூடாது என்று நான் தடை சொல்லுவேனா? இது உன் பிறந்த வீடு. உன் இஷ்டம் போல் வந்து போகலாம். ஆனால் வீடு திரும்புவதற்கு இத்தனை நேரம் ஆகும் என்று வீட்டில் தகவல் சொல்லிவிட்டு வந்தால் எனக்கும் கவலை இருக்காது இல்லையா? இனி எப்போது நீ இங்கே வருவதாக இருந்தாலும் தனியாக வராதே. குழந்தைகள் யாரையாவது துணைக்கு அழைத்துக் கொண்டு வா. வரப் போக ரிக்ஷா ஏற்பாடு செய்து கொள்." நயம் கலந்த குரலில் சொன்னார்.

பெரிய ரகளை நடக்கப் போகிறது என்று எதிர்பார்த்த ஹரிக்கு திடீரென்று அவர் இப்படி தணிந்து போனது வியப்பாக இருந்தது.

"நான் வந்த போது நீ வீட்டில் இல்லை. எங்கே போனாய் என்று தெரியாமல் பதட்டமடைந்துவிட்டேன். பழங்காலத்து

ஆசாமி நான். கவலைப்படாமல் என்னால் இருக்க முடியாது. சரி. நான் கிளம்புகிறேன். இப்பவே வருகிறாயா இல்லை சித்த நேரம் கழித்து வருகிறாயா?" அனுகூலமாக கேட்டார்.

"வேலை முடிந்துவிட்டது. கிளம்பவேண்டியதுதான். அண்ணா! போய் வரட்டுமா?" ஜெயா அண்ணாவிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

ஜெயாவின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது என்று நினைக்கும் போது ஹரிக்குக் கவலையாக இருந்தது.

* * *

## 14

"வெங்கடாசலபதி! ஏழுமலையானே! நாங்கள் எல்லோரும் உன்னுடைய குழந்தைகள். அற்பப் பிராணிகள். எங்களையும் அறியாமல் தவறு செய்துவிட்டோம். எங்களை மன்னித்துவிடு சுவாமி." படபடவென்று கன்னத்தில் போட்டுக் கொண்டே திருநாகம் மாமி உரத்த குரலில் கத்தினாள். சுற்றிலும் கூடியிருந்த பெண்டுகள், "கோவிந்தா! கோவிந்தா!" என்று கூச்சல் போட்டார்கள்.

காமாட்சி விழிகளை உருட்டி, தலைவிரிகோலமாக சுவாமி வந்தது போல் ஆடிக் கொண்டிருந்தாள். இரண்டு கைகளாலேயும் மார்பில் அறைந்து கொண்டே "என்னை மறந்து போய்விட்டீர்களா? இந்த வீட்டுக் குல தெய்வம் நான். மூத்தாள் போன பிறகு இந்த வீட்டில் என்னை நினைப்பவர்கள் யாருமே இல்லை. விளக்கேற்றி பூஜை செய்யும் நாதிகூட இல்லை. திமிர் ஏறிப்போச்சு; உங்களுக்குக் கண் அவிஞ்சு போய்விடும். என்ன செய்கிறேன் பார்" என்று கத்தினாள்.



அவளுடைய சத்தல்கள் வீடு முழுவதும் எதிரொலித்தன.

அன்று குட்டியின் பிறந்தநாள். குழந்தைகள் எல்லோரும் ரகளை செய்ததால் ஜெயா புருஷோத்தமனிடம் கேட்டு சம்மதிக்கச் செய்து கொஞ்சம் பணமும் வாங்கிக் கொண்டு பிறந்தநாள் கொண்டாட ஏற்பாடு செய்தாள். அக்கம் பக்கத்து வீட்டு பெண்களை மாலையில் மஞ்சள் குங்குமம் பெற்றுக் கொள்ள அழைத்துவிட்டு வந்தாள்.

பிறந்தநாள் கொண்டாட்டம் என்றதும் குழந்தைகளின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. அவர்களுக்கு நினைவு தெரிந்தநாள் முதல் அடியும், வசவும் தவிர இது போன்ற கொண்டாட்டங்கள் பார்த்ததே இல்லை.

மாலையாகிவிட்டது. ஜெயா தான் வந்து செய்வதாக சொன்னாலும் கேட்காமல் லக்ஷ்மியும், கண்ணனும் மளமள வென்று பாயை விரித்தார்கள். பளிச்சென்று டிரெஸ் செய்து கொண்டு வீட்டுக்கும் வாசலுக்கும் அலைந்து கொண் டிருந்தார்கள்.

ஜெயா குட்டிக்கு கறுப்பு நூலை வைத்து நீளமாக பின்னி குஞ்சலம் வைத்தாள். பூ ஜடை தைத்து புதுப்பாவாடை, சட்டை அணிவித்தாள். குட்டிக்கு ஒரே கொண்டாட்டம். பின்னலை முன்னும் பின்னுமாக ஆட்டிக்கொண்டே வீடு முழுவதும் வளைய வந்தாள்.

"எங்களுடைய பிறந்தநாளை இதைவிட நன்றாக கொண்டாடுவோம்." குழந்தைகள் போட்டி போட்டுக் கொண்டு பேசிக் கொள்வதை பார்க்கும்போது ஜெயாவுக்கு சந்தோஷமாக இருந்தது.

இந்தக் குழந்தைகள் மட்டும் இல்லை என்றால் தன்னால் ஒரு நிமிடம் கூட இந்த வீட்டில் இருந்திருக்க முடியாது. தன்னுடைய துரதிர்ஷ்டம் அவர்களுக்கு வரமாக மாறி

விட்டது. குழந்தைகள் மலர்களைப் போன்றவர்கள். அன்பு, ஆதரவு என்ற சூரிய வெளிச்சம் இருந்தால்தான் அழகாக மலருவார்கள். உலகத்தை கொஞ்சம் கொஞ்சமாக புரிந்து கொள்ள முயற்சி செய்யும் குழந்தைப் பருவத்தில் அவர்களை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொள்ளும் பெரியவர்கள் இருப்பது அவசியம். அண்ணியிடம் தான் பெற்ற அன்பும், ஆதரவும்தான் இன்று இந்தக் குழந்தைகளைப் புரிந்து கொள்வதில் தனக்கு உதவியாக இருக்கிறது.

புருஷோத்தமன் ஜெயாவை அழைத்து, தன் முதல் மனைவியின் நகைகளை எல்லாம் கொடுத்து அணிந்து கொள்ளச் சொன்னார்.

"நகைகளை அணிந்து எனக்குப் பழக்கம் இல்லை. எனக்கு எப்படியோ இருக்கும்."

"நீ சொன்னதும் சம்மதம் தெரிவித்து, பணமும் கொடுத்து பிறந்த நாளை கொண்டாடச் சொல்லவில்லையா? இந்த ஒரு விஷயத்தில் என் பேச்சை நீ கேட்கக் கூடாதா?"

அவர் அப்படிச் சொன்னதும் ஜெயாவால் மறுக்க முடியவில்லை. நகைகளை அணிந்து கொண்டு வந்து நின்ற ஜெயாவைப் பார்த்தபோது அவருக்குத் திருப்தியாக இருந்தது. மாலையில் வீட்டுக்கு வரப்போகும் பெண்டுகள் தன்னைப் பற்றி நல்லவிதமாக நினைக்க வேண்டும். ஜெயாவுக்கு எந்த குறையும் வைக்கவில்லை என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதுதான் அவருடைய தவிப்பு.

நகைகளை அணிந்து கொண்டு பளிச்சென்ற தோற்றத்துடன் ஹாலுக்கு வந்த ஜெயாவைப் பார்த்ததும் காமாட்சியின் உள்ளம் தீப்பற்றிக் கொண்டதுபோல் எரிந்தது. அந்த நகைகளை ஒருமுறை அணிந்து கொள்கிறேன் என்று எத்தனை தடவை புருஷோத்தமனிடம் கேட்டிருக்கிறாள்? இதோ அதோ



என்று காலம் தள்ளினாரே ஒழிய தரவே இல்லை. அதை நினைக்கும்போது காமாட்சிக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் இருந்தது. இந்த ஆண்கள் எவ்வளவு முட்டாள்கள்? அவர்களையே நம்பி வந்து வாழ்க்கையைப் பிணைத்துக் கொண்ட பெண்ணைக் கொஞ்சம்கூட மதிக்க மாட்டார்கள். தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளுமை என்பது போல் கைக்கு எட்டாமல் இருக்கும் பெண்ணின் காலடியில் விழுந்து கிடக்க தயாராக இருப்பார்கள்.

ஜெயாவுக்கு தான் நகைகளைக் கொடுப்பதன் மூலம் ஜெயாவிடம் தனக்கு இருக்கும் விருப்பத்தையும், அவள் தனக்கு எவ்வளவு பிரியமானவள் என்பதையும் காமாட்சி உணர வேண்டுமென்று புருஷோத்தமன் போட்ட திட்டம் ஒரு விதத்தில் நிறைவேறியது என்றே சொல்ல வேண்டும்.

மாலையில் பெண்டுகள் ஒவ்வொருவராக வந்து சேர்ந்தார்கள்.

"அக்கம் பக்கத்தில் இருக்கிறோம் என்று பெயர்தானே தவிர இந்த வீட்டில் ஒரு விசேஷத்திற்கு வருவது இதுதான் முதல் தடவை. மூத்தாள் இருந்தபோது ஒரு தடவைகூட வெளியில் வாசலில் தென்பட்டதில்லை. கணவன் என்றால் பயந்து நடுங்குவாள் பாவம். இருக்கும் இடமே தெரியாது."

வரும் போதே வம்பு பேசத் தொடங்கிவிட்டார்கள்.

ஜெயா எல்லோரையும் வரவேற்று உட்காரச் செய்து மஞ்சள், குங்குமம் வழங்கிக் கொண்டிருந்தாள்.

பெண்கள் ஒரு இடத்தில் கூடினால் வம்பு பேசாமல் இருப்பார்களா? ஒரு பெண்மணி குரலைத் தாழ்த்தி "எவ்வளவு நகைகளைப் போட்டிருக்கிறாள் பார்த்தாயா? இளையாளை நன்றாக பார்த்துக் கொள்கிறார் போலும்" என்று அடுத்தவளிடம் ரகசியம் பேசினாள்.

"இல்லை என்றால் இந்தக் காலத்துப் பெண்கள் சும்மா இருப்பார்களா? இடுக்கிப்பிடி போட்டு இறுக்கிவிட மாட்டார்களா?" அந்த அம்மாள் விமரிசனம் செய்தாள்.

"முதல் மனைவியை நினைத்தால் ரொம்ப பாவமாக இருக்கு. உயிரோடு இருந்த வரையில் என்ன சுகத்தைக் கண்டாள்? தினமும் அடியும் உதையும்தானே? வாயே திறக்க மாட்டாள். மாட்டை அடிப்பதுபோல் அடிப்பார். அந்த சத்தம் எங்க வீட்டுக்குக் கேட்கும்போது பயத்தில் எனக்கு உயிரே போய்விடும்."

இந்தப் பேச்சுகள் எல்லாம் ஜெயாவின் காதில் விழாமல் இல்லை. இருந்தாலும் கண்டுகொள்ளாமல் வந்தவர்களை உபசரித்துக் கொண்டிருந்தாள். ஜெயா கேட்டுக் கொண்ட பிறகு ஒரு அம்மாள் பாட ஆரம்பித்தாள் "சித்த சும்மா இருங்க. பாட்டை கேட்போம்" என்று ஒருவரை ஒருவர் கடிந்து கொண்டாலும் அடுத்த நிமிடம் மறுபடியும் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

ஒரு மூலையில் அமர்ந்திருந்த காமாட்சி திடீரென்று "ஆ. . . ஊ. . ." என்று ஊளையிட்டபடி ஆட ஆரம்பித்தாள். பக்கத்தில் இருந்த திருநாகம் "அமைதி. . . அமைதி" என்று சொல்லிக் கொண்டே காமாட்சியின் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

"என்ன ஆச்சு அந்த அம்மாளுக்கு? காக்கா வலிப்பு வந்துவிட்டதா?" பக்கத்தில் இருந்த அம்மாள் அப்பாவியாக கேட்டாள்.

திருநாகம் கண்களை உருட்டி கோபமாக பார்த்தாள். "என்ன பேச்சு இது? முதலில் கன்னத்தில் போட்டுக் கொள். காமாட்சி வெங்கடாசலபதியின் பக்தை. சனிக்கிழமை பச்சைத்



தண்ணீர் கூட பல்லில் படாமல் உபவாசம் இருப்பாள். அந்த ஏழுமலையான்தான் அவளிடம் புகுந்து நம்மை கருணை புரிய வந்திருக்கிறார். இதென்ன? சுவாமிகள் அமைதியாக இல்லாமல் உக்ரமாக வந்திருக்கிறாரே. யார் என்ன குற்றம் செய்தார்களோ தெரியவில்லையே? பெண்டுகளா! எல்லோரும் இப்படி வாங்க." திருநாகம் மாமி உரத்த குரலில் அறிவிப்பு செய்தாள்.

பாட்டு பாடிக் கொண்டிருந்தவள் காமாட்சியின் தோற்றத்தைப் பார்த்து பயந்து போய் பாதியிலேயே நிறுத்தி விட்டாள். பெண்கள் எல்லோரும் காமாட்சியைச் சுற்றி கும்பலாக சூழ்ந்து கொண்டார்கள்.

"பெருமாளே! ஏழுமலையானே! கோவிந்தா. . . கோவிந்தா." திருநாகம் உரத்த குரலில் கத்திக் கொண்டே இரண்டு கைகளையும் உயர்த்தி கும்பிடு போட்டாள். திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்த பெண்டுகளும் "கோவிந்தா. . . கோவிந்தா" என்று சேர்ந்து கொண்டார்கள்.

எல்லோரும் தன்னை சூழ்ந்து கொண்டதும் காமாட்சி மேலும் ஆடத் தொடங்கினாள்.

"இந்தக் கொடுமையைப் பார்த்துக் கொண்டு என்னால் சும்மா இருக்க முடியாது. எங்கே அவன்? கூப்பிடு முதலில். என் பிரிய பக்தையின் ஆன்மா வேதனையில் தவிக்கும்போது என்னால் எப்படி சகித்துக் கொள்ள முடியும்?" என்று ஹிஸ்டீரியா வந்தவள் போல் கத்தினாள்.

திருநாகம் ஓடிப்போய் புருஷோத்தமனை இழுத்துக் கொண்டு வந்தாள்.

"மூடனே! நீசனே! என்னை தெய்வமாக வழிபட்டவளின் குழந்தைகளுக்கு அநியாயம் நடந்து கொண்டிருந்தால்

பார்த்துக் கொண்டு சும்மா இருப்பேன் என்று நினைத்தாயா?" காமாட்சி புருஷோத்தமன் மீது பாய்ந்தாள்.

"சுவாமிகள் உக்ரமாக இருக்கிறார். தவறு செய்து விட்டேன். மன்னித்துவிடுங்கள் என்று கும்பிடு போடுங்கள்." திருநாகம் புருஷோத்தமனை முன்னால் தள்ளிவிட்டாள்.

பற்களை கடித்தபடி, கண்களை உருட்டிக் கொண்டு, தலைவிரிகோலமாக சாமியாடிக் கொண்டிருந்த காமாட்சியை பார்க்கும்போது புருஷோத்தமனுக்கு பயமாக இருந்தது. சுற்றிலும் இருக்கும் பெண்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்று பயந்து கொண்டே கைகளை ஜோடித்தார்.

"வாய்விட்டு மன்னிப்பு கேளுங்க." திருநாகம் தூண்டிவிட்டாள்.

"தவறு செய்து விட்டேன் சுவாமி" புருஷோத்தமன் நடுங்கிக் கொண்டே சொன்னார்.

"வெறுமே மன்னிப்பு கேட்டால் போறாது. இளையாளின் மோகத்தில் விழுந்து மூத்தாளை மறந்துவிட்டாய். என்னையும் அலட்சியம் செய்தாய். நான் மட்டும் காப்பாற்றவில்லை என்றால் என்னிக்கோ உன் குழந்தைகளைக் கொன்று போட்டிருப்பாள். அதற்குப் பிறகு உன்னையும் வைகுண்டத்திற்கு அனுப்பி வைப்பாள். நீ ஒரு முட்டாள். மோகம் உன் கண்களை மறைத்துவிட்டது."

புருஷோத்தமன் தலையைத் திருப்பி ஜெயாவின் பக்கம் பார்த்தார். ஜெயா குழந்தைகளுடன் தொலைவில் நின்று கொண்டிருந்தாள். அது வரையில் சந்தோஷமாக அலைந்து திரிந்து கொண்டிருந்த லக்ஷ்மியும், கண்ணனும் ஜெயாவின் புடவைத் தலைப்பைப் பிடித்தபடி மிரட்சியுடன் பார்த்துக்



கொண்டிருந்தார்கள். குட்டி ஜெயாவின் இடுப்பில் ஏறிக் கொண்டு கழுத்தை இறுக்கமாக கட்டிப் பிடித்து முகத்தை மறைத்துக் கொண்டாள்.

"மூடனே! உன் பார்வை மறுபடியும் அந்தப் பக்கம்தான் போகிறது. அவள் மோகம் உன்னை ஆட்டிப் படைக்கிறது" காமாட்சி கத்தினாள்.

புருஷோத்தமன் திடுக்கிட்டுத் திரும்பினார்.

"என்ன செய்யணுமோ சொல்லுங்கள் சுவாமி." திருநாகம் மாமி இடைபுகுந்து கேட்டாள்.

"அவளை வீட்டை விட்டு துரத்தச் சொல்லு. குழந்தைகளை அவளிடமிருந்து பிரித்து வைக்கச் சொல்லு" காமாட்சி கர்ஜித்தாள்.

"அப்படியே ஆகட்டும் சுவாமி." திருநாகம் மாமி புருஷோத்தமன் பக்கம் திரும்பினாள். "சுவாமிகள் சொன்னபடி செய்வதாக சொல்லுங்க முதலில்" என்று வற்புறுத்தினாள்.

"சரி. அப்படியே செய்கிறேன்." வேறு வழியில்லாமல் சொன்னார் புருஷோத்தமன்.

"வாக்கு தவறினால் உன் தலை ஆயிரம் துண்டுகளாகி விடும். தூக்கத்திலேயே உன் மூச்சு நின்றுவிடும்." காமாட்சி மிரட்டினாள்.

அதைக் கேட்டதும் புருஷோத்தமனின் முகம் வெளிறிப் போய்விட்டது. "வாக்கு தவறமாட்டேன் சுவாமி." பலவீனமான குரலில் சொன்னார். அன்று மதியம்தான் அவர் கைரேகை ஜோதிடரிடம் கையைக் காண்பித்தார். ஜோதிடர் கையைப் பரிசீலித்துவிட்டு "ஒரு மாதத்தில் பெரிய கண்டம்

ஒன்று இருக்கு. அதைத் தாண்டி விட்டால் பயப்பட வேண்டியதில்லை. தொண்ணூற்றி எட்டு வயது வரை வாழ்வீங்க" என்று தெரிவித்தார்.

"கன்னத்தில் போட்டுக் கொள்" காமாட்சி புருஷோத்தமனை அதட்டினாள்.

புருஷோத்தமன் கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

"ஆ. . . ஊ" என்று ஊளையிட்டபடி காமாட்சி மறுபடியும் சாமியாட ஆரம்பித்தாள். காமாட்சியைப் பிடித்துக் கொண்டிருந்த பெண்களால் மேற்கொண்டு தாக்குப் பிடிப்பது சிரமமாக இருந்தது.

திருநாகம் மாமி சட்டென்று குனிந்து காமாட்சியின் கால்களில் விழுந்து வணங்கினாள்.

"சுவாமி! என் மகனுக்கு எப்போ கல்யாணம் நடக்கும்? அசல் அவன் ஜாதகத்தில் கல்யாண யோகம் இருக்கோ இல்லையோ சொல்ல முடியுமா?" பக்தி பரவசத்துடன் கேட்டாள்.

"கல்யாண யோகம் இருக்கு. பெரிய இடத்துப் பெண் உன் வீட்டுக்கு சீர் வரிசையுடன் மருமகளாக வரக் காத்திருக்கிறாள். ஆனால் உன் மகனை ஒரு பேய் பிடித்து ஆட்டுகிறது. சாதாரண பேய் இல்லை. மோகினிப் பேய். அதை துரத்தினால் தவிர உன் மகனுக்குக் கல்யாணம் நடக்காது."

புரிந்துவிட்டது போல் திருநாகம் தலையை ஆட்டிவிட்டு கடைக்கண்ணால் ஜெயாவின் பக்கம் பார்த்தாள்.

"அதை துரத்துவதற்கு ஏதாவது வழியைச் சொல்லுங்கள் சுவாமீ!"



"தினமும் என் நாமத்தை பத்தாயிரம் முறை ஜெபம் பண்ணு. அந்த சனி தானாகவே விலகும்."

"அப்படியே செய்கிறேன்." திருநாகம் பணிவுடன் சொன்னாள்.

பின்னால் நின்று கொண்டிருந்த ஒரு அம்மாள் தனக்கு முன்னால் நின்று கொண்டிருந்தவர்களை இரு கைகளாலேயும் தள்ளிவிட்டு வேகமாக முன்னேறினாள். "சுவாமி! என் வீட்டுக்காரருக்கு பிரமோஷன் கிடைக்குமா?" கைகளை ஜோடித்துக் கொண்டே கேட்டாள்.

"ஒரு மாதம் தொடர்ந்து அன்னதானம் செய்யச் சொல்லு. பிரமோஷன் கிடைக்கும்."

அவளைத் தள்ளிவிட்டு இன்னொரு பெண்மணி முன்னால் வந்தாள். "சுவாமி! என் பெரிய மகளுக்குக் கல்யாணம் முடிந்து நாலு வருடம் ஆச்சு. இன்னும் குழந்தை பிறக்கவில்லை."

"ஏழு சனிக்கிழமை விடாமல் கோவிலில் விளக்கேற்றச் சொல்லு. இரட்டை குழந்தைகள் பிறப்பார்கள்."

அதற்குப் பிறகு ஒவ்வொருவராக கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள். பிறந்தநாள் கொண்டாட்டத்தையே மறந்து போய்விட்டார்கள்.

திருநாகம் மாமி காமாட்சியின் முன்னால் தேங்காய் உடைத்து, கற்பூரத்தை கொளுத்தி ஆரத்தி எடுத்தாள். காமாட்சி எரிந்து கொண்டிருந்த கற்பூரத்தை கையால் எடுத்து அப்படியே வாயில் போட்டுக் கொண்டாள்.

எல்லோரும் வியந்து போய் மூக்கின் மீது விரலை வைத்தார்கள். 'அவளும் நம்மைப் போன்ற மனிதப்

பிறவிதானே! இது கடவுளின் மகிமை தவிர வேறு இல்லை' என்று ஆளாளுக்கு விமரிசனம் செய்தார்கள்.

சற்று நேரம் கழித்து சுவாமி மலையேறி விட்டது போல் காமாட்சி பெரிதாக கத்திவிட்டு கீழே சரிந்தாள். பெண்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் "கோவிந்தா... கோவிந்தா" என்று கூச்சல் போட்டார்கள்.

பெண்டுகள் எல்லோரும் கிளம்பிப் போகும்போது இரவு ஒன்பது மணியாகிவிட்டது. குழந்தைகள் பயத்தினாலும், களைத்துப் போய் விட்டதாலும் துவண்டுவிட்டார்கள். ஜெயாவுக்கும் ரொம்ப சோர்வாக இருந்தது.

ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்த வேணு உணவு நேரம் கழிந்த பிறகும் தாய் வராததைக் கண்டு எரிச்சலுடன் தேடிக் கொண்டு வந்தான். வீட்டைப் பூட்டிக் கொண்டு திருநாகம் சாவியை கையோடு எடுத்து வந்துவிட்டாள். வேணுவிடம் டூப்ளிகேட் சாவி இருக்கவில்லை. அவன் வந்த போது காமாட்சி பாயின் மீது படுத்திருந்தாள். அவளுடைய தலை திருநாகம் மடியில் இருந்தது. திருநாகம் விசிறியால் விசிறியபடி அமர்ந்திருந்தாள்.

"வேணு! இப்பொழுதுதான் வருகிறாயா? அரைமணி நேரம் முன்னால் வந்திருந்தால் கடவுளின் தரிசன பாக்கியம் கிடைத்திருக்கும். எதற்கும் கொடுப்பினை இருக்கணும்." வருத்தப்பட்டுக் கொண்டே மகனை வரவேற்றாள் திருநாகம்.

"கடவுளைத் தரிசிப்பதாவது? காமாட்சி டீச்சர் ஏன் இப்படி படுத்திருக்கிறாள்? உடல்நிலை சரியில்லையா?" வேணு கேட்டான்.

திருநாகம் நடந்ததை எல்லம் தெரிவித்தாள்.

"டீச்சர் மேல் வெங்கடாசலபதி வந்தாராமா? இந்தப் பெண்களுக்கு வேறு வேலையே இல்லையா?"



"அபசாரம் அபசாரம். அப்படி எல்லாம் பேசக் கூடாது. கன்னத்தில் போட்டுக் கொள். இதெல்லாம் நீயாக பேசவில்லை. உன்னைப் பிடித்த மோகினி பிசாசு அப்படி பேச வைக்கிறது."

எரியும் கற்பூரத்தை காமாட்சி விழுங்கிய சமாசாரத்தை பக்திப் பரவசத்துடன் திருநாகம் சொன்னாள்.

"அது ஒன்றும் பெரிய வித்தை இல்லை. கொஞ்சம் பிராக்டீஸ் இருந்தால் யார் வேண்டுமானாலும் செய்ய முடியும். நீ சொன்னது போல் நான் முன்னாடியே வந்திருக்கணும். அந்தத் தேங்காயை டீச்சர் தலை மீது உடைத்து நீ சொல்லும் அந்தக் கடவுள் மகிமை என்னவோ நேரில் பார்த்திருப்பேன்."

"வாயை மூடு." திருநாகம் மகனைக் கடிந்து கொண்டாள்.

அதற்குள் ஜெயா அங்கே வந்தாள். "வேணு! அவருக்கு உடம்பு கொஞ்சம் சரியாக இல்லை. மூச்சு விடுவதற்கு கஷ்டப்படுகிறார். டாக்டரை அழைத்து வருகிறாயா?" என்றாள்.

"இதோ. இப்பவே போகிறேன்" ராணியின் ஆணையை நிறைவேற்றும் சேவகனைப் போல் வேணு உடனே கிளம்பிப் போனான்.

ஜெயா உள்ளே போய்விட்டாள்.

திருநாகம் ஜெயாவைப் பின்னாலிருந்து ஆராய்வது போல் ஏற இறங்கப் பார்த்தாள். 'சந்தேகமே இல்லை. இது மோகினி பிசாசுதான். அதான் அவன் அப்படி நடந்து கொள்கிறான்' என்று முடிவு செய்தாள்.

டாக்டர் வந்து புருஷோத்தமனைப் பரிசோதித்தார். பிளட்பிரஷர் அதிகமாக இருப்பதாகவும், ஓய்வு எடுத்துக் கொண்டால் சரியாகிவிடும், கவலைப் படவேண்டியதில்லை என்றும் தெரிவித்துவிட்டுப் போனார்.

அன்று இரவு குட்டிக்கு ஜுரம் வந்துவிட்டது. தூக்கத்தில் பயந்து கொண்டு அழ ஆரம்பித்தாள்.

புருஷோத்தமனின் முதல் மனைவியின் ஆவி குட்டியைப் பிடித்துக் கொண்டிருப்பதாக ஊரில் எல்லோரும் பேசிக் கொள்ளத் தொடங்கினார்கள். இந்தப் புரளியைக் கிளப்பி விட்டது யாரோ இல்லை. சாட்சாத் காமாட்சியேதான். ஏழுமலையான் சுயமாக வந்து இரண்டாவது மனைவியை அனுப்பிவிடச் சொல்லி புருஷோத்தமனை எச்சரித்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

ஆனால் இந்த வதந்திகள் குற்றச்சாட்டுகள் எதுவும் புருஷோத்தமனையோ, ஜெயாவையோ கொஞ்சம் கூட பாதிக்கவில்லை என்பதை காமாட்சி நாளாவட்டத்தில் புரிந்து கொண்டாள். தன்னுடைய திட்டம் பொய்த்து விட்டதில் தாங்கொண்ணாத ஏமாற்றம் அவளை ஆட்கொண்டது.

* * *

## 15

நவராத்திரி உற்சவம் நெருங்கிவிட்டதில் ஹரிக்கு ஒரு நிமிடம் கூட ஓய்வு இல்லாமல் போய்விட்டது. முதலமைச்சரின் தலைமையில் ஒன்பது நாளும் சிறப்பாக விழா நடத்த இளைஞர்கள் சங்கம் முடிவு செய்திருந்தது. நவராத்திரி விழா முழுவதும் ஹரிக்கு புரோகிராம் இருந்தது. காலையில் வீட்டை விட்டு வெளியே போனால் இரவு வரையில் பிராக்டீஸ், ஒத்திகை என்று மூச்சு விடுவதற்கும் நேரம் இருக்கவில்லை. வேணுவும் மாற்றல் கிடைத்து இதே ஊருக்கு வந்துவிட்டான். ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இயக்கத்தை மறுபடியும் நிலைநாட்ட வேண்டும் என்று தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருந்தான்.



குட்டிக்கு ஜுரமாக இருந்ததால் ஜெயாவால் முன்னைப் போல் தினமும் வந்து வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொள்ள முடியவில்லை. அண்ணனைச் சாப்பிட வைப்பது ஹரிக்கு ஒரு பிரச்னையாகிவிட்டது. சில சமயம் ராமகிருஷ்ணன் ரொம்ப ரகளை செய்வான். சமாதானப்படுத்த முடியாத நிலைமை வந்துவிட்டால் ஹரி மௌனமாக அறையை விட்டு வெளியே வந்துவிடுவான்.

முதல்நாள் இரவு ராமகிருஷ்ணன் சாப்பிட மறுத்து விட்டான். மறுநாள் காலையில் ஹரி சீக்கிரமாக சமையலை முடித்து அண்ணனுக்காக தட்டில் உணவைப் பரிமாறிக் கொண்டிருந்தான்.

திடீரென்று ராமகிருஷ்ணன் சமையலறைக்குள் வந்தான். வரும்போதே "ஜெயா எங்கே?" என்று கேட்டான்.

"ஜெயாவுக்கு ஜுரமாக இருக்கு. அதான் மருந்து வாங்க டாக்டர்கிட்டே போயிருக்கிறாள். அரைமணியில் வந்து விடுவாள்." ஹரி சொன்னான். கொஞ்ச நேரம் போனால் அண்ணனுக்கு ஜெயாவைப் பற்றிய நினைவு இருக்காது என்று தெரியும். அதான் சமயத்திற்குத் தகுந்தாற் போல் ஏதாவது சொல்லி நிலைமையைச் சமாளிப்பது பழக்கமாகிவிட்டது.

"டாக்டரிடம் போயிருக்கிறாளா? தனியாகவா போனாள்?"

"உனக்குச் சாப்பாடு போடணுமே என்று தங்கிவிட்டேன் அண்ணா."

"வர வர உனக்கு மூளை வேலை செய்யவில்லையா என்ன? இப்போ எனக்குச் சாப்பாடு போடுவதா முக்கியம்? என்னிடம் சொன்னால் துணைக்கு நான் போயிருப்பேன் இல்லையா?"

"பரவாயில்லை அண்ணா. அவளே வந்து விடுவாள். நீ

சாப்பிட வா." ஹரி தட்டை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

ராமகிருஷ்ணன் அவன் பின்னால் வரவில்லை. "முதலில் நீ போய் ஜெயாவை அழைத்து வா." ஹரியின் கையைப் பற்றிக் கொண்டான்.

"நீ சாப்பிடு. நான் போய் அழைத்து..."

ஹரியின் வார்த்தைகள் இன்னும் முடியக்கூட இல்லை. அவன் கையில் இருந்த தட்டு தொலைவில் போய் விழுந்தது. ராமகிருஷ்ணன் தட்டைத் தட்டிவிட்டதோடு, தண்ணீர் டம்ளரையும் பிடுங்கி வீசி எறிந்தான்.

"அண்ணா!"

"நானும் பார்த்துக்கிட்டுதான் வருகிறேன். என் பேச்சை நீ லட்சியம் செய்வதே இல்லை." ராமகிருஷ்ணன் உச்சஸ்தாயியில் கத்தினான். கையில் கிடைத்த பொருட்களை எல்லாம் வீசினான்.

ஹரி அவனைப் பிடித்துக் கொண்டு தடுக்க முயன்றான். ஆனால் சாத்தியப்படவில்லை. சமைத்து வைத்திருந்த பாத்திரங்களை எல்லாம் காலால் எட்டி உதைத்தான். தண்ணீர் குடம் ஒரு மூலையில் போய் விழுந்தது.

"அண்ணா! நான் சொல்வதைக் கேள்."

"என் அருகில் வராதே. வந்தால் உன்னைக் கொன்று விடுவேன்." ராமகிருஷ்ணன் கத்தினான்

ஹரி பயப்படவில்லை. அண்ணனை நோக்கி இரண்டடிகள் எடுத்து வைத்தான். திடீரென்று அவன் நெற்றியில் ஏதோ பொருள் வந்து பலமாக தாக்கியது. அது கீழே விழுந்து சில்ரென்று உடைந்த சத்தம் கேட்டதும் அந்தப் பொருள்



கண்ணாடி டம்ளர் என்று ஹரி உணர்ந்து கொண்டான். நெற்றியில் பட்ட அடி அவனை கதிகலங்கச் செய்துவிட்டது. காது அடைத்துக் கொண்டுவிட்டது. நெற்றியைப் பிடித்துக் கொண்டு ஒரு நிமிடம் அப்படியே நின்றுவிட்டான்.

"சித்தப்பா! அப்பா வாசல் பக்கம் போகிறார். கதவு திறந்திருக்கு" பப்லூ கத்தினான்.

"வாசல் கதவைச் சாத்தி தாழ்ப்பாள் போடு. அப்பாவை வெளியே போக விடாதே." ஹரி நெற்றியைப் பிடித்துக் கொண்டே வாசல் பக்கம் வந்தான்.

பப்லூ ஓடிப்போய் ஹரி சொன்னது போல் கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு நாதாங்கியைப் பிடித்துக்கொண்டு தந்தையை கதவைத் திறக்கவிடாமல் செய்தான்.

"சித்தப்பா! அப்பா என்னை அடிக்கிறார். முடியை பிடித்து இழுக்கிறார்."

ஹரி தடுமாறிக் கொண்டே வேகமாக வந்து அண்ணனை அசையவிடாமல் பிடித்துக் கொண்டான். ராமகிருஷ்ணன் கோபம் தாங்க முடியாமல் ஹரியை அடிக்கத் தொடங்கினான். ஹரி அண்ணனின் கைகளை பலமாக பிடித்துக்கொண்டு அறைக்குள் தள்ளி கதவைச் சாத்தி வெளியே தாழ்ப்பாள் போட்டான்.

"சித்தப்பா! ஒரே ரத்தம்." பப்லூ சொன்னான்.

"எங்கே?"

"உன் முகத்தில்தான்."

ஹரி அடிபட்ட இடத்தில் கையால் தொட்டுப் பார்த்தான். ராமகிருஷ்ணன் வீசி எறிந்த கண்ணாடி டம்ளர் ஹரியின் நெற்றியில் வலது பக்கம் வகிடு எடுக்கும் இடத்தில்

பட்டது. காயம் ஏற்பட்டு கன்னத்தில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஹரி நெற்றியைத் தொட்டபோது ஈரமாக உணர்ந்தான். மெதுவாக நடந்து வந்து கட்டில் மீது உட்கார்ந்து கொண்டான்.

"பப்லூ! தரை முழுவதும் கண்ணாடித் துண்டுகள் சிதறி இருக்கு இல்லையா?"

"ஆமாம் சித்தப்பா."

"கவனமாக போய் என் பெட்டியின் அடியில் பழைய வேட்டி இருக்கும். கொண்டு வருகிறாயா?"

பப்லூ உடனே போய் கொண்டுவந்தான். ஹரி வேட்டியைக் கிழித்து தண்ணீரில் நனைத்து காயத்தைத் துடைத்துக் கட்டு கட்டிக் கொண்டான்.

"சித்தப்பா! அப்பா ரொம்ப கெட்டவர். உன்னை அடித்து விட்டார். அப்பாவை விட்டு விட்டு நாம் எங்கேயாவது போய்விடுவோம்." பப்லூ சொன்னான்.

ஹரி சட்டென்று பப்லூவை அணைத்துக் கொண்டான். "பப்லூ! அப்படிச் சொல்லக் கூடாது. அப்பாவுக்கு மனநிலை சரியாக இல்லை. அதான் அப்படி நடந்து கொள்கிறார்." சமாதானப்படுத்துவது போல் சொன்னான்.

"சில சமயம் நன்றாகத்தானே பேசுகிறார்?"

"கோபம் வராதபோது சாதாரணமாக இருப்பார். நீ போய் சமையல் அறையில் நாம் சாப்பிடுவதற்கு ஏதாவது மிஞ்சியிருக்கா.... பாரு"

பப்லூ கண்ணாடித் துண்டுகளுக்கு நடுவில் மெதுவாக நடந்து சமையலறைக்குள் சென்றான். அங்கே தென்பட்ட காட்சியைப் பார்த்தபோது அவனுக்கு ஒரு பக்கம் சிரிப்பும் ஒரு பக்கம் அழுகையும் வந்தது.



"சித்தப்பா! சாதம், குழம்பு, கறி எல்லாமே தண்ணியில் மிதக்குது."

"சரி. அது அப்படியே இருக்கட்டும். மாலையில் வந்த பிறகு ஒழுங்குப்படுத்துகிறேன். சமையலறை கதவைச் சாத்தி விட்டு நீ இப்படி வா." ஹரி அழைத்தான்.

"இப்போ நமக்கு சாப்பாடு எப்படி? எனக்கு ரொம்ப பசியாய் இருக்கு. சாதம் எல்லாம் தண்ணியில் விழுந்து விட்டதே." அழுகை கலந்த குரலில் சொன்னான் பப்லூ.

"நீ இப்படி உட்காரு. நான் போய் ஏதாவது வாங்கி வருகிறேன்." ஹரி செருப்பை மாட்டிக் கொண்டு வெளியே போனான். பத்து நிமிடங்கள் கழித்து இட்லியும், வடையும் வாங்கி வந்தான்.

இருவரும் சாப்பிட்டு முடித்தார்கள். பப்லூ டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான்.

"பசி தீர்ந்துவிட்டதா பப்லூ?"

"வயிறு ரொம்ப சாப்பிட்டாச்சு. சித்தப்பா! வடை ரொம்ப நன்றாக இருக்கு. நாளைக்கும் சமைக்க வேண்டாம். இதே போல் வாங்கிச் சாப்பிடுவோம்."

ஹரி சிரித்து விட்டான். "பப்லூ! மணி என்ன ஆச்சு?"

"பதினோரு மணி -"

"அடடா! அவ்வளவு நேரம் ஆகிவிட்டதா? ஏற்கனவே அந்த மேனேஜர் முன் கோபி. தாமதமாக போனால் சும்மா இருக்கமாட்டார். அப்பா தூங்கிவிட்டார் போலும். சத்தமே இல்லை. நீ வீட்டிலேயே இரு. மாலையில் சீக்கிரமாகவே வந்து விடுகிறேன். அப்பா குடிக்கத் தண்ணீர் கேட்டால் இந்த

மாத்திரையைக் கொடு. கதவைத் திறக்க வேண்டாம். ஜன்னல் வழியாகவே கொடு."

"சரி சித்தப்பா." ஹரி கொடுத்த மாத்திரைகளை பத்திரமாக வைத்தான்.

"என் வயலினை எடுத்துத் தருகிறாயா?"

"இதோ சித்தப்பா."

"கதவை உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டுக் கொள்." ஹரி எச்சரித்துவிட்டுக் கிளம்பிப் போனான்.

கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு உள்ளே வந்த பப்லூ தந்தை இருந்த அறையின் பக்கம் பயந்து கொண்டே பார்த்தான். பிறகு கட்டில் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு தனக்குப் பிடித்த பொம்மை புத்தகத்தைப் பார்க்கத் தொடங்கினான்.

* * *

மாலையில் சீக்கிரமாக வீடு திரும்ப வேண்டும் என்று ஹரி செய்த முயற்சி பலிக்கவில்லை. நவராத்திரி நெருங்கி விட்டதால் ஒத்திகை தீவிரமாக நடந்து கொண்டிருந்தது.

இரவு ஒன்பது மணி ஆகும்போது உடலும், உள்ளமும் களைத்துப் போன நிலையில் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினான். காலையில் வீட்டை விட்டுப்போன நிலைமை நினைவுக்கு வந்ததும், அவனுடைய சோர்வு இரு மடங்காகி விட்டது. வீட்டை எடுத்து வைப்பது இருக்கட்டும், ஹோட்டலுக்குப் போய் ஏதாவது வாங்கி வரக்கூடிய தெம்பும் இப்போது அவனுக்கு இல்லை. பப்லூ மட்டும் இல்லை என்றால் ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்துவிட்டு காலை நீட்டி படுத்துக் கொண்டிருப்பான்.

கதவைத் தட்டியதும் பப்லூ வந்து கதவைத் திறந்தான். ஹரி எதிர்பார்த்தது போல் அவனைப் பார்த்ததும் 'சித்தப்பா! பசிக்கிறது' என்று அழவும் இல்லை. சோர்ந்து போய் கதவைத் திறக்காமல் இருக்கவும் இல்லை.



"பப்லூ! நேரமாகிவிட்டது. சீக்கிரமாக உப்புமா ஏதாவது செய்து விடுகிறேன். பசிக்கிறது இல்லையா? ஐந்து நிமிடங்களில் செய்து தருகிறேன். சரிதானே" என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தான்.

"சித்தப்பா! நான் சாதம் சாப்பிட்டாச்சு."

வயலினை அலமாரியில் வைத்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ஹரி வியப்படைந்தான். "சாதம் சாப்பிட்டாயா? எப்படி? பங்கஜம் மாமி ஊரிலிருந்து வந்துவிட்டாளா?"

"ஊஹூம். வீட்டைக் கூட க்ளீன் பண்ணியாச்சு. அப்பாவுக்கும் சாப்பாடு கொடுத்தாச்சு" - பப்லூ உற்சாகத்துடன் ஹரியின் கையைப் பற்றிக் கொண்டான்.

"ஜெயா வந்து விட்டுப் போனாளா?" ஷர்ட்டை கழட்டிக் கொண்டே கேட்டான்.

"ஊஹூம்."

"பின்னே? யார் வந்தாங்க?"

"அது... வந்து..." பப்லூ சொல்லப் போனவன் பாதியில் நிறுத்திவிட்டான்.

"சொல்லு பப்லூ. யாரு வந்து விட்டுப் போனாங்க?"

"போகவில்லை சித்தப்பா. இன்னும் இங்கேயே இருக்காங்க."

ஹரிக்கு வியப்பாக இருந்தது. ஜெயாவைத் தவிர வேறு யார் வருவார்கள்? வீட்டுக்கு வந்து எல்லாவற்றையும் ஒழுங்குப்

படுத்தி, சமையலும் செய்யக்கூடிய உரிமையும், சுதந்திரமும் வேறு யாருக்கு இருக்கிறது?

"சித்தப்பா! வந்தது யாருன்னு சொல்லு பார்ப்போம்." பப்லூவின் குரலில் குறும்புத்தனம் கொப்பளித்தது.

சமையலறையில் காலடிச் சத்தம் கேட்டது. ஹரி அந்தப் பக்கம் போனான். "யாரு?"

பதில் வரவில்லை. அந்த நபர் யாராக இருக்கும் என்று அவனால் ஊகிக்க முடியவில்லை.

"சொல்லட்டுமா?" பப்லூ கேட்டான். சொல்லாதே என்று அந்த நபர் ஜாடை காட்டியிருக்க வேண்டும். அதனால் பப்லூ சொல்லவில்லை.

யாரோ அவனை நெருங்கி வருவது போல் காலடிச் சத்தம் கேட்டது. அந்த நபர் தன் எதிரே வந்து நிற்பதை அவனால் உணரமுடிந்தது. திடீரென்று நறுமணம் ஏதோ அவன் மூக்கைத் தாக்கியது. நெஞ்சு முழுவதும் காற்றை சுவாசிப்பது போல் ஆழமாக மூச்சை இழுத்துக் கொண்டான். இந்த நறுமணத்தை அவன் இதற்கு முன் ஒரே ஒரு நபரிடம் உணர்ந்திருக்கிறான்.

"கவிதா!" அந்தப் பெயரையும் உச்சரிக்கப் பயப்படுபவன் போல் தாழ்ந்த குரலில் சொன்னான்.

கலகலவென்று நகைக்கும் சத்தம் கேட்டது. ஹரி சட்டென்று கையை நீட்டி அந்த நபரின் கையைப் பற்றிக் கொண்டான்.

கவிதா மேலும் சிரித்துக் கொண்டிருந்தாள்.

"கவிதா!" நம்ப முடியாதவன் போல் அழைத்தான். அவன் பிடி மேலும் இறுகியது.



"எப்படி அடையாளம் கண்டுபிடித்தாய்?" கவிதா கேட்டாள்.

"நீ தானா? எப்போ வந்தாய்?" அவனால் இன்னும் நம்ப முடியவில்லை.

"மதியம் வந்தேன்."

"திடீரென்று கிளம்பி வரக் காரணம் என்ன? எனக்குக் கடிதம் கூட எழுதவில்லையே?" ஹரி கேட்டான்.

"திடீரென்று கிளம்பி வர வேண்டிய சூழ்நிலை. அதனால் கடிதம் கூட எழுத முடியவில்லை. அது போகட்டும். வந்தது நான்தான்னு எப்படி கண்டுபிடித்தாய்?" ஆர்வத்துடன் கேட்டாள்.

"அது என் ஒருத்தனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். நீ மட்டும் தனியாக வந்தாயா?"

"ஆமாம்."

"எத்தனை நாட்கள் இருப்பாய்?"

"நிறைய நாட்கள் ... மாதங்கள்."

ஹரி நம்பவில்லை. "சிநேகிதிகளுடன் சேர்ந்து வந்தாயா?"

"அந்த விஷயங்களை எல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம். வென்னீர் போட்டு வைத்திருக்கிறேன். குளித்து விட்டு வந்தாயானால் சேர்ந்து சாப்பிடுவோம். உனக்காக சாப்பிடாமல் காத்திருக்கிறேன். பசிக்கிறது" என்றாள்.

அந்த நிமிடம் கவிதாவின் கையை விட்டு விடுவதற்கு ஹரிக்கு மனம் வரவில்லை. அவளுடைய தொடுகை, பேச்சு அவன் மனதில் ஏதோ சொல்லத் தெரியாத மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அந்த மகிழ்ச்சி வீட்டு வேலை செய்ய வேண்டியதில்லை என்ற நிம்மதியில் ஏற்பட்டதா இல்லை. . .

அதற்கு மேல் யோசிக்க அவனுக்குத் தைரியம் போதவில்லை.

குளித்துவிட்டு வந்தான். "பப்லூ!" என்று அழைத்தான்.

"பப்லூ தூங்கியாச்சு. அப்பவே தூங்கி வழிந்தான். நான்தான் கதைகளைச் சொல்லி நீ வரும் வரையில் தூங்காமல் தடுத்துவிட்டேன்" கவிதா சொன்னாள்.

இருவரும் சாப்பிட்டார்கள். கவிதா மறுத்தபோதும் ஹரி கேட்காமல் தன்னுடைய படுக்கையை தரையில் பப்லூவின் பக்கத்தில் விரித்தான். கவிதா கட்டில் மீது அமர்ந்திருந்தாள். ஹரி பப்லூவை மெத்தையின் மீது நகர்த்திவிட்டு சுவற்றில் சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டான்.

"இப்போ சொல்லு. எத்தனை நாள் இருப்பாய்?"

"உண்மைதான் சொல்கிறேன். நிறைய நாட்கள் இருப்பேன்."

"விசாலம் மாமியுடன் சண்டை போட்டுக் கொண்டு வந்து விட்டாயா?"

"ஊஹூம்...."

"பின்னே மாமி எப்படி சம்மதம் சொன்னாள்?"

"ஹரீ!" ஏதோ சொல்லத் தயங்குவது போல் பாதியில் நிறுத்தினாள்.

"சொல்லு கவிதா. என்ன நடந்தது?"

"எனக்கு இந்த ஊரில் வேலை கிடைச்சிருக்கு. இந்தியன் வங்கியில் கிளார்க் வேலை அதில் சேருவதற்காக வந்திருக்கிறேன்."

ஹரிக்கு வியப்பாக இருந்தது. "அவ்வளவு சொத்துக்கு வாரிசு நீ. நீ வேலைக்குப் போகப் போகிறாயா? இந்த ஐடியா கொடுத்தது யாரு?"



"எங்க லாயர்தான். அவர்தான் எனக்கு இந்த வேலை கிடைக்கும்படி உதவி செய்தார். மாமியின் இரும்புப் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள எனக்கு வேறு வழி தெரியவில்லை."

"மாமியிடம் சொல்லிவிட்டுத்தான் வந்தாயா?"

"இல்லை. கடிதம் எழுதி வைத்துவிட்டுப் புறப்பட்டு விட்டேன். ஒரு தடவை வேலையில் சேர்ந்து விட்டேன் என்றால், மாமியாகட்டும், அண்ணனாகட்டும் என்னை எதுவும் செய்ய முடியாது. என் நலனில் அக்கறை கொண்ட லாயர் சொன்ன அறிவுரை இது. வேலைக்குப் போகும் சாக்கில் மாமியிடமிருந்து தொலைவாக வந்துவிட வேண்டும். பிறகு நல்ல பையனாக பார்த்து பதிவுத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். கல்யாணம் முடிந்துவிட்டால் சொத்து என் கைக்கு வந்துவிடும்."

ஹரியின் முகம் உணர்ச்சியற்று இருந்தது. "கல்யாண விஷயத்தில் பெரியவர்களாக பார்த்து முடிப்பது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். பெரியவர்கள் என்றால் தீர ஆராய்ந்து நல்ல இடமாக பார்ப்பார்கள்."

"நீ சொல்லும் பெரியவர்கள் வேறு பிரிவைச் சேர்ந்தவர்கள். மாமி போன்றவர்கள் சுயநலத்திற்காக எது வேண்டுமானாலும் செய்வார்கள். அது போன்ற சூழ்நிலையில் நாம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது இல்லையா?"

ஹரி உடனே பதில் சொல்லவில்லை. "நீ தனியாக இருக்கிறாய். எங்கே தங்கிக் கொள்வதாக உத்தேசம்?"

"தற்போதைக்கு இந்த வீட்டில் சில நாட்கள் இருப்பேன். பிறகு வர்க்கிங் விமென்ஸ் ஹாஸ்டலில் இடம் கிடைத்தும் போய்விடுவேன். இந்த ஐடியாவை எனக்குச் சொல்லிக்

கொடுத்தது லாயர்தான் என்று மாமிக்குச் சந்தேகம் வரக்கூடாது. அதான் நேராக உன்னிடம் வந்தேன். மாமிக்கு உன்னை அவ்வளவாக பிடிக்காது. உன்னுடைய தூண்டுதல் இருப்பதால்தான் நான் இப்படி செய்தேன் என்று மாமி நினைத்துக் கொண்டால் என் வேலை சுலபமாகிவிடும்."

"மாமியை ஏமாற்றுவது சுலபமாக இருக்கலாம். ஆனால் தகுந்த கணவனை நீயே தேர்ந்தெடுப்பது அவ்வளவு சுலபம் இல்லை. இந்தக் காலத்தில் யாரை நம்ப முடிகிறது சொல்லு. வெளி தோற்றம் வேறு. உள் தோற்றம் வேறு."

"தாங்க்ஸ் ஹரி. என்னைப் பற்றி கவலைப் படாதே. முன்பின் தெரியாத நபரைப் பண்ணிக் கொண்டால்தானே நீ சொன்ன பிரச்னை வரும்? எனக்கு நன்றாகத் தெரிந்த நபரைத்தான் தேர்ந்தெடுப்பேன். தெரியாதவர்களை என் நிழலைக் கூடத் தொட அனுமதிக்கமாட்டேன்."

"தன்னம்பிக்கை, தைரியம் பெண்களுக்கு இருப்பது ரொம்ப அவசியம்." ஹரி எழுந்து போய் அலமாரியில் வைத்திருந்த பழைய வேட்டியை எடுத்து வந்தான்.

காலையில் ராமகிருஷ்ணன் செய்த ரகளையில் ஹரியின் நெற்றியில் அடிபட்ட விவரத்தை பேச்சுவாக்கில் கவிதா தெரிந்து கொண்டாள். ஹரி புதிதாக கட்டு போடுவதற்காக பழைய கட்டை அவிழ்க்கப் போனான்.

"கொஞ்சம் இப்படி நகரு ஹரி. நான் கட்டிவிடுகிறேன்."

"பரவாயில்லை கவிதா."

"சித்தெ இரு. காயம் ரொம்ப ஆழமாக பட்டிருக்கோ என்னவோ? நான் பார்க்கிறேன்."

ஹரி முன்னால் நகர்ந்தான். கவிதா கட்டை அவிழ்த்து காயத்தைப் பரிசோதித்தாள்.



"ஆழமாக பட்டிருக்கு. டாக்டரிடம் காட்டியிருக்கலாம் இல்லையா?" கவிதா பஞ்சில் மருந்து தடவி காயத்தின் மீது வைத்து கட்டு கட்டினாள். பின்னால் முடிச்சு போடுவதற்காக ஹரியின் தலையை தன் மடியில் சாய்த்துக் கொண்டாள்.

கவிதா தனக்குக் கருணை புரிய வந்த தேவதை போல் அந்த நிமிடம் ஹரிக்குத் தோன்றினாள். சிறு குழந்தையைப் போல் அவள் மடியில் தஞ்சம் புகுந்து கொள்ள வேண்டும் என்று ஏற்பட்ட விருப்பத்தை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டான்.

* * *

புருஷோத்தமன் ஆரஞ்சு ஜூஸை குடித்துவிட்டு வந்து ஈசிச்சேரில் அமர்ந்து கொண்டார். உடல் ரீதியாக எந்த நோயும் இல்லை என்றாலும் மனதளவில் ரொம்ப தளர்ந்து போய் விட்டார். முன் போல் தெம்பாக எழுந்து நடமாட முடியவில்லை. சின்னச் சின்ன விஷயத்திற்குக் கூட பதட்டமடைந்து கொண்டிருந்தார்.

காமாட்சி தன் மீது சாமி வந்தது போல் நாடகமாடியது முதல் அவரால் நிம்மதியாக தூங்க முடியவில்லை. தன்னையும் அறியாமல் கண்கள் அசந்தாலும் பயங்கரமான கனவுகள் வந்து உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டும். உடனே விழிப்பு வந்துவிடும்.

கடந்த ஒரு மாதமாக ஜெயதான் அவரைக் கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டு சிசுருஷை செய்து வந்தாள். டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துகளை வேளை தவறாமல் கொடுத்தாள். புருஷோத்தமன் இரண்டாவது முறை அழைக்க வேண்டிய அவசியம் இல்லாதபடி உடனுக்குடன் வந்து அவருடைய தேவைகளைப் பூர்த்தி செய்தாள்.

சுறுசுறுப்பாக வீட்டு வேலைகளைச் செய்தபடி நடமாடிக்

கொண்டிருக்கும் ஜெயாவைப் பார்க்கும் போதெல்லாம் புருஷோத்தமன் யோசனையில் ஆழ்ந்து போவார். ஜெயா சொன்னதன் பேரில் குழந்தைகளை ஸ்கூலில் சேர்த்தார். காலையில் சீக்கிரமாக எழுந்து மளமளவென்று தயாராகி ஸ்கூலுக்கு ஓடும் குழந்தைகளைப் பார்க்கும்போது சந்தோஷமாக இருந்தது. அவர்களுடைய சாப்பாடு விஷயத்திலும் ஜெயா கவனம் எடுத்துக்கொண்டதால் நல்ல ஆரோக்கியத்துடன், தெம்பாக இருந்தார்கள். முன்னைப் போல் பிடிவாதம் பிடிப்பது, ரகளை செய்வது எல்லாம் குறைந்துவிட்டது. இவ்வளவு நன்றாக குழந்தைகளை ஜெயா பார்த்துக் கொள்ளும் போது ஊர் மக்கள் அவளைப் பற்றி தவறாக பேசுவது புருஷோத்தமனுக்கு வருத்தமாக இருந்தது.

இந்தத் திருமணத்தின் மூலம் ஜெயாவுக்கு அநியாயம் நிகழ்ந்தாலும் குழந்தைகளுக்கு நல்லதுதான் நடந்தது. இந்த வயதில் இயல்பாகவே இருக்கக் கூடிய சுயநலம் ஜெயாவிடம் கொஞ்சம் கூட இல்லாதது புருஷோத்தமனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அன்று நடந்த நிகழ்ச்சியை ஜெயா மறக்கவே இல்லை என்றும், தன்னை மன்னிக்கவும் இல்லை என்றும் அவருக்குத் தெரியும். கல்யாணம் ஆகாமல் தங்கை வீட்டிலேயே இருக்கிறாள் என்ற அபக்கியாதி அண்ணன்மார்களுக்கு வரக்கூடாது என்ற எண்ணத்தில் ஜெயா இந்த முடிவுக்கு வந்திருப்பதையும் உணர்ந்து கொண்டார். ஜெயாவைத் திருமணம் செய்து கொண்டாரே ஒழிய காமாட்சியின் தயவால் அவளுடன் குடித்தனம் நடத்திய நாளே இல்லை.

ஜெயா உள்ளே வந்து காலி டம்ளரை எடுத்துக் கொண்டு போகப் போனாள்.

"ஜெயா! இங்கே வா." புருஷோத்தமன் அழைத்தார்.



ஜெயா திரும்பி வந்தாள். உள்ளத்தின் தூய்மையைப் பிரதிபலிப்பது போல் அவள் முகம் நிர்மலமாக இருந்தது.

"என்ன வேணும்?"

"குழந்தைகள் இன்னும் பள்ளியிலிருந்து வரவில்லையா?"

"இல்லை. வருகிற நேரம்தான்."

"இன்னிக்கு நீ டுடோரியல் காலேஜுக்குப் போகவில்லை போலிருக்கே."

"நோட்ஸ் வாங்கிக்கிட்டு வந்து விட்டேன். வீட்டிலேயே படித்துக் கொள்கிறேன். நான் கிளாஸுக்குப் போய்விட்டால் உங்களுக்கு நேரத்திற்கு மருந்து, பழச்சாறு கொடுப்பது இடைஞ்சல் ஆகிவிடும். உங்களுக்கு நன்றாக தேவலையான பிறகு போய்க் கொள்கிறேன்."

இதயம் பாரமாகிவிட்டது போல் இருந்தது அவருக்கு. "அண்ணா வீட்டுக்கும் போய் நாளாச்சு போல் இருக்கே. போன வாரம் போனதுதான் இல்லையா?"

ஆமாம் என்பது போல் ஜெயா தலையை அசைத்தாள். "கவிதா வந்த பிறகு எனக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருக்கு. தினமும் போய் பார்க்கணும் என்று இல்லாமல் நடுவில் நேரம் கிடைக்கும் போது பார்த்துவிட்டு வருகிறேன்."

"ஹரி கண் டாக்டரிடம் போகப் போவதாக சொன்னாயே. போய்விட்டு வந்தானா?"

"கவிதாவுக்குத் தெரிந்த டாக்டராம். ஐ ஸ்பெஷலிஸ்ட். ஆபரேஷன் செய்தால் கண் பார்வை வர வாய்ப்பு இருக்கு என்று சொன்னாராம். அண்ணா சம்மதிக்கவில்லையாம். மூன்று மாதங்களாவது ரெஸ்ட் எடுத்துக் கொள்ளணும். எப்படி முடியும் என்று சொல்கிறான்." ஜெயா கிளம்பப் போனாள்.

"என்ன அவசரம்? சித்த இரேன்."

"அடுப்பில் பாலை வைத்து விட்டு வந்திருக்கிறேன். இதோ வந்து விடுகிறேன்." ஜெயா பதிலுக்காக காத்திருக்காமல் வேகமாக வெளியேறினாள். ஐந்து நிமிடங்களில் காபி டம்ளருடன் திரும்பி வந்தாள்.

"ஜெயா! எனக்கு ஏதாவது ஆனால் குழந்தைகளை நீ கவனமாக பார்த்துக் கொள்வாயா?"

ஜெயா திடுக்கிட்டாற்போல் பார்த்தாள்.

"பணத்திற்கு எந்த பிரச்னையும் இல்லை. வேண்டிய அளவுக்கு இருக்கு. அந்தப் பணம் நல்லவிதமாக பயன்படணும். குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையணும். இந்த விஷயத்தில் நீ எனக்குச் சத்தியம் செய்து கொடுத்தால் நான் நிம்மதியாக கண்ணை மூடுவேன்." புருஷோத்தமன் சொன்னார்.

"இதென்ன பேச்சு? உங்களுக்கு ஒரு நோயும் இல்லைன்னு டாக்டர்தான் சொல்லிவிட்டாரே?"

"நான் சீக்கிரமாக செத்துப் போனால் நன்றாக இருக்கும் என்று எப்பொழுதாவது மனதில் நீ நினைத்தது உண்டா?" விளையாட்டுக்குக் கேட்பது போல் கேட்டார்.

ஜெய்யாவின் முகம் கோபத்தால் சிவந்தது. காபி டம்ளரை கையில் எடுத்துக் கொண்டே "அது போன்ற சந்தேகம் உங்கள் மனதில் இருந்தால் கடவுள்தான் உங்களுக்கு பதில் சொல்ல வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

புருஷோத்தமன் ஈசிச்சேரில் பின்னால் சாய்ந்து கொண்டார். ஒருக்கால் தான் திடீரென்று இறந்து போய்விட்டால் ஜெயாவின் நிலைமை என்ன ஆகும்? காமாட்சி அவளைத் துரத்திவிட்டுத்தான் மறுகாரியம்



பார்ப்பாள். சொத்து விஷயத்தில் ஜெயாவுக்கு முழு உரிமை இருப்பது போல் உயில் எழுதி வைத்து விட வேண்டும்.

கடந்த காலத்தில் தான் செய்த தவறுகள் இன்று காமாட்சி யின் உருவத்தில் வந்து தன்னைப் பழி தீர்த்துக் கொள்வது போல் இருந்தது. குழந்தைகளின் பொறுப்பை ஜெயாவிடம் ஒப்படைத்துவிட்டால் அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. இது நாள் வரையில் குழந்தைகளை பற்றி தான் அக்கறை எடுத்துக் கொண்டதே இல்லை. இறந்து போகும் முன் அவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று புருஷோத்தமன் முடிவு செய்தார்.

* * *

## 16

**ஹ**ரி ரொம்ப நேரம் கழித்து வீட்டுக்கு வந்தான். அன்று கலாநிலையத்தில் அவனுடைய புரோகிராம் இருந்தது. அவன் பாடிய போதும், வாசித்த போதும் பார்வையாளர்கள் பெரும் அளவில் கைகளைத் தட்டி தங்களுடைய பாராட்டைத் தெரிவித்தார்கள். அலை அலையாய் எழும்பிய பாராட்டு வெள்ளத்தில் ஹரி மூழ்கி விட்டிருந்தான்.

ஹரி கதவைத் தட்டியதும் கவிதா வந்து கதவைத் திறந்தாள்.

ஹரி உற்சாகமாக உள்ளே வந்து கொண்டே கையில் இருந்த ரோஜாப் பூ மாலையை கவிதாவின் கழுத்தில் அணிவித்தான். "புரோகிராம் எவ்வளவு நன்றாக நடந்தது தெரியுமா? நீ வருவதாக சொன்னாயே. ஏன் வரவில்லை?" என்று கேட்டான்.

கவிதா என்ன பதில் சொன்னாளோ அவன் சரியாக காதில் வாங்கிக் கொள்ளவில்லை. "இந்த நேரத்தில் எனக்கு சாப்பாடு வேண்டாம். நீ போய் படுத்துக் கொள். தூங்கிக் கொண்டிருந்தவளை எழுப்பி விட்டேனோ? சாரி மேடம்."

"பால் வேண்டுமானால் சுட வைத்துத் தரட்டுமா?"

"ஊஹூம். எதுவும் வேண்டாம். உன் குரல் என்னவோ போல் இருக்கே. ஜலதோஷம் பிடித்துக் கொண்டுவிட்டதா?" ஹரி உடைகளை மாற்றிக் கொண்டு வந்து பப்லூவின் பக்கத்தில் படுத்துக் கொண்டான்.

ஹரி கேட்டதற்கு கவிதா பதில் சொல்லவில்லை. சமையலறையில் பாத்திரங்களை ஒழித்துப் போட்டு வந்தாள்.

"ஹரீ!" தாழ்ந்த குரலில் அழைத்தாள்.

"ஊம்." பகல் முழுவதும் ஓயாத அலைச்சல் என்பதாலோ என்னவோ படுக்கையில் விழுந்ததும் தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்தது அவனுக்கு. ரசிகர்களின் கைத்தட்டல்கள் இன்னும் அவன் காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

"இந்த ஞாயிறு ஹாஸ்டலுக்குப் போய்விடலாம் என்று இருக்கிறேன்."

"இடம் இருக்கிறதாமா?"

"மதியம் போய் விசாரித்து விட்டு வந்தேன். ரூம் காலியாக இருக்காம். மாமி இங்கே வரும் முன்பே நான் ஹாஸ்டலுக்குப் போய்விட்டேன் என்றால் எந்தப் பிரச்னையும் இருக்காது."

"ஆகட்டும் கவிதா." ஹரி புரண்டு படுத்தான்.

"ஹரீ! நான் ஹாஸ்டலுக்குப் போய்விட்டால் உனக்கு ஒன்றுமே தோன்றாதா?"



"என்னிக்கு இருந்தாலும் போக வேண்டியவள்தானே? இதில் நினைத்துக் கொள்ள என்ன இருக்கு?"

"அவ்வளவுதானா?" கவிதாவின் குரலில் வெளிப்பட்ட ஏமாற்றத்தை, தூக்க மயக்கத்தில் ஆழ்ந்துவிட்ட ஹரி உணரவில்லை. "உன்னைப் பற்றி மேலும் பேசக்கூடிய அதிகாரமோ, உரிமையோ எனக்கு இல்லையே" என்றான்.

"அந்த உரிமையை, அதிகாரத்தை நானே உனக்குத் தருகிறேன். இப்போ சொல்லு."

ஹரி சிரித்துவிட்டான். "இப்போ உடனே என்னால் சொல்ல முடியாது. தூக்கம் கண்களைச் சொருகுகிறது. நீயும் தூங்கு. ஹாஸ்டலுக்குப் போனாலும் அடிக்கடி வந்து கொண்டிரு. கவிதா! நீ இருந்த இந்த ஒரு மாதமும் எனக்கு நிம்மதியாக கழிந்து விட்டது." சொல்லிக் கொண்டிருந்த போதே ஹரி தூங்கிப் போய்விட்டான்.

ரொம்ப நேரம் கழித்து திடீரென்று விழிப்பு வந்தது. கரெண்ட் போய் விட்டதோ என்னவோ வியர்த்துக் கொட்டியது. பனியனைக் கழற்றி விட்டு மறுபடியும் படுத்துக் கொண்டான். யாரோ அழும் குரல் ரொம்ப மெலிதாக கேட்டது. ஒரு நிமிடம் உன்னிப்பாக கேட்டான். "கவிதா!" குரல் கொடுத்தான். கவிதாவிடமிருந்து பதில் வரவில்லை. அவள்தான் அழுது கொண்டிருக்கிறாள் என்று அவனுக்குப் புரிந்துவிட்டது.

"கவிதா!" ஹரி எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

கவிதா அந்தப் பக்கம் திரும்பி யார் காதிலேயும் விழக் கூடாது என்பது போல் மௌனமாக விசும்பிக் கொண்டிருந்தாள்.

அதைக் கேட்டதும் ஹரியின் இதயம் கரைந்துவிட்டது.

எழுந்து கட்டில் அருகில் வந்தான். "கவிதா! என்ன ஆச்சு? ஏன் அழுது கொண்டு இருக்கிறாய்?"

ஹோவென்ற கதறல்தான் பதிலாக வந்தது. அவன் சட்டென்று குனிந்து கவிதாவின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். "உடம்பு சரியாக இல்லையா? வேறு ஏதாவது பிரச்னையா? சொல்லு கவிதா."

அப்பவும் கவிதா பதில் சொல்லவில்லை.

ஹரி கட்டில் மீது அமர்ந்து கவிதாவை வலுக்கட்டாய மாக எழுப்பி உட்கார வைத்தான்.

"மாமியிடமிருந்து கடிதம் வந்ததா?"

"இல்லை."

"பங்கஜம் மாமி ஏதாவது சொன்னாளா?" சந்தேகமாக கேட்டான்.

கவிதா கல்யாணம் ஆகாமல் இங்கே வந்து தங்கியிருப்பது பங்கஜம் மாமிக்குப் பிடிக்கவில்லை. கவிதாவைத் தாக்குவது போல் மறைமுகமாக ஏதாவது சொல்லிக் கொண்டே இருந்தாள்.

"இல்லை."

"பின்னே? ஹாஸ்டலுக்குப் போய் இருக்கணும் என்றால் பயமாக இருக்கா?"

கவிதா பதில் சொல்லவில்லை.

"நீ இங்கேயே இருப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லைதான். ஆனால் கல்யாணம் ஆக வேண்டியவள். நாம் நண்பர்களாக பழகி வந்தாலும் ஊர் மக்கள் ஏதாவது சொல்லக் கூடும். உன் எதிர்காலம் பாதிக்கப்படும். நீ ஹாஸ்டலில் இருந்தால் மட்டும் என்ன? எப்போ நினைத்தாலும் வந்து



போகலாம். எங்கேயாவது போகணும் என்றால் ஜெயாவிடம் சொன்னால் போதும், துணைக்கு வருவாள்."

"ஹரீ!" கம்மிவிட்ட குரலில் ஏதோ சொல்ல முயன்றாள். பிறகு குரல் எழும்பாததுபோல் முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கினாள்.

ஹரி கவிதாவின் தலையை வருடிவிட்டான். "என்ன நடந்தது கவிதா? விஷயம் தெரியாமல் என்னால் என்ன செய்ய முடியும் சொல்லு?"

"அண்ணா கடிதம் எழுதியிருக்கிறான்."

"பிரசாத் கடிதம் போட்டானா? என்ன எழுதியிருக்கிறான்?"

"......"

"வேலையை விட்டுவிட்டு மறுபடியும் மாமியிடம் போகச் சொல்லி எச்சரித்தானா?"

இல்லை என்பது போல் தலையை அசைத்தாள்.

"சொல்லு கவிதா. நீ வாய்விட்டுச் சொன்னால்தானே எனக்குத் தெரியும்." நயமான குரலில் கேட்டான்.

கவிதா திடீரென்று அவன் அருகில் நகர்ந்து மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். "ஹரீ! என்னைக் கல்யாணம் செய்து கொண்டு விடு. பிறகு யாருக்கும் நான் பயப்பட வேண்டியதில்லை. என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது" என்றாள்.

ஹரி அதிர்ச்சி அடைந்தவன் போல் சிலையாகி விட்டான்.

"அண்ணா என்ன எழுதியிருந்தான் தெரியுமா? பதினைந்து நாட்களில் இந்தியாவுக்கு வருகிறானாம். மாமி

சொன்ன வரனுடன் என்னுடைய திருமணத்தை நடத்தி வைப்பானாம். வேண்டாத வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு உடனே நான் மாமியிடம் போக வேண்டுமாம்."

"அவ்வளவு கோபம் வரும்படியாக மாமி அவனுக்குக் கடிதம் போட்டிருப்பாளாய் இருக்கும்."

"ஆமாம். மாமியின் மூலமாக அவனுக்கு நான் இங்கே இருப்பது தெரிந்து விட்டது."

"பிரசாத் இந்தியா வந்த பிறகு உன் நிலைமையை எடுத்துச் சொல்லி சமாதானப்படுத்த முயற்சி செய்யலாம் இல்லையா?"

"அது நடக்காத காரியம். கடிதம் வந்தது முதல் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அண்ணன் வருவதற்குள் என் திருமணம் முடிந்துவிட்டால் அவனால் என்னை எதுவும் செய்ய முடியாது. சொத்து என் கைக்கு வந்துவிடும்."

"கவிதா! என்னுடைய கஷ்டங்களில் பலமுறை நீ எனக்குத் துணையாக இருந்திருக்கிறாய். உன் நன்றிக்கடனை இந்த ஜென்மத்தில் தீர்க்க முடியாதோ என்று கூட நினைத்தது உண்டு. உனக்கு உதவி செய்வது என்னுடைய கடமை. ஆனால் இதைத் தவிர வேறு வழி ஏதாவது..."

"போகட்டும். எனக்கு உதவி செய்வதாக நினைத்துக் கொண்டு நான் சொன்னதற்குச் சம்மதம் சொல்லக் கூடாதா?" கவிதாவின் குரலில் வேண்டுகோள் வெளிப்பட்டது.

"பார்வையில்லாதவனைக் கட்டிக் கொண்டு என்ன சுகத்தை அனுபவிக்கப் போகிறாய் கவிதா?"

"கல்யாணம் ஆனபிறகு ஏதாவது ஆக்ஸிடெண்ட் நடந்து கண் பார்வை போயிருந்தால் என்ன செய்திருப்பேன்?"

ஹரியால் பதில் சொல்ல முடியவில்லை.



"திருமணத்தைப் பற்றி எனக்குப் பெரிய எதிர்பார்ப்புகளோ, வண்ண வண்ணக் கனவுகளோ இல்லை. நான் ரொம்ப சாதாரணமானவள். உன்னைப் போன்ற நல்லவன் வாழ்நாள் முழுவதும் எனக்குத் துணையாக இருந்தால் போதும். வேறு எதுவும் எனக்குத் தேவையில்லை. இந்த விஷயத்தை உன்னிடம் எப்படி சொல்வது என்று தயங்கிக் கொண்டிருந்தேன். சற்று முன் நீ உள்ளே வரும்போதே என் கழுத்தில் பூமாலையைப் போட்டாய்."

ஹரியின் கைகள் அவனையும் அறியாமல் கவிதாவை ஒரு நிமிடம் அருகில் இழுத்துக் கொண்டன. "கவிதா! ஏன் அப்படி செய்தேன் என்று எனக்கே தெரியாது. புரோகிராம் நன்றாக நடந்தது என்ற சந்தோஷத்தில் என்னையும் அறியாமல் செய்துவிட்ட காரியம் அது."

"கடவுள்தான் உன்னை அந்தக் காரியத்தைச் செய்ய வைத்தார் என்று நினைக்கிறேன்."

"ஆனால்... நான் திருமணமே செய்து கொள்ளக் கூடாது என்று முடிவு செய்திருந்தேன்."

"காரணம் எனக்குத் தெரியும். சுந்தரி விஷயத்தில் ஏமாந்து விட்டதாக நீ நினைக்கிறாய். ஆனால் கடிதங்களை எழுதியது நான்தான் என்று முன்னாடியே உன்னிடம் சொல்லியிருக்கிறேன். அந்தக் கடிதங்களைப் படித்துத்தான் நீ சுந்தரியிடம் ஆசைகளை வளர்த்துக் கொண்டாய். சுந்தரி உன்னை, உன் காதலை ஒரு விளையாட்டாக எடுத்துக் கொண்டாள்."

"எனக்கு யோசிக்கக் கொஞ்சம் அவகாசம் வேண்டும்."

"ஹரீ! ஒருக்கால் உனக்கு என்னைப் பிடிக்கவில்லை என்றால் அண்ணன் போன பிறகு நாம் பிரிந்து போய் விடலாம்."

கவிதாவின் தோள்களிலிருந்து விலகப் போன அவன் கைகள் திடீரென்று மறுபடியும் பலமாக பற்றிக் கொண்டன.

“என்ன பேச்சு இது? கல்யாணம் என்றால் குழந்தைகளின் விளையாட்டு என்று நினைத்துவிட்டாயா?” அவன் குரலில் கோபம் வெளிப்பட்டது.

“என் எண்ணம் அது இல்லை. விருப்பம் இல்லாத திருமணம் உன்னை வாழ்நாள் முழுவதும் பாதிக்காமல் இருப்பதற்கு வழி சொல்கிறேன். அவ்வளவுதான்.”

“எனக்கு விருப்பம் இல்லாத திருமணத்தை எந்த சூழ்நிலையிலும் செய்து கொள்ளமாட்டேன்.” ஹரியின் குரல் திடமாக ஒலித்தது.

பக்கத்து போர்ஷனில் பங்கஜம் மாமி விழித்துக் கொண்டிருப்பது போல் இருமல் சத்தம் கேட்டது.

ஹரி கவிதாவிடமிருந்து விலகி தன்னுடைய படுக்கையிடம் வந்தான். கவிதா குனிந்து அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

“ஹரீ! கல்யாணம் என்ற பெயரில் பப்லூ, உங்க அண்ணாவைப் போல் என்னையும் ஒரு பொறுப்பாக ஏற்றுக் கொள். சரிதானே?” தாழ்ந்த குரலில் சொன்னாள்.

“சரி. கல்யாணம் செய்து கொண்டு மாமியின் பிடியிலிருந்து உன்னை விடுவிக்கிறேன். எனக்கு என்ன வெகுமானம் தரப்போகிறாய்?”

“உலகம் முழுவதும் தேடி நல்ல டாக்டரைக் கண்டு பிடித்து உனக்குக் கண்பார்வை கிடைக்கும்படியாக செய்கிறேன்.”

“ஒருக்கால் பார்வை வரவில்லை என்றால்?”



“வாழ்நாள் முழுவதும் உனக்குத் துணையாக இருந்து, உதவி செய்யக்கூடிய வாய்ப்பைக் கடவுள் எனக்கு கொடுத்திருக்கிறார் போலும் என்று நினைத்துக் கொள்வேன்.”

பக்கத்து போர்ஷனில் “பாழாய்ப்போன கொசு. பிடுங்கி எடுக்கிறது. நிம்மதியாக தூங்க முடியவில்லை” பங்கஜம் மாமி வேண்டுமென்றே கைகளைத் தட்டி இல்லாத கொசுக்களை விரட்டத் தொடங்கினாள்.

* * *

**ஹ**ரி அப்பொழுதுதான் குளித்துவிட்டு உடைகளை மாற்றிக் கொண்டு வந்தான். “கவிதா! கடைத்தெருவுக்குப் போகிறேன். மளிகைச் சாமான் ஏதாவது வாங்கிக் கொண்டு வரணுமா?” என்று குரல் கொடுத்தான்.

கவிதா கொல்லையில் புடவையை உலர்த்திக் கொண்டிருந்தாள். “எதுவும் வேண்டாம். சீக்கிரமாக வந்துவிடு. எனக்கு ஆபீசுக்குக் கிளம்ப நாழியாகிவிடும்.” பதில் குரல் கொடுத்தாள்.

“அரைமணியில் வந்துவிடுவேன்.” ஹரி செருப்புகளை அணிந்து கொண்டு வாசற்படியைத் தாண்டும்போது வேணு அரக்கப் பரக்க சைக்கிளில் வந்தான். உடல் முழுவதும் வியர்வை ஆறாக ஓடியது.

“ஹரீ! புருஷோத்தமன் இறந்து போய்விட்டாராம்.”

“என்ன?” இடி விழுந்தாற்போல் இருந்தது ஹரிக்கு.

“உண்மைதான் ஹரி. காமாட்சி மாமி ஆள் மூலமாக எங்க அம்மாவுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறாள். அந்த ஆள் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது நானும் கேட்டேன். உடனே உனக்குச் சொல்லணும்னு ஓடிவந்தேன். நேற்று இரவு வரையில் நன்றாகத்தான் இருந்தாராம்.

காலையில் விடிந்த பிறகும் எழுந்திருக்காதது கண்டு சந்தேகம் வந்து போய்ப் பார்த்திருக்கிறார்கள். தூக்கத்தில் எப்போ உயிர் போச்சோ யாருக்கும் தெரியவில்லை."

"வா. . கிளம்புவோம்." ஹரி பதட்டத்துடன் வேணுவின் கையைப் பற்றிக் கொண்டான். ஏதோ வேலையாக ஹாலுக்கு வந்த கவிதாவும் வேணு சொன்னதை கேட்டாள்.

"ஹரீ! நானும் வருகிறேன்." - கவிதா அவசர அவசரமாக வீட்டைப் பூட்டிவிட்டு பங்கஜம் மாமியிடம் விஷயத்தைத் தெரிவித்துவிட்டுக் கிளம்பினாள்.

மூவரும் அங்கே போய்ச் சேரும்போது வீடு முழுவதும் கும்பலாக மக்கள் கூடியிருந்தார்கள். ஆளாளுக்கு பேசிக் கொண்டிருந்தார்கள்.

"உயிரோடு இருந்த வரையில் வாயைக் கட்டி வயிற்றை கட்டி சொத்து சேர்த்தார். ஒருநாள் கூட வயிறு ரொம்ப சாப்பிட்டதில்லை. பளிச்சென்று வேட்டி சட்டை உடுத்தவும் இல்லை. போகும்போது என்ன கொண்டு போக முடிந்தது?"

"பாவம்! முதல் மனைவி இவர் கையில் பட்ட பாடு கொஞ்சம் நஞ்சமில்லை. இதில் தன்னைப் போல் யாரும் இல்லை என்ற இறுமாப்பு வேறு."

திருநாகம் மாமி ஹரியிடம் வந்தாள். "ஹரீ! தங்கையைச் சமாதானப்படுத்திக் கொண்டு உட்கார்ந்துவிட்டால் எப்படி? ஆக வேண்டிய காரியத்தைப் பார்க்க வேண்டாமா? வெளியூரிலிருந்து வர வேண்டியவர்கள் யாரும் இல்லை என்ற போது மேலும் தாமதம் செய்வானேன்?"

ஹரி வேணுவின் உதவியுடன் தகனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்.



சடங்குகளை முடித்துவிட்டு பிணத்தை நாலு பேர் தூக்கப்போகும் சமயம், வாசலில் ஜீப் வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு போலீஸ்காரர்களும், சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் இறங்கி உள்ளே வந்தார்கள்.

"காமாட்சி அம்மாள் யாரு?"

"நான்தான்." காமாட்சி முன்னால் வந்து நின்றாள். கூடியிருக்கும் மக்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"டாக்டர் ரங்கநாதன் எங்களுக்கு போன் செய்தார். புருஷோத்தமன் என்பவர் இறந்து போனதில் உங்களுக்கு ஏதோ சந்தேகம் இருப்பதாகவும், போலீஸில் புகார் கொடுக்கச் சொல்லி நீங்க அவரிடம் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார். இது உண்மைதானா?"

"ஆமாம் இன்ஸ்பெக்டர். தூக்கத்திலேயே ஹார்ட் அட்டாக் வந்து புருஷோத்தமன் இறந்து போயிருப்பதாக வழக்கமாக அவரைப் பார்க்கும் டாக்டர் தெரிவித்தார். இருந்தாலும் எனக்கு நம்பிக்கை வரவில்லை. பிணப் பரிசோதனை செய்ய வைத்து அவர் இயற்கையாகவே இறந்து போனாரா இல்லை தூக்க மாத்திரைகள் அதிகமாக கொடுத்ததால் இறந்து போனாரா என்று உறுதி செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்."

"உங்கள் சந்தேகத்திற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா?"

"சொத்துக்கு ஆசைப்பட்டு யாராவது தன்னைக் கொலை செய்யக்கூடும் என்று பயப்படுவதாக அவரே பலமுறை என்னிடம் சொல்லியிருக்கிறார். ஒருக்கால் தான் திடீரென்று இறந்து போனால் போலீஸில் புகார் கொடுத்து, தன்னுடைய சாவு இயற்கையானதா இல்லையா என்று உறுதிப் படுத்திக்

கொள்ளச் சொல்லி என்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டார்.''

"அவர் உங்களிடம் கேட்டுக் கொண்டார் என்பதற்காக போலீஸில் புகார் கொடுக்கச் சொன்னீர்களா?''

"அது மட்டுமே இல்லை இன்ஸ்பெக்டர்'' - காமாட்சி புடவைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்த தூக்க மாத்திரை பாட்டிலை எடுத்து இன்ஸ்பெக்டரிடம் தந்தாள். "நீங்களே பாருங்கள். புருஷோத்தமன் தூக்க மாத்திரைகளைப் பயன் படுத்துபவர் இல்லை. தூக்க மாத்திரைகளை இந்த வீட்டில் நான் பார்த்ததே இல்லை. இந்த பாட்டில் எனக்குப் பழைய சாமான்களை போட்டு வைக்கும் அறையில் கிடைத்தது. அந்த அறைக்கு, எதுக்காக போனீங்க என்று நீங்க என்னைக் கேட்கலாம். காலையில் இவர் இறந்து போய்விட்டார் என்று தெரிந்ததுமே தலைமாட்டில் விளக்கு ஏற்றி வைப்பதற்காக பித்தளை விளக்கை எடுக்கப் போனேன். அங்கே இந்த பாட்டிலை பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தேன். சந்தேகம் வந்து உடனே அவருடைய அறைக் கதவைச் சாத்திப் பூட்டி விட்டேன். நீங்களே உள்ளே போய் பரிசோதனை செய்து பாருங்கள். நேற்று இரவு அவர் சாப்பிட்ட பால் டம்ளர் இன்னும் அப்படியே இருக்கு. யாரும் தொடவும் இல்லை. எடுக்கவும் இல்லை. அவருடைய இறப்பில் ஏதாவது சந்தேகம் இருந்தால் முன்னாடியே தெளிவுப்படுத்திக் கொள்வது நல்லது இல்லையா?'' காமாட்சியின் குரலில் கொஞ்சம் கூட தடுமாற்றம் தெரியவில்லை.

"உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா?''

இன்ஸ்பெக்டர் அந்தக் கேள்வியைக் கேட்டதும் காமாட்சியின் பார்வை ஜெயாவின் பக்கம் ஒரு தடவை திரும்பி மறுபடியும் இன்ஸ்பெக்டர் மீது நிலைத்தது.



இன்ஸ்பெக்டர் அந்தக் குறிப்பை உணர்ந்து கொண்டவர் போல் ஜெயாவைப் பார்த்தார். "இந்தப் பெண் யாரு?'' என்று கேட்டார்.

"புருஷோத்தமனின் இரண்டாவது மனைவி. சமீபத்தில் தான் திருமணம் நடந்தது. அந்த மூலையில் கண் பார்வை யில்லாமல் ஒருவன் நிற்கிறானே. அவன்தான் அவளுடைய சின்ன அண்ணன். பெயர் ஹரி. அந்தச் சின்ன அண்ணா, மூளை கலங்கிவிட்ட பெரிய அண்ணா மற்றும் அவருடைய மகன் பப்லூ மூவரும் இந்த வீட்டில்தான் தங்கியிருந்தார்கள். சமீபத்தில் ஏதோ கருத்து வேற்றுமைகள் வந்து சண்டை போட்டுக் கொண்டு வீட்டை விட்டுப் போய்விட்டார்கள்.''

இன்ஸ்பெக்டர் டைரியில் ஏதோ எழுதிக் கொண்டார்.

"இறந்துபோன புருஷோத்தமனுக்கும் உங்களுக்கும் என்ன உறவு?'' இன்ஸ்பெக்டர் தலைகுனிந்தபடி எழுதிக் கொண்டே கேட்டார்.

காமாட்சியின் முகம் ஒரு நிமிடம் கறுத்துப் போய் விட்டது. ஆனால் உடனே சமாளித்துக் கொண்டாள். "தூரத்துச் சொந்தம் என்று சொன்னால் உங்களுக்குச் கலபமாக புரியும். அவருடைய முதல் மனைவி இறந்து போனது முதல் அவருடைய குழந்தைகளை நான்தான் வளர்த்து வருகிறேன். அவர் இரண்டாவது கல்யாணம் செய்து கொண்ட விஷயம் தெரிந்ததும் குழந்தைகளை அவரிடம் ஒப்படைத்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். ஆனால் இங்கே வந்த பிறகுதான் இந்தக் கல்யாணம் செய்து கொண்டதில் அவர் சந்தோஷமாக இல்லை என்று புரிந்தது. மறுமணம் செய்துகொண்டு தான் பெரிய தவறு செய்து விட்டதாக அவரே பலமுறை என்னிடம் வருத்தப்பட்டுக் கொண்டார்.''

"காமாட்சி சொன்னது உண்மைதான். அவர் புலம்புவதை நாங்களும் கேட்டிருக்கிறோம். பணம் தண்ணீராக செல வழிகிறது என்று வாய்க்கு வாய் சொல்லிக் கொண்டே இருப்பார்" - கும்பலிலிருந்து ஒரு அம்மாள் காமாட்சிக்கு ஆதரவு தரும் வகையில் பேசினாள்.

"இனி மேலும் குழந்தைகளை நான்தான் வளர்த்து ஆளாக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். ஊருக்குப் போவதாக நான் சொன்ன போது 'இப்போ என்ன அவசரம் பிறகு போய் கொள்ளலாம்' என்று தடுத்து விட்டார்." காமாட்சி கூசாமல் பொய் சொல்லிக் கொண்டே போனாள்.

இன்ஸ்பெக்டர் டைரியில் குறித்துக் கொண்டுவிட்டு சட்டைப் பையில் வைத்துக் கொண்டார். "அந்த அறையைத் திறந்து விடுங்க" என்றார்.

"வாங்க, சாவி என்னிடம்தான் இருக்கு" - காமாட்சி முன்னால் நடந்தாள்.

கூடியிருந்த மக்கள் குசுகுசுவென்று பேசிக் கொண் டிருந்தார்கள்.

பத்து நிமிடங்கள் கழித்து இன்ஸ்பெக்டர் வெளியே வந்தார். நேராக ஜெயாவிடம் வந்து "நேற்று இரவு பால் டம்ளரை அவரிடம் கொடுத்தது நீங்கதானா?" என்று கேட்டார்.

ஜெயா ஆமாம் என்பது போல் தலையை அசைத்தாள்.

அரைமணியில் ஆம்புலென்ஸ் வந்தது. புருஷோத்த மனின் பிணம் போஸ்ட்மார்ட்டத்திற்காக எடுத்துச் செல்லப் பட்டது.

ஜெயா பயந்து போய் நடுங்கிக் கொண்டே ஹரியின் அருகில் வந்தாள். "அண்ணா! இதென்ன குழப்பம்? இரவு வழக்கம் போல் பால் டம்ளரை நான்தான் கொண்டு போய் கொடுத்தேன். ஆனால் எனக்கு எதுவும் தெரியாது." ஹோ வென்று கதறினாள்.



ஹரி தங்கையின் தோளில் ஆதரவுடன் தட்டிக் கொடுத்தான். "பயப்படாதே ஜெயா. இது போன்ற சமயத் தில்தான் தைரியமாக இருக்கணும்."

"ஹரீ! எனக்குத் தெரிந்த லாயர் இருக்கிறார். ஜெயாவை காவல் நிலையத்திற்கு அழைத்துப் போகும் முன்பே போன் செய்து அவரைக் கூப்பிட்டுப் பேசுவோம்." கவிதா பதட்டத்துடன் சொன்னாள்.

"கவிதா சொல்வது போல் செய்வோம்." வேணுவும் அந்த யோசனையை வரவேற்றான்.

* * *

போஸ்ட்மார்ட்டம் முடிவதற்கு மாலையாகிவிட்டது. ஹரியும், வேணுவும் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தார்கள். ஜெயாவுக்குத் துணையாக கவிதா வீட்டிலேயே இருந்து விட்டாள். ஜெயா முழங்காலில் தலையை வைத்துக் கொண்டு உயிரற்ற பார்வையுடன் தரையைப் பார்த்துக் கொண் டிருந்தாள்.

கவிதாவுக்குத் தெரிந்த லாயர் ஜெயாவிடமும், ஹரி யிடமும் கேட்டு விவரங்களைத் தெரிந்து கொண்டார். "எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். ஒருக்கால் இன்ஸ்பெக்டர் உங்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச் சொன்னால் என்னிடம் தெரிவியுங்கள். நான் வந்துவிடுகிறேன்" என்று தைரியம் சொல்லிவிட்டுப் போனார்.

கவிதா குழந்தைகளை ஹரியின் வீட்டுக்கு அழைத்துச் சென்று சாப்பாடு போட்டாள். பப்லூவுடன் விளையாடிக் கொண்டு அவர்களை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு கையோடு காபி கலந்து பிளாஸ்கில் எடுத்து வந்தாள்.

"ஜெயா! காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடாமல் இருக்கிறாய். சூடாக ஒரு வாய் காபி சாப்பிடு" என்று டம்ளரை நீட்டினாள்.

ஜெயா மௌனமாக காபி டம்ளரை வாங்கிப் பக்கத்தில் வைத்துவிட்டாள். கவிதா ஜெயாவின் தோளில் கையைப் பதித்தாள்.

"ஜெயா! இந்த லாயர் ரொம்ப திறமையானவர். நாம் எதைப் பற்றியும் பயப்பட வேண்டியதில்லை. நீ கவலைப் படாதே. எல்லாம் நல்லபடியாக நடக்கும்" என்றாள்.

ஜெயாவுக்குத் துக்கம் பொங்கி வந்தது. இரு கைகளாலேயும் முகத்தை மூடிக் கொண்டு அழத் தொடங்கினாள்.

"ஜெயா! நீ தைரியமாக இருக்கணும்."

"சிலருடைய ஜாதகங்கள் மட்டும் ஏன் இவ்வளவு மோசமாக இருக்கணும்? தவறு செய்யாதவர்களைத் தண்டித்து கடவுள் ஏன் இப்படி வேடிக்கை பார்க்கிறார்? அண்ணி போனது முதல் யாரோ சாபம் கொடுத்துவிட்டது போல் தொடர்ந்து கஷ்டங்களை அனுபவித்து வருகிறோம். எனக்கு இன்னும் இருபத்தியோரு வயது கூட நிரம்பவில்லை. அதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. இவரைக் கல்யாணம் செய்து கொண்டு சுகமாக வாழ்ந்துவிடலாம் என்ற எதிர்பார்ப்போ, கனவுகளோ எனக்கு இருக்கவில்லை. வாழ்க்கைப் போராட்டத்தில் சமரசம் செய்து கொள்ள நினைத்தேன். கடவுள் அந்த நிம்மதியும் எனக்கு இல்லாமல் செய்துவிட்டார். என் நிலைமைதான் இப்படி என்றால்



அண்ணன்களைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை." கம்மிவிட்ட குரலில் ஜெயா சொன்னாள்.

ஜெயாவைப் பார்க்கும்போது கவிதாவுக்குத் துக்கம் பொங்கி வந்தது. கொஞ்ச நேரம் கழித்து நல்லவிதமாக பேசி வலுக்கட்டாயமாக ஜெயாவை காபி குடிக்கச் செய்தாள்.

சற்று தொலைவில் கையில் விசிறியுடன் பாயின்மீது அமர்ந்திருந்த காமாட்சி இந்த இருவரின் பேச்சையே கவனித்துக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றி திருநாகமும், மற்ற பெண்டுகளும் அமர்ந்திருந்தார்கள்.

ஜெயா தூக்க மாத்திரைகள் பாலில் கலந்து கொடுத்து புருஷோத்தமனைக் கொலை செய்துவிட்டதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள். எந்த நிமிடமும் போலீஸார் வந்து ஜெயாவைக் கைது செய்து அழைத்துப் போவார்கள் என்றும், அந்தக் காட்சியைக் கண்குளிரப் பார்க்க வேண்டும் என்றும் வீட்டு வேலைகளையும் விட்டுவிட்டு அங்கேயே உட்கார்ந்து விட்டார்கள்.

மாலை ஆறு மணி ஆகும்போது ஹரியும், வேணுவும் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்தார்கள். இருவரின் முகமும் களைப்பினால் வாடிப் போயிருந்தாலும் ஒருவிதமான நிம்மதி தென்பட்டது.

"ஹரி! என்ன ஆச்சு?" கவிதா வாசலுக்கு ஓடிவந்தாள்.

ஹரி கவிதாவின் கைகளை பலமாக பற்றிக் கொண்டான். "கடவுள் நம்மைக் காப்பாற்றி விட்டார் கவிதா. புருஷோத்தமன் தூக்கத்தில் மாரடைப்பு ஏற்பட்டு இறந்து போய்விட்டார். டாக்டர் சொன்னது உண்மைதான். தூக்க மாத்திரைகள் கலந்த பாலை அவர் குடிக்கவே இல்லை. ஜெயா எங்கே?"

"அண்ணா!" ஜெயா உள்ளே இருந்து ஓடிவந்து

ஹரியைக் கட்டிக் கொண்டாள். ஹரி தங்கையின் கையை ஆதவுடன் பற்றிக் கொண்டான்.

"ஜெயா! முன் பிறவியில் நாம் ஏதோ கொஞ்சம் புண்ணியம் செய்திருக்க வேண்டும். அவர் மட்டும் அந்தப் பாலை குடித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? நீ அந்தக் காரியம் செய்யவில்லை என்றாலும் எல்லோரும் உன்னையே குற்றம் சொல்லியிருப்பார்கள்."

"அண்ணா!" மடை திறந்த வெள்ளமாக துக்கம் பொங்கி வந்தது. காலை முதல் அவள் பட்ட வேதனை, பயம் எல்லாம் கறைந்து கண்ணீராக வெளியேறிக் கொண்டிருந்தன.

கவிதாவின் விழிகளும் ஈரமாயின. கண்களில் தூசு விழுந்தாற் போன்ற பாவனையுடன் வேணு கண்களைத் துடைத்துக் கொண்டான்.

"பெரிய ஆபத்திலிருந்து தப்பிவிட்டோம்." கவிதா நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டாள்.

"கேஸ் இன்னும் முடியவில்லை கவிதா. தூக்க மாத்திரை பாட்டில் இந்த வீட்டிற்குள் எப்படி வந்தது? புருஷோத்தமனை கொலை செய்யும் தேவை யாருக்கு இருக்கு? இதையெல்லாம் கண்டுபிடிக்கும் வரையில் போலீஸார் விடமாட்டார்கள்." வேணு கடைக்கண்ணால் காமாட்சியைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

காமாட்சியின் நெற்றியில் திடீரென்று வியர்வை படிந்தது. கையில் இருந்த விசிறியை வேக வேகமாக ஆட்டினாள். அவள் முகத்தில் தாங்க முடியாத ஆச்சரியமும், அவ நம்பிக்கையும் மாறி மாறித் தென்பட்டன.

"ஹரீ! ஏற்கனவே தாமதமாகிவிட்டது. தகனத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிப்போம்." வேணு சொன்னான்.



ஹரி ஜெயாவை கவிதாவிடம் ஒப்படைத்தான். "கவிதா! ஜெயாவை வீட்டுக்கு அழைத்துப் போகிறாயா?"

"அதை எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். காரியம் முடிந்ததும் நேராக அங்கே வந்துவிடுங்கள்." கவிதா சொன்னாள்.

அன்று முழுவதும் கவிதா ஹரிக்கு வலது கரமாக நின்று செயல்பட்டாள்.

ஹரியும், வேணுவும் கிளம்பிப் போய்விட்டார்கள்.

போலீஸார் வந்து ஜெயாவின் கைகளில் விலங்கிட்டு அழைத்துச் செல்லப் போகிறார்கள் என்று ஆர்வத்துடன் காத்திருந்த பெண்டுகளுக்குத் தாங்க முடியாத ஏமாற்றம்தான் கிடைத்தது. ஜெயா அந்தக் காரியத்தைச் செய்யவில்லை என்றால் அவர்களால் நம்பவே முடியவில்லை.

"அந்த கவிதா லாயரை அழைத்து குசுகுசுவென்று பேசியபோதே எனக்குச் சந்தேகம் வந்தது, இவர்கள் ஏதோ தில்லு முல்லு செய்து கேஸ் வராதபடி செய்யப்போகிறார்கள் என்று. இந்தக் காலத்தில் பணம் இருந்தால் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும்." திருநாகம் நீட்டி முழக்கிக் கொண்டே சொன்னாள். சுற்றிலும் இருந்த பெண்டுகள் அதை ஒப்புக் கொள்வது போல் தலையை அசைத்தார்கள்.

அதற்குள் வாசலில் "காமாட்சி மாமி" என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

திருநாகம் எழுந்து வாசலுக்குப் போய் பார்த்தாள். பக்கத்து வீட்டில் வேலை செய்யும் முத்துகாளை வந்திருந்தான். அவன் கையில் உயிரற்ற பூனை ஒன்று இருந்தது. குரலைக் கேட்டு காமாட்சியும் வாசலுக்கு வந்தாள்.

"இந்தப் பூனை உங்களுடையது தானாமே? எங்க வீட்டுத்

தோட்டத்தில் செத்துக் கிடந்தது. எப்போ செத்ததோ என்னவோ?" முத்துகாளை சொன்னான்.

பூனையின் சடலத்தைப் பார்த்ததும் விசிறியை ஆட்டிக் கொண்டிருந்த காமாட்சியின் கை அப்படியே நின்றுவிட்டது. தீய்ந்து போன தோசையை போல் முகம் கறுத்துவிட்டது.

"ஆமாம். இந்தப் பூனையை காமாட்சிதான் வளர்த்து வந்தாள். திருட்டுப் பூனை. எங்க வீட்டுப் பாலையும் மோரையும் விட்டு வைத்ததில்லை." பக்கத்து வீட்டு அம்புஜம் சலித்துக் கொண்டாள்.

"பூனை காணவில்லையே என்று தேடப் போறீங்களே. உங்களிடம் இந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு தூரப் போடச் சொல்லி அம்மா சொல்லி அனுப்பினாங்க." முத்துகாளை போய்விட்டான்.

"பார்த்தாயா ஜெயா? புருஷோத்தமனுக்காக தூக்க மாத்திரைகள் கலந்த பாலை இந்தப் பூனை குடித்து விட்டிருக்கும். பாவம்! அதோட உயிர் போய்விட்டது." விஷயம் புரிந்து விட்டாற் போல் கவிதா சொன்னாள்.

காமாட்சி வாயடைத்துப் போனவளாக அப்படியே நின்று விட்டாள்.

ஹரி லாயரின் உதவியுடன் பணத்தைச் செலவு செய்து போலீஸ்காரர்களையும், டாக்டர்களையும் விலைக்கு வாங்கி விட்டதாகவும், புருஷோத்தமன் ஹார்ட் அட்டாக்கில் இறந்து போனாற் போல் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை திருத்திவிட்டு தங்கையின் மீது எந்த கேஸும் இல்லாதபடி செய்துவிட்டதாகவும் ஊர்மக்கள் கதை கதையாக பேசிக் கொண்டு தங்களுடைய ஆர்வத்தைத் தணித்துக் கொண்டார்கள்.

* * *

# 17

புருஷோத்தமன் இறந்து போய் பதினைந்து நாட்கள் கழிந்துவிட்டன. ஹரி வீட்டில் ஜெயா, அன்று மதியம் கட்டில் மீது அமர்ந்தபடி விரல்களால் தலைமுடியில் சிடுக்கை எடுத்துக் கொண்டிருந்தாள். வீடு முழுவதும் நிசப்தமாக இருந்தது. குழந்தைகள் இன்னும் பள்ளியிலிருந்து வரவில்லை. ஹரி ஏதோ வேலையாக வெளியில் போயிருந்தான். கவிதா ஆபீசுக்குப் போயிருந்தாள். பக்கத்து போர்ஷனில் பங்கஜம் மாமி, மகளையும் அழைத்துக் கொண்டு மேட்னி ஷோவுக்குப் போய்விட்டாள்.

கடந்த பதினைந்து நாட்களாக கவிதா ஜெயாவைக் கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டாள். நல்ல வார்த்தைகளைச் சொல்லி, இதமாக பேசி ஜெயா மனதில் இருந்த இருளைப் போக்கியதோடு, பழையபடி நடமாடும் விதமாக செய்து விட்டாள்.

ஜெயாவின் மனதில் பலவிதமான எண்ணங்கள் அலை போல் மோதிக் கொண்டிருந்தன. வேண்டாமென்று நினைத்தாலும் புருஷோத்தமன் எழுதி வைத்துவிட்டுப் போன உயில் விஷயம் திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்தது.

புருஷோத்தமன் இறந்து போன பதிமூன்றாவது நாள், சுபஸ்வீகாரம் நடந்த அன்று மாலை புருஷோத்தமனின் லாயர் இரண்டு பெரிய மனிதர்களுடன் வீட்டுக்கு வந்தார்.

ஹரி, வேணு, திருநாகம், கவிதா, காமாட்சி எல்லோரும் அங்கேயே இருந்தார்கள். உள்ளே லக்ஷ்மிக்கு தலைவாரிக் கொண்டிருந்த ஜெயாவையும் ஹாலுக்கு வரச் சொல்லி லாயர் அழைத்தார். பிறகு புருஷோத்தமன் எழுதி வைத்த உயிலை

முழுவதுமாக படித்துக் காண்பித்தார். சொத்து முழுவதும் குழந்தைகளின் பெயருக்கு எழுதி வைத்துவிட்டு, ஜெயாவை கார்டியனாக நியமித்து இருந்தார். குழந்தைகளின் படிப்பு, திருமணம் எல்லாமே ஜெயாவின் விருப்பத்தின்படிதான் நடக்க வேண்டும். இந்த வீடு, வங்கியில் இருக்கும் ரொக்கம் ஒரு லட்சம், முதல் மனைவியின் நகைகள் எல்லாமே ஜெயாவுக்குச் சேர வேண்டும். அந்தப் பணத்தில் ஜெயா தன் படிப்பை முடித்துக் கொண்டு அவள் விரும்பும் வகையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புவதாக குறிப்பிட்டிருந்தார். ஜெயாவிடம் தனக்கு முழு நம்பிக்கை இருப்ப தாகவும், குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி தான் கவலைப் பட வேண்டியதில்லை என்றும் எழுதியிருந்தார். குழந்தைகளில் யாராவது ஜெயா சொன்ன பேச்சைக் கேட்காமல் போனாலோ, எதிர்த்துச் செயல்பட்டாலோ, அவர்களுக்குச் சொத்தில் எந்த விதமான உரிமையும் இருக்காது என்று நிபந்தனை விதித்தார். சொத்து முழுவதும் தான் சுயமாக சம்பாதித்தது என்றும் வேறு யாருக்கும் இதில் உரிமையோ, அதிகாரமோ இல்லை என்றும் தெளிவாக எழுதியிருந்தார்.

லாயர் உயிலைப் படித்து முடித்ததும், அங்கே ஒருவிதமான மௌனம் நிலவியது. புருஷோத்தமன் இறந்து போனதுடன் ஜெயாவுக்கும் இந்த வீட்டுக்கும் உள்ள உறவு முடிந்து போய் விட வேண்டும் என்று நினைத்திருந்த ஹரிக்கு இந்த உயில் ஏமாற்றத்தையும், சங்கடத்தையும் உண்டு பண்ணியது.

"கிழவன் போகும்போது ஜெயாவை இந்த வீட்டோடு பிணைத்துவிட்டுப் போய்விட்டானே." - வேணு கோபமாக மனதில் திட்டிக் கொண்டான்.



"குருவி தலையில் பனங்காயை வைத்தது போல் இந்தச் சின்ன வயதில் இவ்வளவு பெரிய பொறுப்பை ஜெயாவால் எப்படி நிர்வகிக்க முடியும்?" என்று கவிதா கவலைப்பட்டாள்.

"அடியாத்தி! ஒரு லட்ச ரூபாய்க்கு இவள் சொந்தக்காரியா?" திருநாகம் வாயைப் பிளந்தாள்.

காமாட்சி ஓரடி முன்னால் வைத்து லாயர் அருகில் வந்தாள். "இந்த உயிலை அவர் எப்போ எழுதினாரோ சொல்ல முடியுமா?" அனல் கக்கும் பார்வையுடன் கேட்டாள்.

"அவர் இறந்து போவதற்கு பதினைந்து நாட்களுக்கு முன் உயிலை எழுதி வைத்து ரிஜிஸ்டரும் செய்திருக்கிறார்" லாயர் சொன்னார்.

"பொய். இது அவர் எழுதிய உயில் இல்லை. இந்த வீட்டையும், முதல் மனைவியின் நகைகளையும் அவருக்குப் பிறகு எனக்குச் சேர வேண்டும் என்று உயில் எழுதியிருப்பதாக அவர் போட்ட கடிதம் என்னிடம் இருக்கிறது."

"எங்கே அந்தக் கடிதம்? காட்டுங்கள்"- லாயர் கேட்டார்.

காமாட்சி உள்ளே போய் பெட்டியில் இருந்த கடிதத்தை எடுத்து வந்தாள். லாயர் மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டு ஒரு வரி விடாமல் கவனமாக படித்தார்.

பிறகு குரலைக் கனைத்துக் கொண்டு "காமாட்சியம்மா! உயில் எழுதப் போகிறேன் என்று கடிதத்தில் எழுதியிருக்கிறாரே ஒழிய அப்போது அவர் உயில் எழுதவே இல்லை. இந்தக் கடிதம் ஒரு வருடத்திற்கு முன்னால் அவர் உங்களுக்கு எழுதியிருக்கிறார். அதற்குப் பிறகு அவர் தன்னுடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு இருக்கலாம்." கடிதத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு மேலும் சொன்னார். "இப்போது அவர் எழுதி வைத்த உயிலின்படி சொத்தில் காலணா காசுக்குக் கூட உங்களுக்கு உரிமை இல்லை."

"எல்லாமே பொய். இதில் ஏதோ தில்லு முல்லு இருக்கு. இத்தனை வருடங்களாக அவருடைய குழந்தைகளை நான்தான் வளர்த்துவந்தேன். இந்த விஷயம் எல்லோருக்கும் தெரியும். அவர் எழுதிய கடிதங்கள் என்னிடம் இருக்கு. சொத்தில் உரிமை இல்லை என்று சொல்லிவிட்டால் வாயை மூடிக்கொண்டு போவதற்கு நான் ஒன்றும் ஏமாளி இல்லை. கோர்ட்டுக்குப் போவேன். இந்த உயில் விஷயத்தை ஒரு கை பார்த்துவிடுகிறேன்." ஹிஸ்டீரியா வந்தவள் போல் கத்தினாள் காமாட்சி.

லாயர் மூக்குக் கண்ணாடியைத் துடைத்துக் கொண்டே காமாட்சியை ஆழமாகப் பார்த்தார். "இதோ பாருங்க காமாட்சியம்மா. எனக்கு புருஷோத்தமனை நன்றாகவே தெரியும். அவருடைய முதல் மனைவி இறந்து போன பிறகு குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொண்டதும் தெரியும். அதற்குப் பின்னால் இருந்த கதையும் தெரியும். இறந்து போனவர்களை பற்றி கெடுதலாக எதுவும் சொல்லக் கூடாது என்பது உலக மரபு. இருந்தாலும் சொல்கிறேன். புருஷோத் தமன் போன்ற சுயநலம் மிகுந்தவரை, காரியவாதியை எங்கேயும் பார்க்க முடியாது. இனிக்க இனிக்கப் பேசி எதிராளியை வசப்படுத்திக் கொண்டு காரியத்தைச் சாதித்துக் கொள்வார். உங்களிடம் அதுபோல் நடந்து கொண்டு இருப்பார் என்று நினைக்கிறேன். இதனால் உங்களுக்கு ஏதாவது இழப்பு ஏற்பட்டு இருந்தால் அதற்கு இரக்கப்படத்தான் முடியுமே ஒழிய என்னால் எதுவும் செய்ய முடியாது. வயதில் பெரியவன் என்ற முறையில் ஒரு விஷயம் சொல்ல நினைக்கிறேன். இந்த உயில் அவர் கைப்பட எழுதி ரிஜிஸ்டர் செய்து இருக்கிறார். என் கூட வந்த பெரிய மனிதர்கள் இருவரும் அதில் சாட்சி கையெழுத்து போட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் நீங்கள் கோர்ட்டுக்குப்



போனால் பணவிரயம்தானே தவிர எந்த பிரயோஜனமும் இருக்கப் போவதில்லை."

அதைக் கேட்டதும் காமாட்சியின் முகம் விழுந்து விட்டது. ஏமாற்றமும், வருத்தமும் தாங்க முடியாமல் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு ஹோவென்று அழுதாள். திருநாகம் மாமி காமாட்சியைச் சமாதானப் படுத்தினாள்.

அந்த நிமிடம் காமாட்சியைப் பார்க்கும்போது ஜெயாவுக்கு இரக்கம்தான் ஏற்பட்டது.

லாயர் கிளம்பும் முன் காமாட்சியிடம் வந்தார். "இந்த வீட்டில் உங்களுக்கு இனி எந்த விதமான உரிமையும் இல்லை. மற்றவர்கள் சொல்லும் முன் கூடிய சீக்கிரம் கிளம்புவது நல்லது" என்று எச்சரித்துவிட்டுப் போனார்.

திருநாகம் மாமி காமாட்சியைச் சாமாதானப் படுத்தினாள். "இரண்டு நாட்கள் எங்கள் வீட்டில் தங்கிவிட்டு பிறகு போய்க் கொள்ளலாம்" என்று வற்புறுத்தி தன் வீட்டுக்கு அழைத்துப் போனாள்.

புருஷோத்தமன் இறந்து போன திதி நல்லது இல்லை என்றும், ஆறுமாதம் வீட்டைப் பூட்டி வைக்க வேண்டும் என்றும் சாஸ்திரிகள் சொன்னதில் ஜெயாவையும், குழந்தைகளையும் ஹரி தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்று புரியாததால் குழந்தைகள் எப்போதும் போல் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் பள்ளிக்குப் போய்க் கொண்டும் இருந்தார்கள். ஜெயாவை விட்டு தாங்கள் இனி பிரிந்திருக்க வேண்டியதில்லை என்ற விஷயம் மட்டும் அவர்களுக்கு நன்றாகப் புரிந்தது.

ஜெயா இங்கே வந்த அடுத்த நாள் வேணு அவளைப் பார்க்க வந்தான். அவளிடம் தனிமையில் பேச விரும்பியது போல் யாரும் இல்லாத நேரமாக பார்த்து வந்தான்.

"ஜெயா! நடந்தது நடந்துவிட்டது. உனக்கும் புருஷோத்தமனுக்கும் கல்யாணம் ஆனதை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்துவிடுவோம். சொத்தையும், குழந்தைகளையும் காமாட்சியிடம் ஒப்படைத்துவிட்டால் பிரச்னை தீர்ந்தது. நாம் இருவரும் ரிஜிஸ்டர் மேரேஜ் செய்து கொள்வோம். வேறு ஊருக்கு மாற்றல் கேட்டு வாங்கிக் கொள்கிறேன். புதிய ஊரில் புது வாழ்க்கையைத் தொடங்குவோம்." வேணு சொன்னான்.

"எனக்கு யோசிக்கக் கொஞ்சம் அவகாசம் தேவை."

"யோசிப்பதற்கு வாய்ப்பு கொடுத்தால் மறுபடியும் நீ கோழை ஆகிவிடுவாயோ என்ற பயம் எனக்கு."

"உடனே என்னால் எதுவும் சொல்ல முடியாது. என் மனம் கல்லாக இறுகிவிட்டது."

"சரி. நாளை மதியம் வரை யோசிக்க உனக்கு வாய்ப்பு தருகிறேன். நாளை மதியம் மூன்று மணிக்கு மறுபடியும் வருகிறேன். குழந்தைகளும் பள்ளியிலிருந்து வந்திருக்க மாட்டார்கள். நன்றாக யோசித்துக் கொள். உன் முடிவு சாதகமாக இருக்க வேண்டும் என்று கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு வேணு போய் விட்டான்.

ஜெயா அன்று இரவு முழுவதும் தூங்கவில்லை. வேணுவைக் கல்யாணம் செய்து கொண்டால் குடும்பம், குழந்தைகள் என்று வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும். ஆனால் திருநாகம் மாமி சும்மா இருப்பாளா? மகனின்



திருமணத்தைப் பற்றி எத்தனை எதிர்பார்ப்புகளை வைத்திருக்கிறாள்? நிறைய சீர்வரிசையுடன், பெரிய இடத்துப் பெண் தனக்கு மருமகளாக வரவேண்டும் என்று தவிக்கிறாள். அப்படி இருக்கும்போது ஏற்கனவே திருமணம் ஆன தன்னை வேணு பண்ணிக்கொண்டால் எப்படி சகித்துக் கொள்வாள்? வேணுவுடன் சண்டை போட்டு வாழ்க்கையை நரகமாக்கி விடமாட்டாளா? வேணு அவளுக்கு ஒரே மகன். தாயையும், மகனையும் பிரித்துவிட்டாள் என்று ஊரார் தன்னைக் குறை சொல்லாமல் இருப்பார்களா?

அதோடு குழந்தைகளின் பொறுப்பை காமாட்சியிடம் ஒப்படைப்பதில் ஜெயாவுக்குக் கொஞ்சம்கூட விருப்பம் இல்லை. அவர்களுடைய பொறுப்பை தான் ஏற்றுக் கொள்ள மறுத்தால் மறுபடியும் காமாட்சியிடம் போவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. புருஷோத்தமனின் உயிரை எடுப்பதற்கும் துணிந்துவிட்டவள் இந்தக் குழந்தைகளை ஒழுங்காக வளர்ப்பாளா? அந்தப் பட்டிக்காட்டில் அவர்களை என்ன செய்தாலும் எப்படி நடத்தினாலும் கேட்க நாதியில்லை. அந்த ராட்சசியிடம் குழந்தைகளை ஒப்படைக்கணும் என்று நினைக்கும்போதே ஜெயாவுக்கு முதுகுத்தண்டில் நடுக்கம் பரவியது. தன் ஜாதகத்தில் மற்ற பெண்களை போல் கல்யாண யோகம் இருந்திருந்தால் இப்படி எல்லாம் நடந்திருக்காதோ என்னவோ? குழந்தைகளின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இரு அண்ணன்களுக்கும் ஒத்தாசையாக இருந்து கொண்டு படிப்பை மேலும் தொடருவது உத்தமமான காரியமாக ஜெயாவுக்குத் தோன்றியது. ஒரு முடிவுக்கு வந்துவிட்ட பிறகு மனதில் இருந்த கொந்தளிப்பு அடங்கியது.

தலைமுடியின் சிடுக்கை எடுத்தபடி ரொம்ப நேரமாக யோசித்துக் கொண்டிருந்த ஜெயா தலையணை மீது கிடந்த

சிவப்பு ரிப்பனை எடுத்துக் கூந்தலை ஒன்றாக சேர்த்து முடிச்சுப் போட்டாள். அப்படியே படுக்கையில் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள்.

சுயநலத்தை விட்டுக் கொடுப்பதில் மனதிற்கு எவ்வளவு நிம்மதி கிடைக்கிறது? மேலும்மேலும் ஆசைகளை வளர்த்துக் கொள்ளாமல், இருப்பது போதும் என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால் அதைவிட நிம்மதி வேறு இல்லையே? மனம் முழுவதும் இலேசாகிவிட்டது போல் இருந்தது. லேசாக தூக்கம் வருவது போல் கண்கள் தன்னையும் அறியாமல் மூடிக் கொண்டன.

அதற்குள் வாசற்கதவு திறக்கும் சத்தம் கேட்டது. யாரோ வேண்டுமென்றே அதிகம் ஓசை எழுப்பாமல் ஜாக்கிரதையாக கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருவது போன்ற சந்தடி வேணுதான் வந்திருப்பான். கண்களைத் திறந்து பார்க்க வேண்டும் என்று நினைத்தாலும் அவன் என்னதான் செய்யப் போகிறானோ பார்ப்போம் என்ற ஆர்வம் மேலிட ஜெயா அசையாமல் அப்படியே படுத்துக் கிடந்தாள்.

திடீரென்று யாரோ அவளுடைய நீளமான கூந்தலை இழுத்து பலமாக பிடித்துக் கொண்டார்கள். அந்த வலியில் திடுக்கிட்டு உடனே கண்களைத் திறந்து பார்த்த ஜெயா வீலென்று கத்தினாள். எதிரே ரத்தக் காட்டேரியாய், பலி வாங்க வந்திருக்கும் அபர காளியாய் சிவந்த கண்களுடன் காமாட்சி நின்றிருந்தாள். ஜெயா ஒரே உதறலில் காமாட்சியின் பிடியிலிருந்து கூந்தலை விடுவித்துக் கொண்டு கட்டிலை விட்டு இறங்கிவிட்டாள். லூசாக கட்டியிருந்த ரிப்பன் நழுவி காமாட்சியின் கையில் தங்கிவிட்டது.

"இங்கே எதுக்கு வந்தீங்க?" பதட்டத்தினாலும், பயத்தினாலும் ஜெயாவுக்கு மூச்சு இரைத்தது.



காமாட்சி ஒரு நிமிடம் குழப்பம் அடைந்தவளாய் தன் கையிலிருந்த சாட்டின் ரிப்பனையும், ஜெயாவையும் மாறி மாறிப் பார்த்தாள். திடீரென்று ஏதோ யோசனை வந்தது போல் அவள் கண்கள் மின்னின.

ரிப்பனில் விழுந்த முடிச்சைப் பிரித்து சரி செய்து கொண்டே முன்னால் வந்தாள். "உனக்கு ஒரு முடிவு கட்டத்தான் வந்தேன். இந்த காமாட்சியை ஜெயிப்பது அவ்வளவு சுலபம் இல்லை. அதை முதலில் தெரிந்து கொள்." ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து அருகில் வந்தாள்.

"நான் என்ன செய்தேன்? நான் எந்த குற்றமும் செய்யவில்லையே?" ஜெயா பின்னால் நகர்ந்தாள்.

"நீ எந்த குற்றமும் செய்யவில்லையா? கிழவனை கைக்குள் போட்டுக் கொண்டு சொத்து முழுவதும் பிடுங்கிக் கொண்டாய். உன் மாயா ஜால பேச்சால் குழந்தைகளை வசப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு என்னைக் கண்டால் ஆகாமல் செய்துவிட்டாய். இந்த வீடும், நகைகளும் எனக்குத்தான் சொந்தம் என்று நினைத்திருந்தேன். அவற்றையும் நீ கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டாய். என் வாயில் மண்ணை அள்ளிப் போட்டது நீதானே?"

ஜெயாவின் முதுகு ராமகிருஷ்ணன் இருந்த அறையின் கதவைத் தொட்டது. காமாட்சி நல்ல எண்ணத்தில் வரவில்லை என்று ஜெயாவுக்குப் புரிந்துவிட்டது. அவளுடன் தனிமையில் இருப்பது நல்லது இல்லை என்று மனம் எச்சரித்தது. சட்டென்று திரும்பி "அண்ணா!" என்று குரல் கொடுத்தபடி தாழ்ப்பாளைத் திறக்கப் போனாள்.

ஒரே எட்டில் காமாட்சி ஜெயாவை நெருங்கி அவள் வாயைப் பலமாக பொத்தினாள்.

ராமகிருஷ்ணன் தூக்கம் கலைந்த நிலையில் புரண்டு படுத்தான். புலியின் பிடியில் சிக்கிக் கொண்ட ஆட்டுக் குட்டியைப் போல் காமாட்சியின் பிடியில் சிக்கிக் கொண்ட ஜெயா தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தாள். காமாட்சி ஜெயாவின் கைகளை பின் பக்கமாக வளைத்து ரிப்பனால் முடிச்சுப் போட்டாள்.

“விடு என்னை. . . அண்ணா! அண்ணா!” ஜெயா உரத்த குரலில் கத்தினாள்.

ராமகிருஷ்ணன் கட்டில் மீது எழுந்து உட்கார்ந்து கொண்டான். அவன் கண்கள் தூக்கக் கலக்கத்தில் சொருகிக் கொண்டிருந்தன. மறுபடியும் ஜெயா தன்னை அழைப்பாளோ என்று கவனமாக கேட்டான். குரல் எதுவும் கேட்காததால் சலிப்படைந்தவனாய் மறுபடியும் படுத்துக் கொண்டான்.

காமாட்சி ஜெயாவின் வாயைப் பொத்தியபடியே கட்டில் அருகில் இழுத்து வந்தாள்.

“உன்னைக் கொன்றுவிட்டு நானும் செத்துப் போகணும்னு நினைத்தேன். ஆனால் கடவுள் என் பக்கம் இருக்கிறார். நான் ஏன் சாகணும்? நீ செத்தால் என்னைப் பிடித்த சனி ஒழிந்து போகும். சொத்தும், குழந்தைகளும் எனக்குக் கிடைப்பார்கள்.”

ஜெயா காமாட்சியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள தலையால் மோதியும், கால்களால் உதைத்தும் பார்த்தாள். ஆனால் காமாட்சி அந்த நிமிடம் ஆயிரம் யானைகளின் பலம் கொண்டவள் போல் செயல்பட்டதால் ஜெயாவால் எதுவும் செய்ய முடியவில்லை.

“என் கையில் நீ சாகத்தான் போகிறாய். நீ தூக்கு போட்டுக் கொண்டு செத்ததாக உலகம் நினைத்துக் கொள்ளும்” என்று



சொல்லிக் கொண்டே காமாட்சி ஜெயாவின் புடவை தலைப்பை எடுத்து ஜெயாவின் கழுத்தைச் சுற்றி இறுக்க முயன்றாள்.

ஜெயா வீலென்று கத்தினாள். அந்தக் கத்தல் ராமகிருஷ்ணனின் காதுகளில் விழுந்தது. சட்டென்று எழுந்து ஜன்னல் அருகில் வந்து பார்த்தான்.

ஜெயாவின் கழுத்தில் புடவைத் தலைப்பை சுருக்கு போட்டு இறுக்கிக் கொண்டிருந்த காமாட்சி கண்ணில் பட்டாள். ஜெயாவின் கைகள் பின்பக்கமாக கட்டப் பட்டிருந்தன.

அதைப் பார்த்ததும் ராமகிருஷ்ணனின் கண்கள் கோபத்தால் சிவந்தன. ஒரே எட்டில் கதவு அருகில் சென்று பலமாக ஆட்டினான். ஏற்கனவே ஜெயா தாழ்ப்பாளை பாதி நீக்கியிருந்ததால் ராமகிருஷ்ணன் பலமாக ஆட்டியதும் கதவுகள் திறந்து கொண்டன.

ராமகிருஷ்ணன் சூறாவளி காற்றாய் வெளியில் வந்தான். ஜெயா மூச்சை உள்ளே இழுத்துக் கொண்டு உயிரைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தாள். ஜெயா முகத்தில் தென்பட்ட பிராண பீதியைப் பார்க்கப் பார்க்க காமாட்சியின் பலம் மேலும் அதிகரித்தது.

திடீரென்று பின்னாலிருந்து யாரோ பிடித்து இழுத்ததும் காமாட்சி திரும்பிப் பார்த்தாள். ராமகிருஷ்ணன் காமாட்சியைக் கரடிப் பிடியாய் இறுகப் பிடித்து தரதரவென்று இழுத்து வந்தான்.

“யாருடீ நீ? என் தங்கையைக் கொலை செய்ய பார்க்கிறாயா?” என்று கத்திக் கொண்டே வேகமாக கிர்ரென்று சுழற்றினான்.

கழுத்தில் முடிச்சு இறுகாததால் ஜெயாவால் தாராளமாக சுவாசிக்க முடிந்தது.

ராமகிருஷ்ணன் பற்களைக் கடித்து காமாட்சியின் தலைமுடியைப் பற்றி சுவற்றில் மொத்தினான்.

"அண்ணா!" ஜெயா அண்ணனைத் தடுப்பது போல் குரல் கொடுத்தாள்.

அதற்குள் தெருவிலிருந்து "அத்தை! கதவைத் திற" என்று பப்லூவின் குரல் கேட்டது. ஜெயாவுக்குப் போன உயிர் திரும்பி வந்தது போல் இருந்தது.

"பப்லூ! கொல்லை பக்கமாக போய் சுவர் ஏறி குதித்து உள்ளே வா." எப்படியோ சக்தியைத் திரட்டிக் கொண்டு குரல் கொடுத்தாள்.

காமாட்சி ராமகிருஷ்ணனின் பிடியிலிருந்து நழுவி வாசற் கதவு பக்கம் ஓடப் போனாள். ராமகிருஷ்ணன் ஒரே எட்டில் காமாட்சியை அடைந்து கழுத்தைச் சுற்றிலும் கைகளை இறுக்கினான்.

பப்லூ கொல்லை வழியாய் உள்ளே ஓடி வந்தான். அங்கே தென்பட்ட காட்சியைப் பார்த்ததும் அவன் கண்கள் பயத்தினால் அகலமாய் விரிந்தன.

ராமகிருஷ்ணன் கழுத்தை இறுக்கியதில் காமாட்சிக்கு மூச்சு திணறியது. விகாரமாக ஒலி எழுப்பினாள். ராம கிருஷ்ணன் மேலும் இறுக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.

பப்லூ வேகமாக அத்தையின் கழுத்தில் சுற்றியிருந்த புடவைத் தலைப்பை எடுத்துவிட்டான். கைகளைக் கட்டியிருந்த ரிப்பன் முடிச்சை அவிழ்க்கப் போனான். மணி முடிச்சு விழுந்துவிட்டதால் அவிழ்க்க முடியவில்லை.



சட்டென்று ஸ்கூல் பேக்கை திறந்து ஜாமெட்ரி பாக்ஸிலிருந்து பிளேடை எடுத்து ரிப்பனை அறுத்துவிட்டான். கைகள் விடுபட்டதும் ஜெயா புடவைத் தலைப்பை சரியாக போட்டுக் கொண்டு அண்ணனிடம் ஓடினாள்.

ஏற்கனவே காமாட்சியின் கண்கள் நிலைகுத்திவிட்டன. அண்ணனின் கைகளை வலுக்கட்டாயமாக விலக்கிவிட்டு ஜெயா பப்லூவின் உதவியோடு எப்படியோ தொலைவாக இழுத்து வந்தாள். ராமகிருஷ்ணனின் உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. ஆவேசத்தில் மூச்சு இறைத்துக் கொண்டிருந்தது.

"அண்ணா!" ஜெயா ராமகிருஷ்ணனை அமைதிப்படுத்த முயன்றாள்.

அதற்குள் வாசற்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. பப்லூ ஓடிப் போய் கதவைத் திறந்தான். உள்ளே வந்த கவிதா தரையில் கிடந்த காமாட்சியையும், மூச்சு இரைக்க வெறித்த பார்வையுடன் நின்றிருந்த ராமகிருஷ்ணனையும் வியப்புடன் பார்த்தாள்.

"ஜெயா! இதெல்லாம் என்ன? இங்கே என்ன நடந்தது?" பதட்டத்துடன் கேட்டாள்.

ஜெயா அழுது கொண்டே நடந்ததை சுருக்கமாக தெரிவித்தாள். கவிதா தரையில் கிடந்த காமாட்சியிடம் சென்று கைகளை அசைத்து, நாடியைப் பிடித்துப் பார்த்தாள். நாடித் துடிப்பு இருப்பதாக தெரியவில்லை. கவிதா ஜெயாவிடம் வந்தாள்.

"ஜெயா! இப்போது என்ன செய்வது? அந்த அம்மாளைப் பார்த்தால் இறந்துவிட்டாற் போல் தோன்றுகிறது." நடுங்கும் குரலில் சொன்னாள்.

"கடவுளே!" அந்த வார்த்தைகளைக் கேட்க முடியாதவள் போல் ஜெயா இரண்டு கைகளாலும் காதுகளைப் பொத்தினாள். அவளுக்கு அழுகை பொங்கி வந்தது.

"ஜெயா! என்ன நடந்தது?" ராமகிருஷ்ணன் கேட்டான்.

"அண்ணா! என்னைக் காப்பாற்றப் போய் நீ அந்த அம்மாளைக் கொன்றுவிட்டாய்." ஜெயா ஹோவென்று அழுதாள்.

"என்ன? நான் . . . நான் கொலை செய்தேனா?" மார்பின் மீது கையை வைத்துக் கொண்டே கேட்டான்.

"ஆமாம். காமாட்சி உயிரோடு இருந்தபோது மட்டுமே இல்லை. செத்த பிறகும் என்னைப் படுத்தி வைக்கப் போகிறாள்."

ராமகிருஷ்ணன் பார்வை தரையில் கிடந்த காமாட்சியின் மீது படிந்தது.

"நான் அவளைக் கொன்று விட்டேனா? இருக்காது." மறுப்பது போல் தலையை அசைத்தான். வாயடைத்துப் போனவனாய் தன் கைகளையே பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று மூளையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போன்ற ஓசை கேட்டது. அந்த ஓசையைத் தாங்க முடியாதவன் போல் தலையை உதறிக் கொண்டான். தலையைச் சுற்றுவது போல் தோன்றியது. இருட்டில் தடுமாறுபவன் போல் இரு கைகளையும் நீட்டிக் கொண்டே "ஜெயா!" என்றான்.

சட்டென்று ஜெயா அண்ணனைப் பிடித்துக் கொண்டாள். இல்லை என்றால் வேர் அறுந்த மரம் போல் தரையில் விழுந்திருப்பான். கவிதா, ஜெயா இருவரும் சேர்ந்து எப்படியோ ராமகிருஷ்ணனைக் கட்டில் மீது படுக்க வைத்தார்கள்.



அந்த நேரத்தில் "ஜெயா" என்று அழைத்துக் கொண்டே வேணு உள்ளே வந்தான்.

கவிதா நடந்ததை சுருக்கமாக அவனிடம் தெரிவித்து விட்டு உடனே போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வரச் சொன்னாள்.

டாக்டர் வந்து காமாட்சியைப் பரிசோதித்துவிட்டு "உயிர் ஒட்டிக் கொண்டு இருக்கு" என்று சொல்லிவிட்டு ஊசி மருந்தைச் செலுத்தினார்.

அதற்குள் ஹரியும், மற்ற குழந்தைகளும் வந்து விட்டார்கள். மருந்து உடனே வேலை செய்திருக்க வேண்டும். காமாட்சி உடலில் லேசாக அசைவு தென்பட்டது.

"இந்த அம்மாளை உடனே ஆஸ்பத்திரியில் சேர்ப்பது நல்லது." டாக்டர் சொன்னார்.

வேணு உடனே டாக்ஸிக்காக ஓடினான். ஜெயா டாக்டரிடம் ராமகிருஷ்ணன் கீழே விழுந்துவிட்ட விவரம் தெரிவித்ததும் உள்ளே வந்து பரிசோதித்துப் பார்த்தார். ஹரி, ஜெயா, கவிதா, குழந்தைகள் எல்லோரும் கட்டிலைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

ராமகிருஷ்ணன் மெள்ள கண்களைத் திறந்தான்.

"அண்ணா!" ஹரி அருகில் சென்று குனிந்து அண்ணாவின் கையைப் பற்றிக் கொண்டான்.

"உங்க அண்ணியை, குழந்தைகளை, தகனம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டாமா?" கிணற்றிலிருந்து பேசுவது போல் ராமகிருஷ்ணனின் குரல் பலவீனமாக ஒலித்தது.

அண்ணாவின் பேச்சு ஹரிக்குக் குழப்பமாக இருந்தது. "என்ன அண்ணா?" மறுபடியும் கேட்டான்.

"ஹரி! உன் அண்ணியின் உடலுக்கு என் கையால் கொள்ளி வைக்க முடியாது. அந்தக் காரியங்களை நீயே பார்த்துக் கொள்."

"அண்ணா!" ஹரி ஏதோ சொல்லப் போனான்.

"ஷ்.... அவரைப் பேச விடுங்கள். இந்த அதிர்ச்சியில் அவருக்குப் பழைய நினைவு திரும்பிவிட்டது போல் தோன்றுகிறது." டாக்டர் தாழ்ந்த குரலில் எச்சரித்தார்.

ராமகிருஷ்ணன் முகத்தை மூடிக்கொண்டு அழுது கொண்டிருந்தான். "ஒரு நிமிடம் கூட என்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாளே. இப்போ என்னைத் தனியாக விட்டுவிட்டு சாசுவதமாக பிரிந்து போக அவளுக்கு எப்படி மனம் வந்தது? நான் என்ன தவறு செய்தேன்? எனக்கு ஏன் இந்தத் தண்டனை? சுகுணா இல்லாமல் எப்படி வாழப் போகிறேன்? ஹரி! என்னால் முடியாது." ராமகிருஷ்ணன் புலம்பினான்.

"அண்ணா!" ஹரி தடுமாறிக் கொண்டே ராமகிருஷ்ணன் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

"எங்களுடைய அந்யோன்யத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் கடவுள் இப்படி பிரித்து விட்டார் போலும். எத்தனை கனவுகளைக் கண்டு இருப்போம்? ஜெயாவுக்கு முதலில் திருமணம் செய்துவிட்டு பிறகு உனக்கும் ஒரு கால்கட்டைப் போட்டுவிட வேண்டும் என்று எத்தனை பேசினோம்? கார் வாங்கணும் வீடு கட்டணும் என்று எத்தனையோ திட்டங்களை வைத்திருந்தோமே, எல்லாமே பொய்த்துப் போய் விட்டதே. கனவுலகிலேயே வாழுங்கள் என்று சொல்வது போல் அவள் தன் வழியைப் பார்த்துக் கொண்டு போய்விட்டாள்." ராமகிருஷ்ணன் விழிகளிலிருந்து கண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது.



டாக்டர் ஹரியைத் தனியாக அழைத்தார். "அவரிடம் இப்போது எதுவும் பேசாதீங்க. பழைய நினைவுகள் திரும்பி விட்டதால் இப்பொழுதுதான் நடந்தது போல் பேசுகிறார். அவருக்கு ஓய்வு தேவை" என்று சொன்னார்.

அண்ணாவுக்குப் பழைய நினைவு வந்துவிட்டது என்று கேட்டதும் ஹரியால் சந்தோஷத்தைத் தாங்க முடியவில்லை.

டாக்டர் ராமகிருஷ்ணனுக்கு ஊசி மருந்தைச் செலுத்திக் கொண்டே "நீங்க ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். ஆக வேண்டிய காரியங்களை ஹரி பார்த்துக் கொள்வான்" என்று சமாதானப்படுத்தினார்.

இஞ்செக்ஷன் போட்ட இடத்தில் தேய்த்துவிட்டுக் கொண்டான் ராமகிருஷ்ணன். "சுகுணா போன பிறகு நான் உயிரோடு இருந்து என்ன பிரயோஜனம் டாக்டர்? இப்போது நான் நடைபிணத்திற்கு சமம்." சொல்லும்போதே கண்களைச் சொருகியது. அடுத்த நிமிடம் உறக்கத்தில் ஆழ்ந்து போய் விட்டான்.

* * *

## 18

ராமகிருஷ்ணன் கட்டில் மீது மௌனமாக உட்கார்ந்திருந்தான். வலது பக்கத்தில் ஜெயா அண்ணனின் தோளில் தலையைச் சாய்த்தபடி அமர்ந்திருந்தாள். மறுபக்கம் ஹரி அமர்ந்திருந்தான். பப்லூவை அருகில் வரச்சொல்லி எத்தனை முறை அழைத்தாலும் மிரட்சியுடன் பார்த்தானே தவிர தந்தையிடம் போகவில்லை. ஹரியின் கையைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தான்.

"என்னவெல்லாம் நடந்து விட்டிருக்கு? என்னால்

நம்பவே முடியவில்லை. சுகுணாவும், குழந்தைகளும் இறந்து போய் ரொம்ப நாளாகி விட்டதா? நான் மனநிலை சரியில்லாமல் இருந்தேனா? ஜெயாவின் திருமணம் முடிந்து கணவனும் இறந்து போய்விட்டானா? இத்தனையும் நடந்து முடிந்துவிட்டதா?" ராமகிருஷ்ணன் தனக்குத் தானே பேசிக் கொள்வது போல் சொன்னான்.

"போனது போகட்டும் அண்ணா. இந்த மட்டும் நீ பழையபடி ஆனாயே, அதுவே பெரிய பாக்கியம். நீ மறுபடியும் சாதாரணமாக, எங்களுக்குள் ஒருவனாக நடமாடுவாய் என்றோ, இந்த ஜென்மத்தில் அந்த அதிர்ஷ்டம் எங்களுக்குக் கிடைக்கும் என்றோ கனவில் கூட நாங்கள் நினைக்கவில்லை." ஹரியின் குரல் கம்மிவிட்டது.

"கார் மேகங்கள் போல் கஷ்டங்கள் வந்து உங்களை சூழ்ந்து கொண்டு நன்றாக அழவிட்டு, வேடிக்கை பார்த்தது போதும் என்பது போல் விலகிவிட்டன." வேணு ராம கிருஷ்ணனிடம் சொன்னான். "ஒரே ஒரு விஷயம் மட்டும் எனக்கு வருத்தமாக இருக்கிறது. குங்குமம் இல்லாமல் பாழும் நெற்றியுடன் ஜெயாவின் முகத்தை என்னால் பார்க்க முடிய வில்லை. இந்தக் காலத்தில் இதையெல்லாம் யார் பார்க் கிறார்கள்? முதலில் ஜெயாவை குங்குமம் இட்டுக் கொண்டு வரச் சொல்லுங்கள்." வேணுவின் குரல் பாரமாக ஒலித்தது.

ராமகிருஷ்ணன் தங்கையின் தலையை ஆதரவுடன் வருடிவிட்டான்.

கவிதா காபி கலந்து எடுத்து வந்து எல்லோருக்கும் கொடுத்தாள்.

"கவிதா! உன் நன்றிக் கடனை இந்த ஜென்மத்தில் எங்களால் தீர்த்துக் கொள்ள முடியாதோ என்னவோ? இந்தக்



குடும்பம் கஷ்டங்களில் தத்தளித்தபோது நீ ரொம்ப உதவியாக இருந்ததாக ஹரி சொன்னான்" - ராமகிருஷ்ணன் குரலில் அன்பும், ஆதரவும் வெளிப்பட்டன.

"கவலைப் படாதீங்க. என் நன்றிக்கடனை ஹரியிட மிருந்து கிட்டி போட்டு வசூல் செய்து கொள்கிறேன்." கவிதா சொன்னதும் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"கவிதா! நீ காபி சாப்பிட்டாயா?" ஹரி கேட்டான்.

"என்னை ஒரு விருந்தாளியாக நடத்த வேண்டியதில்லை என்று நமக்குள் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு மறுபடியும் ஏன் கேட்கிறாய்?" கவிதா செல்லமாக ஹரியைக் கோபித்துக் கொண்டாள்.

"கவிதா சொல்வதை பார்த்தால் விஷயம் ஏதோ இருப்பது போல் தோன்றுகிறது. அதை எங்கள் காதிலும் போட்டால் நாங்களும் சந்தோஷப்படுவோம் இல்லையா?" வேணு இடையில் புகுந்து சொன்னான்.

"கவிதா! எனக்கு இன்னும் கொஞ்சம் சர்க்கரை வேண்டும். சுகுணா சர்க்கரையைக் குறைக்கச் சொல்லி கத்துவாளே தவிர நான் கேட்ட பிறகு மறுக்காமல் ஒரு ஸ்பூன் சர்க்கரையைக் கொண்டு வந்து காபியில் போடுவாள். அதான் அந்தப் பழக்கத்தை என்னால் விட முடியவில்லை." ராமகிருஷ்ணன் குரல் வேதனையோடு ஒலித்தது.

"இதோ கொண்டு வருகிறேன்." கவிதா உள்ளே போனாள்.

"வேணு! மணி என்ன?" காபி டம்ளரை கீழே வைத்துக் கொண்டே ஹரி கேட்டான்.

"நாலரை."

ஹரி எழுந்து கொண்டான். "பேசிக் கொண்டே இருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. அண்ணா! நான்

ரிகர்ஸலுக்குப் போகனும். சீக்கிரம் திரும்பி விடுவேன்" என்று சொல்லிவிட்டு அலமாரியிடம் சென்றான்.

கவிதா சர்க்கரையைக் கொண்டு வந்து ராமகிருஷ்ணனின் டம்ளரில் போட்டாள்.

ஹரி வயலினை எடுத்துக் கொண்டு வாசலைத் தாண்டப் போனவன் ஏதோ நினைவுக்கு வந்தாற் போல் மறுபடியும் உள்ளே வந்தான். அலமாரியில் பர்ஸுக்காக தேடினான், கிடைக்கவில்லை.

"கவிதா! அலமாரியில் பர்ஸ் வைத்திருந்தேன். எடுத்தாயா?" என்று கேட்டான்.

"ஆமாம். மதியம் காய்கறி வாங்கிய போது பர்ஸை எடுத்தேன். மறுபடியும் அங்கேயே வைத்துவிட்டேனே. சித்த இரு. நானே வந்து தேடித் தருகிறேன்."

கவிதா பர்ஸுக்காக தேடிக் கொண்டிருந்தபோது வாசலில் டாக்ஸி வந்து நின்ற சத்தம் கேட்டது.

"யாரோ வந்திருக்காங்க போலிருக்கு" ராமகிருஷ்ணன் சொன்னான்.

"ஒருக்கால் ஜெயாவைப் பழிவாங்க அந்த காமாட்சி யம்மாள் ஆஸ்பத்திரியிலிருந்து ஓடி வந்திருப்பாளோ." வேணு தனக்குத்தானே பேசிக் கொள்வது போல் சொல்லிக் கொண்டே வாசலுக்கு சென்றான்.

கவிதா தேடிய பர்ஸ் கிடைத்துவிட்டது. பர்ஸை கையில் எடுத்துக் கொண்டே ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். டாக்ஸிக்காரனுக்கு பணம் கொடுத்தபடி நின்றுகொண்டிருந்த நபரைப் பார்த்ததும் அவள் முகம் வெளிறிப் போய்விட்டது.

சட்டென்று ஹரியின் அருகில் சென்று அவன் கையைப் பற்றிக் கொண்டாள். "ஹரீ! விசாலம் மாமி, மாமா, அண்ணா



எல்லோரும் வந்திருக்கிறார்கள். இப்போ என்ன செய்வது?" என்றாள்.

"யாரு? பிரசாத் வந்திருக்கிறானா?"

"ஆமாம். அவர்கள் என்னை அழைத்துப் போகாமல் இங்கிருந்து போகமாட்டார்கள். எனக்குத் தெரியும்." அவள் குரல் பயத்தால் நடுங்கியது.

ஹரி பதில் சொல்ல முடியாதவன் போல் ஒரு நிமிடம் அப்படியே நின்று விட்டான். இந்த ரகளையில் அன்று இரவு கவிதாவுக்கு வாக்குக் கொடுத்த விஷயத்தையே மறந்து போய் விட்டான்.

"சொல்லு ஹரீ! இந்த ஆபத்திலிருந்து எப்படி தப்பித்துக் கொள்வது?"

ஹரி சமாளித்துக் கொண்டுவிட்டான். "கவிதா! பதட்டப் படாதே. தைரியமாக இரு. நம் இருவருக்கும் திருமணம் முடிந்துவிட்டதென்று சொல்லிவிடுவோம்." கவிதாவுக்கு மட்டுமே கேட்கும் விதமாக தாழ்ந்த குரலில் சொன்னான்.

கவிதா வாசல் பக்கம் முதுகைக் காட்டிக் கொண்டு நின்றிருந்தாள்.

"கவிதா! என் பர்ஸ் கிடைத்துவிட்டதா?" சாதாரணமான குரலில் கேட்டான் ஹரி.

"இதோ." கவிதா பர்ஸை அவன் சட்டைப் பையில் வைத்தாள்.

ராமகிருஷ்ணன் வாசலுக்குச் சென்று "வாங்க... வாங்க" என்று வரவேற்றான்.

ஜெயா காபி டம்ளர்களை எல்லாம் உள்ளே எடுத்துக் கொண்டு போனாள்.

"கவிதா! யார் வந்திருக்கிறார்கள்?" ஹரி கேட்டான்.

"அண்ணாவும், மாமா, மாமியும் வந்திருக்கிறார்கள்." அப்பொழுதுதான் கவனித்தாற்போல் கவிதா சொன்னாள்.

பிரசாத் தங்கையை தலைமுதல் கால்வரை பரிசீலித்துக் கொண்டிருந்தான்.

"அண்ணா!" கவிதா அன்பு கலந்த குரலில் அழைத்துக் கொண்டே அருகில் போகப் போனாள். ஆனால் பிரசாத் பார்வையில் இருந்த தீட்சண்யம் அவளை தொலைவிலேயே நிற்க வைத்தது.

"உட்காருங்க. கவிதா! முதலில் எல்லோருக்கும் குடிக்கத் தண்ணி கொண்டு வாம்மா. ஜெயா! பால் இருக்கா பாரு. காபி கலந்து கொண்டு வா." ராமகிருஷ்ணன் பரபரப்புடன் வந்தவர்களை உபசரித்துக் கொண்டிருந்தான்.

"ராமகிருஷ்ணா! உன்னை மறுபடியும் இப்படி பார்க்கும்போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கு தெரியுமா? நீ பழையபடி ஆகி எங்களோடு ஒருவனாக நடமாடுவாய் என்று நினைக்கவே இல்லை. உலகில் எங்கேயோ, எப்பவோ அதிசயங்கள் நடக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இதுவும் அப்படித்தான் போலும்." மாமா சொன்னார்.

விசாலம் மாமியும் சந்தோஷப்படுவது போல் காட்டிக் கொண்டாலும் பார்வை மட்டும் கவிதாவின் மீதே நிலைத் திருந்தது. உள்ளே வரும்போது கவிதாவும், ஹரியும் நெருக்கமாக நின்றிருந்த காட்சியைப் பார்த்ததும் மனதில் தீப்பற்றி எரிவது போல் இருந்தது.

பிரசாத் யாருடனும் எதுவும் பேசவில்லை. ராம கிருஷ்ணன் குடும்பத்தாருடன் அவனுக்கு அவ்வளவாக பழக்கம் இல்லை. கால் மீது கால் போட்டுக் கொண்டு சீரியஸாக பார்த்துக் கொண்டிருந்தான்.



கவிதா எல்லோருக்கும் குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்தாள்.

"தேவையில்லை." பிரசாத் எரிச்சலுடன் மறுத்து விட்டான். அவன் குரலில் வெளிப்பட்ட அலட்சியத்தை, அகம்பாவத்தை ஹரி உணர்ந்து கொண்டான்.

"பிரசாத் தங்கையை அழைத்துப் போவதற்காக வந்திருக்கிறான்." தண்ணீரை மளமளவென்று குடித்துவிட்டு வந்த விஷயத்தைச் சொன்னாள் விசாலம்.

"அப்படியா? ரொம்ப நல்லது. கவிதா ரொம்ப நல்ல பெண். எங்களுக்கு ரொம்ப உதவியாக இருந்தாள் என்று ஹரி சொல்லிக் கொண்டே இருக்கிறான்." ராமகிருஷ்ணன் சொன்னான்.

"இதில் நான் செய்த உதவி என்ன இருக்கு? இந்த வீட்டு மனுஷியாய் என் கடமையைச் செய்தேன். அவ்வளவு தானே." கவிதா ஹரியின் அருகில் வந்து நின்று கொண்டாள்.

"அண்ணாவைப் பற்றி உனக்குத் தெரியாது கவிதா. யார் எந்த நல்ல காரியம் செய்தாலும் பாராட்டமல் இருக்க மாட்டார். இந்தப் பழக்கம் அண்ணியிடமிருந்து கற்றுக் கொண்டதுதான்." ஹரி சொன்னான்.

ராமகிருஷ்ணனுக்கு அவர்களின் பேச்சு புரியவில்லை. விசாலம் மாமியும், மாமாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"செய்த உதவி எல்லாம் போதும். துணிமணி எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு எங்களுடன் கிளம்பு." ஆணையிடுவது போல் பிரசாத் சொன்னான்.

"கவிதா! உங்க அண்ணா யாரிடம் பேசுகிறார்?" ஹரி கேட்டான்.

"என்னிடம்தான், துணிமணி எடுத்துக்கிட்டு கிளம்பச் சொல்கிறான்."

"நன்றாக இருக்கு. இத்தனை வருடங்களுக்கு பிறகு தங்கையைப் பார்க்கும்போது அண்ணன் பேசும் முதல் பேச்சு இதுதானா? கேட்கும் போதே காதுக்கு இனிமையாக இருக்கு. கவிதா! இப்போ இருக்கும் நிலைமையில் வீட்டை விட்டுக் கிளம்ப முடியாதுன்னு உங்க அண்ணாவிடம் சொல்லு."

பிரசாத் விருட்டென்று நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான். ஏற்கனவே கோடைகாலம். கோட்டு சூட்டு வேறு போட்டிருந்தான். வியர்த்துக் கொட்டியதில் கசகசவென்று எரிச்சல் ஏற்பட்டது. கோபம் இருமடங்காகிவிட்டது போல் இருந்தது.

"என் தங்கையை நான் அழைத்துப்போகிறேன். நடுவில் உன்னுடைய நாட்டாமை என்ன? உன்னிடம் யாரும் எதுவும் கேட்கவில்லை. உனக்குச் சம்பந்தம் இல்லாத விஷயத்தில் மூக்கை நுழைக்க வேண்டாம்." பிரசாத் ஹரியைப் பார்த்துக் கத்தினான்.

"உன் தங்கை இப்போ இன்னொருத்தரின் மனைவி ஆகிவிட்டாள். அதை முதலில் தெரிந்து கொண்டு பேசு. மரியாதை கொடுத்துத்தான் வாங்கமுடியும். அதையும் புரிந்து கொள்." ஹரியின் குரல் கம்பீரமாக ஒலித்தது.

"என்ன சொல்கிறாய்?" பிரசாத் இரட்டிப்பது போல் கேட்டான்.

"கவிதா! நீ சொல்லப் போகிறாயா? இல்லை நான் சொல்லட்டுமா?"



"நானே சொல்கிறேன். மாமீ! நானும் ஹரியும் திருமணம் செய்து கொண்டுவிட்டோம்."

"என்ன?" எல்லோரும் ஒரே நேரத்தில் வியப் படைந்தார்கள்.

ராமகிருஷ்ணன் எல்லோரையும் விலக்கிவிட்டு முன்னால் வந்தான். "கவிதா! இது உண்மைதானா? ஹரி! கவிதா சொன்னது உண்மையா?" அவன் முகத்தில் வியப்பும், மகிழ்ச்சியும் மாறி மாறித் தென்பட்டன.

"ஆமாம் அண்ணா." ஹரியின் குரலில் லேசான தடுமாற்றம் இருந்தது.

"இவ்வளவு நல்ல செய்தியை ஏன் என்னிடம் சொல்லவே இல்லை?" ஹரியின் தோளில் கையைப் பதித்தான் ராம கிருஷ்ணன்.

"இவள் இப்படி ஏதாவது வேண்டாத காரியத்தைச் செய்து வைக்கப் போகிறாள் என்று ஏற்கனவே நான் எச்சரித்து வந்தேன். பிரசாத்! நான் சொன்ன போது நீ காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. ஹரீ! அவளுக்குத்தான் புத்தியில்லை என்றால் உனக்குமா இல்லை? எங்களிடம் ஒரு வார்த்தை முன்னாடியே சொல்லியிருக்க வேண்டாமா?" விசாலம் உச்சஸ்தாயியில் கத்தினாள்.

"உலகத்தில் வேறு மாப்பிள்ளையே இல்லாதது போல் போயும் போயும் ஒரு குருடனைக் கட்டிக் கொள்ளணுமா? அதுவும் சரிதான். கண் இல்லாத கபோதியாக இருந்தால் இஷ்டம் வந்ததுபோல் ஊர் சுற்றலாம்." பிரசாத் குத்தலாக மொழிந்தான்.

ஹரிக்குக் கோபம் வந்தாலும் கட்டுப்படுத்திக் கொண் டான். அவமானங்களைச் சந்திக்க நேரும்போது சிலையாக

நிற்பது அவனுக்கு வழக்கம்தான். ஆனால் ராமகிருஷ்ண னுக்குக் கோபம் வந்துவிட்டது.

"வாய்க்கு வந்தபடி பேச வேண்டாம். என் தம்பி பார்வையில்லாதவனாக இருக்கலாம். ஆனால் உன்னைப் போன்ற அயோக்கியன் மட்டும் இல்லை. வனஜாவைக் காதலித்தது போல் நடித்து ஊர் சுற்றிய கதை எனக்குத் தெரியாது என்று நினைத்தாயா? அவளை ஏமாற்றி நீ வெளிநாட்டுக்கு ஓடிவிட்டதும் அந்த அப்பாவி பெண் தற்கொலை செய்து கொண்ட விவரமும் எனக்குத் தெரியும். ஹரியும் கவிதாவும் ஒருவரை ஒருவர் விரும்பி திருமணம் செய்து கொண்டு இருக்கிறார்கள். இதனால் நம் உறவு மேலும் நெருங்கிவிட்டது. இஷ்டம் இருந்தால் இரண்டு நாள் தங்கிவிட்டுப் போகலாம். இல்லையா....."

"நான்சென்ஸ்! இன்னும் இங்கே இருப்பதா? மாமி! வாங்க போகலாம். அவளாக தேர்ந்தெடுத்துக் கொண்ட சுவர்க்கம் இது. எப்படி வேண்டுமானாலும் போய் தொலையட்டும். இனி ஜென்மத்தில் அவள் முகத்தில் விழிக்கப் போவதில்லை." பிரசாத் வேகமாக வாசலை நோக்கி நடந்தான்.

"அவள் எப்படி போனால் நமக்கு என்ன? சொத்து விஷயம் என்ன செய்வது?" விசாலம் தவித்தாள்.

பிரசாத் திரும்பி கவிதாவைப் பார்வையாலேயே சுட்டு விடுவது போல் கோபமாக பார்த்தான். "சொத்தா? சல்லிக்காசு கூட அவளுக்குக் கிடைக்காதபடி பாடம் கற்பித்து விட்டுத்தான் இந்த நாட்டை விட்டுக் கிளம்புவேன்."

பிரசாத் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டான். போரில் தோற்றுவிட்ட சிப்பாய்களைப் போல் விசாலமும், அவள் கணவரும் அவனைப் பின்பற்றினார்கள்.

* * *

# 19

திடீரென்று சூறாவளி காற்று வீசிவிட்டுப் போனதுபோல், பிரசாத் மற்றவர்கள் கிளம்பிப் போன பிறகு வீடு முழுவதும் அமைதிநிலை கொண்டது.

ரிகர்ஸலுக்குப் போன ஹரி இன்னும் வீடு திரும்பவில்லை.

டாக்டர் வந்து இஞ்சக்ஷன் கொடுத்துவிட்டுப் போனதால் ராமகிருஷ்ணன் தூங்கிக் கொண்டிருந்தான். கவிதா உள்ளே குழந்தைகளுக்குச் சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்தாள்.

ஜெயா குழந்தைகளுக்குப் படுக்கையை போடுவதற்காக ஹாலுக்கு வந்தாள். அங்கே நாற்காலியில் அமர்ந்தபடி பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த வேணு ஜெயாவைப் பார்த்ததும் புத்தகத்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு எழுந்து கொண்டான்.

"வேணு! நீ இன்னும் வீட்டுக்குப் போகவில்லையா?" வியப்புடன் கேட்டாள்.

"இல்லை. உன்னிடம் கொஞ்சம் தனியாக பேசணும். அதான் காத்துக்கிட்டு இருந்தேன்."

ஜெயா ஒரு நிமிடம் தடுமாறினாள். வேணு என்ன கேட்கப் போகிறானோ அவளுக்குத் தெரியாமல் இல்லை.

"ஜெயா! எனக்கு வேறு ஊருக்கு மாற்றல் கிடைத்து விட்டது. திங்கட்கிழமை கிளம்ப வேண்டியிருக்கும்."

ஜெயாவின் பார்வை தரையில் பதிந்தது.

"நான் சொன்ன விஷயத்தைப் பற்றி என்ன யோசித்தாய்? எனக்கு பதில் சொல்லவே இல்லை."

ஜெயா விழிகளை உயர்த்தினாள். ஏதோ சொல்ல நினைத்துத் தயங்குவது போல் மறுபடியும் தலையைக் குனிந்து கொண்டாள்.

"சொல்லு ஜெயா! நீ சொல்வது எதுவாக இருந்தாலும் நம் இருவருக்கும் இடையேதான் இருக்கும். இது சத்தியம். தயங்காமல் சொல்லு." வேணு ஜெயாவின் கையைப் பற்றிக் கொள்ள முயன்றான்.

ஆனால் ஜெயா விலகி நின்றாள். "வேணு! குழந்தைகளின் பொறுப்பு என் மீது இருப்பது உனக்குத் தெரியும். அவர்களுக்கு அநியாயம் செய்ய என்னால் முடியாது. அதில் எனக்கு விருப்பமும் இல்லை."

"சொத்தையும், குழந்தைகளையும் காமாட்சியிடம் ஒப்படைத்துவிடு என்று நான் முன்பு சொன்னதை மறந்து விடு ஜெயா. காமாட்சியின் குணம் தெரிந்த பிறகு அப்படி சொல்லவும் மாட்டேன். நீ இவ்வளவு நல்ல மனதுடன் அந்தக் குழந்தைகளின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்போது, அந்த நல்ல காரியத்திற்கு நான் துணையாக இருக்க மாட்டேனா? அந்த பயமே உனக்கு வேண்டாம். நான் கேட்டது நம் இருவரின் திருமணத்தைப் பற்றி."

"வேணு!" நம்ப முடியாதவள் போல் வியப்புடன் பார்த்தாள் ஜெயா.

"நீ அவர்களுக்கு மாற்றாந்தாயாக இருந்தால், வளர்ப்பு தந்தையாக நான் இருக்கிறேன். நன்றாக யோசித்துப் பாரு. இந்த முறை நீ எனக்கு வாயால் பதில் சொல்ல வேண்டாம்." வேணு சட்டைப் பையிலிருந்து வெள்ளிக் குங்குமச் சிமிழை எடுத்தான். அதை ஜெயாவின் உள்ளங்கையில் வைத்து மூடினான். "நாளை நான் வரும்போது, நெற்றியில்



குங்குமத்தோடு நீ எனக்குக் காட்சி தர வேண்டும். உன்னுடைய சம்மதத்திற்கு அதுதான் அடையாளம். உன் விருப்பம் தெரிந்து கொண்ட பிறகு பெரிய அண்ணாவிடம் பேசி சம்மதம் வாங்கிவிடுவேன். ஜெயா ஒப்புக் கொண்டால் தனக்கு ஆட்சேபணை இல்லை என்று ஹரி ஏற்கனவே சொல்லி விட்டான். போய்வருகிறேன் ஜெயா. எனக்கு ஏமாற்றம் தரமாட்டாய் என்ற நம்பிக்கையுடன் இன்று இரவு நிம்மதியாக தூங்குவேன்." மளமளவென்று சொல்லி விட்டு வேணு கிளம்பிப் போய்விட்டான்.

ஜெயா திகைத்துப் போனவளாய் கையில் இருந்த குங்குமச் சிமிழைப் பார்த்துக் கொண்டு ரொம்ப நேரம் அப்படியே நின்று விட்டாள்.

* * *

ராமகிருஷ்ணன் இன்னும் உறங்கவில்லை. கட்டில் மீது சாய்ந்த வாக்கில் அமர்ந்து கொண்டு சுகுணா எழுதிய பழைய கடிதங்களைப் படித்துக் கொண்டு இருந்தான். "நான் இல்லா விட்டால் நீங்க பாதி ஆள்தான். தனியாக உங்களுக்கு எதுவுமே செய்யத் தெரியாது" என்று சுகுணா அடிக்கடி சொல்லுவாள். அது எவ்வளவு உண்மை? அவள் இருந்த வரையில் அப்படித் தான் வாழ்ந்திருக்கிறான். கையில் இருந்த கடிதத்தை தலையணை அடியில் வைத்துவிட்டு ஆல்பத்தை எடுத்துப் புரட்டினான். அது தனக்கு சம்பந்தம் இல்லாத நபருடையது போல் தோன்றியது. துள்ளலும், சிரிப்புமாக புகைப்படத்தில் காட்சி தந்த மனைவியை, குழந்தைகளைப் பார்க்கும்போது கண்களில் நீர் நிறைந்தது. துக்கத்தைக் கட்டுப்படுத்துவது போல் கண்களை மூடிக் கொண்டான்.

கவிதா பால் டம்ளருடன் உள்ளே வந்தாள்.

"பால் கொண்டு வந்திருக்கிறேன்."

கவிதாவின் குரலைக் கேட்டு திடுக்கிட்டு கண்களைத் திறந்தான். கவிதா பால் டம்ளரை நீட்டினாள்.

"ஹரி இன்னும் வரவில்லையா?"

"ஊஹூம்."

ராமகிருஷ்ணன் பாலைக் குடித்துவிட்டு டம்ளரைத் திருப்பிக் கொடுத்தபிறகும் கவிதா அங்கிருந்து நகரவில்லை.

"என்ன விஷயம் கவிதா?"

"சொத்து எனக்குக் கிடைக்காமல் செய்து விடுவதாக அண்ணன் மிரட்டி விட்டுப் போனான் இல்லையா? அந்த அதிகாரம் அவனுக்கு இருக்கிறதா?" கவிதா கேட்டாள்.

"சொத்து உன் பெயரில் இருந்தால் அவனால் எதுவும் செய்ய முடியாது. ஒருக்கால் உனக்குத் தொல்லை கொடுப்பதற்காக ஏதாவது சதி செய்வானோ என்னவோ?" ராமகிருஷ்ணனின் இதழ்களில் முறுவல் மலர்ந்தது. "அவர்களுடைய திட்டம் எதுவும் என் முன்னால் நடக்காது. சொத்து உனக்குக் கிடைக்காமல் யாராலும் தடுக்க முடியாது."

கவிதா நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டாள்.

ராமகிருஷ்ணன் மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டே சொன்னான். "ஹரி ரொம்ப அதிர்ஷ்டசாலி கவிதா. சுகுணா உயிரோடு இருந்திருந்தால் ஹரியின் மனைவியாக உன்னைப் பார்த்து ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பாள். ஹரியின் கல்யாணத்தைப் பற்றி கவலைப் பட்டுக் கொண்டே இருந்தாள்."

கவிதா தடுமாறுவது போல் பார்த்தாள். "அது வந்து... நீங்க என்னை மன்னிப்பீங்கன்னு சொன்னால் உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணும்."



"என்ன?"

"ஹரிக்கும் எனக்கும் திருமணம் நடக்கவில்லை. எனக்கு விருப்பம் இல்லாத கல்யாணத்திலிருந்து தப்பிக்க வைப்பதற்காக அப்படி நாடகம் ஆடினோம்."

"என்னது?" ராமகிருஷ்ணன் கட்டிலில் எழுந்து சரியாக உட்கார்ந்து கொண்டான்.

"திருமணம் செய்து கொள்வதாக முடிவு செய்திருந்தோம். திருமணமும் முடிந்துவிட்டிருக்கும். ஆனால் இதற்கு இடையில் புருஷோத்தமன் இறந்து போனது, காமாட்சி செய்த ரகளை, இந்தப் பிரச்னைகளில் மூச்சு விடவும் நேரம் இருக்கவில்லை. உங்க கையால் அந்த நல்ல காரியம் நடக்கணும் என்ற அதிர்ஷ்டம் எங்களுக்கு இருப்பதால் இப்படி எல்லாம் நடந்ததோ என்னவோ?"

"நீ சொல்வதெல்லாம் உண்மையா? கவிதா! தம்பி, தங்கையின் கல்யாணங்களை என் கையால் நடத்த முடியாமல் போய் விட்டதே என்று இத்தனை நேரமும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். ஹரி வந்ததுமே என்னை வந்து பார்க்கச் சொல்லு. நாளைக்கே நாம் திருப்பதிக்குக் கிளம்புவோம்."

"ஜெயாவுக்கும் மறுமணம் செய்து வைக்கணும் என்று ஹரி நினைக்கிறான்."

"நல்லதுதான். ஆனால் மாப்பிள்ளை கிடைக்கணுமே."

"வேணு தயாராக இருக்கிறான். நீங்கள் சம்மதம் சொல்வதுதான் பாக்கி."

"அப்படியா? அவ்வளவு நல்ல மனம் அவனுக்கு இருக்கும் போது நான் எதுக்கு மறுப்பு சொல்லப் போகிறேன்? ஜெயா இன்னும் சின்னக் குழந்தை. அவள் வாழ்க்கை இப்படி

ஆரம்பத்திலேயே கருகியிருக்கக் கூடாது." ராமகிருஷ்ணன் மறுபடியும் ஆல்பத்தை கையில் எடுத்துக் கொண்டான்.

கவிதா அறையை விட்டு வெளியே வந்தாள்.

* * *

இரவு ரொம்ப நேரமாகிவிட்டது. வீட்டிலும் வெளியிலும் எங்கும் நிசப்தமாக இருந்தது. குழந்தைகள், ஜெயா, ராமகிருஷ்ணன் எல்லோரும் உறங்கிவிட்டார்கள்.

ஹரி இன்னும் வீடு திரும்பவில்லை. கவிதா ஜன்னல் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். அங்கிருந்து பார்த்தால் ஹரி வருவது தொலைவிலிருந்தே தெரியும்.

கவிதா மனதில் இனம் புரியாத நிம்மதி பரவியிருந்தது. அண்ணனின் அதிகாரத்திலிருந்து இவ்வளவு சீக்கிரமாக விடுதலை கிடைக்கும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. வாழ்நாள் முழுவதும் தன்னைப் பிடிக்குள் வைத்துக் கொண்டு அதிகாரம் செய்ய எண்ணியிருந்த விசாலம் மாமியின் திட்டமும் ஹரியின் புத்திசாலித்தனத்தினால் தகர்ந்தது. உடன் பிறந்தவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு கஷ்ட சுகங்களைப் பகிர்ந்து கொள்வார்கள் என்று சொல்லுவார்கள். ஹரியின் குடும்பத்தைப் பார்க்கும்போது அது எவ்வளவு உண்மை என்று புரிந்தது. ஆனால் தன் விஷயத்தில் அந்தக் கூற்று பொய்த்து விட்டது. முன் பிறவியில் தானும் அண்ணாவும் பரமவிரோதிகளாக இருந்திருக்க வேண்டும். அந்தப் பகையைத் தீர்த்துக் கொள்ளத்தான் இந்த ஜென்மத்தில் அண்ணன் தங்கையாக பிறந்து இருக்க வேண்டும்.

கவிதாவின் விழிகளில் நீர் சுழன்றது. பாழாய்ப் போன சொத்து யாருக்கு வேண்டும்? அண்ணன் மட்டும் சிறு வயது முதல் தன்னிடம் பாசத்தோடு நடந்து கொண்டிருந்தால், தானே சொத்தை அவன் பெயருக்கு மாற்றித் தந்திருப்பாள்.



கூடப் பிறந்தவள் என்று அன்போ, ஆதரவோ ஒரு நாளும் காட்டிய தில்லை. ஹரி மட்டும் துணையாக இருக்கவில்லை என்றால் தன் நிலைமை என்னவாகி இருக்கும்? வாழ்நாள் முழுவதும் மாமியின் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு அடிமையாக வாழ வேண்டியதுதான்.

அப்படியே அண்ணன் ஏதாவது சதி செய்து சொத்து தனக்குக் கிடைக்காமல் செய்துவிட்டாலும் கவலை இல்லை. தனக்கு வேலை இருக்கிறது. ஹரிக்கு நிரந்தரமான வேலை இல்லை என்றாலும் ஓரளவுக்குச் சம்பாதிக்கக் கூடிய திறமை இருக்கிறது. வீட்டுத் தலைவர் என்ற முறையில் ராம கிருஷ்ணனின் ஆதரவு இருக்கும்போது எதற்காக கவலைப்பட வேண்டும்? உடன் பிறந்தவள் போல் பழகும் ஜெயா இருக்கிறாள். இதைவிட வேறு என்ன வேண்டும்? வாழ்க்கையில் அஷ்ட ஐசுவரியங்கள் கிடைக்காவிட்டாலும் அமைதியாக, மனநிறைவோடு காலம் தள்ள முடியும்.

யோசனையில் ஆழ்ந்து போயிருந்த கவிதா, அடுத்தவீட்டு கடியாரத்தில் பன்னிரெண்டு மணி அடிப்பதைக் கேட்டதும் திடுக்கிட்டாள். ஹரி இன்னும் வீடு திரும்பவில்லை. ஒத்திகை இன்னும் முடியவில்லையோ?

450929/6214017

கவிதா வாசற்கதவைச் சாத்தப் போனவள் ஒரு நிமிடம் அப்படியே நின்றுவிட்டாள். வெளியில் நிலா வெளிச்சம் கம்பளம் விரித்தாற் போல் எங்கும் பரவியிருந்தது. மல்லிகைப் பூக்களின் நறுமணம் சூழ்நிலையை மேலும் ரம்மியமாக்கிக் கொண்டிருந்தது. மனம் முழுவதும் சந்தோஷம் பரவிய நிலையில் கனவில் நடப்பது போல் மல்லிகைச் செடியிலிருந்து பூக்களைப் பறித்துக் கொண்டு திரும்பப் போனவள் அப்படியே நின்றுவிட்டாள்.

ஹரி எப்பொழுது வந்தானோ தெரியவில்லை.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்

திண்ணையின் மீது கையை தலைக்கு அண்டை கொடுத்தபடி சூழ்நிலையை மறந்தவனாய் யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

"ஹரீ!"

ஹரி திடுக்கிட்டவன்போல் எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

"எப்போது வந்தாய்?" அருகில் வந்து கொண்டே கேட்டாள்.

"அரைமணி மேல் இருக்கும். நீ விழித்துக் கொண்டு இருப்பாய் என்று நினைக்கவில்லை. அண்ணா தூங்கியாச்சா?"

"ஊம். உள்ளே வராமல் இங்கே வெளியில் உட்கார்ந்திருப்பானேன்?"

"சும்மாதான்."

"நான் உனக்காக காத்துக்கிட்டு இருக்கிறேன். வா சாப்பிடுவோம்."

"இப்போ எதுவும் வேண்டாம் கவிதா. எனக்குத் தூக்கம் வரவில்லை. நீ போய் சாப்பிட்டுவிட்டுத் தூங்கு."

"எனக்கும் தூக்கம் வரவில்லை." கவிதா அவன் அமர்ந்திருந்த திண்ணையின் மீது சற்று தொலைவில் அமர்ந்து கொண்டாள்.

சற்று நேரம் இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

"ஹரீ! நிலா வெளிச்சம் எவ்வளவு அழகாக இருக்கு தெரியுமா?"

"எனக்குத்தான் அதைக் கண்ணால் காணும் அதிர்ஷ்டம் இல்லையே?"

கவிதாவின் இதயத்தில் சுருக்கென்று ஏதோ தைப்பது



போல் இருந்தது. "என்ன யோசனை? நான் வந்த சத்தம் கூட உன் காதில் விழுந்தாற் போல் தெரியவில்லையே?"

"என் யோசனை என்னவோ நீ தெரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் நல்லது." ஹரி சொன்னான்.

"அப்படி என்றால்?"

"கவிதா! நினைவு தெரிந்த நாள் முதல் அண்ணாவிடம் ஒரு நாளும் பொய் சொன்னதில்லை. நமக்குத் திருமணம் ஆகிவிட்டதென்று அண்ணாவிடம் பொய் சொல்லி விட்டேன். அண்ணா மறுபடியும் இதைப்பற்றி கேட்டால் என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை."

"வருத்தப்படுகிறாயா ஹரீ?" தாழ்ந்த குரலில் கேட்டாள்.

"இல்லை கவிதா! ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கும், ஒரு திருமணத்தை முடிப்பதற்கும் பொய் சொல்வது தவறு இல்லை என்று அண்ணி சொல்லுவாள். ஆனால் அண்ணனின் சுபாவம் வேறு. எந்த சின்ன விஷயத்திற்கும் எதிராளியை ஏமாற்றக் கூடாது என்ற கொள்கை அவருக்கு. இந்த விஷயத்தில் நான் அண்ணாவை ஏமாற்றி விட்டதாகத்தானே அர்த்தம்? நமக்குத் திருமணம் முடிந்துவிட்டதாக நான் சொன்னது பொய் என்றும், அதுவும் உன்னைக் காப்பாற்றுவதற்காக சொன்னேன் என்றும் அண்ணாவுக்கு எப்படி தெரியப்படுத்துவது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்."

கவிதா ஹரியின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டாள். "உனக்கு அந்த பயமே தேவையில்லை ஹரி. சற்று முன்னால் நானே நடந்ததை எல்லாம் அவரிடம் தெரிவித்து விட்டேன்."

"உண்மையாகவா?" ஹரி நம்ப முடியாதவன் போல்

கவிதாவின் கையை அழுத்தினான். "அண்ணா என்ன சொன்னார்?" அவன் குரல் பதட்டத்துடன் ஒலித்தது.

"ரொம்ப சந்தோஷப்பட்டார். ஏன் தெரியுமா? அவர் கையால் இந்தச் சுபகாரியத்தை நடத்தும் வாய்ப்பை நாம் அவருக்குத் தந்ததற்காக."

ஹரி கவிதாவின் கையை விட்டுவிட்டான். அவன் முகம் கம்பீரமாக மாறியது.

"நாளைக்கே நாம் எல்லோரும் கிளம்பி திருப்பதிக்குக் போகலாம் என்று சொன்னார்."

"ஆனால். . . இது . . . இது எப்படி சாத்தியம் கவிதா?" தெளிவற்ற குரலில் சொன்னான்.

"ஹரி! எதைப் பற்றி பேசுகிறாய்?" புரியாதவளாய் கேட்டாள்.

ஹரி எழுந்து நின்று கொண்டான். "திருமணத்தைப் பற்றித்தான் பேசுகிறேன். இந்த விஷயத்தில் ஒரு நண்பனாக உனக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் கடவுளின் அனுக்கிரகத்தால் அந்தத் தேவை முடிந்துவிட்டது. இனி மேலும் இந்தத் திருமண பிரஸ்தாபனை எதுக்கு?"

"ஹரீ!" கவிதா சட்டென்று அவன் அருகில் வந்தாள். "என்ன பேச்சு இது? நம் திருமணம் ஏற்கனவே நடந்து முடிந்திருந்தால் இப்படி எல்லாம் பேசி இருப்பாயா?"

"திருமணம் முடிந்துவிட்டதாக நடித்தோமே ஒழிய உண்மையிலேயே திருமணம் நடக்கவில்லையே? உன் அண்ணன் வந்தான். பார்த்தான். போய்விட்டான். உனக்கு வரப் போவதாக இருந்த ஆபத்து நீங்கிவிட்டது. உங்க லாயர் சொன்னது போல் நீ நல்ல பையனாக தேர்ந்தெடுத்து. . ."



"போதும் ஹரி! போதும். சுற்றி வளைக்காமல் உன் மனதில் இருப்பதை நேராகச் சொல்லு."

"நல்ல வாழ்க்கைத் துணை கிடைத்து நீ சந்தோஷமாக இருக்கணும். அதுதான் என் விருப்பம். அது வரையில் நீ இந்த வீட்டிலேயே இருந்தாலும் சரி. இல்லையா ஹாஸ்டலுக்குப் போவதாக இருந்தாலும் சரி."

"இனி உனக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, அப்படித்தானே?" ரோஷத்துடன் கேட்டாள் கவிதா.

"அப்படி நீ நினைத்துக் கொண்டால் என்னால் பதில் சொல்ல முடியாது." வெளியேறப்போன பெருமூச்சை அடக்கிக் கொண்டே சொன்னான்.

"சரி. கிளம்பிப் போகிறேன். போகும் முன் ஒரு கேள்வி கேட்கிறேன். உன் அண்ணியின் மீது ஆணையிட்டு நேர்மையாக பதில் சொல்லு. நாம் இருவரும் திருமணம் செய்து கொள்வதாக முடிவு செய்த பிறகு இன்று அந்த முடிவில் மாற்றம் ஏன் வந்தது?"

"அந்தத் தேவைதான் இப்போ முடிந்துவிட்டதே."

"தேவை! தேவை!! அந்த வார்த்தையை அடிக்கடி சொல்லி என்னை அவமானப் படுத்தாதே ப்ளீஸ்." கவிதாவின் குரல் நடுங்கியது. "இனி நான் ஹாஸ்டலுக்குப் போய்விட வேண்டுமாம். பெரிய மனிதர் தீர்ப்பு வழங்கிவிட்டார். சொத்து விஷயத்தில் அண்ணன் ஏதாவது தில்லுமுல்லு செய்து என் மீது கோர்ட்டில் கேஸ் போடக்கூடும். இந்தத் திருமணவிஷயம் பொய் என்று விசாலம் மாமிக்குத் தெரிந்தால் என்னை உயிரோடு விட்டு வைப்பாளா? இத்தனை நாளும் இந்த வீடு என்னுடையது என்றும், எனக்கு என்று ஒரு இடம் கிடைத்து விட்டது என்றும், வாழ்க்கை நிம்மதியாக கழிந்துவிடும்

என்றும் கனவுலகில் வாழ்ந்து வந்தேன். ஆகட்டும். உன் விருப்பம் போலவே நடக்கட்டும். விருப்பம் இல்லாத திருமணம் எவ்வளவு வேதனையைத் தருமோ எனக்கும் தெரியும். உன்னை மேலும் வற்புறுத்த மாட்டேன். நாளைக்கே ஹாஸ்டலுக்குப் போய்விடுகிறேன். வாழணும் என்று நினைத்தால்தானே பிரச்னைகளைச் சந்திக்க வேண்டி யிருக்கும்? வாழ வேண்டியதில்லை என்று முடிவு செய்து விட்டால் எந்த பிரச்னையும் இல்லையே." துக்கம் பொங்கி வந்ததில் கவிதாவின் குரல் கம்மிவிட்டது.

ஹரி சட்டென்று கையை நீட்டி அவள் கையைப் பற்றி யிருக்காவிட்டால் கவிதா இரண்டே எட்டில் வீட்டுக்குள் போயிருப்பாள். முதலில் புடவைத்தலைப்பு அவன் கையில் சிக்கியது. பிறகு கையைப் பற்றி தடுத்துவிட்டான்.

"கவிதா! ஆவேசப்படுகிறாயே தவிர யதார்த்தத்தைப் பற்றி யோசிக்க மறுக்கிறாய். உடனே வரவிருக்கும் ஆபத்திலிருந்து மீள வேண்டும் என்று நினைக்கிறாயே ஒழிய பார்வையில்லாத ஒருவனுடன் வாழ்நாள் முழுவதும் நீ எதிர்கொள்ள வேண்டிய பிரச்னைகளை நினைத்துப் பார்க்கவில்லை."

"பொறுமையும், திறமையும் இருந்தால் நீ சொல்லும் பிரச்னைகளைச் சமாளித்து விடலாம். ஆனால் அண்ணன் மூலமாக எனக்கு வர இருக்கும் ஆபத்து அப்படிப்பட்டது இல்லை. தனியாக நான் இருந்தால் புதைகுழியில் தள்ளி விடுவது நிச்சயம். ஹரீ! நானும் பல குடும்பங்களை கவனித்து இருக்கிறேன். தோற்றத்தைவிட குணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த தம்பதிகள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்."

"கவிதா! இப்படி உட்கார்ந்துகொள். நான் சொல்வதை கொஞ்சம் கவனமாக கேட்டுக் கொள்." ஹரி வேண்டுகோள் விடுப்பது போல் சொன்னான்.



கவிதா திண்ணையின் மீது உட்கார்ந்து கொண்டாள்.

"கவிதா! திருமணத்தைக் கண்டு நான் பயப்படவில்லை. ஆனால் இந்த உலகம் செய்யும் ஏளனங்களைத் தாங்கிக் கொள்ளும் சக்தி எனக்கு இல்லையோ என்று அஞ்சுகிறேன். சிறுவயது முதல் தேவை இருக்கோ இல்லையோ திருநாகம் மாமி போன்றவர்கள் 'குருடன், கபோதி' என்று அடிக்கடி என்னை ஏளனம் செய்வார்கள். கொஞ்சம் நல்ல துணிமணி உடுத்திக் கொண்டால் "அடயேப்பா! கண் பார்வை இல்லா விட்டாலும் ஷோக்கிற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை" என்று சொல்லிக் காட்டுவார்கள். மற்றவர்களுடன் நான் இயல்பாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தால் "கண்கள் மட்டும் இருந்தால் இவனைக் கட்டிப் பிடிக்கவே முடியாது" என்று குத்தலாக சொல்லுவார்கள். வயது ஆக ஆக மற்றவர்களைப் போல் ஆடி, பாட எனக்குத் தகுதி இல்லையே என்ற தாழ்வு மனப்பான்மை என் மனதில் குடிகொண்டு விட்டது. சந்தோஷம் துக்கம் எது ஏற்பட்டாலும் மனதிலேயே புதைத்துக் கொள்ள பழகிக் கொண்டேன். அண்ணன், அண்ணி என்னிடம் காட்டிய அன்புதான் என்னை இந்த அளவுக்காவது ஒரு மனிதனாக மாற்றியது. சுந்தரியின் அறிமுகம் என் வாழ்க்கையில் ஏற்பட்ட மற்றொரு துரதிர்ஷ்டம். உண்மையைச் சொல்லணும் என்றால் எப்படியாவது வாழணும் என்ற துடிப்புடன் இருந்தவனை ஒரே அடியால் வீழ்த்திவிட்டு நடைபிணமாக்கிவிட்டுப் போய் விட்டாள். அண்ணி இறந்துபோனது, அண்ணனின் மனநிலை பாதிக்கப்பட்டது, ஜெயாவின் திருமணம் எல்லாம் சேர்ந்து என்னை வாழ வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளிவிட்டன. என்னைப் போன்றவனுக்குத் திருமணம் எதற்கு? ஊர்மக்கள் என் மனைவியை ஏளனம் செய்வதை வேறு கேட்டுக்

கொள்ளணுமா? அது மட்டுமே இல்லை. என்னுடைய குறை என் குழந்தைகளுக்கும் வந்துவிட்டால் எவ்வளவு பயங்கரமாக இருக்குமோ நீயே ஊகித்துப் பாரு. சில சமயம் யோசித்துப் பார்த்தால் இந்த வாழ்க்கையே எனக்கு ஒரு சிறைச்சாலையாக, இந்தக் குறை என் கைகளுக்குப் போடப்பட்ட விலங்குகளாக தோன்றும். இதிலிருந்து எப்போது விடுதலை ஆகப் போகிறேன் என்ற ஆத்திரமும், ஆவேசமும் என்னைத் துளைத்துக் கொண்டே இருக்கும். நான் ஒரு ஆயுள் கைதி. இந்த ஜென்மத்தில் எனக்கு இதிலிருந்து விமோசனம் கிடையாது. என்னால் மனைவியை எப்படி சந்தோஷமாக வைத்துக் கொள்ள முடியும்? எனக்குத் திருமணம் தேவைதானா?" ஹரியின் குரல் ஆவேசமாக ஒலித்தது.

"ஹரீ! ஹரீ!" அவனுடைய பேச்சைக் கேட்டு பதுமையாகி விட்ட கவிதா, நயமான குரலில் அழைத்துக் கொண்டே அவன் தோளைப் பற்றி அருகில் இழுத்துக் கொண்டாள்.

"ஹரி! எவ்வளவு தவறாக யோசிக்கிறாய்? ஜெயாவின் வாழ்க்கையைப் பற்றி யோசித்தாயா? உன் அண்ணன் இத்தனை நாளும் இருந்த நிலை எப்படிப்பட்டதோ உனக்குத் தெரியாதா? ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் கூண்டில் அடைபட்ட பறவையாக பிரச்னைகளுடன் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறான். கடவுள் நமக்கு அளித்த எல்லைக்கு உட்பட்டு சந்தோஷமாக வாழக் கற்றுக் கொள்ளணும். உன்னைப் புரிந்து கொண்டு அனுசரித்துப் போகும் மனைவி வந்தால் சுவர்க்கத்தையே கொண்டு வந்து வாசலில் நிறுத்தக் கூடிய திறமை உன்னிடம் இருக்கு. உன்னுடைய குறைபாடு குழந்தைகளுக்கும் வந்துவிடுமோ என்று ஏன் பயப்படுகிறாய்? துரதிர்ஷ்டவசமாக உனக்கு இந்தக் குறை வந்து விட்டதே தவிர உன் பெற்றோர்கள்



ஆரோக்கியமாக இருந்தவர்கள்தானே? குறைபாடு இருக்கும் தம்பதிகளுக்கு மணிமணியாய் குழந்தைகள் பிறக்கவில்லையா? வாழ்க்கையைப் பற்றி எந்த பயமும் வேண்டியதில்லை. ஹரீ! நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். நான் ரொம்ப சாதாரணமானவள். எதிர்காலத்தைப் பற்றி எந்தவிதமான கனவுகளோ எதிர்பார்ப்புகளோ எனக்கு இல்லை. வாழ்க்கையின் மகிழ்ச்சி மனிதனின் மன அமைதியில் தான் மறைந்திருக்கிறது."

ஹரி கவிதா சொன்னதை மனதில் அசைபோட்டு பார்த்துக் கொண்டான். சற்று நேரம் கழித்து மனதை சமாதானப்படுத்திக் கொண்டவனாக "கவிதா! உனக்கு அவ்வளவு தைரியம் இருந்தால் நான் மட்டும் மறுப்பு சொல்வானேன்?" என்றான்.

"திருமணத்திற்குச் சம்மதித்து விட்டாற் போல்தானே?"

"ஒரே ஒரு நிபந்தனை."

"மறுபடியும் என்ன?"

"நாளை மறுபடியும் டாக்டரிடம் போய் செக்கப் செய்து கொள்கிறேன். பார்வை கிடைக்கும் என்று அவர் உத்திரவாதம் கொடுத்தால் -"

"ஊஹூம்." கவிதா இடையிலேயே மறுப்பு சொன்னாள். "ஆபரேஷன் பண்ணிக்கொள். வேண்டாம் என்று சொல்ல வில்லை. ஆனால் அதற்கும் நம் கல்யாணத்திற்கும் முடிச்சு போடாதே. நாம் நாளையே திருப்பதிக்குப் போகிறோம்."

"நீ இவ்வளவு பிடிவாதக்காரி என்று இத்தனை நாள் எனக்குத் தெரியாமல் போய்விட்டது." ஹரி முறுவலுடன் கவிதாவின் கையைப் பற்றிக் கொண்டான்.

* * *

நர்ஸ் வந்து ஹரியின் கையில் இஞ்சக்ஷன் போட்டாள். இன்னும் சில நிமிடங்களில் அவனை ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் செல்லப் போகிறார்கள். கட்டில் அருகிலேயே நின்றிருந்த ராமகிருஷ்ணன் தம்பியின் தலையை ஆதரவுடன் வருடிவிட்டான்.

"ஹரீ! இந்த முறையாவது கருணை காட்ட வேண்டும் என்று அந்தக் கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன்."

"அண்ணா!" ஹரியின் குரலில் நம்பிக்கை வெளிப் பட்டது.

போன வாரம்தான் திருப்பதியில் ஹரிக்கும் கவிதாவுக்கும், ஜெயாவுக்கும் வேணுவுக்கும் திருமணம் நடந்தது. ஹரியும் கவிதாவும் மணக் கோலத்தில் கால்களில் விழுந்து வணங்கியபோது ராமகிருஷ்ணன் விழிகள் ஈரமாயின.

"சித்தப்பா! ஆபரேஷன் தியேட்டரிலிருந்து எப்போ திரும்பி வருவாய்?" பப்லூ கேட்டான்.

ஹரி பப்லூவை அணைத்துக் கொண்டான். "சீக்கிரமாக வந்துவிடுவேன் பப்லூ."

"டாக்டர் உன்னை என்ன செய்யப் போகிறார்?"

"உங்க எல்லோரையும் போல் எனக்கும் பார்வை கிடைக்கும்படியாக செய்வார்."

"அப்போ சீக்கிரமாக கிளம்பு சித்தப்பா" பப்லூ அவசரப்படுத்தினான்.

"ஹரீ! தைரியமாக இரு. நாங்க எல்லோரும் இங்கே உனக்காக காத்துக்கிட்டு இருப்போம்." வேணு சொன்னான்.

"அண்ணா! உனக்கு நினைவு திரும்பும் வரையில் நான் இந்த இடத்தைவிட்டு நகரமாட்டேன்." ஜெயா சொன்னாள்.



"வாங்க. நேரம் ஆகிவிட்டது." நர்ஸ் வீல் சேரை தள்ளிக் கொண்டு வந்தாள். ஹரி நர்ஸ் உதவியோடு வீல் சேரில் உட்கார்ந்து கொண்டான். அவன் எதிர்பார்த்தது போல் கவிதா அருகில் வரவில்லை.

"கவிதா!" என்று அழைத்தான்.

கவிதா பதில் குரல் கொடுக்கவில்லை. மௌனமாக அருகில் வந்து கையைத் தொட்டாள். வியர்வை படிந்து ஈரமாக இருந்த கவிதாவின் கை பட்டதும் ஹரி கேட்டான்.

"கவிதா! பயப்படுகிறாயா?"

"இல்லை. . . இல்லை. எது நடந்தாலும் கடவுளின் விருப்பம் என்று ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்." கம்மிவிட்ட குரலில் சொன்னாள்.

"கவிதா! உன்னைத் திருமணம் செய்து கொண்ட பிறகு இரண்டு கண்களும் கிடைத்தாற்போல் உணர்ந்தது உண்மை தான். இருந்தாலும் இந்த ஆபரேஷனை ஏன் செய்து கொள்கிறேன் தெரியுமா? கண் பார்வை கிடைத்து உன்னுடன் சேர்ந்து இந்த உலகத்தின் அழகை எல்லாம் ரசிக்க வேண்டும். அதுதான் என் விருப்பம்."

கவிதா கண்ணீரை அடக்கியபடி சுவற்றுப் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஹரி ஆபரேஷன் டேபிள் மீது படுத்திருந்தான். மருந்துகளின் நெடி எங்கும் பரவியிருந்தது. டாக்டர்கள் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள். மயக்க மருந்து வேலை செய்யத் தொடங்கியது போல் அவன் கண்கள் மூடிக் கொண்டன. அவன் காதுகளில் காலை வேளையில் அண்ணி பாடும் வெங்கடாசலபதியின் சுப்ரபாதம் ஒலிக்கத்

தொடங்கியது. ஆயிரமாயிரம் புல்லாங்குழல்கள் ஒலிக்கும் ஓசை கேட்டது. கூண்டிலிருந்து விடுபட்ட பறவையைப் போல் அவன் மனம் வானவீதியில் உலா வரத் தொடங்கியது.

கவிதா, ராமகிருஷ்ணன், ஜெயா, வேணு, பப்லூ எல்லோரும் ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியில் நம்பிக்கையுடன், எதிர்பார்ப்புடன் ஹரியின் வருகைக்காக காத்திருந்தார்கள்.

**முற்றும்**

450929
621401
தேவநேயப் பாவாண
மாவட்ட மைய நூல